அசோகச் சக்கரவர்த்தி

ASOKA

The Buddhist Emperor of India.

அசோக சக்கரவர்த்தி

அல்லது

புத்த மதத்தை வளர்த்த சுத்த மனத்தர்.

PUBLISHERS:

M. ADI & Co.,

MADRAS.

1926.

 [Re. 1—4—0.

அசோகசக்கரவர்த்தி

அல்லது

புத்த மதத்தை வளர்த்த சுத்த மனத்தர்

எம். ஆதி அண்டு கம்பெனி,
மதராஸ்.
1926

 [விலை ரூபா 1—4—0.

PRINTED AT
THE CHANDRA PRESS,
MADRAS.

K. Y. Eswaran.
I. U. C.

முன்னுரை

இதற்கு முன்னுரையொன்று வேண்டுவதின்று எனினும் 'ஆயிரமுகத்தா னகன்றதெனினும் பாயிர மில்லது பனுவ லன்றே' என்பதனால் இதனை இங்கெழுதுவது இன்றியமையாததா யிருக்கிறது.

குன்றிலிட்ட விளக்குப்போல அசோகர் புகழ், அவர் தாபித்த கற்றூண் கட்டளைப்பதிவு, பாறைக் கட்டளைப் பதிவு, குகாசாசனங்கள் முதலியவைகளால் இன்றளவும் இமாசல முதல் குமரியந்தமாயுள்ள பரத கண்டமெங்கும் பரவியிருப்பதால், அசோகரை அறியாதார் யாதொன்றும் அறியாதார் என்று சொல்வதற் கிடந்தருகிறது.

'தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்தோன்றலிற் றோன்றாமை நன்று' என்று தோன்றியிருந்த அருட்பெருந்தகையாகிய இவரைப்பற்றிப் பலரும் பலவிதமாய்ப் பகருவர். இவர் பெண் கொலை செய்தார் என்பர் சிலர்; சகோதரரைக் கொன்றாரென்பர் சிலர்; இவர் தந் நகரத்தில் நரகதபனஞ் செய்து நரரை வதைத்தாரென்பர் சிலர்; கொடுமையே தொழிலாய்க் குரூபியாய் இருந்தாரென்பர் பலர். யார் எப்படி யோதினும்,

> 'தக்கார் தகவில ரென்ப தவரவர்
> எச்சத்தாற் காணப்படும்' என்றபடி,

இவர் தக்காரென்பதும், கொடுமையின் மிக்காரென்பதும், அல்லரென்பதும் இந்நூலை வாசிக்கப்புக்கார் நன்குணர்வர்.

சிலர் தக்காரென்பதற்கு, இவருடைய சீவகாருண்ய சீரிய குணமும், பாசவைராக்கியப் பான்மையும், தந்நலம் பாரா மற் பரநலத்துக்குப் பாடுபட்ட பண்பும், பக்தி தர்ம நெறியை எங்கெங்கும் பரப்பின மேன்மையும், பிறவும் சான்று பகரும்.

> கன்மஞ் சென்ம காரணம், அதனுல்
> கன்மமே சென்ம வைப்பாங் கண்டீர்,
> வாணுள் வீணு ளாயின், மாண்டபின்
> எந்தப் பிறவி வாய்க்குமோ இன்னும்
> ஏது வருமோ தெரியாது. இதனுல்
> நிர்வாண தசையே நியமமானது (அதுதான்)
> பாவ ரகிதம், பரமா னந்தம்,
> அசையா நிலயம்; அற்புத வைப்பாய்,
> என்று மாரு திருந்து,
> நின்று நன்று நிலவுவதாமே
>
> (இந்நூல், அதி. 4-பக்.).

என்றபடி, ரிஸ்டேவிட்ஸ் என்னும் ஆங்கிலச்சரித்திர நூலா சிரியர், 'கன்மந்தான் பௌத்தமத போதனைக்குள் அசையா நிலைமையானது. அதை யெல்லாரும் அங்கீகரிக்கின்ருர்கள். பௌத்தர்கள் யாவரும் தத்தம் வாணுட்களில் அநுபவ சித்தமாய்க் கண்டதும் அதுதான். இப்பிறவியில் நிர்வாண தசை யெய்தாத பௌத்தன் மறு பிறவி யடைகிருன் என்பது அவர்கள் சித்தாந்தம்' என்கிருர்.

'இப் பௌத்தமதச் சித்தாந்தத்தின் நீதி நிலைமை நோக்கினுல் அசோகர் வாழ்க்கையிலிருந்து அது வெளி யாகும். உலக சரித்திரத்தில் இதுவரையில் இப்படிப்பட்ட

மதமொன் றிருந்ததாகக் கேள்விப்படவேயில்லை' என்று ரீஸ்டேவிட்ஸ் சொல்லி, 'வெளித்தோற்றப் பூதபௌதிக விசாரணையினாலேயே ஒரு மதம் அரசமரத்திற் பிறந்து, ஆலமரம்போல் தழைத்து வேரூன்றி வளர்ந்து, பாரிசாதம்போல் பூத்து, அரிச்சந்தனம்போல் உலகெங்கும் வாசனை வீசி, கற்பகம்போல் நிர்வாண பலாமிர்தத்தை வழங்கின விதம் அருமை, அருமை, முக்காலும் அருமை' என்று வியக்கிறார்.

பௌத்தமத சித்தாந்தம் அதிற் பிரவேசித்தவர்க்கே விளங்கும். மற்றவர்க் கதனுண்மை விளங்காது. அதிற் பிரவேசித்தவர்களெல்லாருமே நிர்வாணதசை யடைய முடியாது. கிறிஸ்தவர்கள் சொல்லுவதுபோல இரக்ஷகனை நம்பி, அவர் மூலமாகப் பாவவறிக்கை செய்தால், யார்க்கும் மோக்ஷம் கிடைக்குமென்பது பௌத்தமதத்தில் இல்லை. சாதாரணமாய் அதிற் பிரவேசித்தவர்கள் துவாதச நிதானங்களை நிதானித்துணரவேண்டும். பிறகு சத்திய சதுஷ்டயம் தானே உதயமாகும். அப்பால் துக்க நிவாரணமாகிய அஷ்ட நிவாரணத்தை அனுசரிக்கவேண்டும். இதற்குஞ் சிலகாலஞ் செல்லும். அதன்பிறகே இப்பிறவியில் நிர்வாண தசை எய்தினாலும் எய்தும், இன்றேல், இன்னொரு பிறவியிலேயே அதை யெய்தவேண்டும்.

சாதாரணமாய்ப் பௌத்தன் ஒருவனுக்கு (1) உயிர்வதை, (2) திருட்டு (பிறர் கொடாததைக் கைப்பற்றுதல்), (3) பொய், (4) குடி, (5) விபசாரம், (6) இரவில அபக்குவமான ஆகாரமுண்ணல், (7) பூமாலைகளையும் வாசனைகளையும் அணிதல், (8) தரையிற் படுக்காமல் கட்டில் முதலிய உயர்

விடத்திற் படுத்தலாகிய விஷயங்களை நீக்கவேண்டுமென்கிற எட்டுவிதக் கட்டளைகள் உண்டு. இவ்விதக் கட்டளைகளோடு, (1) ஆட்டமாடுதல், பாட்டுபாடுதல், சங்கீதங்கேட்டல், கூத்துப் பார்த்தல், (2) வெள்ளி பொன்னணைகளை வெறுத்தலுமாகிய இரண்டுஞ்சேர்ந்து பத்துவிதக்கட்டளைகள் பௌத்த சந்நியாசிகளுக்கும் பிக்ஷுக்களுக்கும் உண்டு.

பாச வைராக்கியத்தால் தன்னடக்கமும், சீவகாருண்யத்தால் அருளும், (Love) வளர்ந்தால் அவ்வளர்ச்சியின் முதிர்ச்சியே நிர்வாணதசை (Salvation)யிற் செலுத்துமென்பது பௌத்தமத சித்தாந்தம்.

'பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு' என்னும்

செந்தமிழ் வேதவுண்மையைப் பௌத்தமதஞ் சீராட்டுமென்றுணர்க. மேற்கூறிய அஷ்டநிவாரணங்கள், உண்மையுணர்ச்சி, உண்மையறிவு, உண்மை வாக்கு, உண்மைவினை, உண்மை வாழ்க்கை, உண்மை முயற்சி, உண்மை நினைவு, உண்மையாராய்ச்சி என்பவைகளாம். இவைகளில் உண்மையுணர்ச்சி, உண்மையறிவு, உண்மை நினைவு, உண்மையாராய்ச்சியாகிய நான்கும் மனத்தாலும்; உண்மைவாக்கு, வாக்காலும்; உண்மைவினை, உண்மை வாழ்க்கை, உண்மை முயற்சியாகிய மூன்றும் காயத்தாலும் ஆவனவாம்.

'அவாவென்ப தெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாப் பிறப்பினும் வித்து'

'அவி சொரிந்தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று'

'தாமின்புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றுணர்ந்தார்'

'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யால்.'

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்.'

முதலிய இன்னும் பலப் பல திருக்குறட் பாக்களிற் பௌத்தமதத் துண்மைகளைப் பரக்கக் காணலாம்.

இகசுக காரணங்களாகிய சீவகாருண்யம் பாசவைராக்கியங்களையே ஒருவன் உள்ளபடி அநுசரித்தால் அவ் வனுசரணையே பரசுககாரணமாகிய நிர்வாணதசையிற் செலுத்து மென்பது பௌத்தமத சித்தாந்தம். இகசுக காரணங்களும் கண்களிற் காண்பனவுமாகிய சீவகாருண்ய பாச வைராக்கியங்களை மேற்கொண் டொழுகுவதே ஞானமுயற்சி. அவ்வொழுக்கமே பரசுக காரணமாகிய நிருவாணதசையிற் செலுத்தும். இதைவிட்டுக் கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தபடி, இகசுக காரணங்களாகாதனவும், கண்களிற் காணாதனவுமாகிய ஈசுவரபக்தி பிரமஞானங்களை மேற்கொண் டொழுகுதல் ஊனமுயற்சி; அவ்வொழுக்கம் பரசுக காரணமாகிய நிருவாணதசையிற் செலுத்ாதென்பதூஉம்

'சாதிபேதத்தையும் மாதர் போகத்தையும்
தள்ளிவைத்ததே சமாதி,'

'நீதிமானென்று நெறியா யிருப்பானே
சாதிமா னவானடி—குதம்பாயி, சாதிமா னவானடி.'

என்னும் ஆன்றோர் அருண்மொழிகளின் உண்மையைக் கடைப்பிடித் தொழுகுவதும் பௌத்தமத சித்தாந்த

யாகும். இனனும் இம்மத சித்தாந்தவமைப்பின் ஒழுங்கை இந்நூலில் விரிவாகக் கண்டறியலாம். கௌத்தம புத்தரைத் திருமாலவதாரமென்று பழைய இந்துமத சித்தாந்திகள் ஒப்புக்கொள்ளுவதாலும், அவரும் க்ஷத்திரியர் ஆகையாலும், அவர் கண்டமதம் புறமதம், புறப்புறமத மிரண்டிலொன்று மாகாது. அகமதம் அல்லது அகப்புறமத மாகுமென்க.

எது எப்படியாயினும், இம்மதம் புத்தப் பெருந்தகையார்க்கு, அவர் புத்தியாகிய சத்தியிடத்திற் றோன்றிய புத்திரன் போன்றது. இதை வளர்த்தவர், இதற்குச் செவிலித்தாய் போன்ற ஆசோகர். ஆகையால், அவரைப் பற்றி இன்னுஞ் சில சொல்லி இம்முன்னுரையை முடிப்போம்.

புத்தசீலர், தம் மனவடக்கத்தாலும், தன்சுய முயற்சியாலும், தம் புத்தியாஞ் சத்தியோ டிரண்டறக் கலந்து அரும்பெறல் மணிபோற் பெற்றெடுத்த இந் நவீனமதமாகிய பௌத்தமதப் புத்திரன் சுமார் இருநூற்றைம்பதாட்டைப் பிராயத்தா னெனினும், தந்தை தாயில்லாக் குறையால் போற்றுவாரின்றிக் குடவிளக்காய் மெலிவுற்றிருந்தபோது, அவற்குச் செவிலித்தாய்போல் ஆசோகர் தோன்றினர். இவரொடு தாம் இரண்டறக் கலந்துபெற்ற சுகத்தை,

‘ தாமின்புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார் ’ என்றபடி

அவர், இமசேது பரியந்தம் எல்லாவிடங்களிலுமுள்ள அத்திமுதல் எறும்பீறான உயிர்கள் யாவும், அனுபவிக்கவேண்டுமென்று விரும்பினர்.

ஆகையால், அவர் அதற்குமுன் எத்தனையோ யுத்த வெற்றி பெற்றிருந்தாரேனும், கலிங்கவெற்றியே கடைசி யுத்தவெற்றியென்று 'போர்த்தொழில் புரியேல்' என்பதற் கிணங்கப் போர்முயற்சி சீர்முயற்சி யல்லவென் றொதுக்கிப் பௌத்த மத பக்தி தர்மநீதி வெற்றியே பெரு வெற்றி யெனக் கைக்கொண்டு ஒழுகினார். வேட்ட மாடுவதைத் தவிர்த்தார்; 'ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன்னினிதே' என்றபடி, ஊன் ஊண் உதவாதென ஒழித்தார். இம் முன்னுரைத் தொடக்கத்திற் குறித்தபடி பற்பல சிலாசாசனங்கள் ஏற்படுத்தினார்; சாலைகளைப் பெருக்கினார்; சோலைகளை வளர்த்தார்; கிணறுகளை வெட்டினார்; சித்திரங்களைக் கட்டினார்; மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் வைத்தியசாலைகள் வைத்தார்; ஓடதிகளை வளர்த்தார்; மிருகங்களுக்குச் சூடுபோடுதலையும், கால்பிடித்தலையும் தவிர்த்தார். எங்கெங்கும், சீனு ஜப்பான் கிரேக்கம் முதலிய தேசங்கட்கும் தூதனுப்பித் தம் மதஞ் சம்மதமாம்படி செய்தார். இன்னும் அவர்செய்த பக்தி தர்ம நீதிநெறி வளர்ச்சி வசதிகள் எண்ணத்தொலையா, ஏடடங்கொள்ளா. இந் நூலில் இவைகளை விளக்கமாகக் காணலாம்.

ஆகையால், இந் நூல் எல்லாரும் எளிதில் வாசித்துச் சீவகாருண்ய விளக்கமும், பாச வைராக்யப் பான்மையும் பெற்றுத் தம்முயிர்போற் பிறவுயிரையும் பரிபாலித்து இக சுகவாழ்வைப் பெறுமாறு நாவல் போக்கில் எழுதி முடித்திருக்கிறது. இதில் முதல் மூன்றதிகாரங்கள் முறையே அசோகர் பிறப்பு, அசோகர் இளமை, அசோகர் ஆட்சி இவைகளைப் பொருந்தியனவாகும். இவைகள் மட்டும் நாவல் நடையுடை பாவனைகளுக்கு நன்கமைந்து,

கவின்மேரூர்க்கினிமை, கேட்டோர்க்கின்பம், அதிசயமுடைத்தாதல், ஆழமுடைத்தாதல், விழுமியது பயத்தல், நீதிமதி நிகழ்த்தல் முதலிய நயங்களோடு வெளிவந் திருக்கின்றன. இதிற் கடைசி மூன்றதிகாரங்கள் முறையே அசோகர் மதம், அசோகர் மதவளர்ச்சி, அசோகர் மதச்சின்னம் இவைகளைப் பொருத்தனவாகும். இவைகள் நாவல் நடைபாவனைகளுக்கு நன்கமையா வாகையால் ஒருவாறு முடிந்திருக்கின்றன.

இந்நூல் பெரும்பாலும் ரிஸ்டேவிட்ஸ் என்பாரைத் தழுவின. வின்ஸெண்ட் எஸ்மித் என்பாரையும், ஜே. எம் மாக்பெயில் என்பாரையும், சில திராவிட பாஷாக் கருத்தரையும் பின்பற்றிக் கதையைச் சமயோசிதமாய்ச் சுருக்கியும் பெருக்கியும் தொடுத்தும் விரித்தும் தற்போதையத் தமிழ்நடை யொழுங்கின்படி அருமையாய் எழுதி முடித்திருக்கிறது.

அசோகர் கால நிண்ணயத்தைக் காட்டுவது, புத்தர் கால நிண்ணயத்தைப் போலவே அசாத்தியமா யிருக்கிறது. பல்லாண்டுகளாகப் புத்தர் நிரியாண தசாகால நிண்ணயம் பலவிதமாய் வேறுபட்டுக்கொண்டே யிருந்தது. இப்போதும் அவர் முடிவடைந்த வருஷம் இன்னதெனச் சரியாய்ச் சொல்லமுடியாது. ஆனால் கிறிஸ்து, பிறக்கு முன் 483-ம் ஆண்டிலிருந்து 477-ம் ஆண்டுக்குள் ஏதோ ஓர் ஆண்டில் அவர் முடிவடைந்தார் என்பதுமட்டும் நிச்சயம். இனி வருஉம் சரித்திர ஆராய்ச்சிக் காரர்க்கு ஒருவேளை அவர் முடிவுற்ற ஆண்டு, இதுதான் என்று நிச்சயமாய்க் கண்டு பிடித்துச் சொல்லும் வழியேற்படலாம். இப்போது, நாம் நமக்குத்தெரிந்தவரையில் அவரு

டைய அவதார ஆண்டு கி-மு-560 என்றும் நிரியாண ஆண்டு கி-மு-480 என்றும், கொண்டால் ஏறக்குறைய மூன்றாண்டுக்குமேல் முன்பின் பிழையாகாது. புத்தர் அடைந்த காலத்திற்கும் அசோகர் அடைந்த காலத்திற்கும் இடையில் இரண்டரை நூற்றாண்டுகள், (அதாவது) சற்றேறக்குறைய இருநூற்றைம்ப தாண்டுகள் ஆயின வென்று கல்வெட்டுச் சாசனங்களால் வெளியாயிருக்கிறது. ஆகையால் அசோகர் அடைந்த ஆண்டு கி-மு-232 என்று உறுதியாய்ச் சொல்லலாம். அவர் பட்டங் கட்டிக் கொண்ட வருஷம் கி-மு 269 ஆகையால் அதுமுதல் முப்பத்தேழாண்டும், அதற்கு முந்தி அவர் அரசரான வருஷம் கி-மு-272 ஆகையால், அதுமுதல் நாற்பதாண்டும் ஆண்டார் என்று நிச்சயமாய்க் கொண்டிருக்கிறார்கள். அவர் பிறந்த வருஷம் தெரியாமையால், இறந்தபோதவர்க்கு இத்தனை வயது என்று இயம்ப இசையவில்லை. இவரைப்பற்றிய மற்றக்கால நிண்ணயங்களை இந்நாவலிற் காணலாம்.

பன்னூலாராய்ச்சியிற் கண்ட அசோக வரலாறுகளிலிருந்து இந்நாவலுக்குகந்த விஷயங்கள் தேர்ந்தெடுத்துத் தொகுத்திருக்கின்றன. இலங்காபுராணவரலாறு, பரதகண்ட புராண வரலாறு முதலியவைகளிலிருந்தும், வேண்டுவன வற்றைக்கொண்டு வேண்டாதவைகளை நீக்கி யிருக்கின்றோம். பௌத்த தர்மம் என்னுந்தொடரில் உள்ள தர்மம் என்னும் பதத்திற்கு மதம் என்றும், புண்ணியம் என்றும், சட்டம் என்றும் இஷ்டம்போற் பலரும் பலபடி எழுதியிருக்கிறார்கள். ஆனால், அதற்குப் பக்தியென்பதே சரியான மொழிபெயர்ப்பு என்று இப்போது கண்டிருக்கிறார்கள், அதன்படியே இந்நூலிற் பக்தியென்றுகொண்டு, தர்மம் என்பதையும் அதனோடு சேர்த்து ஒருபொருளை விளக்கும்

சிறப்பும் பொதுவுமான இருமொழிகளாக எழுதியிருக்கின்றோம். பிறகு, சட்டம் என்பதற்கு நீதிநெறியெனக் கொண்டு, பக்தி தர்ம நீதியென்றும் எழுதியிருக்கின்றோம். பக்தி தர்ம நீதிநெறியென்றும் சில விடங்களில் வருகின்றன. இதை அருந்தமிழில் அப்படியே அருள் அறநீதிநெறி யென்பது அமைந்ததாகும். இல்லறம் துறவறம் என்பவைகளைப்போல அருள் அறம் என்பதும் ஒன்று. ஆகையால் இம் மதத்தைச் சிலவிடங்களில் அருட்பெருஞ் சோதிமதம், அருள் மதம் என்றும் கூறியிருக்கின்றோம். அருள் என்றால் தன்னுயிர்போல் மன்னுயிரை மதிக்கு மாண்புள்ள பொருள். இது, இவ்வுலகில் ஒருவர் பெறும் பொருள்களிற் பெரும்பொருளாயுள்ளது. இதுபற்றியே பெரும்புலவரும்:

'பொருளற்றார் பூப்ப ரொருகால் அருளற்றார்
அற்றார் மற்றாத லரிது' என்று அருளினர்.

இதுவரையில் யாரும் தமிழில் வெளியிட்டிராதபடி, மதம் என்னும் அதிகாரத்திலும், பௌத்தமதத் துண்மையாக்கம், உண்மை விளக்கம், உண்மைநோக்கம் முதலியவைகளை விரிவாகத் தெரிவித்திருக்கின்றோம். சாசனங்களையும், சுருக்கியும் மாற்றியும் மொழிபெயர்க்காமல் உள்ளன உள்ளபடி அருந்தமிழில் மொழிபெயர்த்துத் தீட்டி யிருக்கின்றோம்.

இவைகளால், சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இப் பரதகண்டத்தையும், அதற்கு வடக்கிலுள்ள பிறநாடுகளையும் ஒருகுடைக்கீழாண்ட அசோகராட்சியின் மாட்சியும், அவர் அருள் மதத்தை வளர்க்கச்செய்த நன் முயற்சியும், நன்கு விளங்குவதன்றி, நாமும் அவரைப் பின்பற்றி அருள் என்னும் பொருள் தேடும் தெருள்தேட வேண்டுமென்பதும் தெளிவாய்த் தெரிகின்றது,

அசோக சக்கரவர்த்தி

(அல்லது)

புத்த மதத்தை, நித்த மிதத்தில்
மெத்த வளர்த்த, சுத்த மனத்தர்.

அதிகாரம்—1.

(பிறப்பு.)

'சூரியனுக்கும் கிரகணத்தால் ஒளி குறைவதுபோல, நந்தகுலத்திற்கும் விந்தையான நிந்தை வந்ததல்லவா? * அம்பட்டனா அரசாள்பவன்? நரி அரியானால், அரியென்னவாகும்? இனி அவனை ஏறவிட்டிருக்கப்படாது நாம்; எப்படியாவது இறக்கிவிடவேண்டும். அவன் அரசனானமையால், படைபலம் இருக்கிறது; இருக்கட்டுமே! 'முயற்சி திருவினையாக்கும்' என்றபடி நாம் விடாமுயற்சி செய்தோமானால், வெகு சுளுவிலவனைக் கொன்று வென்றுவிடலாம்' என்றான் ஓர் இளவரசன்.

இவன் வயதில் இருபது நிரம்பாத இளையவன் என்றாலும், ஆண்மையில் முதியவன்; சுத்தவீரன்; மிகத் துணிந்தவன்; மகத தேசாதிபதிக்குத் தாசிவயிற்றிற் பிறந்

* மகதநாட்டைப் பாடலிபுத்திரத்திலிருந்தாண்ட நந்த வமிசத்தரசனொருவனுடைய இராணிக்கு, அம்பட்டன் கூட்டுறவாற் பிறந்தவன்; இவன் பெயர் மஹாபதுமன்.

தவன் ; ஆனாலும், இராஜ இலக்கணம் வாய்ந்தவன் ; விசால மான கண்களும், நின்றால் முழங்கால்களைத் தடவும் நெடுங் கைகளும், கூரிய மூக்கும், சீரியநோக்கும் உடையவன் ; நீண்ட அங்கியும், தலைக் கவசமும், அரைப்பட்டிகையும், உடைவாளும் இடையறாது தரித்துப் போர்முகத்தையே சீர்முகமாக்கொண்டவன் ; * மௌரிய சந்திரகுப்தன் என்று எங்கும் பேர்போனவன்.

சந்திரகுப்தன் பேச்சைக் கேட்ட நண்பன், சாணக்கி யன் என்னும் பிராமணன், 'ஆமாம் - நீர் சொல்வது சரிதான். நரியுங் கரியும் எத்தனைதான் கூட்டத்தோடிருந்தாலும், அரியின் முன் நிற்குமா ? உமது சொரூபத்தை நீர் காட்ட வேண்டியதுதான். மாசி அரசனைக் கண்டு இதைப்பற்றிப் பேசவேண்டியதுதான்.

'அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.'

என்பது வேத வாக்கியம். 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்' என்பதுவும், வெகு சன வாக்கு' என்றான்.

'ஆஹா, ஆஹா; அப்படியே, இதோ போகிறேன். † மாசி அரசர்க்கும் மகததேசத்தின்மேற் கண் உண்டு. பாஞ்சா

---

* இவன் தன் தாயின் பெயரை முதன்மையாக்கி, மௌரிய சந்திரகுப்தன் (அல்லது) சந்திரகுப்த மௌரியன் என்று பெயர் சூடினான். ஆகையால், மகதராசசியத்தில் இவன் பட்டங்கட்டி யாண்டது முதல், இவன் வமிசத்தார்க்கு, மௌரிய வமிசத்தார் என்று பெயர் வழங்கிற்று.

† மாசி அரசன்:—மாசிடோனியாவி லாண்ட கிரேக்கதேசா திபதியாகிய மகா அலக்சாந்தர். அவர் இந்தியாவின்மேற் படை யெடுத்து வந்து, பாஞ்சாலத்தை வென்று, அங்குத் தங்கியிருந் தார்.

லத்தை வென்ற அவர், அப்படியே பிறநாடுகளையும் வென்று பரதகண்டத்தை ஒரு குடைக்கீழ் ஆளவேண்டுமென்று விரும்பியிருக்கிறார். ஆனால் அவர் படைவீரர், அதற்கு ஒவ்வாமையால், தடையாயிருக்கிறார். நான் போய், அவரைப் பாசறையிற் கண்டுபேசி, மகததேசத்துப் போலியரசனைத் தாக்கும் விஷயத்தில் அவர் நோக்கம் இன்னதென் றறிந்து வருகிறேன்.

'தக்கா ரினத்தனய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.'

என்பது முதுமொழி யல்லவா?' என்றான் சந்திரகுப்தன்.

காலையிற் பத்துமணி வேளையிற் காவலர் புடைசூழப் பாசறைக்கிடையில், அதிவைபவத்தோடு விளங்கியிருந்தான் மேனாட்டு மன்னனொருவன். அவனுடைய கம்பீரத்தோற்றம் கண்டாரை வெருட்டியது. காலுக்குக் கவசமும், மேலுக்கு அங்கியும், தலைக்குத் தொப்பியும், அவற்கு அலங்காரமாய் அழகு செய்தன, யுத்த வீரர்க் குகந்த விருதுகள் அநேகம் பூண்டிருந்தான்; அவன் கண்கள் வட்டமாய், அழகாய், பெருமையிற் றிகழ்ந்து, கருமையில் நிகழ்ந்து, கருணையும் ஆண்மையுங் கலந்து தோன்றின. திக் விஜயஞ்செய்து திகழ்ந்த பரதகண்ட வேந்தர் பலர்க்கும் இருந்த ஆண்மை அடங்கலும் அவற்குக் கேண்மையா யமர்ந்திருந்தது. மந்திரிமார் ஒருபுறம், தந்திரிமார் மறுபுறம், ஒருபால் யுத்த வீரர், மறுபால் சுத்த தீரர் பலர் சூழ்ந்திருந்தனர்.

இத்தனை வைபவத்தோடிருந்த மன்னனை, ஓர் இளவரசன் தெண்டனிட்டு நின்றான்.

அங்ஙனம் நின்ற அரசிளங் குமரனை, அம் மன்னவன் வரவேற்றுபசரித்து, உட்காருவித்து, 'வாரும் அரசிளங்குமாரரே! உம்மைப்பற்றி நான் கேள்வியுற்றேன். உம்முடைய வீரதீர பராக்கிரம விசேடத்தை என் சேனைவீரர் பலரும் புகழ்கின்றனர். சந்திரகுப்த மௌரியர் என்னும் உமது நாமமும், மகதம் என்னும் உமது தேயமும் ஆகிய இரண்டும், என் னெஞ்சத்தில் எந்நேரமும் விஞ்சியிருக்கின்றன. உம்மை எனது உகந்த நண்பராகக் கொள்ள யாதொரு தடையுமில்லை. இங்கு நான் வெறும் வெற்றியையே நாடிவந்தவனல்லன். உம்மைப்போன்ற வீரதீர விவேகமுடையாரைக் கண்டு நட்டுக் களித்து வாழவேண்டுவதே எனது நோக்கம்' என்றான்.

இப்படிப் பெருமிதமாய், இதமாய், மிதமாய்ப் பேசின மன்னனைப் புன்னகையோடு, ஏற இறங்கப் பார்த்த சந்திரகுப்தன், 'என்னில் எவ்விதத்திலும் பெரியாராகிய தாம், இப்படி என்னைப் புகழ்வது, எனது சிறுமைக்குத் தகாது; எனினும், தமது பெருமைக்குத் தகுந்ததாகவே கொள்ள வேண்டும். "பெரியார், பிறர் குற்றங்கூற அறியார்" என்றபடி தாம் என்னைப் புகழ்ந்து கூறினீர் என்றாலும், அப் புகழ்ச்சிக்கு நான், ஒரு சிறிதும் அருகனல்லேன். தம்மைக் கண்டு பேச வந்த விஷயம் முக்கியமானதாகையால், காலதாமதஞ் செய்யாமல், நான் அறிவிக்கவேண்டியவனா யிருக்கிறேன். மாசி அரசர், அலக்சாந்தர் என்னும் தமது நாமதேயத்தை இவ்வடநாட்டில் அறியாதார் யாவர்? மகதநாடு தம்மை நாடி எதிர்பார்த்திருக்கிறது. அதிற் பிரஜைகளிற் பெரும்பாலார், அமைதியற்றிருக்கின்றனர். கேவலம், நாவிதன் ஒருவன் காவலனாய்த் தற்காலம் அதை ஆண்டு வருகிறான்.

'உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி—நடக்கையின்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல், குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.'

என்றபடி அவன் கையில் அரசாட்சி அதி சூழ்ச்சியின்றித் தாழ்ச்சியாய்க் குடிகட்கு அகிதஞ்செய்யும் நிலைமையில் விளங்குகிறது. எல்லாரும் அவனை வெறுக்கின்றனர்; தம்மைப்போன்ற நல்லார் வரவை நாடிப் பொறுக்கின்றனர். இதைப்பற்றித் தாம் தீர்க்காலோசனை செய்யவேண்டும்" என்று முடித்தான்.

அதற்கு மாசி மன்னன், 'இளைஞரே, நீர் சொல்வது சரிதான். மகதத்தை மட்டும் அன்று; மற்றுமுள்ள ஐம்பத்தைந்து தேசங்களையும் வென்று, பரத கண்டத்தை என் அரசாட்சிக்கு உட்படுத்தவேண்டு மென்பது என்னுடைய நோக்கம். ஆனால், அது ஈடேறுமென்று நான் எண்ணவில்லை.

'படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு.'

என்ற ஆறில் முதலிற்கூறிய முக்கியாங்கமாகிய படைபலம் தற்சமயத்தில் எனக்குக் குறைந்திருக்கிறது. முதற்கோணல், முற்றுங்கோணலல்லவா? எனது படைவீரர், தமது பெண்டுபிள்ளை, பண்டபதார்த்தம், நாடுநகரங்களை விட்டுப் பன்னெடு நாளாய்ப் பல்லாயிர மைல் தூரம் பிரயாணஞ்செய்து, இளைத்துக் களைத்து, வாடிவதங்கியிருக்கின்றனர். அவர்களுக்கு இன்னும் இங்குத் தாமதித்திருப்பதில் இஷ்டம் இல்லை; இப்போதே திரும்பிச் செல்லவேண்டுமென்கின்றனர். ஆகையால், உடனே நான் ஊர்க்குப் போகவேண்டியவனாயிருக்கிறேன்; போர்க்கு எங்ஙனம் வருவேன்?

‘அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.’

என்றபடி உமது முகத்தோற்றத்தால் அகத்தோற்றமாகிய ஆண்மை எனக்கு நன்கு விளங்குகிறது. நீரே மகத நாட்டுப் போலியரசனைத் தாக்கி வென்று, அங்கு முடிசூடிப் பாராளலாம். நான் வந்து உமக்கு உபபலமாய் நின்று, அவனைத் தாக்கி வென்று மகதத்தைக் கைப்பற்றினாலும், உம்மையே அதற்கரசனாக்கி முடிசூட்டுவேனன்றி வேறின்று. என் நல்லெண்ணப்படியே எல்லாம் நிறைவேறும். போய் வாரும்’ என்று விடைகொடுத்தான்.

அங்ஙனம் விடைபெற்ற சந்திரகுப்தன் நேரேலெனப் புறப்பட்டு, மகதநாட்டுப் பிரதான நகரமாகிய பாடலிபுத்திரத்திற்குப் பத்துமைல் தூரத்துக் கப்புறத்துள்ள ஒரு பெருங் கிராமத்திற் போர்க்காயத்தஞ் செய்வானாயினான்.

கையில் ஆயுதமில்லாக் கையாயுத மல்யுத்தவீரர் அநேகர்; வாளேந்திவந்தார் பலர்; வில்லேந்தினர் எண்ணிறந்தோர்; குதிரையேறினர் சிலர்; கோலெடுத்தார் சிலர்; தண்டேந்தினர் பற்பலர்; கொடிதாங்கினர் பலர். இப்படி, இப்படியை மறைக்க விண்ணினின்று விடுபட்டிறங்கிய மேகக் கூட்டம்போல, யுத்தவீரர் திரண்டு வந்து சந்திரகுப்தனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

அப்போது அவனுடன் அவர்குகந்த மந்திரியாகிய சாணக்கியனும் கூடிச் சேனைகளை அணிவகுத்து நிறுத்தினான். விடியற்காலையில் ஐந்துமணியாயிற்று. சந்திரகுப்தனை வாழ்த்தி வரங்கொடுப்பன போலப் பறவைகள் பாடிக்கொண்டிருந்தன. சந்திரகுப்தனுடைய வெற்றியை முன்னரறிந்து சந்தோஷக் கூத் தாடுவனபோல மயில்கள் ஆடின.

நீர் நிலைகள் காற்றின்மோதி வெற்றிமுரசறைந்தன. வண்டுகள் காமரம் பாடப் பூமரங்கள் மலர்மழை சிந்தின. அங்கிருந்தபடியே சந்திரகுப்தன் சாணக்கியனோடு ஆலோசித்து, ஸ்ரீராமர் அங்கதனை இராவணனிடத்திற் றூதுபோக்கியது போல, யுத்தவீரனொருவனைப் பாடலிபுத்திரத்திற்குத் தூது போக்கி மஹாபதுமற்குச் செய்தி தெரிவித்துப் போர்க்கு அறைகூவி வரும்படி ஏவினான்.

அவற்குப் பின்னடியிலேயே, சந்திரகுப்த சாணக்கிய சேனை தொடர்ந்து சென்றது. இடைவழியில் அவர்களுக்கு, வேறு வடநாட்டு யுத்தவீரனுடைய உதவியுங் கிடைத்தது. எல்லாரும் ஒன்றுசேர்ந்து, பாடலிபுத்திரத்திற் கிடைவழியில் தங்கியிருந்தனர்.

தூதன் சென்று செய்தி தெரிவித்து, அறைகூவியதைக் கேட்ட மஹாபதுமன் வியந்து, கொஞ்சமேனும் காலந் தாழ்க்காமல் போர்க்கு ஆயத்தமாய்ச் சேனாசமேதனாய்ப் புறப்பட்டான். இரு திறத்துச் சேனைகளும் ஒரு பெரு வெளியிற் சந்தித்தன.

தேர் வீரரைத் தேர்வீரர் எதிர்த்தார்கள். யானை வீரரை யானைவீரர் தாக்கினார்கள். குதிரைவீரரைக் குதிரைவீரர் குத்தினார்கள். காலாட்களைக் காலாட்கள் வெட்டினார்கள். விழுந்தார் பலர்; எழுந்தார் சிலர்; ஓடினார் அநேகர்; பதுங்கினார் பலர்; தலைகள் உருண்டன; கண்கள் பிதுங்கின; கவந்தங்கள் கூத்தாடின. மஹாபதுமன் சேனைகள் ஒதுங்கின. கடைசியாக அவன்சேனாவீரர் முதுகுகாட்டி ஓடத் தலைப்பட்டனர். அதுகண்ட சந்திரகுப்தன் வெற்றியினால் இந்திரகுப்தனைப் அவர்களைத் துரத்திச் சென்று பாடலிபுத்திரத்திற் பிரவேசித்து, அநாயாசமாய் மஹாபது

மனைக் கொன்று வெற்றி முரசறைந்தான். மஹாபதும னுடைய உற்றார் உறவினர் யாவரையும் சந்திரகுப்தன் பற்ற றக்கொன்று, பெரும்பாக்கியவானைப் பாடலிபுத்திரத்திற் பட்டங் கட்டிக்கொண்டு முடிசூடிய அரசனாய் ஆட்சிபுரிந் தான். அவனுக்கு உதவிபுரிந்த வடநாட்டு யுத்தவீரனும் அவனோடு கூட்டாளியாய்ச் சிலகாலம் மகதநாட்டை ஆண் டிருந்து மாண்டான். பிறகு, சந்திரகுப்தன் யாதொருதடை யுமின்றி மகததேசாதிபதியாய் மாட்சியுற்று விளங்கினான்.

இவனுடைய ஆட்சி, கிறிஸ்து பிறக்க 321 ஆண்டு களுக்குமுன்னையதென்று சரித்திர நூலாசிரியர் எண்ணுகின் றனர். இவ்வாண்டு மாசிமன்னன் மாண்ட வருடத்திற்கு ஈராண்டு பிந்தியதென்றேற்படுகிறது. சந்திரகுப்தன் இரு பத்தினான்காண்டு பாடலிபுத்திரத்திலிருந் தரசாண்டான். இதுவே, இப்போது பாட்னா (Patna) என்று வழங்குகிறது.

'நாம் ஏன் சும்மா இருக்கவேண்டும், நம்மாலான முயற்சி செய்து மாசி நாட்டாரை இங்குத் தங்கவிடாமல் வெல்ல வேண்டும். இதற்காகக் கூலிப்படை கொண்டேனும் சண் டையை மும்முரமாக்கி, அவர்களைத் துரத்தக் கடவோம்'' என்றான் ஒருநாள் சந்திரகுப்தன்.

'ஆஹா; அப்படிச் செய்யத் தடையென்ன? "கடன் கொண்டும் செய்வன செய்தலினிது'' என்றபடி, கூலிப்படை கொண்டேனும் வெற்றிபெறுவதே விவேகம்' என்று உடந் தையாய்ப் பேசினான் சாணக்கியன்.

ஒரு பெருஞ்சேனை திரண்டது. உடனே சந்திரகுப் தன் படையெடுத்துச் சென்று, மாசி மன்னன் வென்று தன்வசப்படுத்தியிருந்த சாம்ராஜ்யத்திலிருந்து கிரேக்கர் களைத் துரத்தி, அதை மகத ராஜ்யத்தோடு சேர்த்துப்

பெருக்கினன். பிறகு இந்தியாவின்மேல் படையெடுத்து ஜெயமடையாத ஸெலூக்கஸ் என்பான் மகாஸ்தனிஸ் என்னும் நாட்டுத் தூதனை அனுப்ப, சந்திரகுப்தன் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டான். அப்பொழுது அவனுடைய ராஜ்யம் தெற்கே நருமதை நதிவரையில் பரவியிருந்தது. அப்போ ததற்குக் கிழக்கு மேற்கில் சமுத்திரங்களும், வடக்குத் தெற்கில் இமாசல உச்சயினி புரங்களும் எல்லைகளாய் ஏற்பட்டிருந்தன. இதனால், சந்திரகுப்தன் பரதகண்டத்திற்குப் பிரதம சக்ராதிபதியானன்.

இப்போது சந்திரகுப்தன் சேனை ஒரு பெருங்கடல்போற் பெருகியிருந்தது. அதாவது ஆறிலக்ஷம் (600000) காலாட்கள், மூன்றிலக்ஷம் (300000) குதிரை வீரர்கள், ஒன்பதினாயிரம்(9000) யானைப்படைகள், எண்ணிறந்த தேர்கள். வேந்தன் சாதாரணமாய் வெளியிற் செல்வதென்ருல், உடன்போவது நான்கிலக்ஷம் (400000) சேனைகளாம். இப்படி இலக்ஷாதிலக்ஷம் சேனைகள் இவற்கு வந்ததன் காரணம், இவனுடைய யுத்த முயற்சியின் வெற்றியேயாம். இவன் வருந்திச் சேனைகளைத் திரட்டவுமில்லை; பழக்கவுமில்லை. ஆங்காங்கு இவன் வென்றநாட்டிற் கைப்பற்றின சேனைகளே பெருவெள்ளமாய் வளர்ந்திருந்தன. இதனால் இவன் இப்பரதகண்ட முழுவதையும் வென்று அடக்கியாள அநுகூலமாயிற்று. இவன் இறக்குமுன் அரசாட்சியை வெறுத்துச் சைன சந்நியாசியானன் என்பதும் ஒரு பழைய நம்பிக்கை.

இவனுக்குப் பின் இவன் மகன், பிந்துசாரன் அரசானன். இவன் இருபத்தெட்டாண்டு ஆண்டனனயினும், தன் தந்தையைப்போல், அல்லது தன் மைந்தனைப்போல் மகத்துவம் வாய்ந்தவனல்லன்; சக்கரவர்த்தி ஆட்சிமுறையில், தான்

பெற்றநாட்டைப்போற்றிப் பாதுகாத்து, யாதொரு குறையு மின்றி, அப்படியே தன் மகன் அசோகனுக்கு உதவினான். நாட்டின் தென்புறத்தில் ஆட்சியைப் பெருக்கினான் என் றும் சிலர் சொல்லுகின்றனர். சிரியாநாட் டரசனா டிவன் சினேகபாவங்கொண்டதற் கறிகுறியாக, அந்நாட்டுத் தூத னாகிய டைமாக்கஸ் என்பவனைச் சந்திரகுப்தன் மகாஸ்த னீஸை ஏற்றுக்கொண்டதுபோல, ஏற்றுப் போற்றினான். இவ்விரு தூதர்களாலும் இப்பரதகண்ட பூர்வ சரித்திரத் திற்கு ஓர் ஆதாரம் ஏற்பட்டது.

டாலமியென்னும் எகிப்தரசன், பிந்துசாரன் காலத் திலோ அதற்குப் பிறகோ, கிறிஸ்து பிறக்க ஏறக்குறைய முந்நூறாண்டுகளுக்கு முந்தி, தயானிசியஸ் என்னுந் தூத னைப் பாடலிபுத்திரத்திற்கு அனுப்பினான். இவனும் மகாஸ் தனிஸ், டைமாக்கஸ் என்பவர்களைப்போலவே, இங்குத் தான் கண்டது கண்டபடி குறிப்பிட்டுவைத்தான்.

பிந்துசாரற்கு மனைவியர் இருந்தும், வேறொரு வேதிய மாதின் கூட்டுறவால், அசோகன் பிறந்தானென்பது சிலர் கொள்கை. ஒரு காலத்தில் பிந்துசாரன், தன் ஆட்சிக் குட்பட்ட சம்பாபுரியென்னும் ஊர்க்குச் சென்றிருந்த போது, அவனுடைய பிரதானியரிற் சிலர், அவ்வூர் வளத் தைக் கண்டுவந் துரைத்தவர்கள், 'அரசே, இவ்வூரில் ஓர் ஏழை வேதியன் தன் மகளைக் கன்னிகாமாடத்தில் வைத் துக் காக்கிறான். அவள் ஏழையாயினும், ஒரு பெரு மண்டலாதிபதியை மணப்பாள் என்று கணிதர் கூறினாராம். அவள் அழகிற் * பூ மங்கை; பொறுமையிலும் † பூ மங்கையே

* பூ மங்கை = பூவில் வாழும் திருமகள்.

† பூ மங்கை = பூமாதேவியாகிய நிலமகள்.

யாவாள். அவள் கண்கள் கருவண்டு; இதழ்கள் பவழத் துண்டு; சொற்கள் கற்கண்டு; இடை, இல்லையாறுலும் உண்டு; முழங்கால் இரண்டும் நண்டு; நாங்கள் அவளைக் கண்டு, உமக்கு அறிவிக்க ஆவல்கொண்டு, விரைந்தோடி வந்தோம் விண்டு' என்று அறிவித்தார்கள்.

அது கேட்டவுடனே காவலன் காதலனாய், 'ஆஹா, இத்தனை முகத்தழகும் அகத்தழகும் உள்ள உத்தம நங்கை, உன்னத அரண்மனைக் குரியவளே அன்றி, வறுமைக் கடலில் ஆழ்ந்து தாழ்ந்து, ஏழையாய்க் குடிசையிற் காலங் கழிக்கத்தக்கவ ளல்லள்; எங்ஙனமாயினும் அவள் தந்தைக் குச் சமாதானங் கூறி இணங்கும்படிசெய்து, அவளை நந்தம் இராஜமாளிகைக் கழைத்துச் செல்லவேண்டும். இல்லையேல், நாம் பிழையிழைத்துச் செல்பவராவோம்' என்றுகூறி, அவள் தந்தைக்கு இதஞ்சொல்லி, நிந்தையின்றி எல்லாரும் விந்தையென் றதிசயிக்கும்படி, தன் சிந்தையில் மகிழ்சிறக்க, அவளைத் தன்னுடன் அழைத்துக்கொண்டுபோய், மாளிகையில் விடுத்து, அவள்மேற் காதலுடையவனாயிருந்தான்.

அதுகண்டு அவன் மனைவியர் பொறாமைகொண்டு, 'இதேது, நமது காதலர், காதல்வெறிபிடித்துக் கலங்கு கிறாரே! வேதியச் சிறுமியை யிச்சித்துத் தமது பெருமையை யிழக்கின்றாரே! வேதியச் சிறுமியேனும், இவள் வறுமைக் கும், தமது மகிமைக்கும் எத்தனையோ தூரம் இருக் கின்றதே! அழகியென்றாலென்ன? பூலோகத்தில்லாப் பேரழகியோ! எத்தனையோ பேர், * பேரழகிகளாயினும் மங்கிமடங்கித் தாம் பிறந்த ஏழைமைக் குடிகளிலேயே வாழ்க்கைப்பட்டுக் காலங் கழிக்கவில்லையா? இவளுக்குமட்

* பேர் + அழகிகள் = மெத்த அழகுடையவர்கள்.

டும் வந்த யோகம் என்ன! யாகஞ்செய்யுங் குலத்திற் பிறந்த இவளுக்கு வந்த யோகமும், இவளுக்காக நம்மரசர் செய்யுந் தியாகமும் வெகு நன்றாயிருக்கின்றன. எப்படி யேனும் இவள் கூட்டுறவை விலக்கவேண்டும்' என்கிற எண் ணங்கொண்டு, அவளை அரசன் பார்வைக்கு அகப்படுத் தாமல் வேலையிட்டு, ஒதுக்கிவிட்டுப் பற்பல கொடுமைகள் செய்து வந்தார்கள். அவைகளை யெல்லாம், சுபத்ராங்கி யென்னும் அப்பெண்மணி, தன்னுடைய நற்குண விசேடத் தாற் பொறுத்துக் கொண்டாள். "கோலஞ் சிறந்தபடியே நற்குணமுஞ் சிறக்கும்" என்றபடி குணப் பெருமையுள்ள அப்பெண்ணரசி, அக்கொடுமைகளைப் புடத்திற்புகும் பொன் போலச் சகித்து விளங்கினாள்.

அதற்குமேலும் அவர்கள் அவளை, அரசன், என்றும் காணாவாறு ஏற்படுத்தினார்கள். அப்படி அவளை அவன் கண்டாலும் உருத்தெரியாதபடி, அவளுடைய வேடத்தை மாற்றினார்கள். அரசனுடைய காதல் குறையும்படி ஏமாற்றி னார்கள். அதனால், அரசனுக்கு அவளுடைய நினைவே யில்லாமல் ஒழிந்தது. அவளுக்கு அவர்கள் ஏற்படுத்தி யிருந்த பற்பல வேலைகளில் கடைசியாக நியமித்தது, அரண் மனைத் தாசிவேலை. அதனால் அவள், அரசற்குத் தலைவாரும் முறையேற்பட்டது. அதைத் தவறாமல் விநயமாய்ப் பய பக்தியோடு அவள் ஒழுங்காய்ச் செய்துவந்தாள். ஆயினும் அரசற்கு அவளை யின்னாளெனத் தெரியாது உருமாறியிருந் ததனால் அவளைத் தெரிந்துகொள்ள, அரசற்கு முடியாமற் போயிற்று. அவள் யாரோவொரு தாசியென்று அரசன் எண்ணியிருந்தான். அவளுக்குமட்டும் தன் குறைகளை,

அரசனிடத்திற் சொல்லிக்கொள்ளச் சமயம் எப்போது வாய்க்கும் என்கிற எண்ணம் இருந்துகொண்டிருந்தது. அப்படிப்பட்ட சமயம் நேரிடுவதற்காக, அவள், பகவானை வேண்டிக் கொண்டிருந்தாள்.

ஒருநாள், அவள், அரசன் தலையைச் சீவி முடித்த போது, அவன் அதிக மனமகிழ்ந்து, அவளை நோக்கி, 'பெண்ணே! நீ செய்துவரும் தொழில் வெகு திறமையா யிருக்கின்றது. இன்றைக்கு உன்கைவேலைத்திறத்தை மெச்சுகின்றோம். இதற்காக உனக்கென்ன வெகுமதி வேண்டுமானாலும் தரச் சித்தமா யிருக்கின்றோம்: அஞ்சாமற் கேள்' என்றான்.

அதற்கு அவள், 'அரசே, அடியேன் பட்டத்தரசியாக வேண்டும். மங்கையொருத்தி, மன்னன் மனைவியாவதிலும் மாண்புள்ள பதவி யாது? தேவரீர் அருள் புரிந்தால், அப் பதவியையே அடியாளுக்கு வழங்கவேண்டும். வேறொன்றும் நான் விரும்பேன்' என்று விண்ணப்பஞ் செய்தாள்.

அதுகேட்ட அரசன், 'பெண்மணீ, அஃது எங்ஙனஞ் சாத்தியமாகும்? நரி அரியாகுமா? தாசியாகிய நீ அரசனாகிய என்னை மணப்பதெப்படி?' என்றான்.

அதற்கு அப்பெண்மணி, 'அரசே, அடியேன் உண்மையில் தாசிமகள் அல்லள். என் காலக்கொடுமையால் நான் இங்ஙனந் தாமதித்திருக்கின்றேன். நான் ஒரு விப்பிர மாது; சம்பாபுரிவாசி. என் தந்தைக்கு ஒரு சோதிடர் உரைத்தபடி, நான் பட்டத்தரசியாவேனென்று நம்பி, என்னையவர், வேறியார்க்கும் மணமுடிக்காமல், கன்னிமாடத்தில் வைத்துக் காத்து வந்தார். பிறகு, தாங்கள் வந்து, என்

வனப்பின் விசேடத்தைக் கேட்டு, என் தந்தை அனுமதியோடு என்னை இங்கு அழைத்து வந்தீர்கள். என்பெயர் சுபத்ராங்கி. இங்கு நான் வந்தபிறகு தமது மனைவியர் சூழ்ச்சியால், இங்ஙனம் என்னிலை திரிந்து தாசியானேன்' என்று விளங்கவுரைத்தாள்.

அதுகேட்ட மன்னன், மனம் வருந்தி வியந்து; 'ஏ நங்காய்! உன் பொறுமைக்கும் பெருமைக்கும் சால மகிழ்கின்றேன்.

'அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.'

என்றபடி, பொறாமைக் கிடங் கொடுத்து, உன்னைத் தாழ்த்தினர், தாமே சின்னாளிற் றாழ்வார். தாழ்ந்த நீ விரைவில் உயர்வாய். இனி நான் சற்றேனுந் தாழ்க்கேன். உனக்கு வந்த அவமானத்தை எனதாகக் கருதுகிறேன்' என்று கூறிச் சுபத்ராங்கியைத் தேற்றி, அவள் தாசித் தொழிலைமாற்றி, அப்போதே அவளைப் பட்டத்தரசியாக்க வேண்டிய சடங்குகளை யாற்றித் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டான்.

இருவரும் காதல் முதிர்ந்து, ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் காதற்பயிரின் முதற் பயனாக அசோகன் என்னும் மகன் பிறந்தான். கருவுயிர்த்த காலத்தில் தாய், சோகமின்றி விளங்கியதால், அக்குழந்தைக்கு அசோகன் என்பது காரணப்பெயராயிற்று. இக்காரணப் பெயர்கொண்ட இன்னொரு மகனும், அவர்களுக்குப் பிறந்தான்; அவன் பெயர் வீதாசோகன். பிந்துசார மன்னவற்கு மற்றொரு மகன் ஸுசீமன் என்பவனும் உண்டு.

பிந்துசாரற்கு இராணிகள் ஈரெண்மர் இருந்தனர். அவர்களில் மூத்தவள் பெயர் தர்மாதேவி. இவளுடைய மகனே ஸுசீமன் என்பவன். மற்ற இராணிகளிடத்திற் பிறகு பிறந்த பிள்ளைகள் ஏறக்குறைய நூற்றுவரிருந்தனர். இந்த இராணிகளுக்கெல்லாம் இப்போது சுபத்ராங்கி விஷயத்திற் பொறாமை யதிகமாயிற்று.

அசோகன் சிசுவாயிருந்தபோதே அழகில்லாதவனு யிருந்தபடியால், அரசன் சுபத்ராங்கியை நோக்கி, 'ஏ, பெண்ணே! உன் வயிற்றில் இப்படிப்பட்ட விகாரசொரூப னை பிள்ளைபிறக்கும் என்று நான் எண்ணவில்லை. ஆயி னும், அவன் குணம் எப்படியிருக்குமோ, பார்க்கலாம். நீ மட்டும், பெற்றவளாகையால், பிள்ளையாசையிற் குறைய மாட்டாய். வீதாசோகன் இளையவனாகையால், அவன் எப்படியிருந்தாலும் இருக்கலாம். மூத்தவனாகிய அசோ கனைப்பற்றியே எனக்கு மனவருத்தமாயிருக்கிறது' என்றான்.

'ஆண்பிள்ளை எப்படியிருந்தாலும் என்ன? சிங்கம் சிங்கமேயன்றிச் சிறு நரி யாகாததுபோல, அரச குமாரன் அவலக்ஷண முடையவனானாலும், அரச குமாரனேயன்றி வேறாகான்.

'உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.'

என்பது வேதவாக்கியம்; பேதவாக்கியம் அன்று. 'காக்கையின் கண்ணுக்குத் தன் குஞ்சு, பொன்குஞ்சு' என்றபடி என் பையன் எனக்குத் துய்யனாய் விளங்கு கிறான். தாங்கள் எப்படி எண்ணிக்கொண்டாலும் சரி, தங்களிஷ்டம். என் மகன் எப்படியிருந்தாலும் என்

அதிர்ஷ்டம். நான்மட்டும் அவனை அதிக ஆசையாய் வளர்ப்பேன்,' என்று சுபத்ராங்கி, தன் மைந்தர்களில் அசோகனை அதிக அன்பாய் வளர்த்து வந்தாள்.

'பார்த்தீர்களா! சுபத்ராங்கியின் எடுப்புக் குலைந்தது, என்ன இருந்தாலும் அத்தனை கர்வம் ஆகாது. எத்தனை தான் கொண்டகணவன் பலம் இருந்தாலும், நம்மை யவள் ஏறெடுத்துப் பாராமலும் மதிக்காமலும் இருந்தாளல்லவா? அவள் அகந்தைக்குகந்த அழகான பிள்ளைதான் பிறந்திருக்கிறது. அரசனுக்கும் அந்தப் பிள்ளைமேல் ஆசையில்லையாம். அவளை, அவர் நேரிலேயே அந்தப் பிள்ளையின் அவலக்ஷணத்தைப்பற்றி அருவருத்துக்கேட்டாராம். எல்லாம் எண்ணப்படி முடிந்தால் ஒருவரையொருவர் மதிக்கவேமாட்டார்கள். அந்தமட்டும் நமது அக்கை, தர்மாதேவி மெத்தப் பொறுமைசாலி. ஆகையால் சுபத்ராங்கியின் அகந்தைக் கடங்கியிருந்தாள். வேறொருத்தியானால் இத்தனை சாந்தமாய் இருந்திருக்கமாட்டாள்' என்று இராணிகள் தமக்குள் பேசிக்கொண்டார்கள்.

அசோகன் தன் தாயாதரவில் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறைச் சந்திரன்போல வளர்ந்துவந்தான். மற்றவர்கள் யாரும் அவனைக் கவனிப்பதேயில்லை. அரசனெவ்வழி அவ்வழி அனைவரும் ஒழுகினார்கள். யார் என்ன எண்ணிக்கொண்டாலும், தன்னைப்பற்றி என்ன சொன்னாலும் சிறுபிள்ளையாகிய அசோகன் கவனிப்பதே கிடையாது. எந்நேரமும் சிரித்தமுகமாகவே விளையாடிக்கொண் டிருப்பான். பெருந்தன்மையாகவே காலம் போக்குவான். நாளேற நாளேற அவனுக்குக்

குழந்தைப் பருவம் நீங்கிக் குமாரப்பருவம் தொடங்கிற்று; கல்விகற்க ஆரம்பித்தான். பையப்பைய அவனுக்கு உலக ஞானம் உண்டாயிற்று.

அப்போதொருநாள் நந்தவனத்தில் அவன், சிந்தை மகிழ உலாவும்போது தன் தந்தையின் விந்தையான ஒழுக்கத்தைக் குறித்து, 'ஆ, இவரென்ன இப்படி நிந்தையாய் என்னை ஒதுக்கிவைக்கிறாரே! மைந்தரென்றால், எந்தைக்கு எல்லாரும் ஒரு பார்வையிலன்றோ இருக்கவேண்டும்! இரு பார்வை பார்க்கின்றாரே! ஒன்றில் என்னை வைத்துத் தள்ளுகின்றார்; மற்றொன்றில் நான் தவிர மற்றவர்களை வைத்துக் கொள்ளுகின்றாரே! பசுவின் மடியில் ஒரு பக்கம் நீரொழுகி, மறுபக்கம் பாலொழுகுமாறன்றோ, இவர் ஒழுகுகின்றார்? இதற்குக் காரணம் விளங்கவில்லை.

"அத்தி மரத்தின் அழகான செங்கனிகள்
அத்தனையு முட்சொத்தை யாகுவபோல்—மெத்தமெத்த
மேலழகாய்த் தோன்றுகின்ற மிண்டருக்கு முள்ளழகாம்
நூலழகுண் டாமோ நுவல்"

என்றபடி மற்றப் பிள்ளைகளின் மேலழகில் மயங்கி மோசம் போகின்றாரிவர் என்றெண்ணுகிறேன். "குலத்தாலென், அழகாலென், குணங்களே பெருஞ்செல்வம்" என்பதை இவர் சற்றேனும் உணரார்போ லிருக்கின்றதே! இதைப் பற்றி என் தாயை விசாரிப்பேன்' என்று தன் தாயிடத்துச் சென்று, தந்தையின் ஓரவஞ்சனைக்குக் காரணங்கேட்டான்.

'காரணம் என்ன இருக்கின்றது? "தந்தைதாய்ப்பேண்" என்றபடி அவரை நீ கனம் பண்ணவேண்டும். உன்னை அவர் கவனம் பண்ணினாலும் சரி; கவனம் பண்ணாவிட்டாலும் சரி. நீ மட்டும் பெற்றோர்க் கடங்கி நடக்கவேண்டும். அவர்க்கு

எல்லாந் தரும். அடிக்கவுந் தரும்; அணைக்கவுந் தரும் என்பதுபோல, மைந்தனைத் தந்தை மதிக்கவுந் தரும்; அவமதித்தொதுக்கவுந் தரும். எதற்கும் காரணம் உண்டு. அது நியாயமோ, அநியாயமோ அதைப்பற்றி நமக்கென்ன? தந்தை விஷயத்தில் உனக்கெப்படித் தோன்றினாலும் என் விஷயத்தில் உனக்குப் பேதமில்லையல்லவா? "தாய்சொற் றுறந்தொரு வாசகமில்லை" என்றபடி, என் சொற்படி தவறாமல் நட. உனக்கு எல்லாம் நன்மையாகவே முடியும்' என்று அசோகன் தாய் சொல்லி முடித்தாள்.

'அப்படியே, இனி நான் அதைப்பற்றிக் கவனியேன். அன்புடையாராகிய தங்கள் திருவாசகத்துக்கு மறுவாசகம் இல்லை. எது எப்படியானாலும் ஆகட்டும். நான்மட்டும் அவர் சொற்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்' என்று வணக்கமாய்ப்பேசி, அப்பால் அகன்ற மைந்தன் விஷயத்தில் தாய்க்கு அன்பு வளர்ந்தது. ஆனாலும் அவன் தந்தை அவனை அப்படி அவமதித்திருப்பதற்கு, அவள் மனந் தளர்ந்தது. மற்றவர்கள் விஷயத்திலும் அவளுக்கு மனம் பிடிக்கவில்லை. கணவர் தனக்கு உகந்தவராயிருந்தும், தன் மகன் விஷயத்தில் அவர் நடந்துகொள்ளும் விதம் அவளுக்கு விநோதமாயிருந்தது. பிற்காலத்தில் அது, 'தென்றல் முற்றிப் பெருங்காற்றுவதுபோலப் பெருங்கலகமாய் முடிந்தாலும் முடியுமே' என்று அவள் எண்ணுதும் எண்ணி மனம் புண்ணுனாள்.

அசோகன் விஷயத்தில் அவன் தந்தைக்கிருந்த அருவருப்பை அறியாதார் ஒருவரும் இலர். ஆயினும் அவன் கல்வி விஷயத்தில், அந்த அருவருப்புக் காரணமாக ஒரு தடையு மேற்படவில்லை. மற்றைப் பிள்ளைகளைவிட அசோ

கற்குக் கல்வியிற் கூரிய நோக்கும், சீரிய வாக்கும் உண்டாயிருந்தன. கணக்காயர், மற்றைப் பிள்ளைகளைக் காட்டினும் அசோகனையே அதிகமாக மெச்சிக்கொள்வார். சிறுவயதிலேயே அவன் மெத்தத் தெளிவாகப் பேசுவான். எதையும் அநாயாசமாக வழுவின்றி உச்சரிப்பான். "கடலோரத்திலே உரலுருளுது புரளுது" என்பதுபோன்ற இடறான வாக்கியத்தை இருபது முறை விடாது ஒரே மூச்சில் திருப்பித் திருப்பி வழுவாமற் சொல்லுவான். அதை மற்றைப் பிள்ளைகள் ஒரு முறை கூறவுங் கூசிப் பின்வாங்குவார்கள். கணக்கிலும் அவன் பிணக்கின்றிப் பேசுவான். மூன்றப்பத்தை நால்வருக்குக்கொடு என்றால், சிறு பிள்ளையாகிய அவன், ஈரப்பத்தை யெடுத்து நாலு அரையாகவும், ஓரப்பத்தை நான்கு காலாகவும் பிட்டுத் தரைமேல்வைத்து, ஒவ்வொருவருக்கு ஓரரையும், ஒரு காலுமாக முக்காலப்பம் என்று அநாயாசமாய்ச் சொல்லிக் காட்டுவான். எண்சுவடி தெரிந்த மற்றைப் பிள்ளைகளும் தெரியாது விழிப்பார்கள். ஒரு நாள் கணக்காயர் வேடிக்கையாக,

"குகுகுகுகுகுகுகுகுகு ச் செட்டிமகள்
அஅஅஅஅஅஅஅஅஅ க் காசைப்பட்டாள்
முமுமுமுமுமுமுமுமுமு மூன்றடுக்கிச்
செசெசெசெசெசெசெசெசெசெக் கட்டியனுப்பு."

என்பதுபோன்ற வேடிக்கை வாக்கியத்தை வினோதமாய் எழுதிப்படிக்கச் சொன்னார். ஒருவனாலும் முடியவில்லை. அசோகன்மட்டுங் கொஞ்ச நேரம் எழுத்துக்களை எண்ணிப் பார்த்து, எப்படியோ கணக்குப்பண்ணி

'பத்து (கு) — கு பத்து — குப்பத்து
குப்பத்துச் செட்டி மகள்

பத்து (அ) — அ பத்து — அப்பத்து
அப்பத்துக் காசைப்பட்டாள்.
பத்து (மு) — மு பத்து — முப்பத்து
முப்பத்து மூன்றடுக்கிச்
பத்து (செ) - செ பத்து - செப்பத்து
செப்பத்துக் கட்டியனுப்பு'

(அதாவது)

'குப்பத்துச் செட்டிமகள்
அப்பத்துக் காசைப்பட்டாள்
முப்பத்து மூன்றடுக்கிச்
செப்பத்துக் கட்டியனுப்பு' என்று விளக்கமாகச் சொல்லி எழுதிக் காட்டினான். எல்லாரும் அதிசயித்தார்கள். அதற்காக கணக்காயர் ஏற்படுத்தியிருந்த வெகுமதியை அவன் பெற்றுக்கொண்டுபோய்த் தன் தாயிடத்திற் கொடுத்து,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்றபடி, அவ்வம்மையை மகிழ்வித்தான்.

அங்ஙனமகிழ்ந்த சுபத்ராங்கி, 'பிங்களவற்ச ஜீவமுனிவர் சொன்னது சரிதான். மூத்தவனைப் பார்க்கிலும் இளையவன் முதன்மையாவான், அரசாளுவான், அதிர்ஷ்டசாலி என்றது தடையின்றிப் பலிக்கும். இனி நான் இவன் விஷயத்திற் கவலைகொள்ள வேண்டியதில்லை. "விளையும் பயிர் முளையிலே" என்பது விசதமாகின்றது. ஆனால், அம்முனிவர் இதைப்பற்றி அரசர்க்கறிவிக்க அஞ்சினார். அரசர்க்குஅசோகனிடத்துள்ள அருவருப்பே அதற்குக் காரணமாகும். எதுவெப்படியாயினும், பையன் ஐயனுப்போது பரமயோகியாய்ப்

பூமண்டலாதிபத்தியம் பெற்று வாழ்வான் என்பதற்கு ஐய மில்லை' என்று தனக்குள் எண்ணித் தன்னைத்தானே தேற் றிக்கொண்டாள்.

அதிகாரம் 2.

(இளமை)

ஒரு நாள் அரசன் தன் பிள்ளைகளின் கல்வித்திறமை யையும், உலக ஞானத்தையும் சோதித்தறியவெண்ணி அறிக் கையிட்டான்.

அதன்படி எல்லாரும்வந்து நந்தவனத்திற் கூடினார்கள். காலையில் சூரியன் புறப்பட்டது முதல் அரசிளங்குமரர் ஒவ் வொருவராய் அங்கு வந்துகொண்டே யிருந்தனர். குதிரை யேறிவந்தார் சிலர்; தேரேறிவந்தார் சிலர்; பல்லக்கில் வந்த தார் பலர்; இப்படி அதிவைபவத்தோடு ஒழுங்காய் உடுத்துக் கொண்டு மேலழகாய்த் தோன்றும் இளைஞர் எல்லாரும் ஏக காலத்தில் வந்து கூடிக்குலாவி உலாவியிருந்தார்கள். சோத னைமுடியுமட்டும் யாரும் வெளியிற் செல்லப்படாதென்பது அரசன் கட்டளை.

அவர்களைச் சோதிப்பதற்குப் பிங்களவற்ச ஜீவமுனி வரை அரசன் நியமித்திருந்தான். அங்கே அவர் ஓரவஞ்சனை யின்றி நடுநிலைமையிற் றிகழ்ந்து உத்தமமான சுத்தமனத்து டன் பெருமிதமாய் வீற்றிருந்தார். அசோகன் தவிர மற்றை யரசிளங்குமரரைக் கண்டவுடன் அவர்க்குப் பழையஞாப கம் வந்தது. அதனால் அவர், 'ஆஹா! அரசர்க்குத் தம் மகன் அசோகனிடத்துள்ள அருவருப்பு நாளுக்கு நாள் வளர்ந்து

கொண்டே வருகின்றதல்லவா! இப் படியில் இப்படியும் ஆகுமா! இதை யார் ஒப்புவார்கள். மேலழகில்லாமையாலே மகனைத் தந்தை வெறுக்க என்ன ஞாயம் இருக்கிறது? சிறு குறும்பிழைத்துப் பிழைத்தல் சிறுவர்களிற் பெரும்பாலர்க்கும் இயற்கையாகவன்றோ விருக்கிறது? அப்படி அசோகன் சிறுகுறும்பு செய்து மற்றைப் பிள்ளைகளை வருத்துகிறான் என்றாலும், அதற்காக அவனை அரசர் வெறுப்பது அநியாயமாய் முடியும். சிறு குறும்பு செய்யும் பருவத்திற்கு முந்தியதாகிய குழவிப் பருவத்திலேயே அசோகனை அரசர் வெறுத்திருக்கின்றாரே! அதற்கென்ன காரணம் சொல்வது? அசோகனுடைய இயற்கை விகார வுருவமைப்பே காரணம் என்பதுதான் விடை. இது எல்லார்க்குந் தெரிந்த விஷயம். ஆயினும், "மயிர் வனப்பும், கண்ணின் வனப்பும், உகிர் வனப்பும் வனப்பல்ல; எண்ணின் வனப்பே வனப்பு" என்பது பெரியோர் துணிபு. அது போலவே, அசோகன் கல்விகேள்வி உலக ஞானங்களில் வல்லவனாய் விளங்கியிருக்கிறானே! அங்ஙன மிருந்தும் அவனை இந்தச் சோதனைக்கு வரவழைக்காமல் விட்டது அரசனுடைய பெருங்குற்ற மாகும்' என்று எண்ணிக்கொண்டே கண்ணியமாய்ப் புண்ணிய வுருவோடு வீற்றிருந்தார்.

இப்படி அசோகனை அழைக்காமல் அருவருத் தொதுக்கின அரசனுடைய ஓரவஞ்சனையை உணர்ந்த சுபத்ராங்கி, தன் மகனை யழைத்து, 'குழந்தாய்! பரிசோதனை சபைக்கு நீயும் போய் வா; அரசர் கட்டளை அவசியம் இல்லை. நல்வினை செய்ய நாம் பின்வாங்கப்படாது. தந்தை ஒப்பாவிட்டாலும் தாயாகிய நான், என் முழுமனத்தோடும் ஒப்பி, உன்னை அங்கே அனுப்புகின்றேன். உடனே புறப்படு. உனக்கு உகந்த

வாகனமேறி, உத்தம உடை உடுத்துச் சித்த சமாதானத் தோடு செல்லக்கடவை' என்று விடை கொடுத்தாள்.

அப்படியே அவன் சற்றேனுந் தாழ்க்காமல் வாகன மேறச்சென்று பார்த்தபோது, யானை, தேர், குதிரை முதலிய வைகளில் எதுவும் வாகனகூடத்தில் இல்லை. எல்லாவற்றி னும் அரசிளங்குமரர் ஏறிக்கொண்டு பரிசோதனை சபைக்குப் போயிருந்தார்கள். ஒரு கிழயானைமட்டும் நிலுவையாயிருந் தது. ஆகையால், அவன், அதில் ஏறிக்கொண்டு அடக்க மாய் இடை வழியிற் கங்காதீர்த்தம் உட்கொண்டு, சபாநந்தவனத்துட் பிரவேசித்து, வேறுசனங்களில் அர சிளங்குமரர் அமர்ந்திருந்தமையால், தான் புற்றரைமேல் உட்கார்ந்திருந்தான். சோதனை தொடங்கிற்று:

(போது)

முனிவர் :—விரதங்களிற் சிறந்ததெது ?

மற்றைப்பிள்ளைகள் :—ஒரு பொழு துண்ணல், துற வறம், விளக்கு வைக்குமுன் புசித்தல் முதலான பற்பல விடைகள்.

அசோகன் :—கொல்லா விரதம்.

முனிவர் :—நோன்புகளிற் சிறந்ததெது ?

அசோகன் :—பொய்யா நோன்பு.

முனிவர் :—ஏன் ?

அசோகன் :—பொய்மையே எல்லாப் பாதகங்களுக்குந் தாய். அஃதின்றிக் கொலை, களவு, கள்ளருந்தல், காமம் முதலிய பாதகங்கள் தலையெடுக்கா. ஆகையால், நாம் அஞ்சு தலைநாகத்தின் விஞ்சுதலை அடக்க, அதன் தலைகளில் ஒவ் வொன்றாய் நசுக்கி இளைப்பதைப் பார்க்கிலும், அதன்

நெஞ்சை நசுக்கி நஞ்சை யகற்றுவது நன்மதியல்லவா? அது போலப் பொய்யை யொழித்தால் எல்லாப் பாதகங்களும் தாமாகவே ஒழியும்.

முனிவர் :—அரசன் ஆட்சிக்கு மாட்சியான சாக்ஷி யாது?

அசோகன் :—மனச்சாக்ஷி.

முனிவர் :—எப்படி?

அசோகன் :—மனச்சாக்ஷியின்றி அரசாட்சி நடவாது. அங்ஙனம் நடந்தால் அது ஓரவஞ்சனையான அநீதியாய் முடியும். அரசனுடைய நீதிக்கு அவன் மனச்சாக்ஷி முது கெலும்பு போன்றது?

முனிவர் :—மனிதர் அடையும் பொருள்களில் முதன்மையானதெது ?

அசோகன் :—கல்விப்பொருள்.

முனிவர் :—ஏன்?

அசோகன் :—கல்வியில்லாதவன் கயவன். அவன் விலங் குக்குச் சமானமானவன். ஆகையால், அவனுடைய விலங் குத்தன்மை நீங்கி, விவேகத்தன்மை ஓங்கி, மனிதத்தன்மை நிலைக்கக் கல்வி இன்றியமையாதது. செல்வப் பொருளைச் சேர்க்கவுங் காக்கவும் கல்விப்பொருளுக்கு ஆற்றலுண்டு. கல்விப்பொருள் செல்வப்பொருளைப்போல் அழியாது; கள் வர் கொள்ள ஒழியாது; செலவழிக்கக் கழியாது.

(கணிதம்)

முனிவர் :—ஒரு குளத்தில் சில தாமரை மலர்கள் இருந்தன. சில குருவிகள் தேனுண்ண வந்தன. மலருக் கொன்றாய்க் குந்தினபோது, ஒரு குருவிக் கிடமில்லை. மல ருக் கிரண்டிரண்டாய்க் குந்தினபோது ஒரு மலர் வெறுமை

பாயிருந்தது. வந்த குருவி எத்தனை? இருந்த மலர் எத்தனை?

மற்றைப்பிள்ளைகள்:—நூறு மலர், தொண்ணூற்றைன்பது குருவி, ஐந்நூறு மலர், ஆயிரங் குருவி முதலிய பற்பலவிடைகள்.

அசோகன்:—மூன்று மலர், நான்கு குருவி.

முனிவர்:—சரியாய்ச் சொன்னாய்.

(இலக்கணம்)

முனிவர்:—இடையின மெய்க்கு அப்பெயர் எப்படி அமையும்?

மற்றைப்பிள்ளைகள்:—வல்லினத்திற்கும் மெல்லினத்திற்கும் இடையிற் பிறப்பதால் அப்பெயர் அமையும் முதலிய பற்பல விடைகள்.

அசோகன்:—வல்லினத்தைப்போல மார்பிற்றோன்றி வலிந்தொலிக்காமலும், மெல்லினத்தைப் போல மூக்கிற்றோன்றி மெலிந்தொலிக்காமலும் நடுத்தரமாய் ஒலிப்பதால் இடையினம் என்பது அமையும்.

மார்பிற்கும் மூக்கிற்கும் இடையில் உள்ள தொண்டையிற் பிறப்பதால் இடையினமென்பது அமையும்.

விடுகேள்வி.

முனிவர்:—தலைமேலே யுண்டு தமிழேட்டின் மேலே
நிலையாக வுண்டு நிலமேற்—பலபலவாய்
நெல்வயலிற் பூமரத்தில் நிச்சயமா யுண்டு
சொல்பவரை நெஞ்சே துதி. [தனைச்

மற்றைப்பிள்ளைகள்:—மயிர், குல்லாய், முடி, மை, வாசனை முதலியன.

அசோகன் :—யார்க்கும் உடலுக்கு மேலே தலைதான் இருக்கிறது. தமிழ், ஏட்டின்மேலேதான் இருக்கின்றது. நெல், வயலில்தான் இருக்கிறது. பூ, மரத்தில்தான் இருக்கிறது. இதை வெளியில் எங்கும் தேடாமல் பாட்டுக்குள்ளேயே பார்க்க.

(நீதி.)

முனிவர் :—நாம் யாரை முதலில் வணங்கவேண்டும். ?

அசோகன் :—மாதாபிதாக்களை.

முனிவர் :—மகன் தந்தைக்குச் செய்யு நன்றி யாது ?

அசோகன் :—'இவன் தந்தை என் நோற்றான் கொல்!' என்னுஞ் சொல்.

முனிவர் :—காப்பது விரதம் என்றாலென்ன ?

அசோகன்:—மனதை ஐம்புலன்களின் வழியிற் செலுத்தாமற் காத்துக்கொள்வதே பெருவிரதமாம்.

முனிவர் :—மெய்ப்பொருள் கண்டு வாழ்வார் யார்?

அசோகன் :—பிறர் வைததையும் வாழ்த்தினதாகக் கொள்ளுமொருவனும், கூழை, நெய்பெய்த சோறென்று மதிப்பவனும், கசப்பான பொருளைத் தித்திப்பான பொருளென்று தின்பவனும், ஆகிய மூவரும் உண்மைப் பொருளைக் கண்டு வாழ்பவராவார்.

முனிவர்:—'எல்லாரினும் அசோகனே முதற்குறிப்பில் நிற்கிறான். இதை நாம் அரசர்க் கறிவிக்கவேண்டும்' என்றெண்ணி; அரசனை அணுகி 'தங்கள் குமாரர்களிற் பற்பலர் பற்பலவாறு என் கேள்விகளுக்கு விடை கூறினார்கள். அதற்குத் தக்கபடி நான் குறிப்பிட்டிருக்கின்றேன். அசோகன் மட்டும் நான் கேட்ட வினாக்களுக்குச் சிறிதும் பின்னிடையாமல் தக்க விடை கூறினான். ஆகையால் அவனுக்கு நூற்

றுக்குத் தொண்ணூற்றொன்பது விதம் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவன் சபைக்கு வரும்போதே அமைதியாய், உங்கள் முன்னோர் ஏறிய உத்தம வாகனமாகிய யானையேறி வந்தான்; உத்தமதானமாகிய புற்றரையில் அமர்ந்திருந்தான்; உத்தம பானீயமாகிய கங்காசல முட்கொண்டிருந்தான். ஆகையால் அவன், எதிர்கால வரசாட்சிக்கு ஏற்றவனாவான்' என்றார்.

அரசன் ஒன்றும் பேசவில்லை. மௌனங் கலக நாஸ்தியென்று சும்மாவிருந்துவிட்டான். மற்றைப் பிள்ளைகள் தத்தம் மனம் போனவாறு வாயைப்போக்கி, தாம் தாம் ஏறிவந்த வாகனமே சிறந்ததென்றும், பானமே பாரமார்த்திகமென்றும், அமர்ந்திருந்த ஆதனமே அமலமானதென்றும் சொற்களைக் கொட்டியளந்து ஒழுங்கு மாப்பிள்ளைகளாய்த் தங்களைத் தாங்களே புகழ்ந்துகொண்டார்கள்.

வடிவிற் குறைந்தவனென்று யாரும் இகழ்தற்கிலங்காயிருந்த அசோகன் மாத்திரம் தனித்து வந்தபடியே அந்நந்தவனத்தை விட்டுத் தனித்துச் சென்று தாயைக் கண்டு பரிசோதனைமுடிவைத் தெரிவித்தான். பிங்களவற்ச ஜீவமுனிவர் விவரித்தபடி எல்லா விஷயங்களையும் அசோகன் விளக்கமாக உரைக்கக் கேட்ட சுபத்ராங்கிக்கு உள்ளங்குளிர்ந்தது. பின்னும் அவன், 'முனிவர் சொன்னபடி நான் கங்காதீர்த்தம் உட்கொண்டு சென்றது உண்மைதான். எப்படியோ அதை அவர் அறிந்து கூறினது அதிசயமே. அந்தத் தீர்த்த விசேஷத்தாலும் நான் சிறந்தவனாவேன் என்றார்; என் மூதாதையர் ஏறின மதகரியின் மேல் நான் ஏறிச்சென்றதும் என் எதிர்கால உன்னத நிலைக்கு ஒப்பற்றகுறி என்றார்; அங்கு நான் பசும்புற்

றரை யாசனத்தில் அமர்ந்திருந்ததும் அப்படியே, இனி நான் அடையும் அத்தியற்புத அரசாட்சி நிலேந்து அறிகுறியாம். இன்னும் என்னவேண்டும்? அம்மணி, தன்மகன் அடையும் எதிர்கால உன்னத நிலைமையைக் கேட்டு உள்ளங் குளிரும் உத்தம மாதாவான தங்களைத் தரிசிக்க, என் கண்கள் களிக்கின்றன' என்று முடித்தான்.

இருவரும் எதிர்காலத்தை நோக்கியிருந்தார்கள். ஒரு நாள் பிந்துசாரமன்னன் தன் மூத்தமகனாகிய ஸுசீமனை அழைத்து, 'பிள்ளாய் உடனே நீ புறப்பட்டுப்போய், * தக்ஷசிலைக் (Taxila) குடிகளின் கலகத்தை அடக்கிவரவேண்டும். இருந்தாற்போலிருந்து அங்குக் குட்டிக்கலகம் குடிக்கலகமாய் ஏற்பட்டிருக்கிறது. நமது அரசாட்சிக் கடங்கின அந்த இடத்தில் இதுவரையிற் கலகம் என்பதே கிடையாது. என் தந்தை நாளிலிருந்து நிந்தையின்றிருந்த அந்தப் பிரதேசத்தில் இப்போது கலகம் நேர்ந்தது, விந்தையாயிருக்கிறது. நீ சேனைசமேதனாகவே சென்று கலகத்தையடக்கி வென்று வருவது நன்று' என்று கட்டளையிட்டான். தந்தை சொற்படி ஸுசீமன் சேனைசமேதனாய், தக்ஷசிலா நகரத்தையடைந்தான்.

அவனைக்கண்ட குடிகள், 'இனி நமக்கொரு குறையுமில்லை; இளவரசரே நேரில் வந்திருக்கிறார்; நியாயங்கிடைக்கும்; வரிவாசிகள் மிதமாகும்; பயிர்க்கு நீராதாரம் ஏற்

* இது பாஞ்சாலத்திலுள்ள பட்டணம். இதைச் சூழ்ந்த மாகாணம் மகத தேசாதிபதிக்கு உட்பட்டிருந்தது. இந்த மாகாணத்தைத் தக்ஷிலாநகரத்திலிருந்து, இராஜப்பிரதிநிதியும் மற்றுஞ் சிலவுத்தியோகஸ்தர்களும் மகத தேசாதிபதிக்கு அடங்கி ஆண்டு வந்தார்கள்.

படும்' என்று அமைதியானார்கள். குழப்பங் குன்றிற்று. அங்குக் குழப்பம் உண்டான காரணம், அங்கிருந்த இராஜப்பிரதிநிதியும் அவனைச்சேர்ந்த பிற அதிகாரிகளும் தத்தம் மனம்போனபடி வரி முதலியவைகளை விதித்து இரக்கமின்றிக் குடிகளை நடத்தியதே யாம். அவர்கள் இட்டது பிச்சையாய், குடிகளின் இச்சையை அசட்டை செய்து, குரங்கின் கைக்கொள்ளிபோலத் தங்கையில் அதிகாரத்தை அநீதியிற் செலுத்தினார்கள். அதனால் ஜனங்கள் அமைதியற்றுக் கலகஞ் செய்யலானார்கள்.

கலகத்தை அடக்கப் போயிருந்த ஸுசீமன், அதன் காரணத்தை உணர்ந்து, தக்க பரிகாரந் தேடாமல் தான் இளவரசன் என்பதனாலேயே இறுமாந்திருந்து விட்டான். ஆகையால் இவனை முதலிற் கண்டபோது இவன் விஷயத்திற் குடிகளுக்கிருந்த மதிப்புக்குறைந்தது. இவன் அங்கு இருக்கையிலேயே மறுபடியும் அங்கும் இங்குமாய்க் குட்டிக்கலகங்கள் நேரிட்டுக்கொண்டிருந்தன. இவன் எத்தனை தான் சேனைசமேதனாயிருந்தும், குடிகள் இவனை மதிக்கவேயில்லை. சாம பேத தான தண்டமென்னும் சதுர்வித தந்திரங்களில் முன்னைய மூன்றையுமே குடிகளிடத்திற் பெரும்பாலும் அரசன் செலுத்தவேண்டும். இம்மூன்றும் பலனற்ற பின்பே தண்டத்தைச் செலுத்தலாம். அதுவும் எல்லார் மேலும் செலுத்தினால் வீண் கஷ்ட நஷ்டங்களுக்கு இடமாகும். குழப்பத்துக்குக் காரணமாயிருந்தவர்களைக் கண்டுபிடித்து, தண்டிப்பதே சரியான தந்திரமாகும். இவ்விராஜ தந்திர முணராத ஸுசீமன், தன் பெருமையும் அருமையுங் குன்றிக் குடிகளின் வெறுப்புக்கிடமானான். குடிகளிற் சிலர் ஒன்றுகூடி, இவனிடத்தில்வந்து தங்குறைதீர முறையிட்டுக்

கொள்ள முயன்றார்கள். அதற்கிவன் இடங்கொடுக்கவே யில்லை. காட்சிக்கெளியனாயிருப்பதே அரசவிலக்கணங்களில் முதன்மையானது. இதுவுமன்றி அங்குச்சென்ற ஸுசீமன், தானே குடிகளை வரவழைத்துக் குழப்பத்துக்குக் காரணமான குறைகளைக் கேட்டிருக்கவேண்டும். அவர்கள் வந்து முறையிட்டுக்கொள்ளுமட்டும் சும்மாவிட்டிருந்தது செங்கோன்மைக் கழகன்று. அப்படி அவர்களே வந்து குறைகளைச் சொல்லிக்கொள்ள முயன்றும் அதற்குடன்படாமல் இவன் அவர்களை வெருட்டித் துரத்தியது கொடுங்கோன்மையின் முதற்பாதகமாகும்.

இதனால், குடிகள் தாங்கொண்ட நல்லெண்ணத்தை விட்டு, இளவரசன் இங்குச் சேனைசமேதனாய் வந்த காரணம் நம்மைத் தண்டிக்கும் பொருட்டேயாகும் என்று எண்ணிக்கொண்டார்கள். குழப்பம் முன்னையினும் முப்மடங்கு மும்மரமாயிற்று. கண்ணுக்கு மையிடப்போய் கண்ணைக் குத்திக்கொண்டதுபோல, ஸுசீமனால் குழப்பம் அடங்குவது போய் பலமடங்கு அதிகரித்தது. சுவரிலடித்த பந்தே போல அங்கே சென்ற ஸுசீமன் பாடலிபுரத்திற்குத் திரும்பிவந்துவிட்டான்.

அதுகண்ட பிந்துசாரற்கு, இளவரசனிடத்திருந்த மதிப்புக் குறைந்தது. ‘ஆஹா! இவனை நாம் எத்தனையோ மதித்திருந்தோமே! கடைசியாய்ப் பார்க்கப் போனால் இவன் ஒழுங்கு மாப்பிள்ளையாக வல்லவோ தீர்ந்தான்! ஏறக்குறைய இருபதுவயது தாண்பிள்ளையாகிய இவன், வீண் பிள்ளையாக வல்லவோ வளர்ந்திருக்கிறான்! இவன் விஷயத்தில் வைத்த மதிப்பை இதுவரையில் நாம் அசோகனிடத்தில் வைத்திருந்தால், எத்தனையோ காரியாநுகூலமாயிருக்குமே!

ஆயினும் அவன் இவனைப்போல இருபது வயதாண்பிள்ளையல்லவே! இன்னும் பதினாறு நிரம்பாத பாலகனாகவல்லவோ இருக்கின்றான்! அவனையும் ஆராய்வோம். இதற்கெல்லாம் வயது என்ன செய்யும்? மேலழகும் வீண் வேடமும் படாடோபமும் என்ன பண்ணும்.? காரியசித்தி அடைவதற்குச் சமயோசித நுட்ப புத்தியன்றோ வேண்டும். உருவத்திற் குறைந்தவனாயினும்; அசோகன், புத்தியிற் சிறந்தவனாயிருப்பானென்றெண்ணுகிறேன். இவனை அனுப்பினபடி அவனை அனுப்பியிருந்தேனானால், குழப்பம் அடங்கிக் குடிகள் அமைதியுற்றிருப்பார்கள்' என்று நினைந்து, அசோகனை அழைப்பித்து, ஸுசீமனுக்குச் சொன்னதுபோலவே, 'பிள்ளாய், உன் அண்ணன்போய், அபஜயப்பட்டுக் குழப்பத்தை அடக்காமல் வந்தான். அவன்சேனைசமேதனாய்ச் சென்று வீண் ஆடம்பரத்திற் கிடம்பண்ணிக் காரியத்தைக் கெடுத்துக்கொண்டு வந்தான். நீ ஆடம்பரமின்றி அடக்கமாய்ச் சென்று தக்ஷசிலாநகரத்துக் குழப்பத்தை அடக்கிவா. வேறொன்றும் விசேஷம் சொல்லமாட்டேன். "ஏவா மக்கள் மூவாமருந்து" என்றபடி காரியத்தை முடித்துவா. உனக்குச் சேனைகளும் ஆயுதங்களுந் தவிர வேறென்னவுபகரணங்கள் வேண்டுமோ அவைகளை மட்டுங் கொண்டுபோ' என்று விடைகொடுத்தனுப்பினான்.

அதுகேட்ட அசோகன், "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை" என்பதை மனத்திலமைத்து, "ஊக்கமுடைமை ஆக்கத்திற் கழகு" என்றபடி அதியுற்சாகமாய், பிதாவின் கட்டளையைப் பெரிதாகமதித்து, அதன் நுட்பத்தைச் சீர்தூக்கி உணர்ந்து, சேனாடம்பர முதலியவின்றி, அடக்கமாய்ப் புறப்பட்டுப்போய்த் தக்ஷசிலா நகரைச் சேர்ந்தான்.

சேர்ந்தவுடனே அவன், வேறொன்றுஞ் செய்யவில்லை. குடிகளிற் பிரதானமான தலைவர்களை வரவழைத்துக் குழப்பக் காரணத்தைக் கேட்டு உண்மை உணர்ந்து கொண்டான். அதன்பிறகே அவன், தன்னை அவர்கள் வரவேற்றதற்கு விடைகூறினான்; அவர்களுடைய குறைகளின் பிரதானமான வைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டான். அவர்களுக்கவன், தக்க சமாதானங்கூறிப் பிறகு; அங்குள்ள இராஜப் பிரதிநிதி முதலிய உத்தியோகஸ்தர்களோடு கலந்து பேசி, அவர்கள் வாய்ப் பிறப்பையுங் கேட்டுணர்ந்து, எல்லாவற்றையுஞ் சீர்தூக்கித் தெளிந்தான்; அதிக வரி, அநாவசியமான வரி முதலியவைகளை நீக்கினான், நீராதாரந்தேடி, விளைவிற்குக் குறை தவிர்த்தான்; குழப்பக் காரணம் சரியானதென்று கண்டு, குடிகளைத் தண்டிப்பதற்கு மாறாக, இராஜாங்க உத்தியோகஸ்தர்களுடைய அநீதிக்காக அவர்களைத் தண்டித்தான்.

இவன் சேனாசமேதனாய்ச் செல்லாமல் அடக்கமாய்ச் சென்று,குழப்பத்திற்குக்காரணமானகுறைகளைக்கவனித்து, அவைகளைத் தீர்த்து, குடிகளிடத்தில் அன்பு செலுத்தினான். ஆகையால், தக்ஷசிலை முழுவதும் அமைதியுற்று விளங்கிற்று. அரசகுமாரனாகிய அசோகனமைதியை நோக்கின குடிகள் 'இவர் நமக்கு நன்மைசெய்ய வந்தார்; நங்குறைகளைக் களைய வந்தார்; அன்றி, நம்மைத்தண்டிக்க வரவில்லை' என்று நம்பி இவன்மேல் அன்பு செலுத்தினார்கள். இவன் சென்ற காரியம் பலித்தது. பிதுர்வாக்கிய பரிபாலனமும் நிறைவேறிற்று.

அசோகன் திரும்பிவந்து, பாடலிபுத்திரத்திற் பிதாவைக் கண்டு சங்கதி தெரிவித்தான். பதினாறெட்டைப் பிராயத்திளைஞனாயினும், அநுபவ நிரம்பிய முதியவனைப் போலத்

தந்தை சொற்றவாறு, தக்ஷசிலைக்குச் சென்று குழப்பத்தை அடக்கிப் பெருமையோடு திரும்பிவந்த மைந்தனைக் கண்ட தந்தையின் உணர்ச்சி எப்படியிருந்திருக்கும் என்று இதை வாசிப்போர் ஊகித்துணர்வாராக. இதுவரையில் அசோகன் விஷயத்திற் பிந்துசாரற்கிருந்த உணர்ச்சி இப்படிப்பட்ட தென்பது எல்லார்க்குந் தெரியும். ஒருவேளை, அவன் குழப் பத்தை அடக்கச் சென்றவிடத்தில் வகையில்லாதகப்பட்டு மாண்டிருப்பினும், பிந்துசாரற்குச் சம்மதியாயிருந்திருக்கு மென்றெண்ணிக்கொள்ளவும் இடமுண்டு. மகனைக் கண்ட தந்தை, அவனது பெருந் திறமையைக் கேட்ட பின்பும் வாய்விட்டு ஒன்றேனுங் கூறவில்லை; கொண்டாடவும் இல்லை; எப்போதும் போலச் சும்மா இருந்து விட்டான். "வினையாளை வேலைமுடிவில்" என்றபடி, அவன் கொண்டாடு வதற்கு, அசோகன் வினையாளன் அல்லன்; சொந்த மகன். ஆகையால், "மைந்தரைத் தன்னெஞ்சில்" என்றபடி பிந்து சாரன் ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தான் என்று நாம் எண்ணிக்கொள்ளவேண்டும்.

சில நாளைக்குப் பிறகு ஒரு நாள் பிந்துசாரன் மந்திரி மார்களோடு கலந்து ஆட்சிமுறையைப் பற்றி ஆலோசிக்கை யில், 'அமைச்சன்மீர், தக்ஷசிலையைப்பற்றின கவலை, அசோ கனால் ஒருவாறு ஒழிந்தது. அதனையாள நம்மரச மக்களில் ஒருவரையே நியமிக்கவேண்டும். இனி இராஜப்பிரதிநிதி களாக அன்னியரை நியமிப்பது தகாது. அவர்கள் ஆட்சி யின் அநீதியால் அடிக்கடி குழப்பங்கள் நேரிடுகின்றன. இப்போ தஃதிருக்கட்டும். நம்மாட்சிக் கடங்கின மாகாணங் களில் ஒன்றாகிய உச்சயினிபுரத்தைப் பற்றி யோசிப்போம். அதன் குடிகள் மேதாவிகள்; நீதிமான்கள்; அரசனை ஐங்

குரவரில் ஒருவனாக மதித்து அடங்கி வாழ்பவர்கள்; விசுவாச சுபாவமுள்ளவர்கள். அப்படிப் பட்டவர்களை ஆள, நீதிமானாகவும், தன்னுயிர்போல் மன்னுயிரை மதிப்பவனாகவும், குடிமக்களைத் தன் மக்கள்போல் தழுவும் அன்பாளனாகவுமுள்ள ஒருவன் வேண்டும். நான் மேற்குறித்தபடி, அவனும், என் மக்களில் ஒருவனாக இருக்க வேண்டும். ஆகையால் என்ன சொல்லுகின்றீர்கள்? உங்கள் அபிப்பிராயம் என்ன? யாரை நியமிக்கலாம்?' என்றான்.

அவ்விஷயமாக, மந்திரிமார்கள், தங்களுக்குட் சிறிது நேரம் யோசித்தார்கள். பிறகு பிரதம மந்திரி எழுந்து 'சக்ராதிபதி! நாம் ஏன் வேறு எண்ணவேண்டும்? வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய் தேடுவானேன்? சமீப காலத்தில் தக்ஷசிலைக்குச் சென்று அங்கு நடந்த குழப்பத்தை அநாயாசமாய் அடக்கி, அந்நகர மாந்தருடைய நல்லுணர்ச்சியையும் அன்பையும் அதற்கீடாகப் பெற்றுத் திரும்பிவந்த தங்கள் குமாரர் அசோகரே உச்சயினியை யாள உசிதமானவர். உச்சயினி சாதாரண நகரமன்று. ஒரு காலத்தில் உன்னதபதவியில் இருந்தது. தாங்கள் சொன்னபடி பிரஜைகளும் சாதுக்கள்; நீதியை நாடினவர்கள்; ஆகையால், அசோகரையே அங்கனுப்புவது உத்தமம். இதுவே எங்கள் அபிப்பிராயமும் கோரிக்கையும்' என்றுமுடித்தான்.

அதுகேட்ட பிந்துசாரன், 'நன்றாய்ச் சொன்னீர்கள். என்னுடைய எண்ணமும் அதுவே' என்று கூறி, அசோகனை அழைத்து, உச்சயினிமாகாண இராஜப்பிரதிநிதியாக்கி, அங்குச் செல்ல அவனை ஏவினான்.

உச்சயினிபுரத்திற்குப் புராதன நாமம் அவந்திகாபுரி; இதுவே, அவந்திகை, அவந்தி என்றாயிற்று. அயோத்தி,

மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்று சிறப்பிக்கப்பட்ட சப்தபுரிகளுள் ஒன்றாய்த் திகழ்ந்து, பிற்காலத்தில் விக்ரமாதித்தன் இருந்தாண்ட நகரமும் * காளிதாச மகாகவி புகழ்ந்து கூறியதும் இந்நகரமேயாகும். இப்படிப்பட்ட மாட்சிமைபொருந்திய அவந்தி மாகாணாதிபதியாய் அசோகர் வந்து சேர்ந்தார். அங்கே அவர் ஆட்சி மாட்சி பெற்று மன்பதைகட்கநுகூலமாய் விளங்கிற்று. எல்லாரும் நிறைமனதாய், அவரைப் போற்றிப் புகழ்ந்தார்கள். கள்ளம், கரவடம், பொய், புனைசுருட்டு முதலிய தீமைகள் சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்தொழிந்தன. ஆகையால், அசோகர் ஆட்சி மற்றை மன்னர் ஆட்சியினும் மேன்மைபெற்று விளங்கிற்று. அவரது இளமைப் பருவத்திற் பெரும்பாகமும், அவந்தி மாகாணாதிபத்தியத்திற் கழிந்தது. அந்த ஊரால் அவர்க்குச் சிறப்பும், அவரால் அதற்குப் பெருமையுமாக அநேக நாட்கள் கழிந்தன.

அப்போதொருநாள் அசோகருடைய பிரதானியாகிய பிரபவன் என்பான், 'ஐயனே! அடியேன் ஒரு விண்ணப்பம்: இந்த நகரத்தில் அருமையான நந்தவனங்கள், தோப்புக்கள், நீர்நிலைகள், நாடகசாலைகள், சபாமண்டபங்கள், பட்டிமண்டபங்கள், பண்டிதசபைகள், ஆடரங்குகள், அம்பலங்கள், ஆயுதசாலைகள், பலபொருட்காட்சிக் கூடங்கள் முதலிய பல ஆனந்தாநுபவ இடங்களிருந்தும், தாங்கள் தனிமையிற் காலங்கழிப்பதால் பூர்த்தியான சுகாநுபவத்திற் கிடமில்லை. மிருகபக்ஷிகளும் தத்தம் பெட்டையினங்களின் கூட்டுறவால், மனங்களிக்கின்றன. தங்கள் பிரஜைகளிலும் பெரும்

* மேகஸந்தேச மகா கிரந்தத்திற் காண்க.

பாலார் அங்ஙனமேயிருந்து, சுகானுபவம் பெறுகிறார்கள்.
தாங்கள்மட்டும் அங்ஙனமின்றித் தன்னந்தனிமையிற் காலங்
கழிப்பது சுகானுபவத்திற் சேர்ந்ததன்று. விரைவிற் கடிமண
முடித்துக்கொள்வது விவேகமாகும். இப்போது தங்கட்கு
வயது ஏறக்குறைய இருபத்திரண்டாய்விட்டது. இனியும்
தந்தையின் சித்தத்தை இந்த விஷயத்திற் கெதிர்நோக்கித்
தனிமையிற் காலங்கழிப்பது தமக்கு உசிதமன்று. இதோ
சமீபத்திலுள்ள விதிசாநகரவாசியாகிய வணிகர் ஒருவர்க்குத்
தேவியென்னும் பெயருடைய அதிரூபலாவண்ய கன்னிகா
மணியொன்று மகளாய் அவதரித்திருக்கின்றது. அம்மணி
யின் ஒளியால் இப்போது தம்மைச் சூழ்ந்துள்ள சுகானுப
வக் குறையிருள் தலைக்காட்டாதோடும் என்பதிற் சந்தேக
மில்லை. அம் மணியின் மதிப்புக்குகந்த விலை கொடுத்துப்
பெற்று மகிழக்கூடியவர், தம்மைப்போன்ற இளவரச சிகா
மணிகளன்றி வேறு யாவர்?' என்று முடித்தான்.

'பிரதானி, நன்று சொன்னீர், என் உள்ளத்திலுள்
ளதை உள்ளபடி உணர்ந்து உரைத்த உத்தமராகிய உம்
மைப்போல் எனக்கு வேறு யாருளர்? விதிசாநகர வணிக
மணியை நான் நேரிற் கண்டபிறகன்றோ மதிக்கமுடியும்? என்
மதிப்பிற் கேற்ற மணியானால் அதை எப்படியும் நான் பெறா
மல் விடேன். என் தந்தையின் சிந்தையை இந்த விஷயத்தில்
நான் எதிர்பாரேன். இக் கன்னிகாமணியின் மணம், இங்கு
நான் இருந்தரசாள்வதற் கடையாளமாக இப்போது ஆகட்
டும். தந்தையின் அநுமதியில் பிறகு வேண்டுமானால் மறு
மணம் நடக்கட்டும். எனக்குகந்த கன்னிகை கிடையாள்
என்றே நான் தனிமையிற் காலங்கழிக்கின்றேன். என் இச்
சைக் குகந்தவளும் என்மேல் உண்மைக் காதல் கொண்ட

வளுமாகிய அணங்கொருத்தி கிடைப்பின் மணக்கத் தடை யில்லை' என்றார் அசோகர்.

அதுகேட்டு உவந்த பிரதானி, 'எல்லாம் நான்கண் டறிந்து வந்திருக்கிறேன். தங்கள் விருப்பம்போல் ஆகும்' என்று சொன்னான்.

இருவரும் புறப்பட்டு விதிசாநகரஞ்சென்று, தேவியென் னும் வணிகமாதை அவள் தந்தை மூலமாய்க்கண்டு, நன்னாள் குறித்துத் திருமண ஏற்பாடுசெய்துகொண்டு திரும்பினார் கள். அப்படியே குறித்த தினத்தில் திருமணம், பகிரங்கமா யின்றி அந்தரங்கத்தில் முடிந்தது.

இருவரும் சுகானுபவத்திற் றிளைத்து வாழுநாளில் மைந்தன் ஒருவன் பிறந்தான். ஒருநாள் அசோகர் தம் தேவி யாகிய தேவியென்பாள் மகேந்திரன் என்னும் அக்குழந்தை யைக் கொண்டுவந்து கணவன் கையிற்கொடுத்து, 'காதல! குழந்தையைக் கவனித்துப் பாருங்கள். மூக்கில் சிறு மச்சம் ஒன்றிருக்கின்றது. நாக்கிலும் அப்படியே மூன்றுள்ளது. மூக்கில் மச்சம் முன்யோசனையையும் ஞானத்தையும் குறிக் கிறதென்கிறார் என்பிதா; நாக்கில் உள்ள மூன்றும் முக்குறும் பையும் அகற்றவல்ல வாக்குத் திறமையையும், அதனால் பிறரைத் தன்வசப்படுத்தும் வல்லமையையும் விளக்குகிற தென்கிறார். இன்னும் என்னவேண்டும்? இச்சிசு தன்காலத் தில் ஞானமுதிர்ந்து பிறருடைய அஞ்ஞான விருளையோட்டி அவரைத் தன் போலாக்கும் சக்தியா லாளவல்லா னென் றெண்ணுகிறேன்' என்றாள்.

'தேவி, அதற்கென்ன தடை? உன்பிதா தமதனுபவத் தாற் சாமுத்திரிகம் உணர்ந்து சொன்ன விஷயம் பலிக்காமற்

போகுமா? உலகஞான முணர்ந்த அபாரஞானியாய் என் போற் சாதாரண மன்பதைகளை ஆளுவதைக்காட்டினும், உலகஞானத்திற் கதீதமான பரஞானியாய், மோனஞ் சாதிக்கும் முனீந்திரர்களையும் வசப்படுத்தும் ஆற்றல் சாலச் சிறந்ததன்றோ? அப்படியே இவன் ஆகக்கடவன். அதனால் இவன் தந்தையாகிய என் பெருமை, பரஞான வழியிற் பரந்து விளங்கக் கடவது. இந்தச் சிசுமட்டும் ஆயுள் வன்மையாற் பல்லாண்டு வாழவேண்டும்' என்று அசோகர் வாழ்த்திக் குழந்தையைத் தழுவி யணைத்து, உச்சிமோந்து கொஞ்சிக் குலாவினர்.

இது, கிறிஸ்து பிறக்குமுன் 276-ம் ஆண்டில் நடந்தது. 274-ம் ஆண்டில் இவர்களுக்கொரு பெண்மகவு உதித்தது. ஆண்குழந்தைக்கு மகேந்திரன் என்று பெயரிட்டழைத்தபடி, இப்பெண் மகவுக்குச் சங்கமித்திரை என்று நாமகரணஞ் செய்தார்கள். இதுவும் ஆண்மகவாகிய மகேந்திரனைப்போலவே ஞானவிளக்கமான சாமுத்திரிகா லக்ஷணத்தோடு தோன்றிற்று.

அது கண்ட அசோகர், தன் மனைவியாகிய தேவியை நோக்கி, 'காதலி, உன் கான்முளைகளிரண்டும் ஞான முளைகளாய் அஞ்ஞான இருளகற்றவல்லன வென்று கணிதர் பலரும் கணக்கிட்டுரைக்கின்றனர். என்னதான் உலகை ஆண்டாலும், என்போன்ற வேந்தனுக்கும் முடிவில் என்னவுண்டு? மெய்ஞ்ஞான சோதியிற் கலவாதவன் மேதினியில் நடைப்பிணமாவான். இக் குழந்தைகளிரண்டும் பிறவியிலேயே ஞான விலக்கணம் பெற்றிருப்பதனால், அஞ்ஞான விருளகற்றவல்ல மெய்ஞ்ஞான தீபங்களாய் வாழ்ந்து; பிறரையும் தம் வசப்படுத்தி, என்றும் அழியாப் பேரும்புகழும் எய்தி

வாழும் என்பதற் கையமின்று. "படரும்போதே தெரியாதா காய் காய்க்கிற மிடுக்கு?" என்றபடி, பிறந்தபோதே முகக் குறியால் சிசுவிலக்கணம் செம்மையாய்த் தெரியும் என்றறியக்கடவாய்' என்று அளவளாவிப் பேசி மகிழ்ந்தார்.

இங்குப் பாடலிபுத்திரத்தில் நியாயசபை மூலமாய் அரசாட்சி நடந்துகொண்டிருந்தது. அச் சபை தீர்மானிக்கும் நியாயத்திற்குப் பிந்துசாரமன்னனும் உட்பட்டிருந்தான். அரசாட்சி அநுகூலமாய் நடந்தேறும் பொருட்டு மகத ராஜ்யத்தைச் சிற்றூர்களாக்கி, (Districts) ஊர்க் கோர் அதிகாரியை ஏற்படுத்தியிருந்தார்கள். இவ் வதிகாரிகளும் மேற்குறித்த நியாயசபையில் அங்கத்தினரா யிருந்ததால், சுமார் ஐந்நூறங்கத்தினர் சேர்ந்திருந்தனர். இவர்களுக்குத் தலைவன், பிரதான மந்திரியான இராதாகுப்தன், கிலாதகன் என்பவன் மற்றொரு மந்திரி. இவன் செல்வாக்குடையவன்.

ஒருநாள் இவன், இராதாகுப்தன் முதலிய மந்திரிகளை நோக்கி, 'பார்த்தீர்களா? "இளங்கன்று பயமறியாது" என்றபடி ஸுசீமன் கொஞ்சமேனும் மரியாதையின்றி இப்போதே என்னை ஏளனஞ் செய்தபடி தன் கைக்குட்டையைப் பந்தாகச் சுருட்டி என்மேல் எறிந்து விளையாடினான். நந்தவனத்துக்கு நான் போனபோதே அவனைக்கண்டேன். கண்டதும் எனக்கு அவன் விஷயத்தில் சந்தேகந்தான். இன்றுமட்டு மன்று; என்றும் இவன் இப்படியே யிருக்கிறான். ஒழுங்கு மாப்பிள்ளையாய் இவன் ஆகாரபுஷ்டியாய், ஆளுந் தோளுமாயிருந்தால் இவனை யார் மதிப்பார்கள்? இத்தனை வயதான இவனுக்கு இன்னுஞ் சிறுகுறும்பு ஒழியவில்லை. இவன் குறும்பை என்மேலேயா காட்டவேண்டும்? இப்போ

திங்கு அசோகர் இல்லாமையால் இவன்பாடு மிஞ்சிப்போயிருக்கிறது. இவனை எப்படியாவது யுவராஜபதவியினின்று கெடுக்கவேண்டும். அரசருக்கும் அடிக்கடி நோவு வந்து கொண்டேயிருக்கிறது. நோவு என்றால் யார்க்கும் சாவு தலைமேல் நிற்கிறதல்லவா? தூரத்திலிருந்தாலும் அசோகரே அரசருக்குப்பின் பட்டம் பெறத்தக்கவர். இளையவராயினும் முந்தியே அவர் ஆட்சியின் திறமை தக்ஷசிலையில் நமக்குச் சாட்சியாயிருக்கிறது. அங்கே சென்று அவமானம் அடைந்து வந்தும் இவன் கொட்டம் அடங்கவில்லை' என்றான்.

அதுகேட்டுவந்த மந்திரிகளிற் பிரதானமான இராதகுப்தன், 'ஆம்; ஐயா, இவனை நம்புவது நமக்கு அபாயமாக முடியும். அரசருடைய அந்தியகாலத்தில் இவன் இங்கு இருக்கப்படாது. இவனை எப்படியாவது பிரித்துவிடவேண்டும். அரசர்க்கும் இவன்மேல்தான் இஷ்டம் அதிகம். மூத்தவனாகையால் இவன் மூழுமூடனாயிருந்தாலும் இவனுக்கே முடிசூட்டவேண்டுமென்பது அரசர் அபிப்பிராயம். இன்னும் இரண்டொரு தினத்தில் இங்கிருந்து யாராவது அரசமக்கள் தக்ஷசிலைக்குப்போகவேண்டி வரும். அசோகர் அங்கிருந்து உச்சயினிக்குப் போன பிறகு மறுபடியும் அங்கே குழப்பம் ஆரம்பித்திருக்கின்றது. அரசர் தம் தேகாசௌக்கியங் காரணமாய் அதை இன்னுஞ் சரியாய்க் கவனிக்கவில்லை. நாளைக்கோ, மறுநாளைக்கோ அங்கே யாரை அனுப்புவதென்று அவர் கேட்பார். நாம் எல்லாரும் ஒரு மனமாய் மறுபடியும் ஸுஸீமனையே அனுப்பவேண்டும் என்று சொல்லுவோம். அப்போது இவனுடைய கொட்டம் அடங்கிவிடும். இங்கிருந்தால் இவன் இப்படித்

தான்செய்வான் நம்முடைய நல்லெண்ணத்தால் அரசர்க்கு நோய் குணப்படட்டும். இல்லையேல், அவர்க்குப் பிறகு முடிசூட அசோகருக்கே செய்தி தெரிவித்து வரவழைத்து விடலாம். இவன் வேண்டுமானால் பிறகு வந்து, அசோகரைக் கண்டு அவமானம் அடையட்டும்' என்று முடித்தான்.

இப்படி இரண்டுதினங்கள் சென்றன. அரசன் ஸுசீமனை அழைத்து, 'பிள்ளாய்! முன் செய்ததுபோலன்றி, சர்வ சாக்கிரதையாய்ச்சென்று, தக்ஷசிலையில் தம்பி நடந்துகொண்டதுபோல், நீயும் நடந்துகொண்டு நற்பெயரெடு. மறுபடியும் அங்குக் குழப்பமாயிருக்கிறதாம்; தாழ்க்காதே; ஆடம்பரமின்றிப் போய்வா' என்று கட்டளையிட்டனுப்பி விட்டான்.

சிலதினங்களில், அரசர்க்கு நோய் அதிகப்பட்டது. வைத்தியர் கைவிட்டார். ஆயினும், அவற்குநினைவழியவில்லை; தான் இறப்பது நிசம் என்று கண்டுகொண்டான். ஆகையால் அவன், மந்திரிமார்களை நோக்கி, 'உடனே, என் மூத்த மகனாகிய ஸுசீமனுக்கு ஆள் அனுப்பி வரவழையுங்கள். நான் இறப்பதற்குள் அவன் இங்கு வரவேண்டும்' என்றான். அப்படியே மந்திரிகள், தாம் முன் ஆலோசித்துத் தீர்மானித்திருந்தபடி, அசோகனுக்கு ஆள்விட்டனுப்பிப் பிந்தி ஸுசீமனுக்கு அனுப்பினார்கள்.

அரசன் இறப்பதற்குள் இருவரில் ஒருவரும் வரவில்லை. இறந்தபிறகு, முதலில் அசோகர் வந்து சேர்ந்தார். சேர்ந்ததும், சோர்ந்து நிலமேல் வீழ்ந்து பிரலாபித்தார், 'தந்தையே' உம்மை நான் மறுபடியும் என்று காண்பேன்? என்மேல் அநியாயமான வெறுப்பு வைத்து இருந்தீர் என்றாலும்,

என்னை நுமதகத்தில் மைந்தனென்று மதித்திருந்தீர். அதனாலேயே என்னை நீர் உச்சயினிக்கு உகந்தவன் என்று போக்கினீர். என்னைத் தந்தவர் ஆகையால் தந்தையென் றும்மை வையகத்தில் வாழ்த்தி வணங்கி மதித்திருந்தேன். இனியார் எனக்கு இனி யார்? இத்தனை சீக்கிரத்தில் நீர்மாள்வீர் என்று நான் எண்ணவில்லை' என்று பலவாறு கூறி துக்கித்தார்.

அதுகண்ட மந்திரிமார்களும் பிறரும் அவரைத் தேற்றி 'இளவரசரே, மாண்டார் மாண்டார். இனி நாம், நமக்கும் அதுவே வழியென் றெண்ணிப் பழிக்குப் பயந்து நடந்து கொள்ளக்கடவோம். அரியாசனம் அரைக்கணமும் அரசனின்றி வெற்றாசனமா யிருக்கப்படாது. ஸுசீமனைப்பற்றி எமக்குச் சிந்தனையில்லை. நிந்தனையின்றி ஆட்சி செய்ய வல்லவரே மாட்சியுடையோ ராவர். ஆகையால், உமது தமையனாகிய ஸுசீமன்வந்து பட்டத்தைப்பற்றிக் குழப்பம் நேரிடுமுந்தி நீரே அரசாட்சியை ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது அபிப்பிராயம் இதுவே' என்று வேண்டினார்கள்.

அப்படியே பிந்துசாரன் மரித்த ஆண்டாகிய * கி-மு-272-ல் அசோகர் அரசரானார். சுபத்ராங்கியின் மூத்த குமாரரும், பிங்களவற்சஜீவமுனிவர் கூறினபடி அதிர்ஷ்டசாலியுமாகிய அசோகரே மகத ராஜ்யாதிபதியாய் மாண்படைந்தார்.

பிறகு வந்த ஸுசீமன், அசோகர் அரசரானமை அறிந்து, ஒரு பெருஞ்சேனையோடு அவரை எதிர்க்க வந்தான். அதுகண்ட அசோகருடைய சேனைத்தலைவர், 'ஸுசீமன் இப்படிச் செய்வான் என்று எண்ணியே நான், முன்

* கிறிஸ்து பிறக்கு முன்பு.

சாக்கிரதையாய், கோட்டை வாசலிற் சூழ்ச்சி செய்திருக்கிறேன். அகழி நீரை இறைத்துவிட்டு, அதற்குள் வெடி மருந்து வைத்து வைக்கோல் முதலியவைகளால் மூடியிருக்கிறேன். அங்கு அவன் கண்ணுக்குத் தெரியும்படி நம் போர்வீரரெவரும் இலர்' என்று மந்திரிமாரோடு சொல்லிக்கொண்டிருந்தார்.

அதற்குள் ஸுசீமன், கோட்டை வாசலில் ஒருவரும் இல்லாமையால் தான் உட்செல்வது சுலபம் என்றெண்ணி உள் நோக்கி வந்துகொண்டிருந்தான். சங்கேதப்படி மறைந்திருந்த வீரர், மருந்தில் நெருப்புப்பற்ற வைத்தார்கள். வைக்கோலிருந்ததனால் புகை மூடிக்கொண்டது. வலையிற் சிக்கின சிங்கம்போல் ஸுசீமன் வழிதெரியாமல் அகழியில் விழுந்து மாண்டான். அவனோடு வந்த போர்வீரரில் மாண்டுமடிந்தவர்போக, மற்றவர் முதுகுகாட்டி யோடி ஒளித்தார்கள்.

அதுதெரிந்த அசோகர், 'தானும் ஆளுந்திறமையில்லாமல் ஆள்வாரையும் ஆளவொட்டாமல் தடுக்கவந்த தமையன் தானே மாண்டான். அதற்கு யார் என்ன செய்யலாம்? "வினை விதைத்தவன் வினையறுப்பான், தினைவிதைத்தவன் தினை யறுப்பான்; நல்லது செய்கிறவன் நலம் பெறுவான், தீயது செய்கிறவன் கெடுதியடைவான்" என்பதுபோல எனக் கிவ்வரசாட்சி கிடைத்தது. இதை நீவிர் எல்லீரும் என்னோடுடந்தையாயிருந்து, நியாய விரோதமின்றி நடத்த வேண்டும். நமக்குள் அந்தரங்க ஒற்றுமை இருக்கவேண்டும். புற நட்டகம் வேர்க்கப்படாது' என்று மந்திரி பிரதானியர்களிடத்துக் கூறினர்.

'அதற்கென்ன தடை? உமது ஆட்சியின் மாட்சியறிந்தே நாங்க ளனைவரும் உம்மையே அரசராக வேண்டி-

உமக்கு முடி சூட்டினோம். இனி நீர் விரும்புகிறபடி எமக்கும் உமக்கும் ஒற்றுமை வளர்வதற்கென்ன தடை? இராதாகுப்தர், கிலாதகர் முதலிய நிபுணர்களே உம்மைத் தமது தலைவராக்கிச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டபோது, மற்றவர்கள் ஒற்றுமையாயிருக்கக் கேட்பானேன்?' என்றார் சேனைத் தலைவர்.

அப்படியே மந்திரி பிரதானியர், தந்திரி முதலியோர் அசோகரோடு மிக வொற்றுமையாய் உடலும் உறுப்புகளும்போல் ஆட்சிபுரிந்துவந்தார்கள். ஆயினும் அசோகர்க்கு மனநிறைவு ஏற்படவில்லை. "உடன்பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்கவேண்டா" என்றபடி, அவருடன் பிறந்தார் முதலியோரால் இடைவிடாக் கலகமும் குழப்பமும் நேரிட்டன. குடிகளில் இருபிரிவுகள் ஏற்பட்டன. ஒரு பிரிவார், ஸுசீமன் பக்கஞ் சேர்ந்தவர்கள். ஆகையால் அவர்கள் 'அவன் மாண்டது அநியாயம். அசோகராலேயே அவன் மரித்தான். அண்ணன் இருக்கையில் தம்பி அரசாட்சியேற்றமை அசம்பாவிதம். இப்படி அசம்பாவிதமான ஆட்சியில் நாம் இருப்பது தகாது' என்று கலகம் பண்ணினார்கள். இவர்களோடு ஸுசீமன் தாயும், அவளுடைய சக்களத்திமார்களுஞ் சேர்ந்துகொண்டார்கள். நியாயசபை அங்கத்தினர்களிற் சிலரும், இது சரியென்று ஒப்பினார்கள். மற்றொரு பிரிவார், அசோகர்பக்ஷம் சேர்ந்தவர்கள். ஆகையால் அவர்கள், 'ஸுசீமன் மாண்டது நியாயம். ஏனென்றால், அவன் ஆளுந்திறமை யில்லையென்று தனக்குத் தெரிந்திருந்தும் இங்கே சண்டைக்கு விவேகமின்றித் தொடைதட்டி வந்து தம்பியை எதிர்த்துத் தானே மூடத்தனமாய் மாண்டான். ஆகையால் அசோகர்மேற் குற்றமில்லை. ஒருத்தியோகத்தில் அதற்குத்

தக்க வல்லமையுள்ளவனை ஏற்படுத்துவதே புத்திசாலிகளுக்கு அழகு. அதன்படி, அனுபவத்திற் சிறந்த இராதாகுப்தர் முதலிய பிரதானிகள் முன்யோசனை செய்தே அசோகரை அரசனாக வேண்டிக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கியே அவர் அரசரானார். இதனால் அசோகர் ஒருபோதும் குற்றவாளியாகார்' என்று மனமுவந்து கூறினார்கள். இவர்களோடு அசோகர் தாயாகிய சுபத்திராங்கியும் இராதாகுப்தர், கிலாதகர் முதலிய மந்திரிமார்களும் மற்றுமுள்ள தந்திரிகள் முதலியோரும் நியாயசபையிற் பெரும்பாலோரும் கூடியிருந்தார்கள். அசோகர் பக்கம் பலத்திருந்தது. ஆகையால் அவர் ஆட்சிக்கு ஒருவிதத் தாழ்ச்சியும் இல்லை. ஆனாலும் அவர்க்கு உடன் பிறந்தாரைப்பற்றியும் பெற்றதாய் தவிர மற்றத் தாய்மாரைப்பற்றியும் கவலை அதிகரித்தது. அவர்களனைவரும் கலகப்பிரியர்களாய்த் தமதாட்சியின் அருமை பெருமைகளை அறியாத மூடர்களாயிருந்தமையால், அவர், 'புறப்பகை கோடியிருந்தாலும் நாம் அஞ்சாமற் போர் புரிந்து வெல்லலாம்; உட்பகை ஒன்றிருந்தாலும் உள்ளங்கலங்கி அழியவேண்டும். ஆகையால், எத்தனை நாளைக்கு நாம் இப்படிக் காலங்கழிக்க முடியும்? "குளிருங் காய்ச்சலுங் கூண்டோடே" என்றபடி, கலகப்பிரியர்களாகிய உட்பகைவரைக் கத்திக்கிரையாக்குவதே சரி' எனத் தீர்மானித்துக்கொண்டார்.

அவர் தீர்மானித்தபடியே செய்து முடித்தாரென்று சிலர் எண்ணுகிறார்கள். அப்படி எண்ணுவது சுத்தத்தப்பு என்கிறார்கள் சிலபேர். எது எப்படியானாலும், அவர் தீர்மானித்தபடி அக் கொடுஞ்செயலைச் செய்யவில்லை யென்பதே எமது துணிபு. தக்ஷசிலையிலும் உச்சயினியிலும் தம்

ஆட்சியி லடங்கியிருந்த குடிகளிடத்தில் அவர் செலுத்தின அன்பைப்பற்றி நாம் எண்ணும்போது, அவர் அப்படிச் செய்திரார் என்பதே தீர்மானம். சிறுவயதில் அவர் சிறு குறும்பு செய்து துஷ்டப்பிள்ளை, துடுக்குப்பையனென்று பெயரெடுத்திருக்கலாம். அவர் அழகில் குறைந்திருந்ததால், தந்தைக் காகாதவரா யிருந்திருக்கலாம். வயதான இப் போது பிள்ளைகளைப்பெற்ற தந்தையாயிருந்தவரும், தமக் கடங்கின குடிகளுக்கு அன்புடையாரா யிருந்தவருமாகிய இவர், இப்படித் தர்முடைய தமயன் தம்பியர் நூற்றுவர்க்கு மேற்பட்டவரையும் தமக்கு மாருன மந்திரிபிரதானியரை யும் அரண்மனைப் பெண்டிரையும், என்னதான் அவர்கள் தம்மை வெறுத்தவர்களாயினும், படுகொலை செய்தாரென் பதை யார்தாம் ஒப்புவார்கள்? இப்போதும் ஒருவர்மேல் ஒருவர்க்குப் பகை நேரிட்டால், ஒருவரையொருவர் நோக்கி, 'உன்னை நான் கொன்றுவிடுவேன்' என்று கோபத்தால் கூறு வது உண்டு. அப்படிக் கூறுவார் ஒவ்வொருவரும் கொலை செய்வார் என்பதில்லை. பெற்றதாயும் சிலசமயத்திற் கோபத் தால், பிள்ளையை நோக்கி, 'எடா, என் பேச்சைக் கேளாத பிடிவாதக்காரனுகிய உன்னைக் கொன்றுவிடுவேன்' என்கி ருள். அதனுல் அவள், தன் பிள்ளையைக் கொன்றுவிடுவாள் என்பதற்கு இல்லை. ஆகையால் அசோகர் தம் தமையன் தம்பியர் முதலியோரைக் கொலைசெய்தார் என்பவர் கூற்று வெறுங்கூற்ருய் முடியுமென்றுணர்க.

இன்னும் இவருடைய கொடுஞ்செயலைக்குறித்துப் பரத நாட்டுப் பழங்கதை யொன்றுண்டு. மேற்குறித்த கொலை களை இவரே நேரிற் செய்ததனுல் இவருடைய மந்திரி கள் 'அரசே! தாமே தங் கைவாளால் இராஜத் துரோகிகளை

யும் பிறரையும் கொலைசெய்வது தவறு ஆகையால் அதற்காக ஒரு கொலையாளியை நியமிப்பதே நியாயம்' என்று வேண்டிக் கொண்டார்களாம்.

அதற்கு ஒப்பிய இவர், சந்தகிரீகன் என்பவனை அதற்காக ஏற்படுத்தி, 'ஏ சந்தா, கொடுமையிலும் கொலையிலும் பேர்போன நீ, இதுமுதல் கொலைசெய்வதையே பெருந்தொழிலாகக் கொண்டு அதற்காக நாம் ஏற்படுத்தியுள்ள சிறைச்சாலையையும் நந்தவனத்தையுங் காத்துவா. நந்தவனத்தின் விந்தையைக்கண்டு, யார்வந்து உன்னிடத்தில் அகப்பட்டுக் கொண்டாலும் அவர்களை நீ விட்டுவிடாமற் பிடித்துச் சித்திரவதை செய்து உயிரை வாங்கு' என்று கட்டளையிட்டாராம்.

அப்படியே அவன் அங்கொரு நரகம் ஏற்படுத்தி, நந்தவனவாசலிற் காவற்காரனை வைத்துக் காரியம் நடத்தினனும். நரகத்தில் குழிகள் இருந்தனவாம். ஒரு குழியில் ஈயம் உருகிக் கொதித்துக் கொண்டிருந்ததாம். மற்றொன்றில் நெருப்பு எரிந்து கொண்டிருந்ததாம். மற்றொன்றில் தேள், பாம்பு, செய்யான் முதலிய பூச்சிகள் செறிந்திருந்தனவாம். வேறொன்றில் கழுத்தரியும் இயந்திரக்கத்தி காத்திருந்ததாம். பின்னொன்றில் முள்ளுருளை முடுக்கியிருந்ததாம். யார் அந்த வழி வந்தாலும் அவர்களைக் காவற்காரன் வரவேற்றுபசரித்து, உள்ளே அழைத்துக் கொண்டுபோய், ஈயக்குழம்பு கொதித்திருந்த கிணற்றில் தள்ளுவானும். அதில் பிழைத்தவர்களை அவன் நெருப்புக் கிணற்றிலும், அதில் பிழைத்தவர்களைப் பாம்புக்குழியிலும், இப்படிக் கிணறு விட்டுக் கிணற்றில் தள்ளிச் சித்திரவதை செய்து, அதற்கு மேலும் பிழைத்திருந்தவர்களை முள்ளுருளையில் மாட்டி-

வதைத்துச் சிதைத்து, கடைசியாக இயந்திரங் கத்திக்கு இரையாக்கிப் புதைத்து விடுவானும்.

இப்படியிருக்கையில் ஒருநாள் பால பண்டிதர் என்னும் பவுத்த பிக்ஷு அவ்வழியே வந்து, நந்தவனக் காட்சியில் மயங்கி உள் நுழைந்து, காவற்காரன் வலையிற் சிக்கிக்கொண்டாராம். அவரை அவன் உள்ளேயழைத்துக்கொண்டுபோய் நெருப்புக் குழியில் தள்ளினானும். நெருப்பில் வீழ்ந்தவர் வேகாமல் அங்கொரு தாமரை மலர் மேல் யோகம்சாதித்து உட்கார்ந்திருந்தாராம். அது தெரிந்து அசோகர் விரைந்து வந்து அவ்வதிசயத்தைக் கண்டு, பிக்ஷுவை வணங்கித் தமது குற்றத்தை மன்னிக்கவேண்டி, அவரை விடுவித்தாராம். அதுமுதல் அந்நரகயாதனை யார்க்குமின்றி ஒழிந்ததாம். அசோகர் கட்டளையால், நரகாதிபதியாயிருந்த சந்தகிரீகன் சாம்பலாய்ப்போனானும். நரகநந்தவனத்தைப் பின் கொளுத்தி விட்டார்களாம். காவற்காரன் கடுந்தண்டனையடைந்தானும். இராஜதுரோகிகளுக்காக ஏற்பட்டிருந்த நரகதண்டனை ஒழிந்ததனால் அதுமுதல், குற்றவாளிகள் யாரானாலும் அவரவர்க்கு உரிய தண்டனை ஏற்பட்டுக் கொடுமை ஒழிந்ததாம். அசோகரும் கொடுமையொழிந்து உண்மை மதத்தைத் தழுவி உத்தமரானாராம். இதுவும் மேற்குறித்தபடி அசம்பாவிதக் கூற்றென்பதற் கையமில்லை. பரதநாட்டுப் பழங்கதைகளில் இதுவும் ஒன்று. இத்தனை கொடும்பாவியாய் இந்துமதத்தைத் தழுவியிருந்த அசோகர், மனந்திரும்பிப் பவுத்தராய்ப் பரிசுத்த மடைந்தா ரென்பதைக் காட்டக் கட்டின கதைகளில் இதுவும் ஒன்று.

இப்படியே ஒவ்வொரு மதத்தரும் தத்தம் மதம் பெரியது, அரியது, பின்பற்றற்குரியது, உண்மையில் உயர்ந்தது

என்று நிலை நிறுத்தும் பொருட்டுச் சில கதைகளைப் புனைந்து கூறுவது வழக்கம். தாயைத் தாரமாக்கித் தகப்பனைக்கொன்றவன் பாவம் நீங்கிப் பரிசுத்தனானான் என்றதைப் போன்ற கதைகளும், நூறுபேய்கள் ஒருவனைப் பிடித்திருந்தன; அவைகள் அனைத்தும் அரைக்கணத்தில் அப்பால் அகன்றன; என்றதைப்போன்ற கதைகளும் இங்கே ஒப்பிடத்தக்கனவாம்.

இந்த நரகக்குழி இருந்த இடம் உச்சயினியென்றும், பாடலிபுத்திரம் என்றும் பலவிதமாய்க் கேள்வியுற்றதாக ஹியூன்த்ஸங் என்னும் சீனப் பிரயாணி எழுதி வைத்திருக்கிறார். இதனாலும் அதனுண்மை இவ்வளவென்று விளங்குகிறதல்லவா?

அசோகர் ஏற்படுத்தியிருந்த நரகத்தோட்டம் அழிந்த பிறகு, அவர் உபகுப்தர் என்னும் பௌத்த பிக்ஷுவால் மனந்திரும்பிப் பௌத்தரானார். உபகுப்தர் உதவியால் அசோகர், சில வேதாளங்களை வரவழைத்து எட்டுத் தூபிகளிற் புதைபட்டிருந்த புத்தர் எலும்புகளைக் கொண்டுவந்து பலதூபிகள் கட்டி அவைகளில் அவ்வெலும்புகளைப் புதைக்கக் கட்டளையிட்டார். அப்படியே அவைகள் நாடெங்கும் பல தூபிகளைக் கட்டி அவ்வெலும்புகளைக்கொணர்ந்து சூரிய கிரகண காலத்தில், ஒவ்வொரு தூபியிலும் தவறாமற் புதைத்தன. அதுமுதல், அசோகர் புத்தரிடத்துப் பத்தியதிகரித்துச் சுத்தமனத்துடன் பிராணிகள்மேல் மிகவும் இரக்கம் பூண்டு நித்தமான சற்குணத்தோடு வாழ்ந்துவந்தார் என்பதும் ஒரு சாரார் கூற்று. இப்படிப் பலவித காரணங்களால் இவர் முடிசூடும் திருவிழா நடந்தேறாமல் காலதாமதமாய்க்கொண்டே வந்தது. இவர் அரசாட்சிபெற்று நான்கு

ஆண்டுகள் கடந்தன. ஒருநாள் பாடலிபுத்திரத்துப் பெண்களில் ஒருத்தி மற்றவளை நோக்கி, 'அக்கா, இன்று என்ன? நம்மூரில் எங்கும் ஆடம்பர மாயிருக்கின்றதே! எங்குப் பார்த்தாலும் தோரணங்கள் கட்டியிருக்கின்றன. வாழைகள் நாட்டியிருக்கின்றன. வீடுகளெல்லாம் அலங்கரித்திருக்கின்றன. எங்கும் வாத்திய கோஷங்கள், பேரிகை முழக்கங்கள் செவிபடுகின்றன! அரண்மனையிலும் அதி வைபவமாமே!' என்றாள்.

அதற்கு மற்றவள், 'ஆமடி, விசாலா! எங்காத்துக்காரரும் சொல்லிக்கொண்டே யிருந்தார். நான் என்னவோவென்று அசட்டையாயிருந்தேன் அரசர் முடிசூடும் திருவிழா நடக்கப்போகிறதாம் அது இன்றே நடக்கப்போகின்றதென்று பலர் சொல்லுகிறார்கள். அதற்காகத்தான் இத்தனை வேடிக்கையும் இத்தனை அலங்கார ஆடம்பரங்களும் நடக்கின்றன. வேறென்ன? அசோகருடைய தந்தை இறந்து நாலு வருடமாகியும் அவர்க்கு இன்னும் பட்டாபிஷேகமாகவில்லை. அவர் என்ன செய்வார் பாவம்! அவரால் ஒன்றும் தவறில்லை. அவர்க்கு ஆகாத விரோதிகள் அநேகர் இருக்கிறார்கள். அவர்களால்தான் பட்டாபிஷேகம் பல நாளாய்த் தடையாகவிருந்தது. இன்று எப்படியானாலும் நிறைவேறிவிடும். ஊர்க்கோலமும் பார்க்கலாம்' என்றாள்.

அதுகேட்ட விசாலாக்ஷி, 'அந்தக் காட்சியை எப்போது காணலாம்' என்றிருந்தேன். 'அக்கா, அதுவும் நீ சொன்னபடி இன்றைக்கு நடந்தேறுமானால் நாம் செய்த பாக்கியந்தான். வா, நாம் சீக்கிரம் கொண்டுபோய்த் தண்ணீர்க் குடத்தை இறக்கிவிட்டுச் சிங்காரித்துக் கொள்ளலாம். நம் வீடு வாசலையும் அலங்காரஞ் செய்யவேண்டாமா. சீக்கிரம் நட' என்று சொல்லி இருவரும் குளத்துக்குப் போனார்கள்.

வீதிகளெங்கும் வாழைகள் நாட்டி மகரதோரணங்களும் மாவிலைத் தோரணங்களும் கட்டியிருந்தன. அங்கங்கே கொடிகள்பறந்தன. புழுதியடங்கத் தண்ணீர்தெளித்துக் கோலமிட்டிருந்தது. அரசகோலம் காணவேண்டுமென்னும் அவாவால் அரிவையர் ஆங்காங்கு மாக்கோலமிட்டு வைத்து அலங்கரித்திருந்தார்கள். நிறைகுடம்; தூபம் முதலியவைகளால் மங்களஞ் செய்தார்கள். ஆங்காங்கு மேடைகள் ஏற்படுத்தி, அதன்மேல் ஆவலாய் நின்றுகொண்டிருந்தார்கள்; எப்போது கோலங் காண்போம், எப்போது பொழுது போகும், எப்போது விளக்கு வைக்கும், என்று எதிர்நோக்கி யிருந்தார்கள்.

பட்டாபிஷேகம் பகலில் அதிவைபவமாய் முடிந்தது. அநேக அந்தணரும் முனிவரும் ஆசிகூறினார்கள். மந்திரி பிரதானிபரும், தந்திரி முதலியோரும், சேனைகளை அணிவகுத்து நிறுத்தி அலங்காரமாய் வைத்திருந்தார்கள்; எங்கு பார்த்தாலும் அசோகர் பெருமையாகவே இருந்தது. எங்கெங்கும் அவரை அரியாசனம் ஏற்றும் அருஞ்சடங்கு தொடங்கிற்று. சந்திரகுப்தமௌரியர் சூடிய அதியற்புதமான ஒரு பெருமுடி அலங்கரித்து வைக்கப்பெற்றிருந்தது.

பிங்களவர்ச ஜீவமுனிவரும், பிற பெரியோரும் கூடி, அசோகரைக் கைகொடுத் தழைத்துக்கொண்டு அரியாசனத்தை மும்முறை வலம் வந்து, அதன்மேல் ஏற்றினார்கள். மங்கள வாத்தியங்கள் ஒலித்தன; இடியிடித்ததுபோல் பேரிகையோசை கிளம்பிற்று. அடுத்த ஓரையிலேயே, அலங்கரித்துவைத்திருந்த மணிமுடியைப் பிங்களவர்சஜீவமுனிவர் கையிற் பிரதானி எடுத்துக்கொடுத்தார். அவரும் அதை அதிக அன்போடு வாங்கி 'அரசன் வாழ்க. அசோகன் வாழ்க.

அநேக நாள் வாழ்க. பல்லாண்டு வாழ்க', என்று பலவிதமாய் ஆசீர்வதித்து, அசோகர் சிரத்திற் சூட்டினர். உடனே ஆங்குச் சூழ்ந்திருந்த அந்தணரும் முனிவரும் பிறரும் மங்களாக்ஷ மலரோடு சேர்த்துத் தூவினர்கள். அப்படி அவர்கள் தூவி யிறைத்தது, வாத்தியகோஷ யிடிக்கிடையிற் பெய்த பெருமழைபோல் விளங்கி அலங்காரமாயிருந்தது. அன்று மாலையில் ஆயிரம் தீபவொளிக் கிடையில் அதிவைபவத்தோடு யானைமேல் அலங்காரமாக நகர்வலம்போன அசோகரைக் கண்ட பாடலிபுத்திரத்தா ரனைவரும் பல்லாண்டுபாடி வாழ்த்தினர்கள். இது கி-மு-269-ம் ஆண்டில் நடந்தேறியது.

அதிகாரம் 3.

(ஆட்சி)

இவர் பட்டங்கட்டிக்கொண்ட நாள் முதலாக ஒரு பெரும்பேர் வைத்துக்கொண்டார். அது, தேவப்பிரியர் என்று பொருள்படும் தேவனும்பிரியர் என்பதாம். இதுவே சிலாசாசனங்களில் தேவப்பிரியர் என்றும் பியாதசியென்றும் வழங்கியிருக்கிறது. பியாதசி என்பதற்குப் பிரியதரிசியென்பது பொருள். இப்படிப்பட்ட பட்டதாரியான இவர் பௌத்தராயிருந்தமைக்கு அதிசயப்படுவார் சிலர். என்? பௌத்த மதம் நிரீசுவர மதம் என்றிருப்பதனல்; அம்மதத்தை வளர்த்த பௌத்தராகிய அசோகர் தேவனும்பிரியராவதெப்படி? ஆனலும் இப்பட்டங்கள், பௌத்தராவதற்கு முந்தி, அசோகர் வைதிக மதத்தைச் சேர்ந்

தவர் என்பதைக் குறிக்கின்றன. தேவப்பிரியர் என்பதற்குத் தெய்வத்தின்மேற் பிரியமானவர், தெய்வத்துக்குப் பிரியமானவர் என்று பொருள்படுவது காண்க.

முடி சூடினநாள் முதல் அசோகர்க்கு எல்லாம் நன்மையாகவே முடிந்தது. அவருடைய புஜபலபராக்கிரமம் பூமியெங்கும் பரவிற்று. அப்போது அவருடைய சேனாதிபதி மற்ற மந்திரிமார்களை நோக்கி, 'கடந்த நான்காண்டுகளாக நமதரசர் உட்பகைமிகுந்திருந்ததால், மனக்கவலைக்கிடமாய்க் காலம் போக்கினர். இப்போது அவர் ஒருவாறு கவலை ஒழிந்து மனநிறைவு எய்தியிருக்கின்றனர். இனி அவர் தமது வீரதீரப் பிரதாபத்தை உலகெங்கும் நிலைநிறுத்தாதிரார். அப்படியே எனக்கு அவர் எண்ணம் குறிப்பில் விளங்குகிறது. திக்விஜயத்திற்கு நாமெல்லாம் சீக்கிரத்திற் செல்லவேண்டியவர்களாவோம்' என்றார்.

அதற்கவர்கள் 'ஆஹா! அதற்கென்ன தடை? ஸ்வாமி காரியதுரந்தரராய் நாமெல்லாம் ஒருமனதாய்க் காரியஞ் செய்யவேண்டியவர்களாயிருக்கின்றோம். இராஜ்யம் அரசருடைய பிதாமகர்காலத்தில் பெருகின அளவுத்தான் இப்பொழுதுமிருக்கின்றது. அரசருடைய பிதாவாகிய பிந்துசாரர் காலத்தில் அதிற் பெருகவுமில்லை; அருகவுமில்லை இவர் ஆட்சியின் மாட்சியால் எல்லாம் இவர்க்குச் சித்தியாம்படி எங்குப்போனாலும் இவரை விஜயமாது எதிர்கொண்டழைப்பாள் என்பதற்கு வேறு சாக்ஷி வேண்டியதில்லை. இவர்க்கு இத்தனை உட்பகையிருந்தும் அவைகளைத் தமது வல்லமையால் வென்று முடிசூடின இவர், புறப்பகை கோடியிருந்தாலும் கொஞ்சமும் அஞ்சாமற் பொருது வெல்லுவார் என்று நாங்கள் உறுதி சொல்லுவோம். ஆகையால் நம

தரசர் திக்விஜயஞ்செய்யத் தகும், தகும், முக்காலுந்
தகும்' என்று சொல்லிமுடித்து அளவளாவிப் பேசிமகிழ்ந்
தார்கள்.

பிறகொருநாள் திக்விஜய யாத்திரையின் பொருட்டு
ஒரு பெருங்கூட்டம் கூட்டி, அதில் அரசர் அக்கிராசனராய்
வீற்றிருந்தார். நியாயசபை அங்கத்தினர்களும் மந்திரிகளும்
பிரதானிகளும் தந்திரிகளும் பிறரும் வந்திருந்தார்கள். உச்
சயினி, தக்ஷசிலா என்னும் நகரங்களின் பிரதிநிதிகளும்
விஜயஞ் செய்திருந்தார்கள். அப்போது அரசர், அவர்களை
நோக்கி, 'பிரியதரிசியாகிய யாம் இப்போதிக்குக் குழுமி
யுள்ள எமது அதிகாரிகட்கும் பிறர்க்கும் அறிவிப்பதாவது
ஐயன்மீர்! அகிலமெல்லாங்கட்டி யாளினும் கடன்மீதிலாணை
செலவே நினைவது மாந்தரியற்கை. ஆசைக்களவில்லை. ஆகை
யால் எமது பிதா, பிதாமகர்காலங்களிற் பெருகின அளவி
லேயே இருக்கும் எமது இராச்சியத்தை விசாலமாகப்
பெருக்கி எமது வீரப்பிரதாபத்தை உலகெங்கும் நிறுத்த
நினைத்துள்ளோம். இப்போது தெற்கே எமது இராஜ்யம்
நருமதைக்கரையளவில் நிற்கிறது. இன்னும் அதைக் கோதா
வரிக்கப்புறத்திலும் பெருக்கவேண்டி இப்போது யாம் திக்
விஜயஞ்செய்யச் சித்தமாயிருக்கிறோம். நருமதை, கோதாவ
ரிக்கிடையிலுள்ள நாட்டிற்குக் கலிங்கநாடென்று பெயர்.
அதை ஆளும் அரசன் சாதாரணமானவனல்லன். வீரப்பிர
தாபவிசேஷகுணமுள்ளவன்; சேனையிற்பெருத்தவன்; ஆணை
தவறாமல் குடிகளை அடக்கியாள்பவன்; அவர்களும் அவனைத்
தகப்பனைப்போல் நேசித்துப் பூசிக்கிறார்கள். அப்படிப்பட்
டவனை வென்று ஜய ஸ்தம்பம் நாட்டுவதே நமது கீர்த்தி
பிரதாபத்திற்கு உகந்ததாகும். கேவலமானவனை எதிர்த்துப்

பொருது நாட்டை விட்டோட்டி, அதை நாம் கைப்பற்றிக் கொள்வது வீரமுமல்ல; தீரமுமல்ல; பிரதாபமுமல்ல; அஞ்சினவனை அடக்குவது ஆண்மையல்ல; மிஞ்சினவனை ஒடுக்குவதே மேன்மையாகும். ஆகையால் நாளைமறுநாளையில் யாம் இவ்வரசாட்சியை மாட்சிமைபொருந்திய மந்திரி இராதாகுப்தரிடத்தில் ஒப்புவித்துக் கலிங்கவெற்றியை உத்தேசித்த திக்விஜய யாத்திரை செய்யத் தீர்மானித்திருக்கின்றோம். இது விஷயத்தில் உடன்பட்டவர்கள் போக உடன்படாதவர்கள் உடனே எழுந்து தக்க நியாயத்தால் எமது யாத்திரையைத் தடுக்கலாம்' என்று முடித்தார்.

உடனே பிரதான மந்திரியாராகிய கிலாதகர் எழுந்து நம் அரசர் தீர்மானித்துப் பிரேரேபித்ததை ஆமோதிப்பவரன்றி ஆக்ஷேபிப்பவரும் இச்சபையில் இருக்கிறார்களென்று யான் எண்ணவில்லை. 'புலி பசித்தாலும் சிந்தூரத்தையே கொல்லும்' என்றபடி இத்தனைநாள் நம்மரசர் உட்பகையைக் களைவதில் ஈடுபட்டுப் பாடுபட்டாரெனினும், இப்போதவர் தம் பெருமைக்குதகந்த பெருங்காரியத்தையே மேற்கொண்டார். அதை விவேகிகளில் யார்தாம் தட்டென்று தடுப்பார்கள்? ஆகையால் நாமெல்லாம் ஒற்றுமையாய் ஒன்று சேர்ந்து அவருடைய வெற்றிப்பிரயாணத்தை முற்றுவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (ஜயஜயமுழக்கம்) 'அரசனெவ்வழி அவ்வழிக் குடிகள்' என்ற பழமொழி நம்மரசரிடத்தில் ஆதியிலிருந்து பலித்துக்கொண்டே வருகிறது. போலி அரசர்களிடத்தில் இப்பழமொழி கூடுமானால், இழிமொழியாகவன்றோ முடியும். குடிகள்மேல் உள்ளன்புடைய உத்தம மன்னராகிய அசோகரிடத்தில் குடிகள் செலுத்தியுள்ள அன்பிற்கும் அவர் அவர்களிடத்திற் செலுத்தியுள்ள ஆர்வத்திற்கும்

கங்குகரையில்லையாகையால், அவர்களிடத்தில் அவர் தந்தை போல் நடந்துகொள்ள அவர்கள் மக்கள்போல் இன்புற்று மாண்புடன் வாழ்கிறார்கள். ஆகையாலும் அவர் வழியில் அவர்கள் நடப்பதற்கு யாதோர் ஆக்ஷேபமுமில்லை. அதனால் அவர்கள் மாட்சியுற்று விளங்குவார்கள் என்பதற்கையமு மில்லை. குடிகளை வருத்தியும் அதிகாரிகளை நெருக்கியுங் கொடுங்கோன்மைபுரியும் அரசற்கே எடுத்த காரியங் கைகூடாதழியும். ஆகையால் நான் அரசகாரியத்தில் சலி பட்டு, அவருடன் யுத்தயாத்திரைசெல்லத் தீர்மானித்திருக் கிறேன். அரசரும் நானும் இங்கில்லாத காலத்தில், ஆட்சி முறையை, அதில் மகா நிபுணரான இராதாகுப்தர் குறைவற நடத்துவார். அவரே பிரதிநிதியாய் நிறைவேற்றுவார். நாளை நின்று மறுநாளையில் அரசர் தமது பரிவாரங்களோடு செல் லும் திக்விஜயயாத்திரை சிறப்புடன் முடிந்து, கலிங்க வெற்றி கைகூடவேண்டுமென்று நாம் அனைவரும் கோருவோ மாக!' (அரசர்க்கு வெற்றி உண்டாகுக, அசோகர் ஜயம் பெறுக, பெரிய ஜயஜயமுழக்கம்) இவைகளுக் கிடையில் கிலாதகர் உட்கார்ந்தார். கூட்டங்கலைந்தது.

மூன்றுநாள் அதிகாலை முகூர்த்தத்தில் அரசர் யானை யேறிச் சேனைமேதராய் மந்திரி கிலாதகரோடு திக்விஜயஞ் செய்யப் புறப்பட்டார். இடையிற் பற்பல நாடுகளைக் கடந்து இருபக்ஷத்தில் கலிங்கத் தெல்லையை அடைந்த அவருடைய சேனாவீரர் சற்று இளைப்பாறினார்கள். அதற் குள் சேனாபதிகள் தத்தம் சேனைகளை அணிவகுத்து நிறுத் தினார்கள். யானைச் சேனாபதியாகிய உதங்கன் என்பான் மகா பலசாலி. போரானைகள் ஈரானைகளானாலும் அவனுக்கு அடங்கி ஏககாலத்தில் அவன் சொன்னபடி ஆடும் குதிரைச்

சேனைபதியாகிய குதம்பன் மூன்று குதிரைகளை ஏககாலத்தில் ஏறி நடத்துவான். அவைகள் அவன் சொன்னபடி ஓடும். தேர்ப்படைத் தலைவனாகிய தேனுவன் மகாரதரிற் சிறந்தவன். நான்கு தேர்களுக்கு நடுத்தேரிலிருந்தபடி ஐந்து தேர்களையும் விந்தைபா யவன் ஒருவனே ஓட்டுவான். எத்தனையோ வித்தைகளை வில்லால் வளைத்துக் காட்டுவான். பகைவரை வெருட்டி ஓட்டுவான். காலாட்படைத் தலைவனாகிய காம்பன் பெரிய வீம்பன்; தன் கீழ்ச்சேனைகளைக் கொண்டு பலவியூகம் வகுப்பான். தாமரை மலர்போற் போர்வீரரை இதழிதழாகப் பிரித்து நிறுத்திக்காட்டி, மத்தியிற் பீடம்போல் தானும் சில பிரதான வீரரும் நின்று, பகைவரைக் கொன்று வென்று தன் வீரத்தை நன்று விளக்குவான். ஒரு சமயத்தில் அவன் தன் சேனையைச் சக்கரம் போல் வகுத்து, அதன் மத்தியிற் குடம்போல், தான் நின்று முயற்சி செய்வான். மற்றொரு சமயத்தில் தன் சேனையைச் சிறைவிரி கருடன்போல் நிறுத்தி, அதன் தலைபோல், தானும் சில வீரரும் நின்று சண்டை செய்து பகைவரை வெல்வான். ஒரு சமயத்தில் நாகவியூகமும் ஒரு சமயத்தில் மகர வியூகமும் மாண்புடன் வகுப்பான்.

இத்தகைய சேனைபதிகட்குத் தலைவர் தானவர் என்பார். முதற்றந்திரியாகிய இவரே கலிங்க முற்றுகையை முற்றுவிக்கத் தங்கீழ்ச் சேனைத்தலைவர்க்குக் கட்டளையிட்டார். அதற்குள் அசோகர் அதைத் தடுத்து, முன்னறிக்கையின்றி யிடும் 'முற்றுகை, பகைவரை ஏமாற்றுகையாக முடியும். அது அழகன்று. பெரியோர் முறைமைப்படி, நாம் நமதெண்ணத்தை விளக்கித் தூதனுப்புவதே நீதி' என்று துங்கன் என்பவனைத் தூது போக்கினர்.

அவன் சென்று கலிங்கத்தரசனைக்கண்டு, 'எமதரசர், பிரிய தரிசி மன்னவர், அசோகர், மகததேசாதிபதி, மாண்புடன் படையெடுத்து நுமது நாட்டைவெல்ல வந்திருக்கிறார். திக்விஜயஞ்செய்துவரும் தேசாதிபதியாகிய அவர் விரும்புகிறபடி நீர், அவர்க்கடங்கிப் பகுதிகட்டியாளச் சம்மதிப்பீரேல் தகுதியாகும். இல்லையேல் விரோத குரோதங்களுக் கிடமாகும். இதுமுதல் இருபத்துநான்கு ஓரைக்குள் தண்டம் தொடங்கும். நுமது எண்ணம் என்ன?" என்றான்.

அதற்கு அவ்வரசன் கொஞ்சமேனும் அஞ்சா நெஞ்சம் படைத்தவனாய் 'பகுதியாவது தகுதியாவது, விகுதியாய் விரோத குரோதங்களுக்கு இடமாயினும் தண்டமே சிறந்தது. அதுவே வீரத்திற்கு அடையாளமாம். புலி பசித்தாலும் புல்லைத் தின்னாததுபோல திடமென்று, நீவிர் வந்து என்னைச் சண்டைக்கழைத்தாலும் நான் பின்னிடையேன். அப்படியே தண்டந் தொடங்குக' என்று சொல்லித் தூதனைத் திருப்பினான்.

அப்படியே இருபத்துநான்கு ஓரைக்குள் சண்டை தொடங்கிற்று. கலிங்க தேசாதிபதி தன் சேனையைச் சக்கர யூகம் வகுத்தான். அதற்கு ஈடாக மகத தேசாதிபதியின் சேனை பதுமவியூகமாய் நின்றது. தேர் வீரரைத் தேர் வீரர் எதிர்த்தார்கள். குதிரை வீரரைக் குதிரை வீரர் கொன்றார்கள். யானைவீரரை யானைவீரர் தாக்கினார்கள். காலாட்கள் காலாட்களோடு பொருதார்கள். சண்டை மும்மரமாயிற்று. மகத சேனாபதி பத்தம்பு தொடுத்துப் பத்து வீரர்களைக் கொன்றான். நூறம்பு தொடுத்து நூறு வீரரைக்கொன்றான். ஓரம்பு நூறாய், நூறு ஆயிரமாய்,

நூறு நூறுபேரை நூறிற்று. கலிங்க சேனாபதி கைகலந்து சண்டை செய்தான். சிலர் மல்யுத்தஞ் செய்தார்கள். சிலர் வில்யுத்தம் புரிந்தார்கள். சிலர் தண்டு வாள் தோமரம் உலக்கை முதலியவைகளால் தாக்கினார்கள். தலைகள் அறுந்தன; முண்டங்கள் குதித்தன; செந்நீர் ஆறுபோடிற்று. அதிற் கவந்தங்கள் நீந்தின. பருந்துகள் விருந்துகளுண்டன. காகங்கள் தேகங்களைக் கொத்தின. நரிகள் பரிகளைத் தின்றன. ஆனைகள் சேனைக்கடலிற் கப்பல்போல் வீழ்ந்து கிடந்தன. கடைசியாக மகத தேசாதிபதியே வெற்றிமுரசறைந்தார். கலிங்க தேசாதிபதி தோற்றதனால், அவன் சேனை நிலை குலைந்து முதுகுகாட்டி ஓடிற்று. இந்தப்போர் பத்துநாள் இடைவிடாமல் நடந்தது. இது நடந்த ஆண்டு கி-மு-261. இதில் ஒரு நூற்றைம்பதினாயிரம் (150000) கலிங்கவீரர் கைதிகளாய் மகத தேசாதிபதியிடத்தில் அகப்பட்டுக்கொண்டார்கள். ஒரு நூறாயிரம்பேர் (100000) கொலையுண்டு மாண்டார்கள். இன்னும் எத்தனையோ நூறாயிரவர் பட்டினிகாரணமாகவோ வேறெதுபற்றியோ அநியாயமாய் மடிந்துபோனார்கள்.

மகதர் வெற்றித்தாரைகளை ஊதினார்கள். வெற்றிச் சின்னம் எக்காளம் முதலியன ஏககாலத்தில் முழங்கின. அவைகளுக்கிடையில் அசோகர் யானையேறிப் புறப்பட்டுப் போர்க்களத்தைக் காணவந்தார். கண்டதும் அவர்க்கு மனங் குழம்பிற்று. அந்தோ! இத்தனை உயிர்களும் நம்மால் மாண்டனவே. நமது பேராசைதானே கலிங்கவெற்றிக்குக் காரணம். அதனாலன்றோ இத்தனை உயிர்களும் இறந்தன. ஆயுதங்களால் மாண்டவை ஆயிர நூறானால், அநியாயமாய் மாண்டன ஆயிர மாயிர மாகவன்றோ காண்கின்றன! தம்

மைத் தாங்காத்துக்கொள்ள வலியில்லாமற் சைதிகளானவர், ஒன்றரை நூறாயிரவராமே! ஆஹா, இதுவும் வெற்றியாமா? இதுவும் ஆட்சியாமா? ஆசையே எல்லாவற்றிற்குங் காரணம்.

"அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்"

என்பது வேதவாக்கியமன்றோ? உபகுப்தர், பிங்களவற்ச ஜீவர், பாலபண்டிதர் முதலிய பெரியோர் கூட்டம்,

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

என்றபடி நமக்குக் கிடைத்திருந்தும், என்ன செய்தோம்? இப் படியில் இப்படியும் நமது பேராசை ஓங்கி வளர்ந்து மன்னுயிர்களுக்குத் தீங்கிழைப்பதுமா? இனி இப்படிப்பட்ட கொலைக்காரணமான கொடுந்தொழில் புரிவது கூடாது; கூடாது. "போர்த்தொழில் புரியேல்" என்பதும் பெரியார் வாக்கு. உயிர்க்கொலையின்றிப் போர்த்தொழில் நிகழாது என்பதையுன்னியே இவ்வாக்கு அமுதவாக்காய்ப் பிறந்திருக்கின்றது

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்"

என்ற ஞானவாக்குக் கிலக்காய், நாம் இதுமுதல்,

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள"

என்றபடி, கீழோர் விரும்பும் இப்பொருளாட்சியைப் போற்றாது, அருளாட்சியைப்போற்றி இன்புறக்கடவோம்.

" ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல"

என்ற பொய்யாமொழியை யுன்னி இப்போலிச் செல்வத்தின் நிலையாமையை யுணர்ந்து,

" யாதனின் யாதனி னீங்கியா னோதல்
லதனி னதனி னிலன்"

என்றபடி, இதனைவிட்டு நீங்கிப் பரமானந்த வாழ்க்கையிற் றிகழ்ந்து,

" ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"

என்ற திருவாக்குப்படி பயனற்ற ஐயுணர் வகற்றிப் பயனுற்ற மெய்யுணர் வெய்தி இறைமாட்சியிற் சிறந்து விளங்கக் கடவோம். போரில் உயிர்கொடுத்திறந்தார் போக, நம்மிடத்திற் பிடிபட்டிருந்தாரைப் பேணிப் போற்றக்கடவோம். மறுபடியும் அவர்களை அவர்க ளரசனிடத்திற்கே போக்கி, அவனையழைத்து நட்புங்கொண்டு, அவற்குத் தக்க சமாதானங்கூறி, அவனையே கலிங்கதேசாதிபதியாக்கிச் செல்லக் கடவோம்' என்று நீள நினைந்து, அகங்கூம்பியதற் கறிகுறியாக முகங்கூம்பி,

' அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்'

என்றதற் கிலக்காய்ப் பாசறைக்குத் திரும்பி வந்து அசோகர் மௌனமாய் வீற்றிருந்தார்.

அதுகண்ட கிலாதகர் முதலிய மந்திரிமாரும், பிறரும் 'அரசர் அமர்க்களஞ் சென்று வந்ததுமுதல் ஒருவாறு முகங்கூம்பித் தம் பெயர்க்கு மாறாகச் சோகராயிருக்கின்றார், காரணம் விளங்க வில்லை. திடீரென்று இப்படி மனஞ்சோர்ந்த

காரணம் என்னவென்று சொல்லலாம். வெற்றி நம்மதேயாக, வெற்றியின் இடையே வெறி பிடித்தாற்போல் திகைத்துச் செயற்கைபற்றிருக்கின்றார். அரசர்க்கேதேனுந் தேகாசௌக்கிய முண்டோ? வேறென்னவோ? கவலை, முகத்தில் கலந்து தோன்றுகின்றதே! வெற்றி முரசம் எக்காள முதலியன அவர் செவிக்குங் கடூரமாயிருக்கின்றன. இனி அவரெண்ணம் எப்படியோ' என்று சந்தேகித்துச் சப்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்குட் சிலர் கலிங்கதேசாதிபதியை அழைத்துச் சென்று அசோகரெதிரில் விட்டார்கள். அவனைக்கண்டதும், அவர் அரசர்க்கியற்றவேண்டிய பெருமையியற்றி உட்காருவித்து, 'ஏ, கலிங்கதேசாதிபதி! உமது போர்த் திறத்தை நாம் மெச்சுகின்றோம். உமது வீரர் உச்சிதமாய்ப் பொருது எம்மோடிடைவிடாது ஒருபதுநாள் முயன்றும் பயனற்று விட்டது. அதற்குக் காரணம், யாம் திடீரென்றுவந்து உம்மை எதிர்த்ததேயாம். இருபத்துநான்கோரைக் காலம், உங்கள் போராயத்தத்திற்குப் போதாது. ஆயினும் உமது போர்வீரர் தீரமுயற்சிக்குச் சிந்தை மகிழ்கின்றோம். இனி எம்மோடு நீர் நட்புக்கிழமை பூண்டு நாகரிகமாய் நடந்து கொள்ளக்கடவீர். இனி உமது தேசம் எமது தேசத்தோடிரண்டறக்கலந்து இன்புற்று வாழக்கடவது. எமக்கு நீவிர் பகுதி கட்டுவது தகுதியென்று கருதினால் அங்ஙனஞ்செய்யக்கடவீர். மிகுதியென்றெண்ணினீரானால் பகுதியும் வேண்டாம், விகுதியும் வேண்டாம். இத்தனை நாள் நீர் ஆண்டபடி ஆண்டு கொண்டிரும். நான் செய்யும் இந்நன்றி மறவாது நட்புப்பூண்டிரும். உமக்கும் எமக்கும் நிருபப்போக்குவரவு சம்பந்த மட்டும் இடையறாதிருக்கவேண்டும். உந்தேயம்

ஙக்கேயத்திற் சேர்ந்து ஒன்றாய் நன்றாய் விளங்கவேண்டும்: இதுவே எமது கோரிக்கை' என்று முடித்தார்.

சூழ இருந்தவர் யாவரும் அதிசயித்தார்கள். இத்தனை சிரமத்தோடு இத்தனை சேனைகளைத் திரட்டி நடத்திக்கொண்டு இத்தனை தூரம்வந்து இத்தனைவருந்திப் போர்புரிந்து வெற்றி பெற்றவேந்தர்க்கு, இத்தனை சீக்கிரத்தில் இத்தனை அருள் சுரந்து மனந்திரும்பியதென்றால் எத்தனை ஆச்சரியம்! இது விந்தையினும் விந்தையாகவன்றோ இருக்கின்றது. அரசர் சிந்தையை அளக்க யாராலாகும். காலையிலொன்றாவர், கடும் பகலிலொன்றாவர், மாலையிலொன்றாவர் மன்னர்போலும். எல்லாம் பின்னடியில் விளங்கும். 'யானைவரும் பின்னே மணியோசைவருமுன்னே' என்றபடி, இப்போது இவர்க்கு இக்குணம் பின்வரும் விரக்திக்கு அடையாளமாயிருக்கின்றது. விரக்திக்கடையாளம் அவாவின்மை. அவாவின்மைக்கு அடையாளம் அருள். அருளுக்கு அடையாளம் தாம் வென்ற தேசத்தைத் திருப்பி அதனரசர்க்கே வழங்கிவிடுவதாம். இன்னும் என்னென்ன செய்வாரோ பார்ப்போம். இவ்விஷயத்தில் நம்மை அவர் கலந்துபேசுவார் என்பதற்கில்லை. இப்படிப்பட்ட காரியங்களை ஆதியிலிருந்தே அவர் தம்மிச்சையாகவே செய்துவருகின்றார். மந்திரிகளாலோசனையும் தந்திரிகளாலோசனையும் அரசர்க்கு இரண்டாவது மூன்றாவதாகவே இருக்கின்றன. முதலாவதாயிருப்பது அவர்க்குச் சுயாலோசனையேயாம். ஆகையால் இனியேனும் இவ்விஷயத்தில் நம்மை நாடியோசிப்பாரோ, என்னவோ. இனி யோசித்தென், யோசிக்காதிருந்தென், எல்லாம் ஒன்றுதான். பழையபடி கலிங்காதிபதி, கலிங்காதிபதி ஆயினர். மகததேசாதிபதிக்கு அவர் மாண்புள்ள நண்பரானார்' என்று தமக்குத் தோன்றியவாறு பேசிக்கொண்டிருந்தார்கள்.

'உடனே எல்லாரும் புறப்படவேண்டும், மகதம்போக வேண்டும்' என்று அரசகட்டளை பிறந்தது. எல்லாரும் பிரயாணமாய்ப் புறப்பட்டுத் திக்விஜயாடம்பர மின்றிச் சென்று மகத நாடடைந்தார்கள். ஆயினும் அங்கு எங்கு பார்த்தாலும், அக்காலத்திய வழக்கப்படி, திக்விஜயோற்சவம் நடந்தது. பாடலிபுத்திரத்தில் அரசரடைந்த வெற்றியை முன்னிட்டுத் திருநாட் கொண்டாட்டம் சிலகாலம் நடந்தேறியது. அரசர்க்குமட்டும் அதில் விருப்பம் சிறிதும் இல்லை. மனங்கூம்பினபடி முகங்கூம்பியிருந்தார். அதனால் உற்சவங்கள் சிறக்கவில்லை. அதிவிரைவில் முடிந்தன. சேனைகளும் உற்சாகமின்றி ஒடுங்கின. ஆனைகள் அடங்கின, குதிரைகள் குன்றின. தேர்கள் அலங்காரமின்றி நின்றன. பட்டணமுழுவதும் எப்போதும்போல அமைதியாயிருந்தது.

ஆனாலும் அரசர்க்குமட்டும் மனம் எப்போதும்போல அமைந்திருக்கவில்லை. அதற்குக் காரணம், யாரும் கண்டுபிடிக்கக்கூடவில்லை. மந்திரி தந்திரியர் மட்டும் ஒருவாறு கண்டுகொண்டார்கள். அவருடைய நடையுடை பாவனைகளாலும் வார்த்தைகளாலும் உணவாதிகளுட்கொள்ளும் வேற்றுமையாலும் அவர்களுக்கு அவர் மனமடங்கியிருந்த காரணம் நன்றாய் விளங்கிற்று. ஆகையால், அவர்கள் தங்களுக்குத் தோன்றியவாறு பேசிக்கொண்டார்கள்.

ஒருநாள் நியாயசபை கூடிற்று. அதற்கரசரும் வந்து, உற்சாகமின்றிச் சபை கலையுமட்டும் இருந்து போய்விட்டார். பிறகு மந்திரி பிரதானியர் முதலியோர் வெளியில் வந்து தனிக்கூட்டமாய் நின்று, அரசரிருப்பைப்பற்றித் தங்களுக்குத் தோன்றியவாறு பேசத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவன், 'அந்தப்புரத்தில் ஏதோ நடந்திருக்க

வேண்டும்' என்றான். மற்றொருவன், 'அப்படியல்ல; நான் கேட்டிருந்தேன். சந்தகிரீகனுடைய கொலைப்பாதகத்திற்கு அவர் மிகவும் மனம் வருந்தியிருக்கிறார். ஒருநாள் அந்த நரகாதிகாரியான சந்தகிரிகன் நிரபராதியான பாலபண்டிதர் என்னும் பௌத்த பிக்ஷுவைக் கொஞ்சமும் அஞ்சாமற் கொண்டுபோய் நரக நெருப்புக்குழியிற்போட்டுக் கொல்லப் பார்த்தான். அவருடைய மகத்துவத்தால் அது முடியாமற் போயிற்று. அத் தீக்குழியில் அவர் சற்றேனும் தீயாமல் தெய்வவொளி வளர்ந்து, ஆங்கு அற்புதமாய் முளைத்து விளங்கிய தாமரை மலரில் யோகஞ்சாதித்துத் தோன்றினர். அதைக்கண்ட சந்தகிரிகன் பயந்து நடுங்கி அரசர்க் கறிவித்தான். உடனே அரசர், சற்றேனுந் தாழ்க்காமல் நரக நந்தவனத்துக்கு விரைந்துசென்று, பாலபண்டித முனிவருடைய மகிமையைக் கேட்டபடி கண்டு, அவரை வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அதுமுதல் நரக நந்தவனம் அழிந்தொழிந்ததாம். பால பண்டிதரிடத்தில் நம தரசர் பௌத்தமத தர்மத்தைக் கேட்டுத் தெளிந்திருக்கிறாராம். அதன் பிறகே, அவர், நரகாதிபதியாகிய சந்தகிரிகனையும், அதன் வாயில் காவலனையும் உயிரோடு கொளுத்தியொழித்தாராம். அதுமுதற்றான் அரசர்க்கு மனந் திரும்பிப்போயிருக்கிறது' என்றான். பிறகு மற்றொருவன் 'இது தான் உண்மையாயிருக்கும்' என்று முற்கூறியவன் வாக்கை உறுதிப்படுத்தி, மந்திரிமார்களை நோக்கி, 'அரசர் கலிங்கத்துப் போர்க்களத்திற் கண்ட கணக்கற்ற பிணக்குவியல்களால் சித்தசுவாதீனமே அழிந்திருக்கிறார். தம்மால் எத்தனையோ நூறாயிரம் உயிர்கள் இறந்ததனல் தமக்கு ஒரு வித விரக்தி தோன்றி, இனியென்றும் அவர் யுத்த முயற்சி

யிற் பிரவேசியார் என்று சேனாதிபதி சொல்லக் கேட்டிருந்தேன். அரசகாரியம் அதிநுட்பமானது. அரசநீதியாகிய செங்கோலுந் துலாக்கோலுஞ் சமமானவை. ஆகையால், அரசரந்தரங்கத்தை அறிவதென்றால் சாதாரண ஜனங்களுக்குக் கூடாத காரியம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தை வெளித்தோற்றத்தால் மதிக்க வல்லுநரன்றி, உண்முகத்தாலறிவது அசாத்தியமாகும். அப்படி ஒருவாறு அவர் உத்தேசமாயறிந்து சொன்னாலும் அது தவறிப்போவது சாதாரணம். அரசரிடத்தில் நெருங்கியிருக்கும் மந்திரி பிரதானியர்க்கே, அவருடைய அந்தரங்கானுபவம் அதிகமாயுண்டு. ஆகையால் அவர்களுக்கே அவருடைய மனோநிலையின் உண்மை விளங்கும். அகநிலை முகநிலையாலும் முகநிலை வாக்குநிலையாலும் வெளியாய்க்கொண்டேயிருக்கும்" என்று முடித்தான்.

இப்படிப் பலபடப் பேசிக்கொண்டு சற்றுநேரம் வெளியிற்றங்கியிருந்த மந்திரிபிரதானியரும் பிறரும் தத்தம் வாகனமூர்ந்து, வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

ஒருநாள் அசோகசக்கரவர்த்தி தமதரண்மனை மாடியின் வெளியிடத்திற் காற்றோட்டமான இடத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கையில் வீதிவழியே நோக்கினார். அங்கு ஒரிளைஞர் இவர் கண்களுக்குத் தென்பட்டனர். அவர் தலை, மழித்து முண்டிதமாயிருந்தது. காஷாயவாடை பூண்டிருந்தார். கரத்திற் கமண்டலம் இருந்தது. அவ்விளைஞர் முகமும் தோள்களும் அழகாய்க் கண்டார்மனத்தைக் கவரவல்லனவாயிருந்தன. காவி உத்தரியம் அவர்க்குச் சர்வமங்களாலங்காரமாய் இருந்தது. அதனால் அவர் உடல் வனப்பு ஒளிமயமாய் விளங்கிற்று. அவருடைய பாந்த

கடைக்கண்பார்வை நிர்மல மனத்தை நீட்டியளக்குங் கோல் போல் அமைந்திருந்தது. அசோகர் நெடுநேரம் அவ்விளைஞரைக் கண்கொட்டாமற் பார்த்தபடியே இருந்தார். அவ்வாலிபத் துறவி என்னென்னவோ பாடினபடியே போய்க் கொண்டிருந்தார். அவரைக் காணவேண்டுமென்றும், அவர் பாட்டைக் கேட்கவேண்டுமென்றும், அசோகர்க்குத் தம்மையுமறியாமல் ஓர் அந்தரங்கவுணர்ச்சி வுண்டாயிற்று. இதுவே சாதுசங்கம் என்பர் பெரியோர். இப்படிச் சாது சங்கத்தாசையால் சர்வசங்கபரித்யாகமும், சர்வபரித்யாகத்தால் துன்பநீக்கமும், துன்பநீக்கத்தால் நித்திய சுகானுபவமும் தோன்றும் என்பர் முற்றத்துறந்த முனிவர்.

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன்முக்திః."

இதுபோலவே அசோகர்க்கு அச்சிறிய பெரியார் கூட்டுறவிற் சிந்தை சென்றது. அவ்வாறுசென்ற சிந்தை மீளாமல் அவரிடத்திலேயே தாமதித்துக் களிகூர்ந்திருந்தது. உடனே, அசோகர் தமது சேவகனை விடுத்து, அச்சிறிய பெரியாராகிய பௌத்த முனிவரை அழைத்துவரக் கட்டளையிட்டார்.

அவர் வந்தவுடனே அசோகர், பரமானந்தராய் அவரை ஓர் உயர்ந்த ஆதனத்திலிருத்தி, அவருடைய க்ஷேமலாபங்களைத் தெரிந்துகொண்டார். அப்போதவ்விளைஞர் தமது திருநாமம் நிக்குரோதரென்றும், குருநாமம் திஷ்யரென்றும் தெரிவித்துப் பின்வருகிறபடி புத்தபகவானது தோத்திரமான அரும்பாக்களைப் பாடத்தொடங்கினர்.

அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.

மண்வாழும் பல்லுயிரும் வான்வாழு மிமையவரும்
கண்வாழு மாநாகர் கிளையனைத்துங் களிகூர
அந்தரதுந் துபியியங்க வமரர்க ணடமாட
இந்திரர் பூ மழைபொழிய விமையவர்சா மரையிரட்ட
முத்தநெடுங் குடைநிழற்கீழ் மூரியர சரியணைமேல்
மெய்த்தவர்கள் போற்றிசைப்ப வீற்றிருந்த வொருபெரியோய்!
(தரவு)

எறும்புகடை யயன்முதலா வெண்ணிறந்த வென்றுரைக்கப்
பிறந்திறந்த யோனிதொறும் பிரியாது சூழ் போகி
எவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும் யாதொன்று மிடரெய்தின்
அவ்வுடம்பி னுயிர்க்குயிரா யருள்பொழியுந் திருவுள்ளம்;

அறங்கூடு முலகனைத்துங் குளிர்வளர்க்கு மழைமுழக்கின்
றிறங்கூற வரைகதிருஞ் செழுங்கமல நனிநாண
ஒருமைக்க ணீரொன்பா னுரைவிரிப்ப வுணர்பொருளால்
அருமைக்கண் மலைவின்றி யடைந்ததுநின் றிருவார்த்தை.

இருட்பார வினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென
அருட்பாரந் தனிசுமந்த வன்றுமுத லின்றளவும்
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் றிருமேனி;
(இவை மூன்றுந் தாழிசை)

ஆருயிர்க ளனைத்தினையுங் காப்பதற்கே யருள்பூண்டாய்
ஓருயிர்க்கே யுடம்பளித்தா லொப்புரவிங் கென்னாகும்?
தாமநறுங் குழன்மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே முனைந்துலைத்தாற் கண்ணோட்டம் யாதாங்கொல்;
(பேரெண்)

போரரக்க ரோரைவர்க் கறவமிழ்தம் பொழிந்தனையே
ஆரமிழ்த மணிநாகர் குலமுய்ய வருளினையே
வார்சிறைப்புள் ளரையர்க்கும் வாய்மைநெறி பகர்ந்தனையே
பார்மிசை யீரைந்தும் பாவின்றிப் பயிற்றினையே.
(சிற்றெண்)

அருளாழி பயந்தோய் நீஇ
அறவாழி பயந்தோய் நீஇ
மருளாழி துறந்தோய் நீஇ
மறையாழி புரிந்தோய் நீஇ
மாதவரின் மாதவ னீஇ
வானவருள் வானவ னீஇ
போதனரிற் போதன னீஇ
புண்ணியருட் புண்ணிய னீஇ.

(இடையெண்)

ஆதிநீஇ ; அமலநீஇ ; அயனு நீஇ ; அரியு நீஇ ;
சோதி நீஇ ; நாத னீஇ ; துறைவ னீஇ ; இறைவ னீஇ ;
அருளு நீஇ ; பொருளு நீஇ ; அறிவ னீஇ ; அநக னீஇ ;
தெருளு நீஇ ; திருவு நீஇ ; செறிவு நீஇ ; செம்ம னீஇ ;

(அளவெண்)

எனவாங்கு (தனிச்சொல்).

பவளச் செழுஞ்சுடர் மரகதப் பாசடைப்
பசும்பொன் மாச்சினை விசும்பகம் புதைக்கும்
போதியந் திருநிழற் புனிதநிற் பரவுதும்
வண்மையும் வளமும் வாய்மையும்
திண்மையு முலகிற் சிறந்துவாழ் கெனவே.

(சுரிதகம்)

ஆதியங் கடவுளை யருமறை யருகனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
சேதியஞ் செல்வநின் றிருவடி தொழுதனம்.
காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பினை
மாமலர் வண்ணநின் மலரடி வணங்குதும்.
ஆரருள் பயந்தனை யாழ்துயர் தவிர்த்தனை
ஓரரு ளாழியை யுலகுடை யொருவனை
சீருண் மொழியைநின் றிருவடி தொழுதனம்.

எண்ணிகந்த காலங்க ளெம்பொருட்டான் மிகவுழன்
றெண்ணிகந்த வுலகங்க லிருடீர வொருங்குணர்ந்
தெண்ணிறந்த காலமுஞ் சீலமு மிவையாக்கி
யெண்ணிறந்த குணத்தினா னெம்பெருமா னல்லனோ.

தோடா ரிலங்கு மலர்கோதி வண்டு
வரிபாடு நீடு துணர்சேர்
வாடாத போதி நெறிநீழன் மேய
வரதன் பயந்த வறநூல்
கோடாத சீல வதமேவி வாய்மை
குணனாக நாளு முயல்வார்
வீடாத வின்ப நெறிசேர்வர் துன்ப
வினைசேர்ந்த நாளு மிலரே.

எண்டிசையு மாகி யிருளகல நூறி
யெழுதளிர்கள் சோதி முழுதுலகு நாறி
வண்டிசைகள் பாடி மதுமலர்கள் வேய்ந்து
மழை யருவு போதி யுழைநிழல் கொள் வாமன்
வெண்டிரையின் மீது விரிகதிர் கனாண
வெறி கழல்கொண் மேனி யறிவனெழின் மேவு
புண்டரிக பாத நமசரண மாகு
மெனமுனிவர் தீமை புணர்பிறவி காணார்.

அருந்தவர்கட் காதியா யைய நீக்கி
யவ்வியந்தீர்த் தவிரொளிசே ராக்கையெய்தி
யிருந்திரட்கை யினமருப்பின் யானை யூர்தி
யீரைஞ்ஞூற் றெழினாட்டத் திமையோ னேத்த
வொருங்குலகி னால்கற்றோ ரோத முந்நீ
ரொளிவளர வறம்பகர்ந்த வுரவோன் பாதம்
கருங்கயற்கட் காரிகையார் காத னீக்கிக்
கைதொழுதாற் கையலுங் கவ்வை தானே.

வீடுகொண்ட நல்லறம் பகர்ந்தமன் பதைக்கெலாம்
விளங்குதிங்க ளீர்மையால் விரிந்திலங்கு மன்பினேன்
மோடுகொண்ட வெண்ணுரைக் கருங்கடற் செழுஞ்சுடர்
முளைத்தெழுந்த தென்னலாய் முகிழ்ந்திலங்கு போதியின்
நாடுகின்ற மூவகைப் பவங்கடந்து குற்றமான
வைந்தடங்கொர் மூன்றறுத்த நாதனுண் மலர்த்துணர்ப்
பீடுகொண்ட வார்தளிர்ப் பிறங்கு போதியானையெம்
பிரானைநாளு மேத்துவார் பிறப்பிறப்பி லார்களே."

இங்ஙனம் பாடிய அச்சிறிய பெருந்தகையாருடைய அரும்பாக்கள் அசோகருடைய செவிவாய்க்குள் அமுதம் போல் நுழைந்தன. அவர்க்குள் அடங்கி யொடுங்கியிருந்த விரக்தி ஞான முளைகள் அவ்வமுத மாரியால் தழைத்துக் கிளைத்தன. அசோகர் அப்படியே ஒன்றுந் தோன்றாமல் அசைவற்றிருந்துவிட்டார். அவ்வாலிப முனிவர் அரசனது மனம் இளகிய பதமறிந்து, 'அரசே! "பிறத்தலு மூத்தலும் பிணிப்பட்டிரங்கலும், இறத்தலுமுடைய திடும்பைக்கொள் கலம்" மக்கள் யாக்கை இதுவென வுணர்ந்து மிக்க நல்லறம் விரும்புதல்" புரிவாயாக என்றும், அவ்வுத்தம தர்மமும் 'தன்னுயிர்க்கிரங்கான் பிறவுயிரோம்பு—மன்னுயிர் முதல்வன் அருளிய நல்லறமே' யென்றும், ஆதலால்

முன்றான் பெருமைக்கணின்றான்முடி வெய்து காறும்
நன்றே நினைந்தான் குணமே மொழிந்தான் றனக்கென்
றொன்றானு மில்லான் பிறர்க்கே யுறுதிக் குழந்தான்
அன்றே யிறைவ னவன் றாள்சர ணங்க ளன்றே.

என்று, சாக்கிய பகவானிடம் சரணாகதி செய்யு மிடத்து

அரியேறு முன்னுயர்த்த வாதியான் வண்டின்
புரியேறும் போதி நிழற்கீழ்ப்—பெரியோன்
அடித்தா மரைமலரை யன்போடுஞ் சென்று
பிடித்தார் பிறவார் பெயர்ந்து.

என்றபடி, நிர்வாணமடைதல் நிச்சயமென்றும் கூறியதோடு "உயிர்த்தொகைக ளுணர்வென்னு முள்ளீடின்றி யுழன்று திரி யிருட்காலை உதயத்துச்சி—செயிர்த்தெழுந்த இளங் கதிர் போல" துஷிதலோகத்திலிருந்து இவ்வுலகில் அவ தரித்து, போதி விருக்ஷத்தின் அடியில் தத்துவங்களையும் ஆராய்ந்து தெளிந்து, மாரனை வென்று, முக்குற்றங்களையும் அறுத்து, ஞானச்சுடராய் விளங்கிய புத்தபகவானுடைய வைபவங்களையும் அவர் தர்மங்களையும் ஸங்கத்தின் சிறப் பையும் அமிர்த வருஷம்போல அரசன் மனங்குளிர உபதே சித்தனர்.

இவ்வாறு, அம்முனிவர், அசோகரது செவியே வய லாக ஞானந்திருந்திய தம் நாவைக்கொண்டுழுது உத்தம தர்மங்களாகிய வித்துக்களை விதைத்தமையால் அவ்விதை கள் அப்போதே விளைந்து அரசற் கருந்தும் பக்குவம் பெற்ற உணவாகப் பரிணமித்துவிட்டது.

அசோகர் இதயத்திற் குடியிருந்த அஞ்ஞானந்தகார மாயப்பிசாசம் அப்பாலகன்றது. சந்தேக விபரீதக் கலக் கங்களும் பெண்டுபிள்ளை பண்ட பதார்த்தப் புறப்பற்றுக் களும், யான் என்னும் அகப்பற்றும் முறையே தெளிந்தும், அறுந்தும், அழிந்தும் ஒழிந்தும்போயின. அவர் தமது வாளை இனியும் வீணுக்காமல் பௌத்தமத வளர்ச்சியி லேயே செலுத்தவேண்டுமென்று சிந்தையில் தீர்மானித்துக் கொண்டார்.

பிராணனைக்காக்கவேண்டியவன் பிராணவதைசெய்யக் கூடாது; இதுவே ஸநாதனதருமம். நிலையாமையிலிருந்த படியே நிலையுந் தன்மையைப் பெறும் வழி இதுவேயாகும்; போகவழியிற் கிடையாதது யோகவழியிற் சர்வசாதாரண

யாய்க் கிடைக்கும். இல்லற போகத்திற் சித்தியாத இன்பங்கள் துறவற யோகத்திற் சுலபமாய்ச் சித்திக்கும். வீணையிற் கிடையாத ஆனந்தம் விராகத்திற் சுலபமாய்க் கிடைக்கும். ஆனாலும் இவ்வுண்மையை எல்லாரும் உணரார்கள். உணர்ந்தாலும் அநுசரிப்பவர்களும் அநுபவிப்பவர்களும் வெகு சிலரேயாவர்.

எண்ணிறந்த இராஜவைபவங்களும், கீர்த்திப் பிரதாபங்களும் அசோகர்க்கு, உண்ணிறைந்த சுகாநுபவத்தைத் தாராவாயின. அவைகளில் அவர் உள்ளம் மிதந்திருந்தும், விசாரணையி லழுந்தியிருந்தது. அதனால் அவர், தமதுடல் பொருளாவி மூன்றையும் பௌத்த தர்ம பரிபாலனத்திற்கு அர்ப்பணஞ் செய்துவிட்டார். அதனால் அவர் அதுமுதல் தமது வாணாளைப் புதுக்கி, இகசுகத்தை வெறுத்துப் பரசுகத்தி லிச்சை வைத்தார்.

அப்புது வாழ்க்கையில் அவர் புதுக்காட்சிகளை மாட்சிபெறக் கண்டார். அப்போதவர்க்குத் தத்துவம் கட்புலனாயிற்று. அப்புதிய ஞானாநுபவம் அவர் வீட்டு வாழ்க்கையை வேற்றுமையாக்கிற்று. அதில் முதல்வேற்றுமை, அதுவரையில் தாம் கொன் றுண்டுவந்த மிருக பக்ஷிகளைத் தவிர்த்தமையேயாம். இரண்டாம் வேற்றுமை, தமது இராஜவைபவ வுணவாதிகளை வெறுத்துப் பிடியன்னமுங் குடிநீரும் பிராணனைக் காக்கப் போதுமானவையென்று தீர்மானித்ததாம். மூன்றாம் வேற்றுமை, உணவாதிகட்காக சீவவதை கூடாதென்று நிபந்தனை ஏற்படுத்தியதாம். நான்காம் வேற்றுமை; மந்திரி பிரதானியர் தந்திரியர் முதலியோர் அரண்மனையெதிர் வெளியில் யானைச்சண்டை, சிங்கப்போர்,

ஆட்டுக்கடா பாய்ச்சல், கோழிப்பந்தயம் முதலிய சீவவதை விநோத வேடிக்கைகள் இதுவரையிற் செய்துவந்தபடி இன்னமுஞ் செய்யக்கூடாதென்று தடுத்தொழித்தமையாம். ஐந்தாம் வேற்றுமை, அம்மிருக பக்ஷிகள் அறியாமையாற் கோபமுந் தாபமும் பகைமையுங்கொண்டு ஒன்றையொன்று தாக்குவதால் ஒழுகும் செந்நீர் வெள்ளத்தைக் காண அவருள்ளம் பதைத்ததால்; அவர்க்கு ஜீவ காருண்ய ஒளி சிறந்து ஜீவவதைக் கொடுமையிருள் துறந்தொழிந்ததாம்.

அருளாளராய் விளங்கியிருந்த புத்தகுருமூர்த்தியின் சித்த முணர்ந்தொழுகும் உள்ளன்புவாய்ந்த உத்தமச் சீடராகிய அசோகர் திருவுள்ளத்தில் அருட்சக்தியுதயமாயிற்று. அருட்பெருஞ்சோதி தோன்றி இருட்கருங்கூட்டம் இல்லாதொழிந்தது. அப்பெருஞ்சக்தியின் சோதியே, அரண்மனை மடைப்பள்ளியையும், அங்குச் சமைக்கும், பிரசாதங்களையும் கறிவகைகளையும், பிறவற்றையும் பரிசுத்தமாக்கி, அதுவரையில் இல்லாத களங்கரகிதமான ஒளியைப் பரப்பி விளக்கிற்று. சக்கரவர்த்தித் திருவாளராகிய அசோகர் அதுவரையில் தாமாண்ட நாட்டைக் காக்கக் காட்டையடைந்து வேட்டையாடிவருவது வழக்கம். அவர் ஆடி வந்த வேட்டை அதிசயிக்கத்தக்கதாயிருந்தது. நரவேட்டையுமாடி வந்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள். அவர் தம்முடன் வேட்டைக்கு ஈட்டி வல்லயம் கத்தி தடி முதலிய ஆயுதங்களைக்கொண்டு செல்வதில்லையாம். வீரமாதர்களை ஆயுதபாணிகளாக அழைத்துக்கொண்டு போவாராம். அவர்களுக் கெதிர்பட்ட தெந்த ஜீவனானாலும் உயிரிழந்து மாண்டதாம். அவர்கள் தம்மைச் சூழப் பிடித்துக்கொண்டுபோன கயிற்றுப்பாசத்தில் அகப்பட்டது நரவுயி

ராலும் நாசமாயிற்றும். இதுவும் முன்சொன்ன நரக நந்தவனம்போல் நம்புவதற் கிடமில்லாததென்க.

எது எப்படியாலும் இப்போதவர் அருட்பெருஞ் சோதியிற் கலந்து, இருட் கருங்கூட்டம் ஒழிந்து, ஒளி மயமான உள்ளந்திகழ்ந்து ஓங்குவதால், வேட்டையென் னும் வார்த்தையையே சொல்லாதொழித்தார். அவரிதயத் தின் அருள் வெள்ளம் காடு மலைமேடு முதலியவைகளிலும் பாய்ந்து, அங்குள்ள பிராணிகளாகிய பயிர்களைச் செழித் தோங்கி வளரச் செய்தது.

ஆகையால் அருட்சத்தி பொடிரண்டறக்கலந்த அசோ கர், போக விலாசங்களை ஒவ்வொன்றும் ஒழித்துக்கழித்துக் கொண்டேவந்தார். க்ரீடாதிகளில் அவர்க்குக் கிஞ்சித்தும் நினைவில்லை. விசனம் என்பதே இல்லாமல் அவரைவிட்டு அற நீங்கிற்று. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினனே' என்றபடி, பழைய பழக்கவழக் கங்களிற்றிளைத்திருந்த அசோகர் அவைகளை யறநீக்கிப் * புத்தசோகர் ஆனர். பிந்துசார மன்னற்குப் பிரியமற் றிருந்த புத்திரராகிய இவர், இப்போது தேவர்க்கும் பிரிய தரிசனராஞர். அதனல் தேவாறும் பிரியர் என்ற பட்டம் இவர்க்குத் தகும் தகும் என்று சொல்வதற்கிடமாயிற்று.

இன்னும் இவர் கலிங்கதேச வெற்றிக்குப் பிறகு மனந்திரும்பியதற்கடையாளமாக, பிறகு இவர் நாட்டியகல் வெட்டுகளொன்றிற் பின்வருமாறு கண்டிருக்கிறர்.

---

* புது அசோகர் = புத்தசோகர் = புத்தரிடத்திற்கொண்ட பக்தியினல், உலகவின்பத்தில் விரக்திசோகமுடையவர் என்பது மறுபொருள். இதற்குப் புத்த அசோகர் எனப் பிரித்துக்கொள்க.

மாட்சிமைதங்கிய பிரியதரிசி மகாராஜர் தமது ஒன்பதாமாண்டாட்சியிற் கலிங்கத்தை வென்றார்.

அதில் ஒரு நாற்றைம்பதினாயிரம்பேர் கைதிகளாயினர்; ஒரு நூறாயிரவர் ஆயுதங்களால் மாண்டார்கள். எத்தனையோ நூறாயிரவர் நோயாலும் உணவாதிகளில்லாமையாலும் மடிந்துபோனார்கள்.

கலிங்க தேசத்தை வென்று மகத தேசத்தோடு சேர்த்துக்கொண்டதுமுதல் பிரியதரிசி மகாராஜர் பக்திதர்மநீதி நெறியைப் பரிபாலித்துவருவதன்றித் தாமும் அதைப் பின்பற்றி வருகிறார்; அதிற் குறித்த திட்டங்களை வெகு ஜனங்களுக்கும் புலப்படுத்தியிருக்கிறார். அது பின் வருமாறு:—

"கலிங்கரை வென்றதற்காகப் பிரியதரிசி மகாராஜா பெரிதும் மனம்வருந்தி யிரங்குகிறார். ஏனெனில், தன் இச்சையிற் றிகழ்ந்திருந்த நாட்டைக் கைப்பற்றுவதென்றால் எளிதில் இசைவதன்று. அதனால் கொலையும், கோரமும், மரணமும், இரணமும், சரணமும் பிறகொடுமைகளும் நேரிடுகின்றன. அவைகளைப்பற்றியும் பிரியதரிசியார் பெரிதும் மனமுருகி வருந்தியிரங்குகிறார்.

பிரியதரிசியார் பின்னும் அதிகமாக வருந்துவதற்கு இன்னுமொரு காரணமுமுண்டு: அப்படிப்பட்ட நாட்டில் வேதியரும், துறவிகளும், இல்லறத்தாரிற் பற்பல வருணத்தாரும், பிறரும் பெற்றோர்க்கடங்கியும் உற்றோர்க்குதவியும், கற்றோர்க்கடங்கியும், மற்றோர்க்குதவியும் வாழ்கிறார்கள்; நட்பினர், நொதுமலர், கூட்டாளிகள், அடிமைகள், வேலையாட்கள் முதலியோரை அன்புடன் ஆதரிக்கிறார்கள். அந்நாட்டில் வாழும் அப்படிப்பட்ட மாந்தர்க்குக் கொடு

மையும் கோரமும் கொலையும் அன்புடையாரைப் பிரிதலும் நேரிடுகின்றன.

தங்களைத் தாங்கள் காத்துக்கொள்ளக் கூடியவர்களும் தங்களன்பைத் தமர்மேற் குறையாமற் செலுத்துகிறார்கள். அவர்களுடைய நண்பினர்க்கும், தோழர்க்கும், நொதுமலர்க்கும், சுற்றத்தார்க்கும் அழிவு நேரிடுகின்றது. இப்படித் தம்மைத் தாம் காத்துத் துன்புறாதவர்களுடைய உள்ளமும் வருந்தி வாடுங் கொடுமைக் கிடமுண்டாகிறது.

இப்படிப் பலவிதமாய்ச் செலுத்தும் துன்பம், பிரியதரிசியார்க்குப் பெரிய விசனமூட்டுகின்றது. ஏனென்றால், வேதியரில்லா நாடேது? துறவியரில்லாத் தேயமேது? ஒரு பக்ஷத்திலேயே அன்பு செலுத்தாத மன்பதைகளையுடைய மாகாணமேது?

கலிங்க வெற்றியிற் கொலையுண்ட, கைதிகளாகப் பிடிபட்ட, அல்லது மாண்ட மன்பதைகளில் நூற்றிலொருபாகம் அல்லது ஆயிரத்திலொருபாக மேனும் இப்போது பிரியதரிசியாருக்குப் பெரிதும் விசனமூட்டும் விஷயமாகும்.

எவனாகிலும் இப்போது பிரியதரிசியாருக்குத் துன்பம் விளைக்க நேரிட்டால், அதையவர் பொறுத்துக்கொள்ளுமாற்றால் ஆத்திரமின்றிப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்.

தமது ஆட்சியிலடங்கிய காட்டுமனிதர்களிடத்திலும் பிரியதரிசியார் அருளுடையவரா யிருக்கின்றார். அவர்களை யழிக்கவும் அலைக்கவும் தமக்கதிகாரம் இருந்தும், பிரியதரிசியார், பின்வருகிறபடி அவர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்.

தீவினையை விலக்குங்கள். நீங்கள் அழியாதிருப்பீர்கள். பிரியதரிசியார் எல்லாச் சீவராசிகளும் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்றும், ஆசையை அடக்க வேண்டுமென்றும், மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் இருக்கவேண்டும் என்றும் விரும்புகிறார்.

இந்த வெற்றிதான் வெற்றிகளுக்கெல்லாம் பிரதானமான வெற்றி. இதுவே பக்திதர்ம நீதிமார்க்கவெற்றியென்று பிரியதரிசியார் பெரிதும் அபிப்பிராயப்படுகிறார்."

மேற்குறித்த கல்வெட்டால், கலிங்கவெற்றிக்குப்பிறகு அசோகர் மனந்திரும்பிப் பக்தி தர்மநீதிமார்க்கத்தை உலகறிய விளம்பரப்படுத்தினவிதமும் அம்மார்க்கத்தில் தாமும் தவறாதொழுகின விதமும் உறுதிப்படுகின்றன. இவரைப் பற்றிய மற்றக் கதைகளெல்லாம் பௌத்தத் துறவிகளும் சந்நியாசிகளும் கட்டிவைத்த பழங்கதைகளாம். அவைகள் ஆதாரமின்றி எழுதிவைத்தவைக ளாகையால் நம்பத்தக்கவைகளல்ல. அசோகருடைய வாய்மொழிகளடங்கிய சிலா சாசனங்களிற் காண்பவைகளே வாய்மை மொழிகளாகும் என்றறிக.

அடுத்த அதிகாரத்தில் வரும் பௌத்தமதத்தினுண்மையை நிக்குரோதர்போன்ற உண்மை ஞானிகள் உபதேசித்ததால் அசோகர் மனந்திரும்பினர் என்பதற்கையமில்லை. அதற்கு முந்தியே உபகுப்தர் முதலியோருடைய உபதேசங்களாலும் அவர்க்கு உயிர்க்கொலை முதலியவைகளில் அருவருப்புண்டாயிருந்தது. அதனல் கலிங்கவெற்றிப்போர்க் கொலையைக்கண்டவுடன் அவர்க்கு அருவருப்பும் அருளும் விரக்தியும் விரவித்தோன்றின. இந்த அருளுணர்ச்சியையே அவர் கற்றூண்களிற் பதிந்து பற்பல இடங்களில் நாட்டி

வைத்திருக்கிறார். கலிங்கத்துக் கற்றாணிற் பதிந்த பதிவு, அவருடைய பதின்மூன்றா மாண்டாட்சியிற் அமைந்தது. கடைசிக்கற்றாண் அவருடைய இருபத்தெட்டாமாண்டாட்சியிற் பதிந்து நாட்டியது. ஆகையால், பக்தி மதநீதிமார்க்க வெற்றியே வெற்றி; மற்ற வெற்றிகளெல்லாம் போலிவெற்றிகள். யுத்த வெற்றி உபயோகமற்றது, சித்த வெற்றியே சிறந்த வெற்றியென்று அவர் கொண்ட கொள்கை ஒரு விதமாய் எல்லாத் தூண்களிலும் காணப்படுகிறது.

கலிங்கவெற்றியே அவர் ஆட்சியில் மாட்சிபெற்ற யுத்த வெற்றி; அது தவிர யுத்தவெற்றி மற்றொன்றும் சிறந்த வெற்றியில்லை. அவருடைய ஒன்பதாமாண்டிலிருந்து அவர் போர்த்திறத்திற் பேரெடுத்து, ஆட்சியிற் சிறந்துவிளங்கினர். ஆனல், பௌத்தமத பக்தி தர்மநீதி மார்க்கத்தை அநுசரித்து ஒழுகுதலே பேரானந்தம் என்றும் அதையே தமது குடிகள் பின்பற்ற வேண்டுமென்றும் விளம்பரப் படுத்தி அதற்காக வருந்தி யுழைத்தார். அவருடைய பதினன்காமாண்டாட்சியிற் பதிப்பித்து வெளிப்படுத்தின பத்தாங் கருங்கற்பாறைப் பதிவில், உண்மை வெற்றிக்கும் போர்த் தொழிலிலடையும் போலிவெற்றிக்கும் வேறுபாடு விளக்கமாய்க் கண்டிருக்கிறது.

மேற்குறித்த காரணத்தாலேயே அசோகர், தமது ஒன்பதாமாண்டாட்சியில் பௌத்த சங்கத்திற் சேர்ந்து சீடனாக அவரே சொல்லியிருக்கிறார்.

பௌத்தரான பிறகும் அசோகர் இரண்டரையாண்டாக ஒருவித வுணர்ச்சியுமின்றிக் காலங்கழித்தாராம். அவருடைய பதினொன்றா மாண்டாட்சியின் இறுதியிலேதான் அவருக்குப் பௌத்தமதப் பித்து ஏறத்தொடங்கிற்றென்று

அவரே சொல்லுகிறார். அதுமுதல் அவர் தமது உடல் பொருளாவி மூன்றையும் அம்மத வளர்ச்சிக்கும் வலிமைக் குஞ் சற்றேனும் பின்னிடையாமல் வழங்கிப் பாடுபட்டார். ஏனென்றால், அம்மதமே எல்லார்க்கும் சம்மதம்; அதுவே மோக்ஷக்கதவைத் திறப்பதற்குத் தகுந்த திறவுகோல்; அதுவே மன்பதைகளுக்கு இகபர சுகத்தையும் அழிவின்மையையும் உண்டாக்கும் உத்தம வழி என்று அவர் எண்ணியிருந்தார்.

ஆகையால், அவர் பௌத்த மதத்துறவற விரதம் பூண்டு அந்தச் சங்கத்தில் சேர்ந்தார். சின்னக் கற்பாறைப் பதிவு ஒன்றில், அசோகர் பௌத்தமத மாணவராயிருந்த இருப்புக்கும் சந்நியாசியாயிருந்த இருப்புக்கும் உள்ள வேறுபாட்டை விவரித் தெழுதியிருக்கின்றது. அசோகர் தமது சொந்த வார்த்தைகளாலேயே அதை வெளியிட்டிருக்கிறார். அசோகரை நம்பாதார் அகிலத்தில் யாரையும் நம்பமாட்டார் என்பது உலக வழக்கு. பிற்காலத்தில் கூர்ச்சர வரசனாகிய குமாரபால னென்பவனும் அசோகரைப் போலவே ஜைந மதத் தாபனம் பண்ணும்பொருட்டு, கொல்லா விரதம்பூண்டு கோபத்தையும், பாபத்தையும் அறநீக்கி அந்த மதாசாரத் தலைவனாய் மாண்புற்று வாழ்ந்தான் என்பர். பௌத்த சந்நியாசியாய், அந்த மதாசாரியர்களோடு மாண்புடன்கூடியிருந்தபோதெல்லாம் அசோகரும் தமது மந்திரிமாரிடத்தில் அரசகாரியத்தை ஒப்புக்கொடுத்திருந்தார் என்பது சர்வசாதாரண நம்பிக்கை. பௌத்த மதாசாரச் சடங்குகள் அத்தனை சிக்குள்ளவைகளல்ல; உபசம்பதை என்று வழங்கும் அம்மதப் பிரவேசச்சடங்கு வெகு சுலபமானது. அதிற் பிரவேசித்த ஒருவன் சாமளவும் துறவியாகவேயிருக்க வேண்டு

மென்னும் விதியில்லை. சிலகாலம் இருந்து, பிறகு இல்லற வாழ்க்கைக்குத் திரும்பிவிடலாம். இந்த வழக்கம் இன்றளவும் இலங்கையிலும் பர்மாவிலும் மாறாமல் இருக்கிறது. அசோகரும் இப்படியே செய்திருக்கலாம். பௌத்தமத ஒழுக்கங்களில் ஒன்றாகிய பிச்சையேற்றல் அரசனுக்குத் தகாதென்றாலும், அசோகர் அதையும் தம தரண்மனைக்குள்ளேயே அநுசரித்துவந்தாராம். அசோகர் உண்மைப் பௌத்தபிக்ஷுவா யிருந்தார் என்பதற்கு, அவர்க்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்வந்த சைனயாத்திரிகராகிய இட்சிங் என்பவர் அசோகப் பிரதிமைகளெல்லாம் ஒரு விதமான பிக்ஷுவுடை தரித்திருக்கக் கண்டதாக எழுதியிருக்கின்றமையே சான்றாகின்றது. சக்கரவர்த்தியாயிருந்த அவர் அங்ஙனம் பிக்ஷுவாயில்லாதிருந்தால் அத்தகைய உடை உடுத்தியிரார்.

இப்படியிருந்த இவர், பட்டத்துக்கு வந்த ஒன்பதாமாண்டுக்கும் பதினோராமாண்டுக்கும் இடையில் தமது மதத் தன்மையை உலகிற்பரப்ப எண்ணி, அதிற்றேர்ந்த சிலரை அழைத்து, "ஏ, பௌத்த மதத்துத்தமர்காள்! நீவிர் உண்மைத் தர்மத்தின்பொருட்டு உழைக்கப் பின்னடையன்மின். நுமக்கு வேண்டிய அநுகூலங்கள் யாவும் யாம் செய்துகொடுக்கச் சித்தமாயிருக்கின்றோம். எல்லாம் சத்துவகுண சம்மதமாகவே இருக்கவேண்டும். கோபமுந் தாபமுங்கூடா. எங்குப்போனாலும் நுமக்கு அருட்சோதியே வழிகாட்டியா யிருக்கவேண்டும். கொல்லாமையே நுமக்கு வெற்றிதரும். அதுவே ஆயுதமாக விளங்கவேண்டும். எல்லார்க்குஞ் சம்மதமாகும்படி நம் மதத்தை நாகரிகமாக விளம்பரப்படுத்துமின். 'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந்தார்' என்பது ஆப்தவாக்கியம். ஆகையால் சீவகாருண்யம் என்னும் கூர்மையோடு விளங்கப்பெறும், கொல்லாமையென்னும் ஆயுதத்தை விவேகமென்னும் பிடிகொண்டு பற்றிப் பாடுபட்டுழைப்பீராயின் நீவிர் உலகத்தில் எங்குச் சென்றாலும் வெற்றி நம்மதேயாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. சிலர் இலங்கைக்கு ஏகுமின். சிலர் தென்மேற்கில் மகாராஸ்டிரம் மைசூர் பிரதேசங்களுக்குச் சென்மின். பௌத்தமத பரமார்த்த உண்மை மெத்த விரைவாய் இத்தகையிற் பரவவேண்டும். சிலர் இமாசல பிரதேசங்களாகிய காஸ்மீரத்துக்கும் பெகு முதலிய இடங்களுக்கும் போமின் என்று விடை கொடுத்தனுப்பினார்.

எல்லாரும் மனமுவந்து, அப்படியே சென்று பௌத்த தர்மத்தை எல்லார்க்குஞ் சம்மதமாக விளக்கிக்காட்டி விளம்பரப்படுத்தி ஆங்காங்கு மடங்களும், சபைகூடும் இடங்களும் ஏற்படுத்தினார்கள். அவர்கள் மேற்கொண்டு சென்ற காரியம் சித்தியாயிற்று. அதனால் இன்றளவும் அப்பிரதேசங்களில் ஜீவகாருண்ய மதமாகிய அருட்பெருஞ் சோதிப் பௌத்தமதம், இருட்கருங்கூட்டத்தை விலக்கி விளங்கிவருகிறது.

இப்படி இவர் தம்மதம் யார்க்குஞ் சம்மதமாக உலகடங்கலும் அதை விளக்கிப் பரப்பவேண்டிய முயற்சியில் ஈடுபட்டுப் பாடுபடுவதைப்பார்த்த இவருடைய மந்திரி பிரதானிகளும் மற்றவரும் 'ஆஹா, இவரன்றோ உத்தம புருஷர், உத்தமர்தாம் ஈயுமிடத்தோங்கு பனைபோல்வர் என்ற வாக்கியம் இவரிடத்துப் பலித்துள்ளது. 'கைம்மாறுகவாமற் கற்றுணர்ந்தோர் மெய்வருந்தித் தம்மாலியலுதவி தாஞ் செய்வர்' என்றது இவரைப்போன்ற உத்தம புருஷனை

நோக்கியே யாகும். ஸாக்கியபுத்த பகவானது அருட்பெருஞ் சோதிமதம் பிறந்து இருநூற்றைம்பதாண்டுகளாகியும் இது வரையில் அது கங்கைபாயும் சமவெளியைவிட்டுத் தாண்டாமல் குடவிளக்காய் அடங்கியொடுங்கி அப்பாற் படாமல் இருந்தது. அதைத்தாபித்த பகவானாகிய புத்த முனிவரும் பிறந்து வளர்ந்து வாழ்ந்து ஒடுங்கின இடம் 82-ம் 86 உள்ள கிழக்கு உத்தேசக் கோட்டுக்கும் 24-ம் 28 உள்ள வடக்கு உத்தேசக் கோட்டுக்கும் இடையில் * உள்ள தாகும். இப்படிப்பட்ட சிற்றிடத்திற் பிறந்து, அங்கேயே சுற்றியுலவி, அப்பாலகலாமல் இத்தனைகாலம் யார்க்குந்தெரியாதடங்கி இருந்த இம்மதம் எம்மதத்தினும் ஏற்றமாய்ச் சீவகாருண்ய விளக்கமாய்ச் சீவாத்மாக்களில் உயர்வுதாழ்வின்மையைத் தெரிவிப்பதாய் ஓங்கும்படி நமதரசர் செய்யுமுயற்சி யார் செயவல்லார் ? ஓரே யிடத்தில் அடங்கி யொடுங்கி யிருந்த இம் மதம் இத்தனைதூரம் பரவுதற்குக் காரணமாயுள்ள நம் அரசர்பிரான் நீடுவாழக்கடவர், என்று வாழ்த்தினார்கள்.

இன்னுஞ் சிலர், 'ஆஹா, உலகெங்கும் பௌத்த பாரமார்த்திக தர்மத்தை உலகிற் பரப்ப உத்தேசித்த இவர் அதற்காக ஆட்களைச் செலுத்திவிட்டுத் தாம் அதற்கு மேலும் ஒன்றுஞ் செய்யாமற் சும்மாவிருந்தால், இவரை யார் என்ன கேட்பார்கள் ? 'தன்னுயிர்போல் மன்னுயிரை மதிப்பவனே மன்னன்' என்றுள்ள வாக்கியம் இவரிடத்தில் தான் பலித்திருக்கிறது. இவருடைய ஆட்சிக்குட்பட்ட இந்த மகத ராஜ்யத்தில் ஆங்காங்குச் சாலைகள் தோறும் பிராணிகளும் பிரயாணிகளும் வெயிலிலும் மழையிலும்

* கயை பிரயாகைக்கும் குன்றுகளுக்கும் இடையிலுள்ள பிரதேசம்.

வருந்தாவண்ணம், நிழல்தரும் மரங்களையும் பழந்தரும் விருட்சங்களையும் நட்டுப்பயிராக்குகின்றாரே. இத்தகைய அறச் செயலை யார் செய்தார். 'செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும், வானகமு மாற்ற லரிது' என்பது வேத வாக்கிய மன்றோ? இது மட்டோ? அங்கங்கே கிணறுகள் எடுக்கின்றார் சத்திரங்களும் சாவடிகளும் கட்டுகின்றார். தண்ணீர்ப்பந்தல் வைக்கின்றார். நோய்கொண்டார் குணப் படுவதற் கனுகூலமான மூலிகைகளையும் வேர்களையும் வளர்க்கின்றார். இன்னும் என்னவேண்டும்? அருட்பெருஞ் சோதி யொளி இவர் ஆளும் இத்தேயத்தில் மட்டு மன்றி இவருடைய நட்பரசராளும் பிறதேயங்களிலும் பிரகாசிக்கின்றதே. அங்கும், 'இங்கு என்னென்ன சீவ காருண்யானு கூலமான காரியங்கள் நடக்கின்றனவோ, அவைகளனைத்தும் குறைவின்றி நடந்துவருகின்றனவே!' என்று வியந்துபேசிக் கொண்டார்கள்.

இவருடைய பதின்மூன்று மாண்டாட்சியில் இவர் செய்துவரும் உத்தம தர்ம கைங்கரியங்களைக் கண்ணுற்ற வேறு சிலர், 'ஆஹா, இன்னும் இவர் இம்மதம் எங்கும் சம்மதமாம்படி என்னென்னவோ உன்னத காரியங்களெல்லாம் செய்துவருகின்றாரே. இவர் கீழ் அடங்கியாளும் சிற்றதிகாரிகளெல்லாம் அங்கங்கே கூட்டங்கூட்டவேண்டுமாம். அந்தக் கூட்டத்தில் அசோகராஜ பௌத்த மதத்தின் தர்ம நீதிகளைக் கற்பிக்கவேண்டுமாம். பிரசங்கஞ் செய்ய வேண்டுமாம். கேட்டுத்தெரிந்து சிந்திக்கவேண்டுமாம். சிற்றதிகாரிகளுக்கடங்கிய உத்தியோகஸ்தர்கள் அக்கூட்டத்துக்கு அவசியம் வந்து தீரவேண்டுமாம். அவர்களுடைய மற்றவேலைகளுக்கும் இந்தக்கூட்டவேலைக்கும் யாதொரு

சம்பந்தமும் இல்லையாம். கூட்டமேலை மற்றவேலைகளுக்குப் பாதகமாயிருக்கக்கூடாவாம். இந்தச்சங்கம் உச்சயினியிலும் தக்ஷசிலையிலுமட்டும் மூவாண்டுக்கொருமுறை கூடலாம் என்று கட்டளை பிறந்திருக்கிறதாம். ஆஹா, எத்தனை அபிமானம் மதவிஷயத்தில் எத்தனை அன்பு. மன்னுயிர்மேல் எத்தனை இரக்கம். இதுவரையில் ஆண்ட அரசர்களில் இங்ஙனம் செய்தார் யாவர்? அவரவர் தத்தம் சுய நலப் பிரியராய் ஆண்டு * மாண்டாரன்றி, இவர்போல் பர நலப்பிரியராய் ஆண்டு † மாண்டார் ஒருவருமிலர் என்று தமக்குள் வியந்து புகழ்ந்துபேசி மகிழ்ந்தார்கள்.

இந்த மதக்கூட்ட ஏற்பாடு ஓராண்டு நடந்தது. ஆனாலும், இன்னும் அது மனத்துக்கு இசைவாய்த் தமது உத்தம மதத்துண்மையை நன்கு விளக்குவதாய் விளம்பரப்படுத்தப்பட வேண்டுமென் றெண்ணின அசோகர், அதற்காக வேறு மதபோதகர்களை ஏற்படுத்தினர். இவர்களுக்கு, மகாமாத்திரர் என்பது பட்டப்பெயர். தர்ம நீதி நெறியாளராகிய இவர்கள் ஆங்காங்குச்சென்று மேற்பார்த்து, மேற்படி கூட்டத்தினை நாட்டம் வாட்டமின்றி விளங்கவைத்தார்கள். இவர்களுக்கு அசோகர் தமது மதானுபவ விசேஷத்தை மெத்த விரிவாய் விளக்கித் தெரிவித்திருந்தார். இவர்கள் மகததேசத்துக்குள்ளன்றி அதற்கடுத்த நேசதேசங்களிலும் தம்மதவுண்மையை விளக்கினார்கள். இவர்கள் வெகு ஜனநன்மையையும் சேமத்தையும் நாடுவதன்றி, முக்கியமாய் ஏழைகளையும் கிழவர்களையும் கவனித்து அவர்களுக்கு அநியாயச் சிறைவாசம், கசையடி

---

* மாண்டார்—செத்தார்.

† மாண்டார்—மாட்சிமைப்பட்டார்.

முதலிய கொடுமைகளில்லாமல் பாதுகாக்கவேண்டு மென்றும், குற்றவாளி மூத்துத் தள்ளாமையிருந்திருந்தாலும் குடும்பபாரஞ் சுமந்திருந்தாலும், வேறுவிசனத்தில் ஆழ்ந்திருந்தாலும் அவனுக்கு விதித்துள்ள தண்டனையை, அடியோடு தள்ளிவிடலாம் என்றும் அசோகர் கட்டளையிட்டிருந்தார். இன்னும் இவர்களுக்கு அவர், பாடலிபுத்திரத்தும் பிறபட்டணத்துமுள்ள இராஜகுடும்பத்துப் பெண்களாகிய தமது சகோதரர் மனைவிமாரையும் தங்கைதமக்கைமாரையும் பிறபெண்களையும் இவர்கள் கவனித்துத் தமது மததர்ம விசேடத்தை அவர்களுக்கு விளக்கவேண்டு மென்றும் பௌத்ததர்ம நீதிநெறியில் நடந்து ஐய மிட்டுண்பவர்களை அதிசாக்கிரதையாய்ப் பாதுகாக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டு அனுப்பினர்.

இன்னும் அவர், இந்தத் தர்ம மகா மாத்திரர்களோடு சில உயர்தரவுத்தியோகஸ்தர்களையுங் கூட்டி ஒரு பெருஞ் சபை சேர்த்திருந்தார். அந்தச் சபையார், அரசனும் இராணிகளும் அளித்த மதாபிமானப்பரிசுகளைத் தக்கபடி விநியோகிக்கும் அதிகாரம் பெற்றிருந்தார்கள். இதற்காக ஒரு விசேஷமான சிலாசாஸனம் (The Queen's Edict) இராணி கற்பதிவு என்ற பெயரோடு மேற்படி சபையார்க்கனுசரணையாகப் பதிந்து நாட்டப்பட்டிருக்கிறது.

கற்பதிவுகளெல்லாம் (Edicts) பௌத்த தர்ம நீதிநெறிகளையும் அதில் அரசர்க்குள்ள அபிமானத்தையும் சுருக்கி வெளியிடுகின்றன. அந்தச் சுருக்கங்களை ஒன்று சேர்த்தால், மேற்படி தர்ம மார்க்கச் சட்டங்களில் முக்கியமானவை கீழ்க்குறித்தபடி வெளியாகும் :-

மாந்தரனைவரையும் மன்னர் தம்மக்களாக மதித்திருக்கின்றார். அதற்குத் தக்கபடி அவர்களும் அவர் விஷயத்தில் பெற்றோர்க்கடங்கி நடக்கும் பிள்ளைகள்போற் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். அவரும் அவர்களைத் தந்தைபோற் பாதுகாப்பார். ஒவ்வொரு மாணவனும் மனமடக்கும் மகத்தான புண்ணியத்தைக் கண்ணியமாய் வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிறான். இதற்கடையாளமாக, அவன் அகச்சுத்தம், நன்றிமறவாமை, பெற்றோரைப்போற்றல் முதலிய நற்குணங்களைப் பேணவேண்டும்; முன்கோபம், கொடுமை, பின்கோபம், அகந்தை, பொறாமை முதலிய தீக்குணங்களை அகற்றவேண்டும். அடிக்கடி அவன் தன்னைத்தானறிதல் என்னும் சால்புடைமையிற் பழகி, உண்மையாளனாய் விளங்கவேண்டும். 'தன்னுயிர்போல் மன்னுயிர்' என்ற தர்மத்தை ஒவ்வொருவனும் தவறாமல் அநுஷ்டிக்கவேண்டும். ஜீவராசிகள் யாவும் ஒன்றேயாகும். அவைகளில் உயர்வு தாழ்வுகிடையா. எல்லாம் பரிசுத்தமானவைகளே என்ற உண்மையை எல்லாரும் உணரவேண்டும். அவைகளை அன்போடும் அருளோடும் நோக்கவேண்டும். அவைகளுக்குற்ற துன்பம் தனக்குற்ற துன்பமாக மதித்து அதை ஒவ்வொருவனும் மாற்ற முயலவேண்டும். தாய் தந்தையர்க்கடங்கி நடத்தல் அதிக முக்கியமான நீதி. 'அன்னையும் பிதாவுமுன்னறி தெய்வம்' 'தந்தைதாய்ப்பேண்' என்பவைகள் வேதவாக்கியங்கள். 'மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்' என்றபடி வயதின் முதியோரை இளையோர் மதித்துப்பெருமை செய்யவேண்டும். குருவுக்குச் சீடன் வணங்கி நடக்கவேண்டும். சுற்றத்தாரையும், அந்தணரையும், துறவிகளையும் அதிக விசுவாசமாய்ப்

பாதுகாக்கவேண்டும். வேலையாட்களையும் அடிமைகளையுங் கூட அன்பாயாதரிக்கவேண்டும். நேசர்க்கும், பிறர்க்கும் சுற்றத்தார்க்கும், துறவிகளுக்கும், அந்தணர்க்கும், 'இயல்வது கரவேல்' என்றபடி உள்ளதை ஒளியாமல் வழங்கவேண்டும். எல்லா வமிசத்தாரும் எல்லாக்குலத்தாரும் ஒரே நோக்கம் உள்ளவர்களாய் அகச்சுத்தத்தை விரும்பக்கடமைப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவரவர் மனமடங்கி வாழ்வதில் பிறரோடு சமத்துவமுற்றிருக்கிறார்கள். ஆகையால் தர்ம நீதிநெறியில் நடக்கும் ஒவ்வொருவனும் பிறனுடைய மத நம்பிக்கையை இழித்துரைக்க இடமில்லை. 'பழிப்பன பகரேல்' என்றபடி மத நம்பிக்கையிற் பிறனைப்பழிக்கும் தீக்குணத்தை ஒவ்வொருவனும் அறவே அகற்றவேண்டும்.

இராஜாங்க உத்தியோகஸ்தர்களும், தத்தம் அதிகாரக் கடமைகளைச் செலுத்தும்போது, அழுக்காறு, கொடுமை, அவசரம் முதலியவைகளை விலக்கி, விடாமுயற்சி, ஊக்கம், பரிதான விலக்கம் முதலிய நற்குணங்களைப் போற்றவேண்டுமென்றும், அப்படி அரசர் கட்டளையைத் தப்பி நடக்கிறவர்கள் அவருடைய தயைக்கும் பரசுகப்பேற்றுக்கும் அருகரல்லரென்றும் கற்பதிவுகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அப்படியே அவர், தாம் வென்ற கலிங்கநாட்டில் உத்தியோகஸ்தர்கள் தவறி நடந்ததற்காக அவர்களைத் தண்டித்திருக்கிறாராம்.

காட்டு மனிதர்களிடத்தும், முன்னொரு கற்பதிவிற் கண்டபடி, அவர் அன்பு செலுத்தியிருப்பதாகவும், கலிங்க நாட்டு வனசரர்களிடத்தில் அந்நாட்டு உத்தியோகஸ்தர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப்பற்றித் தாம் வெளியிட்டிருக்கிறபடியே அவர்கள் அன்பாய் நடந்துகொள்ளும்

படி செய்வரென்றும் கல்வெட்டிற் கண்டிருக்கின்றன. அதில் நாட்டு மனிதரிடத்தில் அரசர் அன்பு செலுத்தியிருப்பது போலவே காட்டுமனிதரிடத்தும் செலுத்துகிறாரென்றும், அவர்களும் அவர்க்கு மக்களென்றும், ஆகையால் உத்தியோகஸ்தர்கள் அதைக் கவனித்து அரசரைப் பெருமைப் படுத்தவேண்டுமென்றும், அவ் வனசரர்க்கு அவர்கள் அரசரெண்ணத்தை விளக்கிக் காட்டவேண்டு மென்றும், அவரிடத்தவர்கள் நன்மையேயன்றித் தீமையை எதிர் நோக்க இடமில்லை யென்றும், அவரை அவர்கள் நம்பி நடந்தால் அவர்களுக்குச் சித்தசமாதானமும் சுகோதயமும் பிராப்தியாகுமென்றும், அவர்கள், அரசர் நல்லெண்ணத்தையுந்தமது இகபரசுகத்தையும் தவறாமற் பெறவிரும்பினால், தர்ம நெறியிற் படர்ந்து, அரசமதமாகிய அருள் மதத்தை அநுசரித்துவாழவேண்டு மென்றும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இப்படிச் சீவகாருண்யப் பரிபாலிக்கும் ஆட்சியை மாட்சிபெறச் செய்துவரும் அசோகருடைய மடைப் பள்ளிமாந்தர், ஒருநாள் ஒன்றுகூடி, ‘இது என்ன? இது அதிசயமா யிருக்கிறதே! கற்பதிவுகளிலெல்லாம் தமது சொற்பதிவுகளால், உயிர்க்கொலை கூடாது; மன்னுயிரைக் கொல்வோன் தன்னுயிரை இகபரசுகத்துக்கு ஈடுபடுத்தாமல் பாடுபடுத்திக்கொல்வோனாவன். தன்னுயிர் தனக்கெப்படி இனிமையோ, அப்படிப் பிறர்க்கும் ஆகும் எனக்கொண்டு பிறரை மட்டுமன்றிப் பிற பிராணிகளையும் வருத்தாமலும் கொல்லாமலும் வாழ்வானே இகபரசுகவாழ்வில் வாழ்பவன் என்று பதிந்து வெளியிட்டு, இப்போது மன்பதைகளைத் தர்ம நீதிநெறியிற் செலுத்தும் நமதரசர், தமதாட்சிதொடங்கி எட்டாண்டுகள்காறும் இதைப்பற்றி ஒன்றையுமே

உயிர்க்கொலை செய்யக்கூடாது.

கவனியாமல், ஏராளமான மிருகபட்சிகளை வதைத்து அவைகளின் மாமிசங்களை உண்டு வாழ்ந்துவந்தார். ஒன்பதாமாண்டாட்சியிலிருந்து பதின்மூன்றாமாண்டாட்சிவரையுள்ள ஐந்து வருடகாலம் இவர் தினம் ஒன்றுக்கு மானொன்றும் மயிலிரண்டுமாகக் கொன்று தின்றுவந்தார். இப்போதிவர்க்கு எதிலும் பிரியம் இல்லையாம். அரண்மனையில் உயிர்க்கொலையே உதவாதாம். 'தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி, தின்னுயிர் நீக்கும் வினை' என்ற வேதவாக்கைப் பின்பற்றி ஒழுகி, 'தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின் யாரும், விலைப்பொருட்டா லூன்றருவாரில்' என்றபடி ஊரெங்கும் ஊன்விற்கும் வியாபாரத்தையே பேரில்லாமல் ஆடியோடு அகற்றிவிட்டுத்தாமும் காய் கனிகிழங்கிலைகளுண்ணும் சாகபக்ஷகாராய்ச் சர்வபரிசுத்தராய் விளங்குகிறாரே. இதுவன்றோ சர்வபரித்தியாகம். இதுவன்றோ, 'அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற, னுயிர்செகுத் துண்ணாமை நன்று' என்ற வேதவாக்கிலக்காகும் நன்னடக்கை. இதுவரையில் அரசாண்டுவாழ்ந்தாரில் இத்தகைய பரிசுத்தவான்களா யிருந்தார் யாவர்? அம்மம்ம, இப்படியில் இவர் புகழ் என்றும் அழியாததாகும்' என்று அதிசயித்துக்கொண்டாடினார்கள்.

அசோகருடைய பதினொன்றாமாண்டாட்சியில் அவருடைய பரிசனங்கள் ஒன்றுகூடி, நமதரசர் வேட்டையிலும் நாட்டமற்று விளங்குகிறாரே. யுத்தவெற்றிதான் உயிர்க்கொலைக்கிடமென்று கைவிட்டார். வேட்டைக்குச்சென்று காட்டுமிருக பட்சிகளைக்கொல்வதனால் இவர்க்கு வந்த நட்டமென்ன? மக்கள் உயிரைக்கொல்வதைத்தான் இவர் கூடாதென வெறுக்கிறாரென்றெண்ணினோம். காட்டிலிருந்துவந்து

வேட்டையில் நாட்டமில்லை

காட்டிற் புகுந்து மக்களுயிர்க்கும் பயிர்க்கும் இடையூறு செய்யும் மிருக பட்சிகளையும் கோறல் கூடாதென்கிறாரே; இது என்? வேட்டைக்குக் காட்டுக்குச் செல்வதற்கு ஈடாகத் தீர்த்த யாத்திரை செய்யப்போகிறாராமே. போகும் இடங்களிலெல்லாம் இயல்வது கரவாமல் பிச்சையிடப்போகிறாராம். ஏழைகளுக்கிரங்கி ஊணுடைகள் வழங்குவாராம். அவர்களுக்குப் பௌத்ததர்ம நீதிநெறியை விளக்கிக் காட்டிப் பிரசங்கஞ் செய்யப்போகிறாராம். அருட்பெருஞ்சோதி ஒளியை ஆங்காங்குச்செலுத்தி, இருட்கருங்கூட்டத்தை இரித்தோட்டுவாராம். இன்னும் இவர் என்னென்ன பழையனகழித்துப் புதியன புகுத்துவாரோ. யார் செய்தார் இத்தனை அரும் பெருங்காரியங்கள்? 'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர், செயற்கரிய செய்கலா தார்" என்ற பொய்யா மொழிக்கிலக்காய் இவரன்றி இதுவரையில் வாழ்ந்தார் யாவர்?' என்று வியந்து புகழ்ந்தார்கள்.

தம்முடைய பதின்மூன்றா மாண்டாட்சியில் ஊண் பொருட்டால் உயிர்க்கொலை கூடாதென ஒதுக்கின அசோகர் தமதரண்மனையிலும் நகரத்திலும், யாகாதிகளிலும் உயிர்க்கொலை உதவாதென ஒதுக்கினர். விடுமுறைத் திருநாட்களிலும் விருந்துகளிலும் கூட உயிர்க்கொலைகூடாதென உத்தர வளித்தார்.

உயிர்க்கொலை கூடாதென ஒதுக்குவதற்காக அவர் ஒரு புதுச்சட்டதிட்டம் எழுதி வெளியிட்டார். இது அவருடைய இருபத்தெட்டா மாண்டாட்சியில் விளம்பரமாயிற்று. இதில் அவர், நாற்காற் பிராணிகளில் எதையும், கோறல் கூடாதென்கிறார். அவைகளைக் காதறுத்தல், வாலறுத்தல்,

பிராணி ஹிம்சை கூடாது.

சூடுபோடல் முதலிய வகைகளையும் அடியோடு அகற்ற வேண்டுமென்கிறார். மீன்களையும் பிடித்துவதைத்துண்ணல் கூடாதாம். முக்கியமாய் ஓராண்டில் சிற்சில முக்கியமான தினங்களில் மீன்பிடித்தலே பாவம் எனத் தள்ளுகிறார். அதே தினங்களில் குதிரைக்கும் காளைக்கும் * கால்பிடித்தல் கூடாதென நீக்குகிறார். என்றென்றும் கோழிச்சண்டை விடுதல் கூடாதென்கிறார். இதனால் அவர்க்குச் சில்லறை உத்தியோகவேதனச் செலவு இரட்டித்தது. இதைச் சரியாய்ப் பின்பற்றி நடவாதவர்களுக்குத் தண்டனை விதிக்க நீதிபதிச்செலவுங் கிளைத்தது. இன்னும் இவர் மரண தண்டனையையும் விலக்கினார் என்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படி விலக்கியிருந்தாலும் இருக்கலாம். ஒரு கொலைக் கஞ்சி விடுத்தால், அக்கொலை செய்தோர், இன்னும் பல கொலை செய்யத் துணிவார்களாகையால், கொலைசெய்தாரைக் கொல்வதாகிய மரண தண்டனையைமட்டும், அவர் மாற்றுமற்கையாடினரென்று வேறு சில காரணகாரியங் காட்டிக் கூறுகிறார்கள். மரண தண்டனையடைந்தவர்களை அவர் காலத்தில், உடனே கொல்வதில்லை. அவர்களுக்கு மூன்று தினக் கெடுவுண்டு. அதற்குள் அவர் மனந்திரும்பிப்பாவ அறிக்கையிட்டுப் பரிசுத்தர்களாய்ச் சாவுக்கு ஆயத்தமாயிருக்கவேண்டுமாம்.

அசோகர், குடிகளுக்குள்ள குறைகளைத் தாமே நேரிற்கவனித்து விசாரித்துத் தீர்த்தாராம். எல்லார்க்குங் காட்சிக் கெளியராயிருந்து, அவரவர்கூறுங் குறைகளை அப்போதைக்கப்போது நிவர்த்தி செய்தாராம். இது தற்காலத்தனுபவத்திற்கு அசாத்தியமென்பது ஒரு சிலர் அபிப்

* கால்பிடித்தல் - (மங்கல வழக்கு).

காட்சிக் கெளியனாய் இருந்தார். குறை களை நீக்கினார்.

பிராயம். எதுவானாலும் குற்றங்களை அப்போதைக்கப்போது கவனித்து நாளையோட்டாமல் தீர்ப்பதே நீதியாகும். நாளையோட்டுவதால், குற்றவாளி பணக்காரனானால், பொருட்செலவால் நியாயவாதிகளை வைத்து வாதித்து, நியாயத்தைப்போதித்துக் குணவாளியாய்விடுகிறான். நாட்செலவால், குற்றவாளிக்குச் சித்தமிறுகி மனச்சாட்சிமாறித் தான் குற்றவாளியல்லவெனப் பொய்ச்சாட்சிகளால் எண்பித்துப்பொய் பேசத்துணிந்து விடுகிறான். நியாயவாதிகளை அதற்குடந்தையாயிருந்து, வேலியே பயிரை மேய்கிறபடி பொருளாசையால் பொய்வழக்குப் பேசத் துணிந்துவிடுகிறார்கள். ஆகையால் அசோகர் காலத்திருந்தபடி குற்றவாளிகளை அப்போதைக்கப்போது அரசனே நேரிலிருந்து விசாரித்துத் தீர்மானித்தல் சாலச்சிறந்ததாகும். அப்படியே இப்போதும் வழக்கத்தில் இருந்துவந்ததால், அது அசாத்தியம் என்று சிலர் எண்ணுகிறபடி எண்ண இடம் இராது. இப்படிக் குற்றங்குறைகளை அப்போதைக்கப்போது அசோகரே நேரிலிருந்து விசாரித்துத் தீர்மானித்தபடியை விளக்க விளம்பரம் ஒன்று வெகு ஜனங்களுக்கும் கீழ்குறித்தபடி வெளியிட்டிருக்கிறார்.

'நான் தீர்க்கும் வழக்குகளில் தப்புத்தவறுகள் கலந்திருக்குமாகையால் என் தீர்மானத்தில் எனக்கு மனநிறைவில்லை. எது எப்படியானாலும் நான் மட்டும் என்முழுமனத்தோடு குடிகளுடைய நன்மைக்காகப் பாடுபடுகிறேன். அதற்காகவே நான் அரசனாக ஏற்பட்டிருக்கிறேன். ஆகையால் என்கடனை நான் தவறாமல் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என் ஆட்சியிலடங்கிய குடிகளின் சந்தோஷக் காட்சியே எனக்கு மாட்சியாய் விளங்குகிறது. என்னு

டைய கடமையை நான் தவறாமற் செய்வதால் எனது குடிமக்கள் இகபரசுகங்களடைந்து இன்புற்றுவாழ்வார்கள்.'

உள்ளூரில் அவர் தம் குடிமக்களுக்குச்செய்த நன்மை ஒருவாறு பலன்தந்ததென்றால் வெளியூரில் பௌத்தமதத் திண்மையை விளக்க அவர் செய்த நன்மை பலவிதத்திலும் பலன் தந்தது. யாரையும் அவர் இதத்திலும் மிதத்திலும் தம் வசப்படுத்தினார். வற்புறுத்தி எதையும் நிர்ப்பந்தமாய்ப் புகட்டினாரில்லை. அவர் தமக்குசிதமான மதம் பிறர்க்கும் உசிதமான தென்றெண்ணி மனநிறைவோடு பாடுபட்டாராகையால், முழு நம்பிக்கையோடு எதையுஞ் செய்தார். அதனால் எல்லாரும் அவர் மதத்தைச் சம்மதமாய்ப் பின்பற்றினார்கள். 'அரசனெவ்வழி அவ்வழிக்குடிகள்' என்ற மூதுரை அவரிடத்திற் பலித்ததென்பது, பின்வருகிற அவருடைய அறிக்கையால் விளங்கும்:—

“எத்தகைய அற்புத காரியங்கள் நான் செய்திருக்றேனோ அவைகளை என்குடிமக்களும் பின்பற்றி அப்படியே செய்திருக்கிறார்கள். அதனால் அருள்மதமாகிய பௌத்த மதவளர்ச்சி ஆரம்பித்திருக்கிறது. அதுவிரைவில் அதிகரித்து, மாதாபிதாவணக்கம், குருவணக்கம், மூத்தோர்க்கடக்கம், அந்தணர்க்கன்பு, ஆதுலர்க்கன்பு, ஏழைகட்கிரக்கம், வேலையாட்களுக்கும் அடிமைகளுக்கும் அன்புமுதலிய பலன்களைப்பயக்கும் என்பதற்கையமில்லை.”

மேற்குறித்த விஷயங்கள் உண்மையாம் என்பதற்குத் தற்போதைய அநுபவமும் ஒத்திருக்கிறது. அரசனுடைய நன்னடக்கை, அவனைச் சேர்ந்த மந்திரி பிரதானிச்சபையோர்களுடைய ஆட்சித்திறமை மத பரிபாலகராகிய குருமார்களுடைய வைராக்கியமாகிய மூன்றும் ஒத்திருந்தால்,

குடிகளுக்கு நன்மையுண்டாகு மென்பதற்கும், அவர்கள் அரசற் குகந்தவர்களா யிருப்பார்களென்பதற்கும் ஐய மின்று. அசோகர் தம்மதத்தைப்பரவச் செய்ததில் குடிகளு டைய சம்மதத்தைத் தழுவினரேயன்றிப் பௌத்த குரு மார்களை மெத்தப்பொருட்படுத்தினரில்லை யென்பதற்குப் பாப்ராக்கற்பதிவு ஒன்றுமே சான்றுபகரும். அதையவர் பதிந்து, அதிற்றமது பௌத்த மதாபிமானத்தை வெளிப் படுத்தி, அம்மதக்குருமார்களுக்கு அறிக்கையிட்டு, எங்கோ வெகுதூரத்தில் ஒரு குன்றுச்சியிலிருந்த பௌத்தமடத்தில் நாட்டினர். அதைப் பற்றி ஜனங்களுக்கு ஒன்றுந்தெரி யாது. மற்றைக்கல்வெட்டுகள் அப்படியல்ல. வெகுஜன சம்மதமான விஷயங்களும், குடும்பக் கூட்டங்களுக்கு அனு பவமான நன்மைகளும் அவைகளிற் பதிந்திருந்ததனால், அவைகளை எல்லாரும் ஒப்பியேற்றுக் கொண்டார்கள்.

அசோகர், தமது ஆட்சிக் கூட்டத்தார், உயிர்க் கொலையை மறுத்து வெளியிட்ட சட்டதிட்டங்களைக்கண்டு களித்தாரேனும், அவைகளை வற்புறுத்தி அனுசரணைக்குக் கொண்டுவர அவர்க்கு இஷ்டமில்லை. இயற்கையாகவே ஜனங்கள் எண்ணித்துணிந்து, ஒரு விஷயத்தை ஒதுக்கி விடுவதே உத்தமமாகு மன்றிச் சட்டதிட்டங்களுக்குப் பயந்து அவர்கள் அங்ஙனஞ்செய்தல் அநுசிதமென்பது அவருடைய கோட்பாடு.

அசோகருடைய எட்டாங்கற்பதிவு அவருடையபதி ஞேராமாண்டாட்சியிற் பொறிக்கப்பட்டது. அதில் அவர், வேட்டைக்கு மாறாகத் தீர்த்தயாத்திரை செய்தாரென்று கண்டிருக்கிறது. அவர் வேட்டையாடிச் சென்றபோது அவருடன் கொண்டுபோன ஆயுதபரிவாரங்களைப் பற்றியும்

அசோகர் வேட்டைக்குப் பதிலாகத் தீர்த்தயாத்திரை செய்தார்

அதிற்கண்டிருக்கிறது. இதுபோலவே இவருடைய பாட்டனார் சந்திரகுப்தமகாராஜர் வேட்டைக்குச் சென்றபோதுங் கொண்டுசென்றாரென்று மகாஸ்தனிஸ்தூதர் வர்ணித்திருக்கிறார். அசோகர் வேட்டைக்குச்சென்ற விதம் பின்வருமாறு காண்க:—

அரசன் அரண்மனையை விட்டு அப்பாற் சென்ற மற்றொரு காரணம் யாகஞ்செய்யும்பொருட்டாம். இன்னொன்று வேட்டைக்குச்சென்றதாகும். அப்போது அவன் வேட்டையுடை உடுத்திச் சுறுசுறுப்பாய்த்தோன்றுவான். வீரப்பெண்கள் அவனைச் சூழ்ந்திருப்பார்கள். அதற்கப்பால் ஈட்டி வேட்டைக்காரர் சூழ்ந்திருப்பார்கள். அதற்கப்பால் கயிறுசூழ்ந்து, அவர்கள் போம்வழிக்கோர் எல்லையைக்குறிக்கும். அந்தக் கயிற்றெல்லையைக்கடந்து, உள் வந்தகப்பட்டுக்கொண்டபிராணி மனிதப் பிராணியாயிருந்தாலும் சாகவேண்டியதுதான். ஆண்பெண் என்கிற வேறுபாடில்லை. யாராகிலும் இறக்கவேண்டியதே. தம்பட்டமும் எக்காளமும் முழக்குமாந்தர் முன்செல்லுவார்கள். நடுவில் அரசனிருந்து அம்பெய்வான். அவன் பக்கத்தில் இரண்டுமூன்று வீரப்பெணகள் ஆயுதபாணிகளாய் நிற்பார்கள். அரசன் வெளியிடத்திலிருநது வேட்டமாடுகையில் ஆனைமேலிருப்பான். பெண்டுகளிற் சிலர் இரதங்களிலிருப்பார்கள். சிலர் குதிரைமேலிருப்பார்கள். இன்னுஞ் சிலர் யானைமேலிருப்பார்கள். அவர்கள் கைகளிலும் யுத்தாயுதங்கள்போலப் பலவித ஆயுதங்களும் பொருந்தியிருக்கும்.

இப்படிப்பட்ட வேட்டைச்செலவிற்குஈடாக அசோகர் தீர்த்தயாத்திரை செய்து, ஐயமிட்டு, மதவளர்ச்சிக்கு வேண்டிய பிரசங்கஞ்செய்து காலங்கழித்தமை கொண்டாடத்தகுந்ததாம்.

புத்த சாத்திரம்

அதிகாரம்-4.

(மதம்)

ஆரியரில் சாக்கியர் என்ற வகுப்பார் ஏறக்குறைய கிறிஸ்து பிறக்க 600 ஆண்டுகளுக்கு முந்தி வட இந்தியாவில் நிலைத்திருந்தார்கள். அவர்கள் நான்கு வருணங்களுள் இரண்டாவதாகிய க்ஷத்திரியவருணத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் வசித்த இடம் இமாசலத்தின் அடிவாரத்திலுள்ளது. இப்போததற்கு நேபாளத்தரை என்று பெயர் வழங்குகிறது. அவர்களுடைய சிற்றரசுக்கு முக்கியபட்டணம் கபிலவாஸ்து. அது உரோகிணி நதிக்கரையில் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். அதைப்பற்றிய அடையாளம் இப்போது ஒன்றுந்தெரியவேயில்லை. அது நமது பரிசுத்த தலமாகிய காசிக்கு வடகிழக்கில் நூறுமைல் தூரத்திலிருந்ததாகத் தெரிகிறது. சாக்கியர்கள் தந்நாட்டைத் தன்னரசு நாடாக்கிச் சுயேச்சைபெற்றிருந்தார்கள். கல்விகேள்விகளில் வல்ல பலபெரியோர்கள் கூடி அரசு செலுத்தினார்கள். அரசனுக்குத் தனியதிகாரங் கிடையாது. வருஷாவருஷம் யாராவதொருவனை அரசனாக நியமிப்பார்கள். இப்படியிருந்தவர்களுக்கு, அவர்களைச் சூழ இருந்த மகதராஜ்யம், கோசலராஜ்யம், மங்கோலியக்கூட்டம் முதலியவைகளால் அபாயமுண்டாதற் கிடமிருந்தது. மேற்குறித்த தன்னரசாட்சிக் கூட்டத்துப் பெரியோர்களில் சுத்தோதனன் என்பவன் ஒருவன் இருந்தான். சாக்கியர்களுக்கு அதிசமீபத்தில் உரோகிணி நதியின் அக்கரையில் கோலியர் என்ற வகுப்பார் இவர்களைப்போலவே குடியரசாட்சிக்குட்பட்டு நிலைத்திருந்தார்கள். இவ்விருவகுப்பாரும் இணக்கமாகவே வாழ்ந்துவந்தனர்.

ஆகையால் இவர்களுக்குள் கொள்வினை * கொடுவினைச் சம்பந்தம் உண்டாயிருந்தது. இப்போது கபிலவாஸ்துவில் அரசனுயேற்பட்டிருந்த சுத்தோதனன், கோலியவரசன் குமாரத்திக ளிருவரை மணந்தான். இதனால் இருவகுப்புகளும் இணைந்து பலப்பட்டன. பல்லாண்டுகளாக, இரு மனைவியரும் வயிறுவாய்க்காமல் மலடிகளாயிருந்தனர். கடைசியாகத் தனது நாற்பத்தைந்தாவது வயதில் மூத்த மனைவியாகிய மாயாதேவி கருவுற்றாள். இக்கருவிற்பிள்ளை ஆண்பிள்ளையாய்ப் பிறந்து பட்டங்கட்டியாளும் என்று பலரும்எதிர்பார்த்திருந்தார்கள். அக்காலத்துவழக்கப்படி மாயாதேவியை அவளுடைய தாய்வீட்டார் பிள்ளைப்பேற்றுக்காக அழைத்துச் சென்றார்கள். இடைவழியில் உலம்பினிவனத்தில், எல்லாரும் விரும்பியிருந்தபடியே மாயாதேவி ஓர் ஆண்மகவை ஈன்றாள். இம்மகவே பிறகு ஜகத்பிரசித்தரான கௌதமசாக்கிய புத்தமுனிவராய் விளங்கிற்று.

நெடுநாள் பிள்ளையில்லாதிருந்து பிறந்ததனால், ஊரெங்கும் உற்சவ மாயிருந்தது.

"அரசன் பெருவிழா வாகுக என்றான்;
சாலைக ளெங்குந் தண்ணீர் தெளித்துக்
கோல மிட்டுச் சீலமாய் வைத்தனர்.
தெருக்களிற் பன்னீர் தெளித்து வைத்தனர்.
மரங்களிற் றீபச் சரங்களுங் கொடிகளும்
மாட்டியிருந்தன. ஈட்டியுங் கத்தியும்
நீட்டியாட்டிக் காட்டும் வித்தையும்,
மண்கட்டிவித்தையுங் கண்கட்டி வித்தையும்,

---

* கொடு + வினை = (வினைத்தொகை) பெண்கொடுக்குங் காரியம்.

கயிற்றிற்றெருங்குங் காரடி வித்தையும்,
கயிற்றி னடக்குங் காலடி வித்தையும்,
மேலாடை காட்டி மினுக்கிக் குலுக்கும்
நுலா டிடையார் நொடிக்குங் கூத்தும்,
கரடித் தோலுங் கடமான் தோலும்
போர்த்தாடு வார்தம் புதுக்கூத் தாட்டும்,
புலிக்கூத் தாட்டும், புதுப்புன லாட்டும்,
மல்ல யுத்தமும், மாண்பறை முழக்கும்
எங்கு நிறைந்தன, எண்ணிறந் தேறின.
அங்கங்கு மாந்தர் அதிசயங் காணக்
கூட்டங் கூட்டமாக் கூடி யிருந்தனர்;
அதிசயங் கண்டார் அகல்வாய ராகி
மற்றதை மூட மறந்து நின்றனர்.

(அதா அன்று)

வணிக மாக்கள் வரிசை கொணர்ந்தனர்;
தட்டிலும் வட்டில் தன்னிலும் பொன்னினும்
தங்கத்திற் செய்த தாம்பாளத்திலும்,
சால்வையும், போர்வைச் சரிகையும், அங்கியும்,
முத்து மாலையும். முகத்தை மூடும்
பட்டுச் சல்லாவும், மட்டில் மணங்கமழ்
சந்தனக் குறடும், சவரமும் பீலியும்,
நந்த வனத்து நறுமலர் மாலையும்
கொண்டு வந்து கொடுத்து மகிழ்ந்தனர்.
சர்வார்த்த சித்தன் சால்புடன் வாழ்க (அவனைக்)
பெற்றோர் வாழ்க உற்றோர் வாழ்க
மற்றோர் வாழ்க வாழ்க வென்று
வாழ்த்திப் புகழ்ந்தனர். மற்றோர்
கூட்டமாய் வந்து குதுகலித் தனரே."

அரசன் பெரிய திருவிழா நடக்கட்டும் என்றான். குடிகள் பெரு வீதிகளிலெங்குந் தண்ணீர் தெளித்துக்கோல

மிட்டு அழகு செய்தார்கள்; சிறு வீதிகளில் அதனுடன் பன்னீர் தெளித்தார்கள். மரங்களிற் கொடிகள் பறந்தன. சரவிளக்குகள் மாட்டித்தொங்கின. ஈட்டியும் கத்தியும் இருகையிற் பிடித்து ஏககாலத்தில் நீட்டியாட்டிக்காட்டும் வித்தை ஒருபால், மண்ணாங்கட்டியைச் சர்க்கரையாக்கிக் காட்டும் வித்தை ஒரு புறம், பார்ப்பார் கண்களை மயக்கி (மாங்கொட்டை) செய்யும் மாயவித்தை ஒருபக்கம், கயிற்றிற்றொங்கிக் கரணம்போடும் வித்தை ஒரு சார், கயிற்றிலேறித் தவறாமல் நடக்கும் காலடிவித்தை ஒரு தலை, மேலாடையாற் கண்கவருவித்து, பேணிமினுக்கி, இடைதுவள ஒயிலாய் நடந்து கூத்தியராடிக் காட்டும் வித்தை ஒரு திசை, காடித் தோலாலும் கடமான்தோலாலுந் தம்மை இன்னாரெனக் காட்டாது மூடியாடிக் காட்டும் புதுவித்தை ஒரு புடை, புதுவெள்ளத்திற் குளித்து நீந்தி விளையாடிக்காட்டும் வித்தை ஒரு ஞாங்கர், மற்போர் வித்தை ஒரு திசை, எங்கெங்கும் பறையோசைக்கிடையில் நிரம்பி அளவுக்கு மிஞ்சியிருந்தன. அங்கங்கு மாந்தர் அதிசயம் பார்க்கக் கூட்டங் கூட்டமாய் வந்து கூடியிருந்தார்கள். வேடிக்கைப் பார்ப்பார் பார்த்தகண் பார்த்தபடி அங்கு வைத்த கண்ணை வாங்காது நின்றதனால் அதிசயத்தால் திறந்த வாயை மூட மறந்தார்கள்.

பெரும்பொருட் செல்வர்களாகிய வணிகர் வரிசை கொண்டுவந்தனர். பொற்றட்டிலும் பொன்வட்டிலிலும் தங்கத்தாம்பாளத்திலும் சால்வையும், சரிகைப்போர்வையும், முத்தங்கியும் முத்துமாலையும், முகமூடும்பட்டுச் சல்லாவும் (குழந்தைக்குத் தங்கச் சரிகைக்குல்லாவும்), அதிகவாசனை வீசும் சந்தனக்கட்டையும், சாமரையும், மயிற்பீலி

யும், நந்தவனத்து நறுமலர்களிற் கட்டிய பூமாலையும் பிறவும் அவர்கள் வைத்துச் சந்தோஷங்கொண்டாடினார்கள். மற்றவர்கள் யாவரும் வந்து, 'சர்வார்த்த - சித்தன் சர்வமங்களார்த்த சித்தனுப் வாழக்கடவன். சித்தார்த்தன் சிறப்புடன் வாழ்க. அவனைப் பெற்றோர் வாழ்க. உற்றோர் வாழ்க. மற்றோர் வாழ்க; வாழ்க.' என்று வாழ்த்திக் கூட்டமாய் நின்று சந்தோஷமாய்ப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

உடனே களிப்பு, சுளிப்பாகுங் காரணமுண்டாயிற்று. தாயையும் பிள்ளையையுந் திருப்பிக் கபிலவாஸ்துவுக்குக் கொண்டுவந்தார்கள். ஏழாநாட் பகலில் மாயாதேவி மாயமாய் இறந்தாள். இதுதான் மானிடவாழ்க்கையின் இயல்பு.

"உறும்பிணி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யுறாமல்
ஆன்றோ னவ்வழித் தோன்றின னாதலின்
ஈன்றோ ளேழ்நா ளின்னுயிர் வைத்தாள்"

என்று முன்னோரும் இச்சரித்திரத்தைக் குறிப்பிட்டார்கள். 'கெருன் ளுளனொருவன் இன்றில்லை யென்னும், பெருமையுடைத்திவ் வுலகு' மாயாதேவியின் தங்கையும் இளையவிராணியுமாகிய கௌதமி என்பாள், பிள்ளையை வளர்க்குங் கடமையை ஏற்றுக்கொண்டாள்.

பிள்ளைக்குச் செவிலித்தாயாகிய சிமந்தனியென்பாள் அதன் கட்டழகைக் கண்டு, 'ஆஹா; இந்தப் பிள்ளையின் அழகே அழகு; அதிர்ஷ்டந்தான் இல்லை. பிறந்ததும் இது தாயை வாயிற்போட்டுக்கொண்டது. ஆனாலும் இதற்கொன்றும் குறைவில்லை. இதற்குப்பெயர் சித்தார்த்தன்

என்பது சரிதான். இதனால் எல்லாம் நன்மையாகவே முடியும். இதன் கண்ணழகும் வாயழகும் காலழகும் கையழகும் கண்ணில் மையழகும் என் கண்ணைக்கவர்கின்றன. இது, காலத்தில் எல்லாரையுந் தன் வசப்படுத்துமென்பதற் கையமில்லை' என்று வியந்துகொண்டாடினாள்.

குழந்தை வளர்ந்து இளவரசனானபோது கௌதமன் என்ற பெயரே வழங்கிற்று. இது, குடிப்பெயர். மற்றைப் பெயரெல்லாம் செல்வப்பெயரும் காரணப்பெயருமாம். இவ்விளவரசர், தமக்குக் கடிமணப்பருவம் வந்தபோது கோலியநாட்டை ஆண்டுகொண்டிருந்த தமது மாமன்மகளாகிய யசோதரையை மணந்தார். இவள் இராகுலனைப் பெற்றதனால், இராகுலமாதாவென்றும் இவளுக்கொரு காரணப் பெயருண்டு.

ஒருநாள் கௌதமர், சிலகாட்சிகளைக் கண்டு, 'ஆஹா! நமது தந்தையார் நம்மை இத்தனை சீருஞ்சிறப்புமாக வைத்திருந்தும் நமக்குமட்டும் இந்தச் செல்வத்திற் சிறிதும் சிந்தையில்லையல்லவா! இது நமக்கே விந்தையாயிருக்கிறது. விசனமென்பதே இன்னதென்றுணராத நமக்குச் சந்தோஷம் தலைகாட்டேன் என்கிறதே! இப்படியும் இருக்குமா! இதற்குத் தக்கபடியே இப்போது நாம்கண்ட காட்சிகளும் பொருந்தியிருக்கின்றன. முதலிற்கிழவன் தோன்றுவானேன்? பிறகு அவனே நோயாளியாய்க் காண்பதேன்? உடனே அவன் பிணமாய்க் கிடப்பானேன்? அடுத்தபடியில் அவனே துறவியாய்த் திகழ்வானேன்? இப்போது நமக்கு வயது இருபத்தொன்பது ஆகிறது. இதுவரையிலும் இவ்வுலக சுகம் நமக்குப் பிடிக்கவேயில்லை. மனைவி கருவுற்றிருந்தாலும் என்ன அவளைக்காக்க நமது பிதா முதலியோர்

இருக்கையில் நமக்கேன் கவலை? நாம் கண்ட காட்சிகளினுண்மையை நமது பாங்கனைக் கேட்போம்; என்று தீர்மானித்துக்கொண்டார்.

உடனே அவர் தமது பாங்கன், உதாயியைக்கண்டு, தான்கண்ட காட்சிகளைச்சொல்லி, சீக்கிரத்தில் மூப்புவருமென்றும், மூப்பில் வியாதி தொடருமென்றும், வியாதியை மரணம் பின்பற்றுமென்றும், ஆகையால் துறந்துசெல்வதே சிறந்ததென்றும், அவைகளினுண்மையைத் தாம் தெரிந்துகொண்டபடி அவனும் தெரிவிக்கக்கேட்டு, "நரைவருமென்றஞ்சி நல்வினை யாளர் குழவி யிடத்தே துறந்தார்" என்றபடி, இல்வாழ்க்கையைவிட்டுத் துறவியாகும் நாளை எதிர்பார்த்திருந்தார்.

அதற்குள், கருவுற்றிருந்த இவர் மனைவி, யசோதரை ஓர் ஆண்மகவீன்றாள். அவன் பெயர் இராகுலன். இந்தச் சேதி செவிக்கெட்டினபோது சந்தோஷப்படுவதற்கு மாறாக இவர் விசனப்பட்டு, "பெண்சாதி பெருவிலங்கு, பிள்ளை கடையாணி" என்றபடி 'இஃதொரு புதுக்கட்டு, இதை நான் அறுக்காவிட்டால் இக்கட்டாய் முடியும்' என்று எண்ணிக்கொண்டார். உடனே அந்தப்புரஞ்சென்று அங்குள்ள களியாட்டு முதலியவைகளைக்கண்ட இவர், யார் கண்ணிலும் அகப்படாமல் மறைவாயிருந்து, கொண்டாட்டத்தைக் கவனித்துக்கொண்டிருந்தார். அங்கொரு பெண், இவருடைய சிற்றப்பன் மகள்

'இத்தகை யரும்பெற லின்பக் குழவியை
ஈன்ற தந்தை இன்பம் பெறுக
பெற்ற தாயும் பெறுநல மடைக
கணவனைப் பெறூஉங் கன்னிகை
தானுமின்புற்றுச் சங்கடந் தீர்கவே.'

என்று பாடினாள். இதைக்கேட்டிவர், 'இதிலும் நமக்கொரு நற்குறி காட்டுகிறது. இப்போது இது நம்மை விட்டோட்டுகிறது. இதிற்குறித்த இன்பம் இவ்வுலக இன்பத்தைக் குறித்ததானாலும், நமக்கிது நிர்வாண இன்பத்தையே நினைப்பூட்டுகிறது. ஆகையால் இதைப்பாடினாள் நமக்கு நல்லின்பத்தைத் தேடினாளாக வேண்டும். இவளே நமக்குக் குரு. இவளுக்குக் காணிக்கை தரவேண்டும்' என்றெண்ணித் தமது முத்தாரத்தைக் கழற்றிக்கொடுத்தார். அதை அவள் அதிசயித்து வாங்கினாள்.

அதற்குப் பிறகு இவர் அங்குத் தாழ்த்து நிற்கவில்லை. அன்றிரவே துறந்து செல்லத் துணிந்தார். ஆனாலும் கடைமுறையாகத் தமது மனைவியையும் மைந்தனையுங்கண்டு செல்லவேண்டுமென்றெண்ணி அனையிரவில் யசோதரை கருவுயிர்த்திருந்த அறைக்குள் நுழைந்து, அவளையும் அவளுக்குப்பக்கத்திற் கிடந்த குழந்தையையும் நன்றாய் உற்றுக் கடைசிப்பார்வை பார்த்தார். "கடந்தோர்களும் கடப்பரோ மக்கண்மேற் காதல்?" என்றபடி, இவர்க்குள் எழுந்த பிள்ளையாசையை அடக்கி ஒடுக்கி நசுக்கி அப்பாலகன்றார். இவருடன் குதிரைப்பாகன் சன்னனென்பான் தொடர்ந்து சென்றான். மறுநாட்காலைக்குள் நெடுந்தூரம் சென்ற இவர், சன்னனிடத்தில் தாமணிந்திருந்த நகைகளையும், ஏறிச் சென்ற குதிரையையும் திருப்பிக்கொடுத்தனுப்பிவிட்டார். தமது நீண்ட தலைமயிரை வாளால் வெட்டி எறிந்தார். தாமணிந்திருந்த இராஜவுடையை ஓரேழைக்குக் கொடுத்துவிட்டு, அதற்குமாறாக அவனுடைய கந்தையை வாங்கிக் கட்டிக்கொண்டார்

"ஊரெல்லாம் அட்டசோறு நம்மதே
உவரியீன்ற
பாரெலாம் பாயல், கோவணம் பரிக்கு மாடை"

என்றபடி, எல்லாவற்றையும் ஒழித்துவிட்டுக் கந்தைகட்டிக் தரையிற்படுத்துப் பிச்சைபுக்குண்ணத் துணிந்து சென்றார். எங்கும் நிற்கவே இல்லை. விந்தியபர்வதத்துக்கடிவாரத்தில் பிம்பிசாரனுண்ட நாட்டைநோக்கிச் சென்றார். இடைவழியில் யாகாதிகளுக்காக ஓர் இடையன் ஓட்டிச்சென்ற பிம்பிசாரன் ஆட்டு மந்தையைப் பின்பற்றிச் சென்று, மேலதிகாரத்தில் அசோகர் ஆட்சியில் நாம் விவரித்தெழுதியுள்ள "அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்ற னுயிர் செகுத் துண்ணாமை நன்று" என்ற, வேதவாக்கியக்கருத்தின்படி பிம்பிசாரனோடு வாதித்து, யாகத்திற் பலியிடும் அந்த ஆடுகளையும் காத்தார். பிறகவர் அங்குத் தங்கி நிற்காமல், மலைபடிவாரக்குகையில் வசித்த, சாதுக்களோடு சேர்ந்து ஆரிய மதத்துண்மையைத் தெரிந்து கொண்டார். ஜீவகாருண்யமே முதற்படியாகவும், வைராக்கியமே இரண்டாம் படியாகவும், ஈசுவரபக்தியே மூன்றும் படியாகவும், பிரமஞானமே நான்காம்படியாகவும் உள்ள விஷயத்தைக் கேட்டுத் தெளிந்தார். அவற்றினும் ஜீவகாருண்யம் வைராக்கியம் இரண்டுமே இவர்க்குச் சம்மதமானவை. இவை இரண்டையும் சரியாய்ப் பின்பற்றுபவன் நிர்வாணதசையை அடைவான் என்பதே இவருடைய எண்ணம்.

இதற்காக இவர் அச்சாதுசங்கத்தைவிட்டு, ஐந்து சீடர்களோடு உருவேலங்காட்டுக்குச் சென்று உத்தமமுனிவராய் ஐந்தாண்டளவு பெரிய அருந்தவம் ஆற்றினர். வைராக்கியத்திற் பழுத்திருந்த இவர் சரீரம் வாடி வதங்கிக்

காற்றிற் பறந்துபோம் போலிருந்தது. இவருடைய தவவன்மை பூலோகத்திலெங்கும் பரவிற்று. ஆயினும் இவர் எண்ணினபடி நிர்வாணதசையை ஜீவகாருண்ய வைராக்கியங்களாலே அடையக்கூடும் என்கிற துணிவு இவர்க்குப் பிறக்கவில்லை. அதற்காகவே இவர் அருந்தவ மாற்றினர். யார்க்கும் எண்ணுவது சுலபம். எண்ணினபடி துணிவது தான் கஷ்டம். தவஞ்செய்திளைத்த படியால் ஒருநாள் இவர் தம்மைமறந்து அவசமாய் விழுந்துவிட்டார்; ஊணின்றி உடல்வற்றியதால் பலங்குறைந்து தவஞ்செய்யச் சத்தியற்றார்; ஆகையால் மறுபடியும் ஆகாரம் உட்கொள்ளத் துணிந்தார். அதுதெரிந்த இவருடைய மாணவர் ஐவரும் இவரைத் தனியே விட்டுக் காசிக்குப் போய்விட்டார்கள். தனித்திருந்த இவர் அவ்வனத்திற்றங்காமல் அப்பாலகன்று நெடுக நடந்து நைராஞ்சர நதிக்கரையிலுள்ள கிராமங்களிற்றிரிந்து, ஒருநாள் அதிகாலையில் அங்கொரு வீட்டிலிருந்த நாட்டுப் பெண் சுஜாதையென்பவள் அன்னமிடவுண்டு, அங்கே அருகிலிருந்ததோர் அரசமரத்தடியில் தியானத்தில் ஆழ்ந்தார். காலையில் உண்ட உணவோடிவர் அம்மரத்தடியில் அன்றெல்லாம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தபோதுதான் இவர் புத்தர் (ஞானி) ஆய், அதற்குமுந்தித் தாம் எண்ணியிருந்த எண்ணத்தில் துணிவுடையாராயினர்; "பாசவைராக்கியத்தால் தன்னடக்கமும், சீவகாருண்யத்தால் அருளும் பெற்று, இகபரசுகமெய்தலாம்" என்னும் புதுவழியைக் கண்டுபிடித்தார். "ஈசுவர பக்தியால் தன்னை வருத்தித் தவஞ்செய்து பிரமஞானத்தை அடைய எண்ணுவது வீண் சிரம காரணம்" என்பது இவருடைய துணிபு. பாசவைராக்கியத்தால் தன்னடக்கமும், சீவகாருண்ணியத்தால்

ஞானதயம்

அருளும் (Mercy) வளர்ந்தால், அவ்வளர்ச்சியின் முதிர்ச்சியே நிர்வாண தசை (Nirvana) யிற் செலுத்து மென்பது இவருடைய நவீனமத சித்தாந்தம்.

இதில் துவாதச நிதானங்கள் அடங்கியிருக்கின்றன. துவாதசம் என்றால் பன்னிரண்டு. அவை: பேதைமை, வினை, உணர்ச்சி, உடம்பு, புலன்கள், பரிசம், அனுபவம், ஆசை, பற்று, பிறப்பு, (பிணி, மூப்பு) சாக்காடு என்பனவாம். இவை ஒன்றுக்கொன்று காரணகாரிய சம்பந்தமாக வருகின்றன. பேதைமையால் வினைகளுண்டாகின்றன. வினைகளால் உணர்ச்சியுண்டாகிறது. உணர்ச்சியால் உடம்புண்டாகிறது. உடம்பால் புலன்களுண்டாகின்றன. புலன்களாற் பரிசம் பிறக்கிறது. பரிசத்தால் அனுபவம் தோன்றுகிறது. அனுபவத்தால், ஆசை தோன்றுகிறது. ஆசையால் பற்றுண்டாகிறது. பற்றால் பிறப்புண்டாகிறது. பிறப்பால் பிணி மூப்பும், அவைகளால் சாக்காடும் உண்டாகின்றன. பேதைமையே பிறவிக்கு வித்து. இதுபற்றியே "பேதைமை யென்னும் வித்திற் பிறந்து" என்றார் பிற ஆன்றோரும். பற்றே பிறப்புக்குக் காரணம் என்பதை, "அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந், தவாஅப் பிறப்பீனும் வித்து" என்றார் தெய்வப்புலவர். பற்றே, பிறப்பென்னும் மரத்தை வளர்க்கும் சாரம். அம்மரத்தின் பலன்களே பிணி மூப்பு சாக்காடென்னுந் துன்பங்கள். அம்மரத்துக்கு வித்தே பேதைமை. ஆகையால் பேதைமையென்னும் வித்தில்லாமல் அழித்தால், பிறப்பாகிய மரத்துக்கு முளையில்லாமல் ஒழியும். அம்மரத்தின் வேரே ஆசை. ஆசையாகிய வேரை அறுப்பதைவிட, பேதைமையாகிய வித்தை அழிப்பது விசேட ஞானமாகும். இந்த ஞானமே மெய்ஞ்

பேதைமையாள் ஆம் வித்தை நீக்கின்
பிறப்பென்னும் மரம் நீங்கும்

ஞானமாய் மேற்படி நவீனமத சித்தாந்தத்தில் அடங்கியிருக்கிறதென்க. ஆசையாகிய வேரைக் கொல்வதே புத்தர்க்கு முந்தியிருந்த ஆரிய மத சித்தாந்தம். இதன்படி, வேரைக் கொன்றால் வித்திருந்து முளைக்கிடப்பண்ணும் ஆகையால், இந்நவீனமதப் புத்தசித்தாந்தப்படி பேதைமையாகிய வித்தையழிப்பதே விசேஷமென்க. பேதைமை யென்பது அறியாமை. அறியாமை இருளையோட்டுவது ஞானவொளியாகும். இந்த ஞானத்தைக்கண்டு பிடிக்கவே சித்தார்த்தர் ஐந்து வருடகாலம் மெத்தவருந்தியுழைத்துக், கடைசியாக (போதி) அரசமரத்தடியிற் பொருந்தித் தம் மனந்திருந்தி, அதைக்கண்டு பிடித்தார். ஆகையால் இவர்க்கு ஞானி என்ற பொருள்படும் புத்தர் என்பது காரணப்பெயராயிற்று. இது பற்றியே இவரைக் கவுதமபுத்தரெனறும் ததாகதர் என்றும் ஜினர் என்றும் காரணப்பெயரிட்டழைப்பதுண்டு. இவர்க்கு ஞானம் பிறத்தற்கு இடமா யிருந்த அரசும் "புத்தபோதி விருக்ஷம்" என்று பௌத்தர்களுக்குச் சிறந்ததாயுள்ளது.

மேற்குறித்த துவாதச நிதானங்களை நிதானித்துணர்வதால் "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பதறிவு" என்னும் வேதத்தின் உண்மை வெளியாகும். இந்தச் செந்தமிழ்வேதச் சூத்திரத்தின் உண்மையையே சித்தார்த்தர் சிரமப்பட்டுக் கண்டு பிடித்தாரென்றுணர்க. பேதைமையே பிறப்புக்கு வித்து என்பதனால் தான், * செந்நாப்போதார், பிறப்பென்னும் பேதைமை என்றார். இந்தப் பேதைமையாகிய வித்தைப் பற்றென்னும் சாரமூட்டிவளர்ப்பதால் பிறப்பென்னும் மரமுளைத்து, ஓங்கிவளர்கிறது. அதனால் பிணி மூப்புச் சாக்காடென்னும்

துக்க காரண பலன்கள் பிராப்தியாகின்றன. உலகம் என்னும் அஞ்ஞானக்கோற்றமாகிய நிலத்தில் பேதைமை வித்தூன்றிப் பற்றுகிய சாரத்தால் முளைத்து, ஆசைவேருன்றிப் பிறவியாகிய மரமாய் ஓங்கிவளர்ந்து, பிணியரும்பி, மூப்புக் காய்த்து மரணம் பழுக்கின்றது. ஆகையால் இவ்வுலகத்திற் பிறக்கும் உயிர்களனைத்திற்கும் "பேறிளமை யின்பம் பிணி மூப்புச் சாக்காடிவ்வாறுங் கருவிலமைப்பு" என்ற திருக்குறளின்படி, கல்வி, செல்வப்பேறு, இளமை, சிற்றின்பம், பிணி, மூப்பு, சாக்காடென்னும் ஆறும் கருவுற்றபோதே தோன்றுகின்றனவாம். இவைகளனைத்தும் துக்க காரணங்களேயாகும். இதுபற்றியே சுகரும் தமது தாய்வயிற்றிலிருந்து உலகத்தில்வர அஞ்சிக் கர்ப்பத்திலேயே பன்னிரண்டு வருடகாலந் தாமதித்துவிட்டார் என்றும், கினியுருவாயிருந்த திலோத்தமை வயிற்றிலிருந்த இவர், பிறகு சர்வ சாக்கிரதையாய் இவ்வுலகிற் பிறந்து, பிள்ளைப்பூச்சிபோல் சிற்றின்பச்சேற்றில் ஒட்டாமல் காலங்கழித்தார் என்றுங் கூறுகின்றார்கள். ஆகையால் பிறப்பாகிய மரம் ஓங்கி வளரவிடுவதால் இவ்வுலகில் எல்லாம் துக்க காரணங்களாகவே முடியும். சித்தார்த்தர், தமது நவீன சித்தாந்தத்திலடங்கிய துவாதச நிதானங்களால் நிதானித்து, உலகம் துக்கமயமென்றும், அதற்குக் காரணம் பேதைமையென்றும், அதை அழித்துவிடுதல் கூடுமென்றும், அதை எப்படியழிப்பதென்றும் கண்டுபிடித்தார். இப்படிக் கண்ட இந்நான்குக்கும் சத்திய சதுஷ்டயம் என்று பெயர். இது இந்நவீன சித்தாந்தத்தின் உடல் போன்றது. இந்தச் சத்திய சதுஷ்டயத்தை (1) துக்கம், (2) துக்ககாரணம், (3) துக்கநிவாரணம், (4) துக்கநிவாரண மார்க்கம் என்பர் பௌத்தர்.

நான்காவதாகிய துக்கநிவாரண மார்க்கம் எட்டுவிதமாகக் கண்டார் சித்தார்த்தர். இவைகள், உண்மையுணர்ச்சி, உண்மையறிவு, உண்மை வாக்கு, உண்மை வினை, உண்மை வாழ்க்கை, உண்மை முயற்சி, உண்மை நினைவு, உண்மை ஆராய்ச்சி என்பனவாம். இவைகளில் உண்மையுணர்ச்சி, உண்மையறிவு, உண்மை நினைவு, உண்மையாராய்ச்சியாகிய நான்கும் மனத்தாலும், உண்மை வாக்கு, வாக்காலும், உண்மை வினை, உண்மை வாழ்க்கை, உண்மை முயற்சியாகிய மூன்றும் காயத்தாலும் ஆவனவாம். இவைகளை அஷ்டநிவாரணமென்பர் பௌத்தர்கள். புத்தர் கண்ட நவீன சித்தாந்தத்திற்குத் துவாதச நிதானங்களே அடிப்படையான கால்களாகவும், சத்தியசதுஷ்டயங்களே உடலாகவும், அஷ்டநிவாரணங்களே தலைமுதலிய அங்கங்களாகவும் விளங்கியிருக்கின்றன.

இந்த நவீன சித்தாந்தத்தை இவர் தன்னடக்கத்தாலும், தன்முயற்சியாலும் கண்டுபிடித்துத், "தாமின்புறுவ துலகின்புறக்கண்டு, காமுறுவர் கற்றுணர்ந்தார்" என்று, முன்பு நாம் அசோகர்க்குக் கூறியபடி எல்லார்க்கும் விளக்கிக்காட்ட வெளிப்பட்டார்; முதலில், தம்மை ஒன்றியாய் விட்டு ஓடிப்போன சீடர்களை, தாமே நாடித் தேடிக் காசிக்கு விரைந்தார். தலைமயிர் தீப்பற்றிக்கொண்டவன், அதை அணைக்க அதி அவசரமாய் எங்கேனுந்தேடி ஓடுவது போல, சீவகாருண்ய விசேடத்தால், தம்மைக் கைவிட்டோடினவராயினும், அவர்களை இவர் காசிக்கு மூன்றுமைல் தூரத்திலுள்ள மான்வனம் (Deer Park) என்னும் இடத்திற் கண்டு, "இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண, நன்னயஞ் செய்து விடல்" என்றபடி, தாம்கண்ட நவீன

மதசித்தாந்தத்தை நலம்பெற வுபதேசித்து, அவர்களை நல்வழிப்படுத்தினார். அவர்களும் பரிபக்குவச் சீடர்களாய், இவரோடு சேர்ந்து கொண்டார்கள். அதனால் மான்வனத்தில் ஒரு மகத்தான மடம் கட்டற்கிடமாயிற்று. பற்பல பணக்கார பவுத்தர்கள் ஒன்றுகூடி, அந்த மடம் என்றும் அழியாமலிருக்க மூல தனம் வழங்கினார்கள். பிறகு அசோகரும் அதற்கு மூல தனம் வழங்கினார். இந்த மான்வனத்தில் புத்தர், தமது நவீன மத சித்தாந்தத்தைப்பற்றி முதற் பிரசங்கம் செய்தார். ஆகையால், இந்த இடம் புத்தர்களுக்கு இன்றளவும், போதி (அரசமரம்) விருக்ஷம்போல அதிபரிசுத்தமானதா யிருக்கின்றது.

கௌதம புத்தர் எந்தக்காலத்திலும் தமக்கு முன்னிருந்த ஆரியமத சித்தாந்தத்தை இழித்துரைத்ததில்லை. தமது நவீன சித்தாந்தத்தைச் சீவகாருண்ய விசேடத்தால் உலகறியச் செய்யவேண்டுமென்று எண்ணிப்பிரசங்கித்தார். அன்றி, வேறுகூற இவர் வெளிவரவில்லை. இவருடைய சித்தாந்தம் பழைய வைதீகமத சித்தாந்தத்தின் வேறன்றென்பது மேலோர் துணிபு. இவர் விஷ்ணு அவதாரம் என்பர் சிலர். பௌத்தர்கள்மட்டும் இவரைப் புத்ததேவரவதார மென்கிறார்கள். கௌதமர் என்பது இவருடைய கோத்திரப்பெயர். ரிஸ் டேவிட்ஸ் என்னும் ஆங்கிலச் சரித்திர நூலாசிரியரும் இப்படியே கூறுகின்றார். பௌத்த மதத்தை நம்மவர்கள், அகப்புறமத மென்பார்களே யன்றிப் புறமதமென்றாவது புறப்புறமதமென்றாவது கூறமாட்டார்கள். ஆனாலும் நம்மவரிற் சிலர், கௌதமபுத்தரை நவீன

ஹிந்துமதம் >< புத்தமதம்

மதசித்தாந்தியென்று பழமைபாராட்டி வெறுப்பவரும் உளர். இம்மதத்திற் சேர்ந்த பிராமணரும் பிராமணராகவே இருக்கின்றனரன்றிக் கிறித்துவ மதத்திற் சேர்ந்த பிராமணரைப்போலச் சாதியை இழப்பதில்லை. ஆனாலும் நாம், இந்த அதிகாரத்தில் இதற்குமுன் விவகரித்தபடி, ஈசுவரபக்தியும் பிரமஞானாபிமானமும் இம்மதத்திற்கில்லையாகையால், இது பழைய இந்து மதத்திற்கு முற்றும் முரண்படுகிறது. இந்த மதத்தின் முக்கியாங்கமாயுள்ளது ஜீவகாருண்யம் ஆகையால், இதைச்சார்ந்தோர், தாமின்புறுவதை உலகின்புறச் செய்யவேண்டி மெத்தவைராக்கியத்தோடு இதைப் பலர்க்கும் விளம்பரப்படுத்தி; அவரை ஞானவான்களாக்க அசோகரைப்போலப் பாடுபடுகிறார்கள். பழைய வேதமதத்தில் இல்லாதது, இதில் இன்னொரு விசேடம். சாதிவேறுபாடு கிடையாது. "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யால்" என்று மேலோர் கூறியபடி, மக்களாய்ப் பிறந்தார் எல்லாரும் ஒரு சாதியார் என்பது இதன் சித்தாந்தம். "சாதியிரண்டொழிய வேறில்லை" என்றதும், "மக்கள் தேவர் நரக ருயர்திணை" என்றதூஉம், 'அச்செல்லாம் ஒன்றாய' என்றதூஉம் இதற்கு நிதரிசனமாதல் காண்க. இப்படி இம்மதத்தை விளம்பரப்படுத்திப் பிரசங்கஞ் செய்தலும் சாதிவேறுபாடு கருதாமையுமே இதற்குத் துணைக்கருவிகளாய் இதை உலகிற் பலவிடங்களிலும் பரப்பின. இவ் விருவிஷயங்களும் பழைய வைதீக மதத்திற் கிடையா. அம்மதத்திற்போல இதில் ஆண் பெண் என்ற வேற்றுமையு மில்லை. ஆடவரைப் போலவே மகளிரும் பிறப்பென்னும் பேதைமையைப் போக்கிச்சிறப்பென்னுஞ் செம்பொருள் காணலாமென்பது இதன்

துணிபு. இதில் தோட்டி யென்றும் தொண்டைமான் என்றும் இடபேதமுங் கிடையா. பழைய இந்துமதத்திலும் இம்முறை சிற்சில இடங்களிற் காணலாம். ஆயினும் பெரும்பாலும் இல்லை. அதில் சாதிவேறுபாடும், ஆண்பெண் வேறுபாடும் இடவேறுபாடும் எங்கும் நிரம்பியிருக்கின்றன. உயர் குலப்பிறப்பே ஞானவழியென்று சிலர் எண்ணியிருக்கின்றனர். 'மேற்பிறந்தாராயினுங் கல்லாதார், கீழ்ப்பிறந்துங் கற்றாரனைத்திலர்பாடு' என்பதை வேதவாக்கியமாகக் கொண்டு கல்லாதார் என்பதற்கு ஞானநூல் கல்லாதார் என்று பொருள் கொள்வதற்கு மாறாக, ஊனநூலாகிய உலகநூல் கல்லாதவர் என்று பொருள்கொண்டு, அவைகளைக் கற்று, அதனால் தாம் கற்றாரென்றும் மேற்குலத்தாரென்றுங் கருதி இறுமாந்து காலம்போக்கும் மாந்தர்கொள்கைக்குப் பழைய இந்துமத சித்தாந்தம் இடங் கொடுக்கின்றது. அத்தகைய கொள்கைக்கு இந்த ஞானமதமாகிய பௌத்தமதம் இடந்தருவதில்லை. இப்படியே மனிதருக்குள் சாதிவேற்றுமை இல்லாமைக்குக் குதம்பைச் சித்தர், "நீதிமானென்று நெறியா யிருப்பானே, சாதிமானவானடி - குதம்பாய், சாதிமானவானடி" என்று கூறியிருப்பதுஞ் சான்றுபகரும். இதற்கு நிதரிசனமாகவே, கௌதமபுத்தப் பெருந்தகையார் இந்நவீனமத சித்தாந்தத்தை உலகறிய விளம்பரப்படுத்தினரென்க. புத்தர்காலத்திலும் அசோகர் காலத்திலும் பெண்மக்களில் பிக்ஷுணிகள் என்று அநேகர் இருந்தார்கள். அசோகரும் சாதிவேற்றுமை பாராட்டினதாகவும், தாம் அரசனாகையால் பேதம் பாராட்டினதாகவும் இதுவரையில் அவர்சரித்திரத்தில் நாம் காணவில்லை. புத்தர்க்கும் அவர் மனைவிமுதலிய பெண்மக்கள் சீடர்களாயிருந்திருக்

கிறார்கள். இந்த ஜைன துறவியர்களிற்போலவே பௌத்த துறவியர், பிக்ஷுக்கள், யாசகர், முனிவர் முதலியோரிடத்திலும் சாதி நீதியன்றென ஒதுக்கப்பட்டிருந்தது. மத வளர்ச்சி முயற்சிக்காலத்திலும் அசோகர் முதலியவர்கள் மதசம்பந்தமானவர்களுடைய ஊண் உடை முதலியவைகளைக் குறித்துக் கடினமான விதிகள் ஏற்படுத்தியிருந்தார்கள். ஊன் உணவு கூடாதென ஒதுக்கப்பட்டது. கந்தை கட்டிக்கொள்ளுதலே நிந்தையற்ற உடையா யிருந்தது. கௌதமரும் இத்தகைய விதிகள் வேண்டாவென்றெண்ணவில்லை. துறவிகளுக்கிவை இயற்கையாகவே தோன்றுமென்பது அவருடைய கோட்பாடு. ஆகையால் அவர் இவ்விதிகள் அவர்களுடைய ஞான நெறிக்குத் தடையாகக்கூடும் என்று வாளாவிருந்தார். நிர்வாணதசைக்கும், கந்தையுடுத்தல் முதலிய வெளிவேடங்களுக்கும், ஊன்வெறுத்தல் முதலிய போலியாசாரங்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்பது அவருடைய உட்கருத்து. இதுபற்றியே நாயனாரும், 'மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம், பழித்த தொழித்து விடின்' என்றார். ஊன்வெறுத்தலே ஜீவகாருண்யம் என்று சில பழைய இந்துமதத் தொண்டர்கள் எண்ணியிருப்பதுபோல, கௌதமர் எண்ணவில்லை. 'தாமின்புறுவ துலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றுணர்ந்தார்' என்று, நாம் முன்பு எடுத்துக் காட்டியபடி நடப்பதே ஜீவகாருண்யம் என்று அவர் எண்ணி யிருந்தார். இந்த விஷயத்திலும், சில போலியாசாரப் பழைய வைதீக மதத் தொண்டர் புத்தரிடத்திற் பொறுமை கொள்வாரென்க.

தமது நவீனமத சித்தாந்த ஞானத்தெளிவுக்குப் பிறகு கௌதமபுத்தர் நாற்பத்தைந்து வருடகாலம் வேறெங்கும்

தூரப்பிரயாணம்போய்ப் பிரசங்கஞ்செய்யவில்லை. பிறகு
தான் அவர் வருஷத்தில் எட்டுமாதகாலம் அங்கங்குத்தூரப்
பிரயாணம்போய்ப் பிரசங்கஞ்செய்யத் தொடங்கினார். வரு
ஷாகாலங்களில் அவர் தாமிருந்த விடத்திலிருந்தே பிரசங்
கஞ் செய்துவந்தார். அப்போது தான் இராஜகிருகநகரத்தி
லிருந் தரசாண்டு கொண்டிருந்த பிம்பிசாரமன்னன் அவர்க்
குச் சீடனானான். அவன்தான், அரசனாயிருந்து அவர் காலத்
திற் பௌத்தனானவன். கௌதமர், மறுபடியும் தமது கபில
வாஸ்துநகரஞ்சென்று மனைவியையும், மைந்தனையும் பௌத்
தராக்கினாரென்று சொல்லுகிறார்கள்.

கடைசியாக அவர், பாவையென்னும் இடத்துக்கு யாத்
திரை சென்றபோது, அவரை ஒரு தட்டான் சந்தனென்
பான், வரவேற் றுபசரித்து, இளம்பன்றிக் கறியுஞ்சோறும்
பரிமாறி விருந்திட்டான். வாதாபியை ஆடாக்கிச் சமைத்து,
அகத்தியர்க்குப் படைத்த இல்வலனைப்போல, இவர்க்குப்
பன்றிக்கறி படைக்க ஒரு தட்டான் தோன்றியிருந்
தான். இல்வலன் நல்லெண்ணத்தோடு செய்யவில்லை. ஆயி
னும் அகத்தியர் தாமுண்ட கறியைச் செரிப்பித்துக் கொண்
டாரென்று புராணகதை கூறுகின்றது. சந்தன் நல்லெண்
ணத்தோடேயே பன்றிக்கறி படைத்தான். ஆயினும் தமது
தள்ளாமைக்காலத்தில் கௌதமர் அதைத் தள்ளாமல்
உண்டதனால் நோய்கொண்டு இறந்தாரென்று பௌத்த
மதக்கதை பகர்கின்றது; பாவையில் பன்றிக்கறி விருந்துண்ட
அன்று சாயங்காலத்திலேயே அவர் பிரயாணப்பட்டுக் குசி
நகரம் சென்றார். அது காசிக்குவடகிழக்கில் நூற்றிருபது
மைலிலும், கபிலவாஸ்துவுக்குக் கிழக்கில் எண்பது மைலி
லும் உள்ள இடம். அதை நெருங்கினபோது, அவர், அங்

கொருதோப்பில் இடம்பண்ணிக்கொண்டு சீடர்கூட்டத்தோடு தங்கினர். அன்றிரவில் அவர் நெடுநேரம் தம்மைச் சூழவிருந்த சீடர்களோடு மதவிஷயங்களைப்பற்றிக் கடைசி வரையிற் பேசிக் கொண்டிருந்து, அங்கேயே நிர்வாணதசையை அடைந்தார். இறந்தபோ தவர்க்கு எண்பது வயது. அவர்க்கு அணுக்கன் தொண்டனாய் அவருடைய கடைசிக் காலம் வரையில் அவரைவிடாது பின்பற்றி அவரிடத்தில் விசுவாசமாயும் நெருக்கமாயும் இருந்த அவருடைய சிற்றப்பன் மகன், அனந்தனென்பான், அவருடைய நிர்வாணதசையில் அவரோடுகூட இருந்தான். தலைவராகிய அவர், அவனையும் மற்றவர்களையும் பார்த்து, "சீடர்காள், நீவிர் தர்மநீதி நெறியையும், அதிற் படரவேண்டிய சட்டதிட்டங்களையுந் தவருமல் அனுசரித்தொழுகுமின்; நான் போனபிறகு, உங்களுடைய நிர்வாணதசைக்கு நீங்களே உத்தரவாதிகளாய்ச் சோம்பலின்றி முயலுமின்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பல்லாண்டுகளாகப் புத்தருடைய நிர்வாணதசையைப் பற்றிய காலநிர்ணயம் பலவிதமாய் வேறுபட்டுக்கொண்டேயிருந்தது. இப்போதும் அவர் முடிவடைந்த வருஷம் இன்னதெனச் சரியாய்ச்சொல்லமுடியாது. ஆனல் கிறிஸ்து பிறக்குமுன் 483-ம் ஆண்டிற்கும் 477-ம் ஆண்டிற்கும் இடையில் ஏதோ ஓராண்டில் அவர் முடிவடைந்தார் என்பதுமட்டும் நிச்சயம். இனி வரும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்க்கு ஒருவேளை, அவர் முடிவுற்ற ஆண்டு இதுதான் என்று நிச்சயமாய்க் கண்டுபிடித்துச்சொல்லும் வழி யேற்படலாம். இப்போது நாம் நமக்குத் தெரிந்தவரையில் அவருடைய அவதாரஆண்டு கி-மு-560 என்றும், நிருவாண

K. Y. Eeswaran. 30/3/1927.

வாண்டு கி-மு-480 என்றும் கொண்டால், ஏறக்குறைய மூன்றாண்டுக்குமேல் முன்பின் பிழையாகாது.

இந்த அதிகாரத்தில் கூறிவந்த கௌதமபுத்தர் கதை உண்மைக்கு உரியதென்று ஒப்புக்கொள்ளலாம். மற்றப் பெருங் குருமார்களைப் போலவே இவரும் தம் சரிதையைத் தாமேயெழுதி வைக்கவில்லை. ஆனாலும் அவர் மதத்தைப் பற்றிய புத்தகங்கள் அதிசீக்கிரத்தில் வெளியாயின. அவர் அடைந்த இருநூற்றைம்பது வருடங்களுக்குப் பிறகு அவர் மதத்தை அன்போடு தழுவியிருந்த அசோகர், பாடலிபுத்திரத்திற் கூட்டிய பௌத்த மதசபையில் அவைகள் உருவடைந்து ஒழுங்காயின. அவர் ஒருவர் உண்மையில் இருந்தார் என்பதற்குப் பலவித சரித்திர சின்னங்களும், அவர் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இடங்களின் அடையாளங்களும் இருக்கின்றன.

அவர் காலத்திற்குப் பிறகு, அவர் மத சரித்திரத்தைக் கண்டுபிடிப்பது நம்மாலாகுங் காரிய மன்று. ஆனாலும், அம் மதவிஷயத்திற் சம்மதமாய், அதைத் தாமும் ஆவலாய் அனுசரித்துப் பிறரையும் அந்தத் தர்மநீதி நெறியிற் செலுத்திய அசோகரது மனோநிலையை ஒழுங்குபடுத்திய வரலாறுகளைப் பற்றி நாம் தெரிந்துகொள்வது அத்தியாவசிய மாயிருக்கின்றது. தமது தர்ம நீதிநெறி விசுவாசத்தை வெளியிடுகிற அசோகர் மனோநிலைதான் என்னையோ!

கௌதமர் வெளியிட்டபடி, பௌத்தமதநவீன சித்தாந்தத்தின் உண்மைகள் கன்மகாண்டமென்றும், நிர்வாண (ஞான) காண்டமென்றும் இருவகையினை உடையன. மாக்தர், "வந்தவா றெங்ஙனே? போமாறேதோ" என்றபடி, எத்தனையோ மேதாவிகள் தாம் வந்த வழியையும், போம்

வழியையும் பற்றிச்சிந்திக்கத் தொடங்கிய காலமுதல், அவர்களுடைய சித்தங்களைக் கலக்கிக்கொண்டிருக்கிற தத்துவத்தின் சிக்கை பறுத்து எண்பித்துக் காட்ட முயலும் விஷயங்கள் அடங்கிய பகுதியே கன்மகாண்டமாகும்—இன்ப துன்ப நுகர்ச்சி, மாந்தர்க்குள் உயர்வுதாழ்வு, துன்மார்க்கர் சுகமுறுதல், சன்மார்க்கர் துக்க முறுதல்—இரண்டும் அநீதியும் அநுசிதமும் ஆகும். புத்தர், 'இவ்வுலகினும் மேலானவுலகம் இருக்கிறது. அங்குச் சென்றால் இந்தக் குற்றங்களெல்லாம் சரியாய், துன்மார்க்கனுக்கு அவமானமும் சன்மார்க்கனுக்கு வெகுமானமும் கிடைக்கும்' என்றெண்ணிப் பேராசைவசப்பட்டு * மனமடங்கி இருக்கவில்லை; இந்தச் சிக்குக்கு விளக்கம் இறந்த காலத்திற் காண்கிறார்—அநீதியும் அசம்பாவிதமுமான விதியில் என்கிறாரா? இல்லை. அல்லது, கருணைசமுத்திரமான கடவுள் சித்தத்திலிருந்து தெறிக்கின்ற செய்கையாகிய தேய்வச் செயலில் என்கிறாரா?—இல்லை, இல்லை. மற்றென்னென்கிறார்? கன்மம் என்கிறார். கன்மமே ஜென்மம் என்கிறார்—† ஓருயிர் இறந்தவுடனே, அந்த ஆருயிர் தனது இருப்பிற்குத்தக்க துக்கசுகானுபவத்தோடு வேறொரு தேகத்தில் புத்துயிராகிப் பிறக்கிறது. இது பழைய இந்துமார்க்கப் பிறப்பிலக்கணத்தை ஒத்திருக்கிறது. இதுபற்றியே நாயனாரும், "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண் விழுமந்துடைத்தவர் நட்பு" என்றார் அதற்கு எழுமை எழு, எழேழ், நாற்பத்தொன்பது பிறப்பென்று பொருள் விரிப்பதும் உண்டு. "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்

---

*மனம் + மடங்கி = மனம் சபலமாய்ச் சோம்பி.

†ஓருயிர் = ஒரு பிராணி.

மதங்களின் வேறுபாடுகள்.

கென் கடவேன்" என்ற மணிவாசகமும், "எறியுங்கடலில் நுகத்துளையில் யாமைக்கழுத்துப்புகுவதுபோல் பொறி வெம் பிறவி அநேகத்தால் புருடன் விவேகியெனப்பிறந்து" என்கிற பொன்வாசகமும் இதை விளக்குகின்றன. கிறித்தவர்கள், "ஆன்மா அழியாது; பிறப்பு ஒன்றுக்கு மேல் இல்லை" என்கிற ஏகதேகசித்தாந்தம் இதனோடு பொருந்தாமைகாண்க. பௌத்தர்களுக்கு, என்றும் அழியாத ஆன்மா ஒன்று உண்டு என்கிற சித்தாந்தமே கிடையாது. முன்ஜென்மத்துயிரே பின் ஜென்மத்திற் பிறக்கிறதென்பதுங் கிடையாது. பழையது கழிதலும், புதியது புகுதலும் அவர்களுடைய நம்பிக்கை. மனிதன் கணத்துக்குக்கணம் மாறுகிறான். அவனுக்குள் மாறுநோக்கம் ஒன்றுமே கிடையாது. முதலாவது, அவன் பூதசம்பந்தமானவன். மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்; நாற்றம், * சுவை, ஒளி, ஊறு, ஓசை; மூக்கு, வாய், கண், மெய், செவி; ஆண், பெண் பேதம்; காமம், வெகுளி, மயக்கம், (காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றின் நாமங்கெடக் கெடு நோய்); உயிர், இயக்கம்; (அவிநயம்) சைகை, பேச்சு; விம்மல், (பெருகுதல்) நீளல், குறைதல் போஷுதல், வளர்தல், மாறுதல், மறைதல்முதலிய உயிர்க்குணங்கள் ஏழு; இரண்டாவது, அவன் உணர்ச்சிக்குணங்கள் உடையவன்; மூன்றாவது, அவன் மனத்தோற்றங்கள் உடையவன்; நான்காவது, அவன் மனோவன்மைகள், இவைகளை உடையவன். ஐந்தாவது, அவன் காரணகாரியப்பகுத்தறிவுடையவன். இந்த ஐந்து கண்டங்களும் உடல்களைப்போலவே மாறிக்

* சுவையொளியூறோசை-நாற்றமென்றைந்தின், வகை தெரிவான் கட்டேயுலகு.

கொண்டேயிருக்கின்றன. உடல் இறந்தவுடனே அவைகள் புதுப்புணர்ச்சிகொண்டு, புத்துருவாய் மாறுகின்றன. ஒன்றேதொடர்ந்து செல்கிறதென்பதில்லை. ஒரே ஆன்மா என்கிற எண்ணம் கேவலமாய் மதிக்கப்படும். கன்மந்தான், ஒரு பிறவி மறுபிறவியைத் தொடர்வதற்குக் காரணம். அதுதான் புதுக்கண்டங்களுக்குப் புதுப்புணர்ச்சி எய்துவித்துப் புத்துருவைத் தீர்மானிக்கிறது; பழங்கண்டங்களை மரணத்தில் மறைத்ததுங் கன்மந்தான். தர்மநெறிப் பௌத்தற்கு இனிவரூஉம் உடல்நிலையில் இன்பம் எய்துவேன் என்கிற சித்தாந்தமே இல்லை. அவனுடைய மேலான எண்ணமெல்லாங் கூடி ஆசையையறுப்பதிலும், பற்றை ஒழிப்பதிலுமே முடியும் இவைகளுக்கு அவர்கள் மதப் பாஷையில் திருஷ்ணமென்றும் உபாதானம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. உண்மைப்பௌத்தன் நற்குணநற்செய்கைகள் மாறாமலிருந்து, சிவகாருண்ய விசேஷத்தால், மானவர், தானவர், வானவர், மற்றவுயிர்களாகிய எல்லா உயிர்களுடைய துன்பங்களையும் துடைப்பதிலேயே நோக்கமும் ஊக்கமும் உள்ளவனுவான். இதுதான் நிர்வாணதசையென்பது. இதுதான் அருட்பெருஞ்சோதி விளக்கமென்றும் யாவரும் புகழ்வது. இதுதான் அசோகர், மேற்கொண்டிருந்த தர்ம நீதிநெறி. இந்த நிர்வாணதசையிற் பௌத்தன் மனம்பாவரகிதமாய்ப் பரிசுத்தமாய் விளங்கும். இதயம் இன்பமயமாய் இலகும். இப்படியில்லார்க்குத் துன்பநீக்கமின்றிக் கன்மவசத்தால் பிறவி யொழியாதென்க. "இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ" என்னும் தாயுமானுர் வாக்கு இங்கே ஏற்புடைத்து.

'கன்மஞ் சென்மகாரணம்; அதனுல்,
கன்மமே சென்மவைப்பாங் கண்டீர்!

வாணாள் வீணாளாயின், மாண்டபின்
எந்தப்பிறவி வாய்க்குமோ இன்னும்
எதுவருமோ தெரியாது. இதனால்
நிர்வாணதசையே நியமமானது (அதுதான்)
பாவரகிதம், பரமானந்தம்,
அசையாநிலையம் அற்புதவைப்பாய்
என்று மாறா திருந்து
நின்று நின்று நிலவுவ தாமே'

ரீஸ்டேவிட்ஸ் என்னும் அங்கிலச் சரித்திரக்காரர், "கன்மந்தான் பௌத்த மத போதனைகளுக்குள் அசையா நிலைமையானது. அதை எல்லாரும் அங்கீகரிக்கின்றார்கள். பௌத்தர்கள் யாவரும் தத்தம்வாணாட்களில் அனுபவசித்தமாய்க் கண்டதும் அதுதான். இப்பிறவியில் நிர்வாண தசையை எய்தாத பௌத்தன் மறுபிறவி யடைகிறான் என்பது அவர்கள் சித்தாந்தம்" என்கிறார்.

பௌத்தமத சித்தாந்தத்தின் சீதிநிலையை நோக்கினால், அசோகர் வாழ்க்கையிலிருந்து அது வெளியாகும். "உலக சரித்திரத்தில் இதுவரையில் இப்படிப்பட்ட மதமொன்றிருந்ததாகக் கேள்விப்படவேயில்லை" என்று ரீஸ் டேவிட்ஸ் சொல்லி, "வெளித்தோற்றப் பூத பௌதிக விசாரணையினாலேயே ஒரு மதம், அரசமரத்திற்பிறந்து, ஆலமரம்போல் தழைத்து, வேரூன்றி வளர்ந்து, பாரிசாதம் போல் பூத்து, ஹரிச்சந்தனம்போல் உலகமெங்கும் வாசனை வீசி, கற்பகம்போல் நிர்வாண பலாமிர்தத்தை வழங்கின விதம் அருமை, அருமை; முக்காலும் அருமை!" என்று வியக்கிறார். புத்தர் தமது சித்தாந்தத்திற் கடவுளுக்கு இடந்தாவே இல்லை. அவருடைய சீடர்கள் கடவுள் ஸ்தானத்தில் அவரையே வைத்தார்கள். ஆனால் அவர், மாந்த

ரனைவரும் கட்புலனாகக் கடவுள் ஞானத்தை எதிர்பார்த்துச் சோம்பியிருக்க வேண்டாவென்றும், வீண் ஆசாரங்களில் வாணாள் கழிக்கவேண்டாவென்றும் எச்சரித்துத் தந்நெறியாகிய நன்னெறியிற் றிருப்புகிறார்.

பௌத்தமத சித்தாந்தம் அதிற் பிரவேசித்தவர்க்கே விளங்கும். மற்றவர்க்கு அதனுண்மை விளங்காதென்க. அதிற் பிரவேசித்துள்ள எல்லாருமே நிர்வாண தசை அடைய முடியாது. கிறிஸ்தவர்கள் சொல்வதுபோல இரக்ஷகனை நம்பிப் பாவவறிக்கைசெய்தால் யார்க்கும் மோக்ஷம் கிடைக்குமென்பது பௌத்தமதத்தில் இல்லை. சாதாரணமாய் அதிற் பிரவேசித்தவர்கள் துவாதச நிதானங்களை நிதானித்துணரவேண்டும். இதற்குச் சிலகாலஞ் செல்லும். பிறகு சத்திய சதுஷ்டயம் தானே உதயமாகும். அப்புறம் துக்கநிவாரணமாகிய அஷ்டநிவாரணத்தை அநுசரிக்கவேண்டும். இதற்குஞ் சிலகாலஞ்செல்லும். அதன் பிறகே இப்பிறவியில் நிர்வாண தசை எய்தினாலும் எய்தும்; இன்றேல் இன்னொரு பிறவியிலேயே அதை எய்தவேண்டும். சாதாரணமாய்ப் பௌத்தன் ஒருவனுக்கு (1) உயிர்வதை, (2) திருட்டு (பிறர் கொடாததைக் கைப்பற்றுதல்), (3) பொய், (4) குடி, (5) விபசாரம், (6) இரவில் அபக்குவமான ஆகாரமுண்ணல், (7) பூமாலைகளையும் வாசனைகளையும் அணிதல், (8) தரையிற் படுக்காமல் கட்டில் முதலிய உயர்விடத்திற் படுத்தலாகிய விஷயங்களை நீக்கவேண்டுமென்கிற எட்டுவிதக் கட்டளைகள் உண்டு.

இவைகளில் முதல் ஐந்தும் எல்லார்க்கும் பொது. கடைசி மூன்றும் சமயோசிதமாகச் சிலர்க்கு உண்டு; சிலர்க்கு இல்லை. பரிசுத்த நாட்களில் இந்த எட்டுக் கட்-

டளைகளையும் எல்லாருமே அனுசரிக்கவேண்டும். அமாவாசை, * பௌர்ணமி, அஷ்டமி முதலிய நாட்களே பரிசுத்த நாட்களாம். பிக்ஷுக்களுக்கும், சந்நியாசிகளுக்கும் இந்த எட்டுக்கட்டளைகளோடு (1) ஆட்டமாடுதல், பாட்டுப் பாடுதல், சங்கீதங்கேட்டல், கூத்துப்பார்த்தல் முதலியவைகளைத் தள்ளுதலும், (2) வெள்ளி பொன்னகைகளை வெறுத்தலுமாகிய இரண்டுஞ்சேர்ந்து பத்துங் கட்டளைகள் உண்டு.

இப்படிப் பிக்ஷுக்களுக்கு விசேஷ கட்டளைகளும் ஒழுங்குகளும் ஏற்படுத்தியதனால், பௌத்த மதத்திற்கு வளர்ச்சியும், தளர்ச்சியும் உண்டாயின. இப்படிப்பட்ட சாதுசங்க அமைப்பினால்தான் பௌத்தமதம் விரைவிற் பரவி எல்லாரும் விரும்பத்தக்க மதமாயிற்று. ஆனால் இப்படி அது விரைவிற் பரவியதே அதன் அழிவுக்குங் காரணமாயிற்று. அழிவு என்றால், அதனுடைய தர்மமாவது போதனையாவது அழிந்ததல்ல. பிராமணர்களின் பொறாமையால் அது தான் தோன்றிய பரதகண்டத்தில் வளர்ச்சி குன்றி வேறுகண்டங்களில் ஓங்கி வளர்ந்தது. இப்படி இந்த மதபோதகர்களும் பிக்ஷுக்களும் சந்நியாசிகளும் சுத்தமனத் துத்தமர்களாய், உண்மையில் சீவகாருண்யமுடையவர்களாய் இப்பரதகண்டத்தில் ஓங்குதலைத் தாங்காத † விப்பிரகுலோத்தமர்கள் இதற்குக் கேடு சூழ்ந்தார்கள். இம்மதத் தலைவராகிய கௌதமபுத்தமுனிவர், மேற்படி பிக்ஷுக்களுக்கும் துறவிகளுக்கும் மேலாசாரம் பிரதானமானதல்ல; உள்ளாசாரமாகிய மனத்தூய்மையே முக்கியமானதென்று கற்பித்தார். அவர் கற்பித்தபடியே

* பூர்ணிமை. † பிராமணர்கள்.

அவர்களும் செல்வப்பொருள் நிலையற்றதென்றும் அதனால் அனுபவிக்கும் சிற்றின்பம் வெற்றின்பமென்றும் தெரிந்து அவைகளை வெறுத்தார்கள். ஆகையால் அவர்களனைவரையும் கௌதமபுத்தர் சந்நியாசிகளாக்கிச் சாது சங்கத்திற் சேர்த்தார். நாளடைவில் சாது சங்கம் பெருகிற்று. அந்தச் சங்கம் பங்கமின்றி ஓங்குவதற்குப் பற்பல மன்னரும் நன்கொடையளித்தனர். கௌதமரும் நாளுக்குநாள் அதற்குச் சட்டதிட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுத்திக்கொண்டே வந்தார். அதனால் மதாசார வாழ்க்கையில் வளர்ச்சிபெற எண்ணின அச்சங்கத்தார்க்குப் பேரனுகூலம் உண்டாயிற்று. ஆதியில் ஏற்படுத்தின பத்துக் கட்டளைகளையும் இதில் எடுத்துக் காட்டியிருக்கின்றோம். இரவில் உணவாதிகள் கூடாவென்ற கட்டளை இந்தச் சந்நியாசிகளுக்கு வேறுவிதமாய் மாறிற்று. இவர்கள் சூரியோதயமுதல் நடுப்பகலளவும் பலமான ஆகாரம் எதுவும் உட்கொள்ளக்கூடாது. எந்தச் சந்நியாசியும் தன்னோடு எட்டுச் சாமான்களுக்குமேல் எடுத்துக்கொண்டு போகக் கூடாது. மூன்றங்கிகள்; இரண்டு உள்ளுக்கும், ஒன்று மேலுக்கும் உண்டு; இது மஞ்சட் காவி வர்ணமுடையது; ஆதியில் வெண்கந்தையே ஏற்பாடாயிருந்தது. அரைப்பட்டிகை; * தலைமழிக்குங்கத்தி; ஊசி; பதினெட்டங்குலச் சதுரமுள்ள † நீர்வடிக்கட்டி முதலியவைகளே அந்த எட்டுச் சாமான்களாம். பௌத்த பிக்ஷுவுக்கும் மற்றைச் சந்நியாசிக்குமுள்ள வேறுபாடுகளில் முக்கியமான

---

* தாடி மீசைகளையும் சேர்த்து முழுதும் மழிக்க வேண்டும்.

† இது பூச்சி புழுவில்லாமல் குடிநீரைச் சுத்தமாக்குவதற்கு உபயோகிப்பது.

தொன்றிருக்கிறது. பௌத்த பிக்ஷு யார்க்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்கிற விரதம் இல்லை. அவனுடைய நோக்கமெல்லாம் தன்மனத்தைத் தானடக்க வேண்டுமென்பதொன்றுதான். இதில் இவனுக்கு யாரும் உதவிசெய்ய முடியாது; வழிகாட்டலாம். தன்னடக்கத்திற் றேர்ந்து நாட்சென்ற சந்நியாசிகள் தலைமைத்தானம் பெறுவார்கள். இவர்கள்தாம் சங்கத்திற்சேரும் புத்த சங்கத்தினர்களுக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து, அவர்களைச் சங்கத்திற் சேர்த்துக்கொள்பவர்கள். இவர்களுக்கு மற்றவர்கள் மரியாதை செலுத்தவேண்டும். ஆனல் தலைமைச் சந்நியாசி, பௌத்த நெறியைப் பாராட்டி ஒழுகவேண்டுமென்றிப் பிறர்செய்யு மரியாதையைப் பாராட்டக்கூடாது. மஞ்சட்காவி யுடையும் வெளிவேடமே யன்றி நிர்வாண தசைக்கேற்ற நியமமன்று. சந்நியாசியின் பற்றற்ற வாழ்வும், பரிசுத்த மனமுமே பௌத்த மதத்தின் முடிவிடமாகிய நிர்வாண தசையிற் செலுத்தக்கூடியன

பௌத்ததர்ம நீதிநெறியில் நான்கு துறைகள் ஏற்பட்டிருக்கின்றன. முதற்றுறை, அந்நெறியிற் படரவந்து சேர்ந்து, சாதுசங்கப்பயிற்சி செய்து, தர்மநீதிகளின் கேள்வியால் நல்லுணர்ச்சியும் நன்னடக்கையும் பெறுதல். உடனே இது மனத்தை மயக்கும் பத்துப் பந்தங்களில் மூன்றை அறுக்கும். அவை, பேதைமை, ஐயம், போலியாசாரம் என்பவைகளாம். இரண்டாந்துறை, இனி ஒரு பிறவியெய்துவார் இருக்குந் துறை. இங்குள்ளவர்கள் மேற்குறித்த பத்துப் பந்தங்களிலும் நான்காவதும் ஐந்தாவதுமாகிய விருப்பையும் வெறுப்பையுங் கடந்தவர்கள். மூன்றாந்துறை, மேற்கூறிய விருப்பு வெறுப்புக்களை அறவொழித்து மறுபடியுந் திரும்பாதார் இருக்குந்துறை. நான்காங்

துறை, தூயோர் இருக்குந் துறை. இவர்கள் மற்றை ஐந்து பந்தங்களாகிய இகத்தாசை, பரத்தாசை, அகந்தை, சுய நலம், அறியாமை என்பவைகளை அறவொழித்தவர்கள். முதல் ஐந்து பந்தங்களையும் அறுத்து, இதில் நுழைபவர் கள், அரகதர்கள் அல்லது மகான்களாவார்கள். இவர்கள் இந் நான்காந் துறையைக் கடந்து நிர்வாணதசையடையும் போது அசோகர் என்று பெயர்பெறுவார்கள்.

புத்தர்க்கும் அசோகமௌரியர்க்கும் இடையில் உள்ள இருநூற்றைம்பது வருடகாலத்தில் இரண்டு பெரும் பௌத்த சங்கங்கள் கூடின என அம்மதத்தினர்கள் சொல் லிக்கொள்ளுகிறார்கள். ஆனால், அம்மத நூல்களிற் கூறிய படி அவைகள் கூடின இடமும், காலமும் சரியாயில்லை. ஆகையால் சரித்திரக்காரர் அவைகளை நம்பவில்லை.

இந்த இருநூற்றைம்பது வருடகாலத்தில் பௌத்த மதவளர்ச்சியில் இருபெரு விஷயங்கள் நேரிட்டன. முத லாவது, புத்தரது பிரசங்கமூலமாய் வெளியான விதிகளும், அவைகளைப் பின்பற்றின, சந்யாசித் தொண்டர்களும் ஏற் பட்டது. இந்த விஷயம் பையப்பைய வளர்ந்து, அசோகர் காலத்துக்குள் நெடுந்தூரம் ஓங்கியிருந்திருக்க வேண்டும். ஆகையால் அவ்வரசர் காலத்தில் பாடலிபுத்திரத்தில் கூடிய பௌத்தமதக் கூட்டத்தில், உண்மைக்குத் தாரகமான பௌத்த ஆகமங்களின் தொகை இத்தனையென்று கடைசி யாய்த் தீர்மானமாயிற்று. அவைகளே இலங்கையில் இன் றளவு மழியாமல் தற்காலத்திய பௌத்தமத சம்பந்தமான படிப்புக்கு ஆதாரமாயிருந்துகொண் டிருக்கின்றன.

இரண்டாம் விஷயம், பௌத்தமத வணக்கத்தின் வளர்ச்சி. நிரீசுரவாதிகளான பௌத்தர்கூட்டத்தில் வணக்க

மென்பதே ஆதியிற் கிடையாது. பையப்பைய புத்தர் உடலின் எலும்பாதிகளை வணங்குவதென்றும், இன்னும் பற்பல அடையாளங்களைத் தொழுவதென்றும் ஒருவித போலி வழக்கம் ஏற்பட்டது. இதுவும் அசோகர் காலத்துக்குள்ளேயே நன்றாய் வளர்ந்து முதிர்ந்திருந்தது.

அதிகாரம்-5.

(மத வளர்ச்சி)

மூன்றாமதிகாரத் திறுதியிற் கூறியபடி அசோகர் வேட்டையாடுவது முதலிய கொலைத்தொழிலை விடுத்துத் தமது இருபத்தோராமாண்டாட்சியில் தீர்த்தயாத்திரையை மேற்கொண்டார். இப்பரிசுத்தயாத்திரையில் இவர், தமது குருநாதராகிய கௌதமபுத்தர் நிரியாணதசைக்குச் சென்ற வழியையே பின்பற்றிச் செல்லத்துணிந்து, தலைநகராகிய பாடலிபுத்திரத்திலிருந்து புறப்பட்டு, கங்கையைக்கடந்து, இலிச்சவிக் கூட்டத்தாருடைய வைசாலிமாகாணத்திற் பிரவேசித்தார். இம்மாகாணத்துக்கு இப்போது, முஜப்பர்புர சம்பரன் ஜில்லாக்கள் என்று பெயர்கள் வழங்குகின்றன. அவர் தொடர்ந்து சென்ற வழியைப் பாழடைந்துள்ள வைஸாலி (பாஸார்) மாகாணத்திலுள்ள பாக்கிராச் சிங்கத் தூண்பதிவாலும், கேஸரியாத்தூபியாலும் லௌரியா அரராஜ், லௌரியா நந்தங்கரிலுள்ள சிங்கத்தூண்களாலும் குறிப்பாகக் கண்டறியலாம். பிறகு இவர் கிழக்கிற்றிரும்பி, மற்றொரு சிங்கத்தூணுள்ள ராம்பூர்வத்தைக் கடந்து, அதற்கப்பால் குன்றுகளேறிச்சென்று, குஸிநகரமென்னும் புத்த

கிரியாணத் தலத்தைச் சேர்ந்திருக்கலாம். அன்றி, மேற்கிற் றிரும்பி, கண்டகிநதியைக் கடந்து, நேப்பாளத்தராய் மார்க்கமாகப் புத்தர் திருவவதாரத் தலமாகிய உலும்பினித் தோப்பிற்குச் சென்றிருக்கலாம். இந்தத் திருத்தோப்பில், அவர் ஓர் அசுவமுகத்தூண் நிறுத்தி, அதில் மிக்க அலங்காரமான அக்ஷரங்களால் பொறித்த சாஸனம் இப்போது தான் எழுதியதோ என்னும்படி அழகாய் அமைந்திருக்கிறது. அந்தச் சுருக்கமான சாஸனத்தைப் பின்வருகிறபடி காண்க :—

மாட்சிமைதங்கிய பியாதசி மன்னர், தமது இருபத்தோராமாண்டாட்சியில், இங்குத் தாமே நேரில்வந்து வணங்கினர். புத்தபகவான் அவதரித்த இடம் இதுவாகையால், அதன் ஞாபகச்சின்னமாக ஒரு கற்றூணிற் கற்குதிரையுருச் செய்து தாபித்தார். அம்மேலோர் அவதரித்த இடம் இதுவாகையால், இவ் வுலும்பினி கிராமத்தில் ஒருவரும் இனி வரிசெலுத்த வேண்டாவென்று, அவர்களுக்குப் போதுமான நன்கொடை அளித்தார்.

பிறகு; அசோகர் மேற்கே சிலகாழிகைதூரஞ் சென்று, கனகமுனிவர் தூபிக்குப் பெருமை செய்தார். இக்கனக முனிவர் பௌத்தாகமப்படி, கௌதமபுத்தர்க்கு முந்தி அவதரித்த புத்தர்களுக்குள் ஒருவர். இங்கும் அசோகர் மற்றொரு தூண் நிறுத்தித் தமது வரவை அதிற்பதித்து, அதற்குமுந்தித் தமது பதினைந்தாமாண்டாட்சியில் அவர் அந்தத்தூபியைப் பெருக்கிப் புதுக்கியிருந்ததாகவுங் குறித்தார். இந்த யாத்திரையில் அவர் நேப்பாளத்திலுள்ள இல்லிதா பதனம், காத்த மண்டலம் (Katimandu) வரையிற் சென்று மேற்கிற்றிரும்பிச் சிராவத்தியைச் சேர்ந்தார்

என்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. இந்த இடத்தில்தான், இரேவதி நதி (Rapti) குன்றுகளிலிருந்து பிரவகித்துக் குதித்தோடுகிறது. இவ்விடத்தில் கௌதமர் பன்னெடுநாள் வாழ்ந்து, தமது மதப் பிரசங்கஞ் செய்துகொண்டிருந்தாராகையால், அசோகர் இங்குத் தங்கி, பல இடங்களிற் சென்று பெருமைசெய்தார். இங்கும் எழுபதெழுபதடி நீளமுள்ள இருபெருந் தூண்களை அவர் நாட்டினார் என்று அந்நாட்டார் சொல்லுகிறார்கள். அவை இன்னும் அங்கிருக்கின்றனவென்று கேட்டவர்கள், அங்கே சென்று விசாரித்தால், அவைகள் மறைந் திருக்கின்றன; யார் கண்ணுக்குத் தென்படுமோ! என்று அங்குள்ளார் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனால், நேப்பாள தேசத்தின் ஓரத்திலுள்ள நிகிரிவா என்கிற பதிக்குத் தென்கிழக்கே சுமார் பதினைந்து மைல் தூரத்திற் கப்பாலுள்ள ஒரு பெரிய புதரினிடையே புத்தபகவானது பிறப்பிடத்தைப் பற்றி இற்றைக்கு 2175 - யாண்டுகளுக்கு முன்னர் மேன்மையும், கீர்த்தியு முற்றிருந்த அசோக சக்கரவர்த்தி என்பார், சில எழுத்துக்கள் செதுக்குவித்து, ஒரே கல்லா லமைப்பித்து முன்னதாக நாட்டின தம்பத்தை டாக்டர். பூரர் என்னும் துரைமகனார், சென்ற 1896-ம்௵, டிஸம்பர்மீ, 12உயன்று தெய்வாதீனமாகக் கண்டுபிடித்தார். அந்தத் தம்பம் இருக்குமிடத்தைத்தான் ‘ உலும்பினித்தோட்டம்’ என்றும், கௌதமபுத்தப் பெருமானார் அவதரித்த தோட்டம் என்றும் அடிக்கடி புராணிகர்கள் வழங்கிவந்தார்கள். அந்தம்பத்தில் காணப்பட்ட எழுத்துக்கள் பின்வரும் பொருளைக் குறிப்பனவாம்:—பிரியதராஜா (அசோகர்) இராஜபட்டத்திற்கு வந்து 20-வருஷ மானதும் இவ்விடம் வந்து பூசித்து,

இங்கே சாக்கியமகாபுத்தர் பிறந்தாரென்று சொல்லி, ஒரு ஸ்தம்பம் ஸ்தாபித்தார். லம்பினிவாசிகளுக் கெல்லாம் வரி கொடுக்கும் பாரத்தை நிறுத்தி, வெகுமானங்கள் செய்தார். சரித்திரங்களில் அசோகமகாராஜா ஐந்து பட்டாளங்களுடனும், அனேக வாத்திய கோஷங்களுடனும், புஷ்பங்கள் வாசனைத் திரவியங்களுடனும், மற்றுமுள்ள இராஜ விமரிசைகளுடனும் சென்றாரென்றும்; அவருடைய முக்கிய குருவும் மகாஞானியுமான உவகுப்தா என்பவரும் அவருடன் சென்றாரென்றும் எழுதப்பட் டிருக்கின்றன. இப்போது அசோகர் யாத்திரையடையாளம் சரிடங்களில் மாத்திரந்தான் சரியாய்த் தெரிகின்றன.

இந்த யாத்திரையின் ஞாபகம் கர்ணபரம்பரையாக அழியாமலிருந்தது. இதைக் குறித்த கதையைச் சமஸ்கிருதபாஷையிலுள்ள அசோகாவதானத்திற் காணலாம். அதில், அசோகர் காலம் புத்தருக்குப் பிறகு ஒரு நூற்றாண்டென்று பிழைபட்டிருக்கிறது. ஆகையால், அதிற்குறித்த கதை வேறெந்த அசோகருடையதோ என்ற சந்தேகந் தருவதால், அதை நம்புவதற்கிடமில்லை. ஆனாலும், அதில் நம்புவதற்கிடமான ஒரு விஷயந்தான் இருக்கிறதென்று நேப்பாளத் தராய்ச்சாஸனங்கள் சான்று பகர்கின்றன. அது, "உவகுப்தர் உதவியால் அசோகர், உலும்பினித் தோப்பையும், கபிலவாஸ்துவையும், புத்த கயையி லுள்ள போதி விருக்ஷத்தையும், இருடிபுரமென்னும் சாரநாதத்தையும், குசநகரத்தையும், சிராவஸ்தியிலுள்ள ஜேதவன வித்தையையும்; வக்குளத்தூபியையும், ஆனந்தத்தூபியையும் அருமையாய்க் கண்டு, ஆங்காங்கு அரும்பெருங் கொடை

யளித்தார். வக்குளத் தூபியண்டையில் மட்டும், அவர், ஓரே ஒருசெப்பு நாணயம் வழங்கினர். அதற்குக் காரணம், "வக்குளப்பெரியார், வருத்தமின்றிப் பெரியாரானர். ஆகையால், அவர் யாதொரு இடையூற்றாலும் துன்பமின்றியிருந்து, உலோகோபகாரமான காரியம் ஒன்றும் செய்யாமையேயாம்,' என்றார்," என்பதாம்.

இந்த வக்குளத் தூபியண்டை அசோகர் பெருங்கொடை மறுத்த காரணம் புராண கதையானாலும், அநுபவத்திற்கு ஒத்துவருகிறது. அசோகர் கைப்பட எழுதியுள்ள விஷயங்களுக்கும் அதற்கும் பொருத்தமிருக்கிறது. சிலாசாஸனம் பதிந்துள்ள அசோகருடைய அருமையான அன்பையும் அநுபவத்தையுங்கண்டு, எவரும் அதிசயிக்காதிருக்க முடியாது. அவைகளின் நோக்கம் எவ்வுயிரும் இன்பம் நுகரவேண்டுமென்பதேயாம். அவைகளை யெழுதி விளக்கின ஆசிரியரான அசோகர், பெற்றோரைப் பேணல் முதலிய பெருஞ் சன்மார்க்க நீதிநெறியை வற்புறுத்துகிறார். ஆனல், அவர், அவைகள் எப்படி சுகாநுபவங்களாம் என்று விளக்கவில்லை ; ஈசுவர நிரீசுவரவாதத் தர்க்க முறையிலும் வழி காட்டவில்லை. சும்மா அநுபவத்தை ஒட்டியே அவற்றை உண்மையென்று நாம் ஒப்பவேண்டுமென்பது அவருடைய சித்தாந்தம். மாந்தரனைவரும் தாம் கடைத்தேறு மார்க்கத்தைத் தாமே தேடிக்கொள்ள வேண்டுமென்பது அவருடைய தீர்மானம்.

•

'மாட்சி தங்கிய பிரியதரிசன மகாராஜா செய்துவருகிற முயற்சிகள் எப்படிப்பட்டனவாயினும், அவைகளனைத்தும் இனி வரும் வாழ்வைக் குறித்தனவாம். அவைகளால்

ஒவ்வொருவனும் அபாயத்தினின்றும் விடுபடலாம். அவ்வபாயம் பாவமேயாம். அப்படிப்பட்ட விடுதலை யடைவது யார்க்கும் மிக்க அருமைதான். ஒருவன் உயர்ந்தவனேனுந் தாழ்ந்தவனேனும் தன்னடக்கத்தால் இக சுகத்தை வெறுத்துப் பெருமுயற்சி செய்தாலன்றி, அது அசாத்தியமாகவே யிருக்கும். ஆனால், உயர்ந்தவனுக்கோ, அது அசாத்தியத்திலும் அசாத்தியமாகவே முடியும்,” (பத்தாங் கல்வெட்டுப் பதிவு.)

மேற் குறித்த விஷயம் சர்வமத சம்மதந்தான். ஆனாலும், பழைய வைதீக மதத்திற்கும் இதற்குமுள்ள பேதம், தலைவன் ஒருவனை வேண்டாமையேயாம். பழைய வேதாந்தக் கொள்கை, ‘தன்னை யறிந்தவன் தலைவனை யறிவான்,” என்பது. இந்தப் பௌத்த தர்மநெறியில் தன்னை யறிவதற்குரிய தன்னடக்கம் ஒடுக்கம் முதலியன காட்டியிருக்கின்றனவேயன்றித் தலைவனைப் பற்றிய பேச்சே கிடையாது. பேச்சற்ற இடம் என்று பழைய வேத மதத்தின் ஒருசாரார் கருதுகிறபடி பௌத்த மதத்தாரும் தலைவனைப் பற்றிப் பேசாமல் ஒழித்தார்களென்று நாம் வேடிக்கையாகப் பேசிக்கொள்ளலாம். ‘பேசா மௌனம் பெருமான் பணித்ததுவே,’ என்றது இதுதானோ, என்னவோ! யார் சொல்லுவார்கள்? ‘யான், எனதென்னும் அகப்புறப் பற்றுகளை ஒழித்துத் தன் மனமடக்கித் தற்சுகம் வெறுத்துத் தன்னை வருத்தித் தவமுயற்சி செய்பவன் தலைவனருளைப் பெறுவான்; தலைவனோடு கலப்பான்,’ என்பது பழைய வைதீக மதச் சம்மதம். பௌத்தாகம சம்மதமும் தன்னைப் பற்றிய அளவில் இதனோடு ஒத்து வருகிறது. ஆனால், என்ன காரணத்தாலோ, அது தலைவனைப் பற்றிய அளவில் தனித்து

நிற்கிறது. 'கண்ணுக் ககப்படாத தலைவனாகிய பரமாத்துமா வின் அருளை நாடி அலைவதைவிட, கண்ணுக் ககப்படுகிற நம்போன்ற ஜீவாத்துமாக்களிடத்தில் நமது அருளை விநியோகித்து, 'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்,' என்றபடி, இகபர சுகாநுபவம் எய்துவோமாக,' என்பதுதான் இந்தப் பௌத்தமதச் சித்தாந்தம் என்று நாம் ஒருவாறு துணிந்து கொள்ளவேண்டியிருக்கிறது. இன்னும், பழைய இந்துமதத்தில், 'அவரவர் வினையில் அவரவர் வருவர், அவரவர் வினையளவுக்கே போகம்,' என்றபடியும், 'அந்தத் தேவனால் வருமென்ற மூடர்கள், அதோகதி யடைவாரே,' என்றபடியும், 'பாவனாதீதம் பதியாவிடத் தேகபாவனை பற்றிநின் றாந்தீபற, பழுத்தாலொழித்திடென் றாந்தீபற,' என்றபடியும் தலைவனைத் தேடுதல் ஞானமுதிருமட்டுமேயன்றிப் பிறிதில்லை. குருவுருவாய் விளங்குபவனே தலைவன்.

' தந்தைதா யாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா வின்பநய மாவானும் - எந்தமுயிர்
தானாகு வானுஞ் சரணாகு வானுமருட்
கோனாகு வானுங் குரு."

என்றபடி, எல்லாங் குருவாகவே முடிவதால், குருவன்றி வேறுதலைவன் வேண்டியதில்லை என்று ஒருவாறு குறிப்பிற் பொருள்பட விருப்பதாலும், பௌத்தமதச் சித்தாந்திகளும் 'புத்த குருவன்றி வேறு தலைவன் இல்லை. கண்டவளவில் விவகரிப்பதே கருத்திற் கிசைந்தது. காணாதவிஷயத்தைப் பற்றி விவகரித்து வீணாள் போக்கவேண்டாம்.'

" நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையினும்

மேன்மே லுயர்த்து நிறப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்."

என்று ஜைனமுனிவர் கூறியபடி எல்லாந் தன்னுலாக வேண்டி யிருக்கத் தலைவனுலாகுமென்று சோம்பியிருப்பானை மூடன் என்று கொண்டு, புத்ததரு பக்தியிற் சிறந்து விளங்கி உபதேசித்தபடி, சீவகாருண்யத்தில் முதிர்ந்து, வேறு தலைவனை வேண்டாது, தன்னடக்கம் தற்சுக நீக்கமுதலிய முறைகளைக் கையாண்டு முயன்றால், அம் முயற்சியைக்கொண்டு 'மெய்வருத்தக் கூலிதரும்' என்றபடி நிர்வாணமுயற்சி செய்து வருகிறார்களென்று நாம் பௌத்தரை எண்ணிக்கொள்வதும் ஒருவாறு சரியாகும் என்க.

மறுபிறப்பைப் பற்றி அசோகர் இன்னவிதமாய் நம்பியிருந்தாரென்று நன்றாய் விளங்கவில்லை. ஆனால், மறுஜன்மத்தைப் பற்றி, அவர் அடிக்கடி குறித்திருக்கின்றார். மோக்ஷத்தைக்கூட, ஆசைகளில் ஒன்றாகவே அவர் எண்ணுகிறார். பார்பாராச் சிலாசாஸனத்தில் அவருடைய நோக்கம் இன்னதென்று வெளியாகிறது. எதிர்கால அச்சம் என்ற தலைப்பின்கீழ் வெளியிட்ட பகுதியில் நோயச்சம், விஷ வச்சம், காட்டுவிலங் கச்சம் முதலியவைகளைப் பற்றி அவர் எடுத்துக் காட்டி, அவ்வவ் வச்சநீக்கத்துக் குரிய வழிகளை அதி சீக்கிரத்தில் தேடவேண்டுமென்கிறார். அவைகளில் முக்கியமானவை, தர்ம நீதிநெறி விலக்கப்பழக்கமும், வேதப் புத்தகங்களைக் கருத்தறிந்து நடக்கப் படிக்காமையும், சோம்பலும்; சிற்றின்பப் பிரியமும், கூடாநட்பும், பிறவுமாம். இவ்வபாயங்களுக் குள்ளாகாமல் சாக்கிரதையா யிருக்க வேண்டுமென்று அவர், தம் மதத்தொண்டர்களை எச்சரிக்கிறார். பழைய வைதீக மதச் சித்தாந்திகளைப் போலவே

அவரும் மறுபிறப்பை நம்பியிருக்கவேண்டும் அவர் குறித்திருந்த முத்தி, பிறவி அழிந்து ஒடுங்குவதேயாம். அவரும் ஜைனர்களைப்போலவே மறுபிறப்பில் நம்பிக்கை வைத்து, அதுதான், மானவர், தானவர், பிறவுயிர்களாகிய எல்லாரையும் ஓரே கட்டாய்க் கட்டுகிறதென்று கூறுகிறார்.

அசோகருடைய அருமையான போதனைகளில் முதன்மையாகக் கருதவேண்டியவை, தம் மதத்தில் எல்லாரும் பிரவேசிக்கலாம் என்று அவர் அடிக்கடி வற்புறுத்திப் போதித்தும் எழுதிப் பரப்புவித்தும் வந்தனவாகும். இதை நாம் சிறப்பாகச் சொல்லுவதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அவர் விருப்பின்படி அதில் எல்லாரும் நுழைந்தார்களா என்கிற கேள்விக்கு விடை உடன்பாட்டிலேயே இருந்ததென்பது அந்தக் காலத்திற்கு அதிசயம் அல்ல. அசோகர் காலத்தில் பரதகண்டத்திலே பழைய இந்துமதந் தவிர வேறு முக்கியமான மதம் இல்லை. மகம்மதிய மதம், கிறித்துமதம் முதலிய பிறமதங்களெல்லாம் பிறகு வந்தவைகளேயாம். கிறித்துமத முதலிய மதங்களிற்போல இந்தியர்களுக்கு மதக் கட்டுப்பாட்டு விதிகள் இல்லை. இன்றைக்கு இந்தியன் ஒருவன் தன் இஷ்டப்படி தத்துவ விசாரணை செய்யலாம். தன் மனம்போல் கடவுள் ஞானம் உண்மையோ, இன்மையோ இரண்டிலொன்றைக்கொண்டு வாதிக்கலாம்; போதிக்கலாம் ; எது வேண்டுமானாலும் செய்யலாம். இப்படிப்பட்ட மத சுயேச்சை கிறித்தவர்களுக்கும், மகமதியர்களுக்கும் கிடையாது. இந்தியர்களுக்குச் சாதி பிரதானம். கிறித்தவர்களுக்கு மதம் பிரதானம். இந்துக்கள் பரமதப் பிரவேசத்தால் சாதி விலக்கம் அடைவதுபோலக் கிறித்தவர்கள் தம் மதக்கட்டளையில்விலகி வேறெண்ணினால்மதவிலக்கம் அடை

வார்கள். இந்துக்களுக்குச் சாதிபேத விலங்குமாட்டி வைத்திருக்கின்றது. மத விஷயக் கட்டு அத்தனை பலமாயில்லை. அது இப்போதும் இல்லை, அப்போதும் இல்லை. இந்தக் காரணத்தாலும், பௌத்த மதம் பரமதமா யில்லாமல் தந்நாட்டிற்பிறந்த தம்மவராகிய கௌதமர் கண்டதாகையாலும் அது, தம்மதக்கிளையே யாகையாலும். இந்துக்கள் அதைச் சாதிவிலக்கமாகிய அச்சமின்றிப் பெருமைப் படுத்திச் சேர்ந்தார்கள். அசோகர் காலத்தில் இருந்த இந்தியர்க்குத் தம் மதத் தலைவராகிய பிராமணர்கள் பாராட்டிவந்த சாதி யேற்றத்தாழ்வு பிடிக்கவில்லை. இந்த நவீன மதமாகிய பௌததமதத் தொளியில் சாதிவேற்றுமையிருள் தலைகாட்டாதிருந்ததால்; எக்குலத்தாரும் அதில் எளிதிற் புக இடமிருந்தது. கிறிஸ்துமதம் எங்கும் ஒரே விதமாய், இரக்ஷகரை நம்பிப் பாவ வறிக்கையிட்டு, மன்னிப்படைந்து, மோக்ஷம் புகுதல் என்ற முறையாற் பரவிவருகிறது. இந்துமதம் அப்படியன்று. அதன் நெறிகள் பல; இரக்ஷகர்கள் அநேகர். யார் யாரையேனும் பின்பற்றலாம். ஆகையால், பௌத்த நெறி ஒரு நன்னெறியாய்த் தோன்றித் தன்னைக் கண்டாராகிய கௌதமரையும், வளர்த்தாராகிய அசோகமன்னரையும் பின்பற்றியது; இந்துக்களில் அநேகரைச் சாதிபேத இருளில் தவிக்க விடாமல் எளிதிற் செலுத்த ஒளிமயமாய் விளங்கிற்று. அவர்க ளனைவரும் அதில் ஒழுங்காய்ப் படர்ந்து, நிர்வாண சுகப்பேறு பெற்றார்கள். இவ்வாறு எல்லாரையும் ஏற்றுக்கொள்ளும் அசோகரது பெருமையால் பௌத்த மத வளர்ச்சிக்கு அநுகூல முண்டாயிற்று. ஜைனமதமும் பௌத்தமதம் போலவே, பழைய இந்து மதக் கிளைகளிலொன்று. இதுவும் பௌத்தரைப்போன்ற ஓர் இந்திய

மகான் தாபித்ததாகும். பௌத்தப் புத்தகங்களும், சீன யாத்திரிகராகிய இட்சிங் எழுதின சிறு நூலும் பழைய இந்து மதக் கிளைகளைப் பற்றியும் மதாசாரங்களைப் பற்றியும் எழுதியிருக்கின்றன. அவைகள் எல்லார்க்கும் விளங்குவனவல்ல.

அசோகர், மதக்கிளை நெறிகளில் எதுவானாலும், ஒரே இடத்திற் கொண்டுபோய்விடும் என்பதைப் பற்றி நன்கறிந்தார். 'எல்லாம் மனச் சுத்தத்தைப் பற்றியும், வாக்குநலத்தைப் பற்றியும், தன்னடக்கத்தைப் பற்றியும், வினைத் தூய்மையைப் பற்றியுமே விவகரிக்கின்றன,' என்பதுணர்ந்த அசோகர், இந்துக்களுக்கும், பிராமணர்களுக்கும், ஜைனர்களுக்கும், பௌத்தர்களுக்கும் ஒருபடித்தான பெருமைசெய்து; அவர்களைப் போற்றியது நியாயந்தான். அவர், தமதுபொருளைப் பௌத்த சைத்தியங்களுக்கும் விராகருக்கும் தானஞ்செய்த போது, பிராமணர்க்கும் ஜைனர்க்குங் கூட மிதமின்றி வழங்கினர். இதற்கடையாளங்கள் ஒன்றுமில்லையாயினும், இது உண்மையென்னுங் கர்ண பரம்பரை உண்டு. அசோகர்க்குப் பிறகு வந்த சில அரசர்களும் இங்ஙனமே சமத்துவம் பாராட்டினர் என்பதற்கு ஆதாரம் உண்டு. கலிங்க நாட்டு வேந்தனாகிய காரவேலனென்பான் அசோகரைப்போலவே மிக்க பிரியவசனம்பேசி, எல்லா மதத்தாரும் சமம் என்று பெருமைப் படுத்தினன். அதற்குச் சிலாசாஸனம் உண்டு. மக்களையெல்லாம் சாதி வேற்றுமைப் பிரிவின்றிச் சமமாகப் பரிபாலித்து வந்த அசோகர், பிராமணர்களைப் * பூசுரர்கள் என்று அங்கீகரிக்கவில்லை. பிராமண குருமார்களுடைய அகந்தையை அடக்கு முறைகளை அனு

* பூ + சுரர் = பூலோகதேவர்கள்.

சரித்ததனால், அவர் தாம் செய்தது சரியென்று ஒப்பியிருந்தார். அதனால், பிராமணமத நூல்களில் அசோகரைப் பற்றி ஒன்றுமே காணப்படவில்லை. ஏதோ ஒன்றில் மட்டும் இருப்பதாகக் கேள்வி. பௌத்தமத சாஸ்திரிகள்தாம், அசோகர் ஆட்சியைப் பற்றி எழுதுகிறார்கள். அவர்கள் எழுதினதில் புத்தர் போதனைகள் மிகவும் தூக்கிவைத்துக் காட்டப்பட்டுள்ளன. பௌத்தசாஸ்திரிகள் கூறும் அசோகர் வரலாறுகள் தற்புகழ்ச்சியாகவும், உண்மைக்கு மாறானவைகளாகவும் இருத்தலால், நம்புவதற்கிடமில்லாதனவாகவும், வீணாசாரப் போலிநம்பிக்கைகளை விளக்குவனவாகவும் இருப்பதால், அவைகள் ஒரு பொருளாக மதித்து ஏற்றுக் கொள்ளக்கூடாதனவாக இருக்கின்றன. ஆயினும், அவைகள் அசோகருடைய உண்மை வரலாற்றுக்கு அநுபந்தங்களாக உதவுமென்க.

புராணங்களிற் கண்டபடி, இந்தப் பேரரசருடைய உண்மையான முழுப் பெயர் அசோகவர்த்தனர் என்பதாம். கூர்ச்சரத்தில் * உருத்திரதாமனுடைய சிலாசாஸனத்தில் இவர் பெயர் அசோகமௌரியர் என்றும், இவர்க்கு முன்னோர் பெயர் சந்திரகுப்த மௌரியரென்றும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

கல்வெட்டுப் பதிவுகளில் இவருடைய மத சம்பந்தமான பெயர், பிரியதரிசனர். பாலிபாஷையில் உள்ள பியாதசி என்பதையே இவர் இப்படி உபயோகிக்கிறார். இதன்பொருள், அருளுடையார் என்பதாம். இவருடைய காரண இடுகுறிப் பெயராகிய அசோகர் என்பதை இவர் எப்போதும் உபயோகிப்பதேயில்லை. கல்வெட்டுப் பதிவுகளை ஆதியிற் கண்டு

* கி-பி-150-ல் ஏற்பட்டது.

பிடித்தவர்கள், பிரியதரிசனர் என்பவர் அசோகர்தாமோ வென ஐயுற்றார்கள். இப்போது அத்தகைய ஐயங்களெல்லாம் அடிபட்டுப்போனதால், அசோகர்தாம் பிரியதரிசனர் எனத் தெளிந்திருக்கிறார்கள்.

தீபவமிசம் என்கிற சிங்களத் தீபவரலாறு அசோகரைப் பியாதசி யென்றே பேதமின்றிப் பேசுகிறது. இது கி-பி நாலாம் நூற்றாண்டிலெழுதப்பட்டது. கடைசியாக, புத்தர் அவதாரத் தலமாகிய உலும்பினித்தோப்பில், அசோகர் நாட்டிய கற்றூண், அவரே நேரிலிருந்து பதித்ததென்று, சீனயாத்திரிகராகிய ஹியூன்த்ஸியாங் என்பவரும் எழுதியிருக்கிறார். ஆதலால், இதிற்கண்ட சாஸனம் மற்றைச் சிலாசாஸனங்களைப்போலவே பியாதசி மகாராஜாவால் நேரிலிருந்தெழுதப்பட்டதென்பது பொருந்தியிருக்கிறது. இந்தச் சாஸனம் இன்னதென்றும், இதிற் பியாதசி யென்றே அசோகர், தம்மைத் தெரிவித்தெழுதி யிருக்கிறாரென்றும், இதை வாசிப்போர்க்கு முன்னமேயே தெரியும். ஆகையால், அசோகரே பியாதசி யென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை யென்று தெரிந்துகொள்க.

அசோகர் பாட்டனாகிய சந்திரகுப்தருடைய மௌரிய வம்சத்தின் ஆதியுற்பத்தி அவ்வளவு விவரமாய் விளங்கவில்லை. ஜஸ்டின் என்பார், 'இந்த வமிசத்திற்கு ஆதிபுருஷனாகிய சந்திரகுப்தன் தாழ்ந்த வகுப்பான்' என்று தக்க ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார். ஆகையால், இந்த வமிசம் பழைய அரச வமிசங்களிலும் ஒருபடி தாழ்ந்ததேயாகும். சில பௌத்தர்கள் இந்த வமிசத்தை அரசவமிசமென்று தப்பாகச் சொல்லுகிறார்கள். இன்னுஞ் சில பழம் புராணங்கள் சந்திரகுப்தரும் அசோகரும் ஆதிச் சிசுநாக

நந்த வமிசங்களைச் சேர்ந்தவர்களென்று விவகரிக்கின்றன. சந்திரகுப்தர், நந்தவமிசத்துக் கடைசி அரசனுடைய * அநுலோமகுமாரர் என்பது நம்பக்கூடியதாயிருக்கிறது. இவர் காலத்திருந்த மஹாபதுமனை, நந்தகுலத்துக்குக் கடைசியரசனுடைய † பிரதிலோம குமாரனென்று கொள்ள வேண்டும். இவனையே சந்திரகுப்தர் சண்டையிற்கொன்று சிம்மாசனமேறினர். சந்திரகுப்தர் நந்தவமிசத்துக் கடைசியரசனுடைய அநுலோம குமாரராகையாலும், மௌரிய வமிசத்து முதல் அரசராகையாலும் நந்தவமிசத்து இரத்தம் மௌரிய வமிசத்தில் ஓடிக்கொண்டிருந்ததென்பதற்கு ஐயமில்லை. வின்ஸெண்ட் ஸ்மித் என்பார் என்ன காரணத்தினலோ, இவ்விருவமிசங்களுக்கும் இரத்தக் கலப்பில்லையென்கிறார்.

அசோகருடைய உண்மைச் சரிதை, இவருடைய இருபத்தெட்டாமாண்டாட்சியோடு முடிகின்றது. அப்போதுதான் அவர் தமது ஏழாங்கற்றாண் பதிவைப் பதிந்து நாட்டினர். அதில் அவர் அதுவரையில் தர்ம நீதிநெறியை விளக்கத் தாம் செய்துவந்த கைங்கரியங்களையெல்லாம் தொகுத்துக் குறித்தார். அப் பரம தர்மவிளக்கத்தின் பொருட்டே அவர் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தமை உலகப்பிரசித்தம். வெகுகாலத்திற்குப் பிறகு நாட்டிய சிறு கற்றாண் பதிவுகள் சரித்திர சம்பந்த மானவைகளல்ல.

அசோகர், எப்போதும் தமது ஆட்சிக்காலத்தை முடிசூட்டுக் காலத்திலிருந்தே குறிக்கிறார். முடிசூட்டுத்

---

* அரசர்க்கு மகாராணிகளிடத்திற் பிறந்த பிள்ளைகள்.

† உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்தவன்.

தினத்தை வருஷந்தோறும் கொண்டாடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்த அவர், அன்று குற்றவாளிகளை விடுதலை செய்தல் முதலிய சீவகாருண்ய காரியங்களைச் செய்து வந்தார். சிம்மள சரித்திரங்கள் அவர் அரசாட்சி யேற்றமைக்கும் முடிசூடினமைக்கும் இடையில், எத்தனையோ காலத்தாழ்வு கற்பிக்கின்றன. இதை மறுப்பா ரில்லையேல், அந்தக் காலத்தாழ்வு நான்கு வருஷம் என்று ஒப்புக்கொள்ளலாம். அவர் ஆட்சி முடிசூட்டுக்கப்பால் இருபத்தெட்டாண்டுகளென்று சாஸனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கைச் சரித்திரங்கள் முடிசூட்டுக்குப் பிறகு அவர் ஆட்சி நாற்பது நாற்பத்தொரு வருஷங்களென்று கூறுவதும் ஆட்சேபத்துக்கிடமில்லாதிருக்கிறபடியால், ஒப்புக்கொள்ளலாம்போலிருக்கிறது. அசோகர்க்குச் சகோதர சகோதரியர் இருந்தார்களென்றுசாஸனங்கள் குறிக்கின்றன. ஆனால் அவர்தாம் பிம்பிசாரற்கு மூத்தகுமாரரோ, அல்லரோ என்னும் ஐயம் அவர்றால் நீங்கவில்லை. அவர் தம் குலமுதன்மையைப்பற்றித் தாம் ஒன்றும் பேசுவதே கிடையாது. தமது ஆண்மக்களை அவர் இருதரங்களாகவகுக்கிறார். ஒருதரத்திற்கு * இராணி மைந்தர் என்றும், மறு தரத்திற்கு † அரச மைந்தர் என்றும் பெயரிடுகிறார். அவருடைய இரண்டாம் இராணி காருவாகி என்பாள், தீவார னென்பவனை யீன்றாள். அரச குமாரர்கள் தாம் பாஞ்சாலத் தக்ஷசிலையிலும், மாளவத்து உச்சயினியிலும், கலிங்க நாட்டுத் தோசலியிலும், தீபகற்பச் சுவர்ண கிரியிலு மிருந் தரசாண்டுவந்தார்கள். இந்த வரலாறுகள் தவிர, அசோகர் குடும்பத்தைக் குறித்த வேறு உண்மை வரலாறு ஒன்றும் விளங்கவில்லை.

---

* இழிகுலத் தந்தைக்கும் உயர்குலத் தாய்க்கும் பிறந்தவன்.

† அரசர்க்குத் தமது வைப்பாட்டிகளிடத்திற் பிறந்த பிள்ளைகள்.

கி-பி. 400-ல் சீனயாத்திரிகராகிய பாஹியான், தர்ம விவர்த்தன னென்னும் அசோக குமார னொருவன் காந்தாரத்தி லாண்டதாக வெளியிடுகிறார். ஒருவேளை இவன்தான் தக்ஷசிலையில் இராஜப் பிரதிநிதியாக இருந்திருக்கவேண்டும். அல்லது குணாளன் என்னு மொரு மகன் அங்கு இராஜப் பிரதிநிதியாக இருந்திருக்கவேண்டும். இந்தக் குணாளன் திஷ்யரக்ஷிதை என்னுந் தனது சிற்றன்னையின் சூழ்ச்சியால் அங்கு இராஜப் பிரதிநிதியா யிருந்தான் என்றொரு பழங் கதை உண்டு. அதற்கு முந்தி இவன் தந்தையோடு அரண்மனையிலேயே யிருந்தான். இவன் அசோகருடைய மனைவியாகிய அசந்திமித்திரையின் மகன். அவள் உத்தமி; கணவனிடத்தில் விசுவாசமுடையவள். அவள் இறந்ததும் அசோகர் தமது தள்ளாத காலத்தில் திஷ்யரக்ஷிதை யென்னும் செருக்குடைய மங்கைப் பருவத்துச் சிறுமி ஒருத்தியை மணந்தார். அவள் புருஷத்துரோகி. ஆகையால், தனது சக்களத்திமகன் குணாளனது அழகின் மயங்கி, அவனைத் தன் வசப்படுத்த முயன்றாள். குணாளன் உடலழகின் மிகுந்தபடி உள்ளழகிலும் சிறந்து, நற்குணனாய் விளங்கி யிருந்தான். ஆகையால், தனது சிற்றன்னைக்கிணங்கினானில்லை. அதனால், அவள் அவனைக் கொல்ல நினைத்தாள். 'பார்த்தாயா! இவன் நம்மை மதிக்காமல் ஞாயம் பேசுகின்றான். நம்மை அவமதித்து வாழ எண்ணுகிறானே! இவனை அரண்மனையைவிட்டு அப்பாலகற்றி வஞ்சனையாய்க் கொல்லவேண்டும். நமக் கிணங்காதவன் உயிருடன் இருந்தென், இறந்தென்?' என்று துணிந்திருந்தாள்.

ஒரு நாள் அவள் தனது இளமை மருந்தால் அசோகரை மயக்கித் தேன்போல் தித்திக்கப் பேசி, 'காதலரே

நமது குணாளன் சற்குணாளன் என்பதிற் றடையில்லை; நீதி நெறியிலும் தவறாமல் நடக்கிறான்; மதிவாணன். இப்படிப் பட்டவனை அடிக்கடி குழப்பத்திற் கிடமான தக்ஷசிலைக்குப் பிரதிநிதி யாக்கினால், குழப்பமடங்கிக் குதூகல மாகும்' என்று பசப்பி விண்ணப்பஞ் செய்தாள்.

அவ் விண்ணப்பத்தை உண்மையாக மதித்த கிழக் கணவராகிய அசோகர், அப்படியே குணாளனை யழைத்து, தக்ஷசிலைக்குச் செல்லக் கட்டளை யிட்டார்.

அம் மகத்தான கட்டளையைப் பெற்ற குணாளன், தந்தைசொற்றவறாமல், உடனே புறப்பட்டுத் தக்ஷசிலைக்குச் சென்று, இராஜப் பிரதிநிதியாய் நீதியோ டாண்டுவந்தான். அங்கிருந்த கீழ் உத்தியோகத்தர் அனைவரும் அவன்மேல் உள்ளன்புடையவர்களாய், அவனுக்கு அடங்கிச் சேவித்து வந்தார்கள்.

பாடலிபுத்திரத்தி லிருந்து குணாளன் தக்ஷசிலைக்குப் புறப்படுமுன் தந்தையாரிடத்தில் விடைபெறச் சென்றிருந்த போது, அவர், 'குணாள! இங்கிருந்துவரும் என்னுடைய அதிகாரப் பத்திரங்கள் முதலியவைகளில் என்னுடைய பன் முத்திரை இருக்கப் பார்த்து வாங்கி, அவைகளிற் குறித்த படி தவறாமல் நட,' என்று எச்சரித்திருந்தார். அப்போது திஷ்யரக்ஷிதையும் அங்கிருந்தாளாகையால் இப்போதனையே தனது சூழ்ச்சிக்கு ஆதாரமாகக்கொண்டு, மோசப் பத்திர மொன்றில், 'இது கண்டவுடனே குணாளன் கண்களைப் பிடுங்கி, அவனை அவன் மனைவியோடு காட்டுக் கனுப்பிவிடுங்கள்,' என்று தீட்டி, அரசன் தூங்கப் பார்த்து, அவன் மேலிதழைப் பையத் திறந்து, முன்பன் முத்திரையைப் பதிந்து, அப்பத்திரத்தைப் பத்திரமாய்த் தக்ஷசிலைக்கு

அனுப்பிவிட்டாள். அது அவனுடைய மந்திரிமார்களுக்கு எழுதியிருந்ததாகையால், அதை அவர்கள் கண்டவுடனே நடுங்கிக் குணாளனுக்குக் காட்டக் கூசினார்கள். ஆயினும் அவர்களை அவன் வற்புறுத்தி, 'அமைச்சன்மீர்! ஏனோ அஞ்சுகிறீர்கள்? எது வரினும் எனக்கு வருவதன்றி இது வரையில் உமக்கு வருவது வழக்கமில்லையே! இன்றைக்கு ஏதோ புதுமுறையாக உமக்கு நேரில் வந்திருப்பதனால், இந்தப் பத்திரத்தை நீங்கள் எனக்கு மறைத்துவைப்பது நியாயமன்று. எத்தனைதான் இரகசியமானாலும் 'நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை' என்றபடி எனக் கொளி யாமற் சொல்லுங்கள். இன்றேல், அதை இப்படிக் காட் டுங்கள்,' என்று சொல்லிக்கொண்டே, அதை வலுவிற் பிடுங்கி வாசித்தான்.

உடனே அவன் அவர்களை நோக்கி, 'அமைச்சன்மீர்! என்னைப்பெற்ற தகப்பனாரே இங்ஙனங் கட்டளையிட் டிருப் பதனால், அது எதுவானாலும் நடந்தே தீரவேண்டும். அவர் பற்குறியே இக்கட்டளையின் உண்மையை விளக்குகிறது. ஆகையால், ஏதோ தவறு நடந்திருக்கிறதென் றெண்ணவும் இடமில்லை' என்று கண்ணிழந்து காதலியோடு கானகம் போகத் துணிந்தான்.

அது தெரிந்த மந்திரிமார், அவனை நோக்கி, 'ஐயனே! அங்ஙனம் செய்யவேண்டா. நாங்கள் ஒன்று சேர்ந்து அரசர்க் கெழுதி, இக் கட்டளையை மாற்ற மன்றாடுவோம். சற்றுப் பொறுக்கவேண்டும்,' என்று கெஞ்சினார்கள்.

அதுகேட்ட குணாளன், 'நீவிர் சொல்லுவது ஆகாத காரியமும், முடியாத காரியமுமாகும். ஆகையால், நீவிர் இதற்கஞ்சன்மின். அஞ்சுவீராயின், யானே அக்கட்டளை

யை நிறைவேற்றுவேன்' என்று சொல்லி, அவர்களை விலக்கி, அங்கிருந்த கிழமகனொருவனை விளித்துத் தன் கண்களைப் பிடுங்கிவிடக் கட்டளையிட்டான். அவனும் அதைக் கேட்டவுடனே அஞ்சி நடுங்கினான்; ஆயினும், அரசக் கட்டளையை மதித்துக் குணாளன் கண்களைக் கூச்சத்தோடு பிடுங்கிவிட்டான். உடனே குணாளன் தன் கட்குழிகளில் இரத்தந் ததும்பத் தனது மனைவியை அழைத்துக்கொண்டு, இராமனைப்போல் வனம் போனான். வனத்தில் பழங் கிழங்கிலை யுண்டு நெடுநாள் தவித்துத் திரிந்து, “இரக்கத் துணிந்துவிட்டேன் எனக்கேதுங் குறைவில்லையே” என்றபடி நாட்டிற் பிரவேசித்து, அங்கங்கு மனைவி வழிகாட்டச் சென்று, பாட்டுப்பாடிப் பிச்சையேற்றுண்டு பிழைத்துக் காலம் போக்கினான்.

இப்படி அலைந்து திரிந்த கணவன் மனைவியி ருவரும் ஒரு நாள் பாடலிபுத்திரத் தரண்மனையருகில் பிச்சையேற்க வந்தார்கள். அப்போது குணாளன் தன் வழக்கம்போல், பின் வருகிறபடி பாடிக்கொண்டே பையப்பைய அரண்மனைக்குள்ளே நுழைந்தான்.

‘ஆவா, இந்த அநீதியு முண்டோ!
அரச குமாரனும் யானும் இப்படிப்
பனியிலுங் குளிரிலும் பசியிலும் நிசியிலும்
பாடுபட்டு வாடுவ துண்டோ!
எந்தன் மகனியான் ஏழை யாகி
இரந்து திரிந்தே யேங்கலு முண்டோ!
என்னை யிப்படி வின்னல் செய்தார்
அநீதிசெய் தாரென் றறிவிக் கேனோ!
குணாளனு மென்னைக் குற்ற வாளியாக்
கொண்டது தவறெனக் கூறி யதற்குத்

தக்க விமோசனந் தான்தே டேனே!
அரசர் இதனை அறியமாட் டாரோ!
அறிந்தா லிந்த அநீதி மாறி
மனைவியு நானு மகிழ்ந்திருப் போமே.'

குருடன் இதைப் பெருங் குரலெடுத்துத் திருப்பித் திருப்பி மேல்நோக்கிப் பாடிக்கொண்டே யிருந்தான்; அழுதான்; வீணையிற் பொருத்தித் திருப்பித் திருத்தமாய் அழுத்தி அதிகப் பெருங் குரலெடுத்து உருக்கமாய்ப் பாடினான்.

மேன்மாடியிலிருந்த அரசர் இதைக் கேட்டார். 'ஆகா! இது யார் குரல்? நமது மகன் குணாளன் குரலோசையைப் போலிருக்கிறதே. இதுவரையில் அவன் தக்ஷசிலையி லிருக்கிறானென்றல்லவோ நாம் எண்ணியிருந்தோம்! இங்கெப்படி வந்தான்? ஏன் வந்தான்? இப்படியா வருவான்? ஏதோ நேர்ந்திருக்கிறது. யாரோ அதைச் செய்திருக்கிறார்கள். இராஜாங்க காரியங்களை நாமே நேரிற் கவனிக்கச் சக்தியற்றிருத்தலே இப்பிழைகளுக்கெல்லாங் காரணம்' என்றெண்ணி அந்த அந்தகனை அழைத்துவர ஆள்விட்டார்.

'ஆளோடுவந்த அந்தகனும் மனைவியும் வேறு யாருமல்லர்; தமது மைந்தனும் மருகியும்' எனக்கண்ட காவலர்க்கு நெஞ்சம் உருகி நினைவு தடுமாறிற்று; திக்பிரமை கொண்டார். பிறகு, தெளிந்தவர், மைந்தனை நோக்கி, 'குணாள! உனக்கு இப்பிழை செய்தார் யார்? யாரோ உன்னை மோசஞ்செய்து உன் கண்களை நாசஞ்செய்தார்கள். அவர்களை ஒளியாமற்சொல்' என்று ஆத்திரமாய்க் கேட்டார்.

அதற்கு, அவ் வந்தகனாகிய இளவரசன், 'எந்தாய், இப்படி நான் சிலகாலம் அனுபவிக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் அனுபவித்து வருகிறேன். தங்களுக்கு மைந்த

னுகிய நான் செய்யவேண்டிய கடமைகளிற் பிழைத்தேனோ, என்னவோ! ஆகையால் இப்படிக் கண்ணிழந்து கவலைப்படு கிறேன். சுமார் ஆறுமாதத்திற்கு முந்தி, தக்ஷசிலையிலிருந்த எனக்குத் தங்களிடத்திருந்து வந்தபடி ஒரு கட்டளைப் பத்திரம் வந்தது. அதில் தங்கள் பற்குறியும் பதிந்திருந்தது. அதிற்கண்டபடி, அடியேன் என்னைப் பெற்றோராகிய தேவரீருடைய கட்டளையைக் கடக்க மாட்டாதவனாய்க் கண்ணிழந்து கானகஞ் சென்று மனைவியோடலைந்து திரிந்து இங்கு வந்திருக்கிறேன்' என்று பணிந்து கூறினன்.

பிழையிழைத்தார் இன்னாரென, அரசர்க்கு அக்கணத்திலேயே சரியாய்த் தோன்றிற்று; திஷ்யரக்ஷிதையே அது செய்தாளெனத் தெரிந்துகொண்டார்; அவர் வேறொன்றும் விசாரிக்கவில்லை; கொலையாளிகளை அழைப்பித்து, அவளை உயிரோடு கொளுத்திவிடக் கொடுந்தண்டனை விதித்தார். அந்தக் கொடுமையிற் சம்பந்தப்பட்டிருந்த பிறரும் தக்க தண்டனை அடைந்தார்கள். உத்தியோகத்தர்களிற் சிலரைத் தள்ளிவிட்டுச் சிலரை தேசநீக்கஞ் செய்தார். குடி-ஜனங்களிற் சிலரை வதைத்துச் சிலரை இமாசலத்துக்கப்பாலுள்ள காட்டுக்கு அனுப்பிவிட்டார்.

அக்காலத்தில் பிக்ஷு ஒருவர் திருவரசுக் கருகிலிருந்த பௌத்த விகாரத்தில் இருந்தனர். அவர் பெயர் கோஷாமுனிவர். அவரிடத்திற்கு அரசர் குணாளனைக் கொண்டுபோய், 'ஐயனே, இந்த என் மகன் குணாளன், இரண்டு கண்களையும் இழந்து தவிக்கிறான். இந்தக் கொடுமை செய்வித்தாரைக் கண்டுபிடித்து நான் தண்டித்தேன். தேவரீர் இவன் இழந்த கண்களைப் பெறுமாறு திருவருள் செய்க' என்று வேண்டினர்.

அதற்கந்த பிக்ஷுப்பெரியார், 'அரச, அஞ்சற்க. நாளைக்கொரு பௌத்தப் பெரியார் கூட்டங்கூடவேண்டும். அதற்கு வருவார் ஒவ்வொருவரும் தத்தங் கண்ணீரைப் பிடிக்க ஒரு பாத்திரங் கொண்டுவரவேண்டும். அப்போது யாம் பகவத் தர்மத்தைப் பற்றிய பிரசங்கம் செய்வோம்' என்றார்.

அப்படியே மறுநாள் அங்கொரு கூட்டங்கூடிற்று. கணக்கற்ற ஆண்களும், பெண்களும் வந்திருந்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் ஒரு பாத்திரம் தப்பாமலிருந்தது. கோஷாமுனிவர் அதிக அற்புதமாகவும் உருக்கமாகவும் பிரசங்கமாரி பொழிந்தார். அவரவர்க்கும் உள்ளத்திற் பரமானந்தவெள்ளம் பெருகிக் கண்ணீர் ஆறாய்ப் பாய்ந்தது. அதை அவர்கள் அதி சாக்கிரதையாய்ப் பாத்திரங்களில் பிடித்துக்கொண்டார்கள்.

உடனே முனிவர், ஒரு பொற்பாத்திரத்தில் அக்கண்ணீரை ஊற்றிக் கலந்து, 'இப்போது இங்கு நான் பிரசங்கஞ்செய்த விஷயம் புத்தப் போதகத்திற் பரமரகசியமானது; இஃது உண்மையில்லையேல் குணாளன் கண் பெறுவதில்லை. இது உண்மையானால், தூயதானால், இக்கண்ணீரால் அலம்பினவுடனே குணாளன் பார்வை பெறுக' என்று வாழ்த்திப் பொற்பாத்திரத்தைக் குணாளன் கையிற் கொடுத்தார்.

அதை அவன் வணங்கி வாங்கி மிகவும் பயபக்தியுடன், வறியவன் வைப்பெடுத்தாற்போல மகிழ்ந்து அதனால் தன் கட்குழிகளைக் கழுவினான். உடனே அவற்கு விழிகள் வளர்ந்து தெரிந்தன.

இது இந்திய புராணங்களிற் கண்டபடி இங்கு வரைந் திருக்கிறது. காஸ்மீரத்துச் சரித்திரக்காரர், தக்ஷசிலைக் கதிபதியா யிருந்த லௌகண் என்னு மற்றொருமகன் அசோ கர்க்கிருந்தானெனச் சொல்லுகிறார். இவன், பிராமண சந்நி யாசியாய்ப் பேர் எடுத்தவனும்.

விஷ்ணு புராணப்படி சுபார்சுவன் என்னும் அசோகர் மகன் அவர்க்குப் பிறகு அரசாண்டானென்றும், அவற்குப் பிறகு அவன்மகன் தசரதன் என்பான் அரசாண்டான் என்றும் தெரிகின்றன. மௌரிய வமிசத்தில் தசரதன் என் பான் ஒருவன் இருந்தான் என்பது உண்மைக்கு உரியதா கும். நாகார்ஜுனிக்குகையிலுள்ள சாஸனங்களால் இது நன்றாய் விளங்குகிறது. அச் சாஸனங்கள் பிராமண ஆஜீவ கர்களுக்குத் தசரதன் குகாமடங்கள் வழங்கின விதத்தை விவரிக்கின்றன. அச் சாஸன லிபிகள் அசோக சாஸன லிபி களைப் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. பௌத்தமதக் கர்ண பரம்பரைப்படி அசோகர்க் கடுத்தபடியிற் பட்டத் துக்கு வந்தவன் குணாளன் மகன் என்று தெரிகிறது. இப் படியானால், தசரதன்தான் குணாளன் மகன் என்று கொள்ளவேண்டும். விஷ்ணுபுராணப்படி இவன் சுபார்சுவன் மகன் என்பதும், அசோகர்க்குப் பிறகு சுபார்சுவன் ஆண் டான் என்பதும், அதன்பிறகு இவன் வந்தான் என்பதும் சந்தேகமாய் முடியும். எது எப்படியானாலும் நாகார்ஜுனிக் குகாசாஸனத்தில் உள்ளதை நாம் ஒப்புக்கொள்ளவேண் டும். அதிற்கண்டபடி தசரதன் ஆசீவகர்க்குக் குகைமடம் அளித்துதவியது, அசோகரைப் பின்பற்றியதாயிருப்பதால், அசோகர்க்குப் பிறகு அவனே ஆண்டிருக்கவேண்டும் என்று கொள்ளத் தடையில்லை.

இலங்கைச் சிறு புராணங்கள், அசோகருடைய அரு மேலாம மக்களாகிய மகேந்திரன், சங்கமித்திரை என்பவர்க ளாலேயே, இலங்கை, பௌத்ததர்ம நீதிநெறியிற் றிரும் பிற்றென்று கூறுகின்றன. இந்த இரு மக்களும் பிறந்த வரலாறுகளை இந்நூலின் இரண்டாம் அதிகாரத்திற் காண்க. இவர்களின் மாதா, தேவி யென்னும் பெயரை யுடைய விதிசாநகரத்து வணிக மாதென்று அங்கு விவரித் திருக்கின்றோம்.

இந்த மகேந்திரன் சங்கமித்திரை என்னும் சகோதர ரிருவரும் இலங்கையைப் பௌத்த நெறியிற் றிருப்பின துண் மையாலும் அத்தேசத்துச் சிறு புராணங்கள் அவர்களைப் பற்றிப் புனைசுருட்டாகச் சில பொருந்தா விஷயங்களையும் புகுத்தி யெழுதியிருக்கின்றன. மகேந்திரன் ஆகாயத்திற் பறந்து அநுமானைப் போலக் கடலைத் தாண்டி இலங்கைக் குச் சென்றான் என்பதுபோன்ற இயற்கைக்கு மாறான செய்திகளை அடுக்கி அப் புராணங்கள் யெழுதியிருக்கின் றன. * குரங்குகளுக்குத் தாம் மரம்விட்டு மரந்தாவுஞ் சுபாவமுண்டு. ஆகையால் அநுமார் தாண்டினார் என்று பழைய இந்துமதப் புராணங்கள் எழுதிவைத்தன. மகேந்தி ரன் மனிதனாயிற்றே! இவன் எப்படித் தாண்டி யிருப் பான்? ஒருவேளை மகேந்திரனுடைய மனந் தாண்டியிருக் கும். அது தாண்டினதை அவன் தாண்டினனென்று எழுதிவைத்தனர்போலும்.

---

* பௌத்தரில் சித்திபெற்றவர் சாரணர் என்று வழங்கப் படுதலும், அவர்கள் ஆகாயவழியே சென்று தர்மோபதேசஞ் செய்வதாகவும், எண்ணியவற்றை அளிப்பதாகவும், பௌத்தர் கருதினரென்பதும், மணிமேகலை (10, 24,26 காதை), சிலப்பதி காரங்களாலும் (10, 11, 14 காதை) புலப்படுகின்றன.

சங்கமித்திரையென்பது பௌத்த சங்கத்தை நேசிப்பவள் என்று பொருள்படும். இப்படிப்பட்ட பெயரொன்று இருந்ததென்பதே சந்தேகத்துக்கிடமாயுள்ளது. அதுவும் அசோகருடைய மகளின் பெயராயிருந்தது என்பது பெருஞ் சந்தேகம். ஆகையால் பௌத்த பிக்ஷுக்களுடைய கர்ணபரம்பரைக் கதை இதுவென்றுகொண்டு இதிற்கூடிய மட்டும் நம்பத்தக்கவைகளை இங்கெழுதி, நம்பத் தகாதவைகளைத் தள்ளுவோமாக.

மகேந்திரன் என்னும் பெயருடையவன் அசோகர்க்குத் தாய்வழித் தம்பியாயும் ஒருவன் இருந்தானென்று புராணங் கூறுவதால் எதையும் இதுதான் என்று துணிவதற்கில்லை.

அசோகர், தம் பிதா பிம்பிசார மகாராஜா இறந்ததைக் கேட்டு, உச்சயினியை விட்டுப் புறப்பட்டபோது, அங்குத் தம்முடைய மனைவியாகிய தேவியை விட்டு, மக்களாகிய மகேந்திர சங்கமித்திரைகளைத் தம்முடன் அழைத்துக் கொண்டு பாடலி புத்திரஞ் சென்றார். அங்கே சங்கமித்திரை, தன் அத்தை மகன் அக்கினிபிரமனை மணந்து, சுமானன் என்பவனைப் பெற்றாள்.

அசோகர் பட்டங் கட்டிக்கொண்ட நான்காமாண்டில், அவர் தம்பி திஷ்யனும், சகோதரிமகன், அக்னிபிரமனும், அவருடையபேரன், சுமானனும் பௌத்தமதக் கோஷ்டியிற் சேர்ந்தார்கள். அரசர், தாம் கட்டளையிட்டிருந்த எண்பத்துநாலாயிரம் தூபிகள் கட்டிமுடிந்ததைக் கேட்ட சந்தோஷத்தால் ஒரு பௌத்தமதக் கூட்டங் கூட்டி அதற்கு மத்தியில் தாமிருந்து சந்தோஷங் கொண்டாடினார்.

இராஜாங்கப் பிரதிநிதியா யிருந்த திஷ்யன் பௌத்த மதக் கோஷ்டியிற் சேர்ந்தபிறகு அவனுக்கு பதிலாக மகேந்திரனைப் பிரதிநிதி யாக்க; அரசர் எண்ணினார் இவ்வெண்ணத்தை யுணர்ந்த திஷ்யன் தன் சீடனாகிய மகேந்திரன் மதகோட்டியிலே யிருக்கவேண்டுமென்று அரசரை வேண்டினான். அவ்வேண்டுகோளின்படியே அவர் மகேந்திரனை மட்டு மன்றி, சங்கமித்திரையையும் மதகோட்டியிற் சேர்த்துவிட உத்தரவளித்தார். அப்படியே இருவரும் சேர்ந்தார்கள். இவர்கள் சேர்ந்தது அசோகர் முடிசூட்டுக்குப் பிறகு ஆறா மாண்டாட்சியில் என்றுணர்க.

அசோகர் முடிசூட்டுக்குப் பிறகு எட்டாமாண்டாட்சி யில் பௌத்தமதத் தொண்ட ரிருவர் இறந்தனர். அவர்கள் இறப்பை முன்னிட்டு எத்தனையோ தொண்டர்கள் கூட்டங் கூடிப் பிரசங்கமாரி பொழிந்து, அவர்களுடைய நிரியாண தசை நிர்வாண தசையாக வேண்டுமென்று வாழ்த்தினார்கள். அப்போது அசோகரே அதற்கெல்லாம் முதல்வராயிருந்து நடத்தினார். 'அரசரெவ்வழி அவ்வழிக் குடிகள்' என்றபடி வெகுஜனங்கள் வந்து பௌத்தர்களாய் அந்தக் கோட்டி யிற் கூடினார்கள். அப்படிக் கோட்டி பலத்ததனால் கக்ஷிப் பிரதிகக்ஷிகள் உண்டாய்க் கலகத்துக்குக் காரணமாயின. சில போலித் தொண்டர்கள் கூடாவொழுக்கத்திற் பிரவேசித்தார்கள். பிராமணர்களைப் போலக் குளிக்காத வனைத் தொடக்கூடா தென்றும், மேலழுக்குப் போகத் தேய்த்துக் குளித்தவன் பரிசுத்தவானென்றும், அங்ஙனங் குளியாதவன் அபரிசுத்தனென்றும், மேல்மாசு கழுவுதலே மோக்ஷமென்றும், பாவியானாலும் ஒருவன் இறந்தபின்,

* ஒருவர் பெயர் சுமித்தரர், மற்றொருவர் பெயர் திஷ்யர்.

அவன் மகன் அவனுக்கு எள்ளுந் தண்ணீரும் இறைப்ப தால், அவன் நற்கதிபெறுவானென்றும், வெங்காயந் தின் பது பாவமென்றும், வெள்ளுள்ளி தின்பது தோஷமென் றும், வெள்ளைக்கத்தரிக்காய் கோவமென்றும் யாகஞ்செய்து, ஆட்டையு மாட்டையுங் கூடுமானால் மனிதனையும் வதைக்க லாமென்றும், பறையனைத் துரத்தி யொதுக்கவேண்டு மென்றும், சிலர் காணச் சிலர் அன்னமுண்ணக் கூடா தென்றும், ஓரே குலத்திலும் குடும்பத்திலும் உள்ளவர்களி லேயே சிலர் உண்டபின்பே சிலர் உண்ணவேண்டுமென்றும், முன்பூசை பின்பூசையென்றும், முன்மாலை பின்மாலையென் றும், மக்களிற், சிலர்உயர்ந்தோர், சிலர் தாழ்ந்தோரென்றும், தந்தைபிராமணன் தாயார் நாலாங்குலத்தவள், தாழ்ந்தவ ளென்றும் விந்தையும் விநோதமும் அசம்பாவிதமும் அசக் கியமுமான போலியாசாரங்கள் தலையெடுத்துக்காட்டி ஒவ் வொன்றாய் வந்து நுழையத்தொடங்கின. ஆனால் பௌத்த மத சங்கவளர்ச்சிக்கு மூலதனமட்டும் கணக்கின்றிக் குவிந் தது. எல்லாரும் வீதம் ஏற்படுத்திக்கொண்டு பொருளுதவி செய்தார்கள். செய்தும் என்னபலன்! மேற்குறித்தபடி வீணுசார அநாசாரங்கள் விருத்தி யானபடியால் உண்மைத் தர்ம நீதியாசாரங்களுக்குக் கேடுண்டாயிற்று. 'கிணறுவெட் டப் பூதம் புறப்பட்டதுபோல்' நல்லது செய்ய நாடின அசோகமுயற்சி சோகமுயர்ச்சி யாயிற்று.

இந்த ஒழுங்கீனம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண் டேபோனதால், 'ஒன்றவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை ஓட் டிற்று' என்றபடி உண்மைத் தொண்டர்களைப் போலித் தொண்டர்கள் கெடுத்துத் தங்கள் எண்ணிக்கையில் ஏறிக் கொண்டே போனார்கள். இதனால் மடங்கள் முதலிய

இடங்களில் நடக்கவேண்டிய உண்மைச்சடங்குகள் ஒழிந்து குழப்ப முண்டாயிற்று. அப்போது அரசர் அதிற் பிரவேசித்து எந்தச் சடங்கும் வேண்டாவென்று எல்லாவற்றையும் நிறுத்தினர். இப்படி ஏழுவருடகாலம் சென்றது. அரசர் தம்பியாகிய திஷ்யமுனிவரும் அதுபொறுராய், மதத்தலைமைப் பதவியை மகேந்திரனிடம் ஒப்புவித்துச் சென்று கங்கை பிறக்கும் மலைகளுக்கிடையிற் றங்கியிருந்தார்.

பிறகு அவர், அரசர் வேண்டுகோளால் திரும்பி வந்து, போலியாசாரக் கொச்சை மக்களைத் துரத்திக் கதாவத்து என்னும் சிறுநூலியற்றிப் பாடலிபுத்திரத்தில் அசோகாராமத்தில் ஒரு பெரும்பௌத்தக் கூட்டம் கூட்டினர். இந்தச் சம்பவங்கள் கௌதமர் நிரியாணத்துக்குப் பிறகு இருநூற்று முப்பத்தாறுமாண்டிலும், அசோகர் முடிசூட்டுக்குப் பிறகு பதினேழுரையா மாண்டிலும் நேரிட்டன.

இதே வருடத்தில்தான், தேவனம்பியத் திஷ்யனென்னும் இலங்கை யரசன் அரியாசனம் ஏறிப் பௌத்தமதப் பெருந்தொண்டனும் அசோகர்க் குகந்த பெருந் தோழனுமாயினன். இருவரும் எப்போதும் ஒருவரை யொருவர் காண வாய்க்காமற் போயினும், அவர்களுடைய ஒருமையும் உள்ளன்பும் பெருமையாக வளர்ந்துகொண்டே வந்தன. இலங்கை யரசன் தனது அன்பின் நிலையையும், இன்பின் இருப்பையும் அசோகர்க்கு எண்பித்துக் காட்டப் பரத கண்டத்துக் கொரு பௌத்தமதத் தொண்டர் கூட்டத்தை அனுப்பினன். அதற்குத் தலைவனைத் தன் தமையன் மகன் மகா அரித்தன் என்பவனை நியமித்திருந்தான். ஏழு நாட்களில், அத் தொண்டர் கூட்டம் தாமலிப்தி என்னும்

வங்கநாட்டுத் துறைமுகத்தைச் சேர்ந்து, அதற்கப்பால் ஏழு நாட்களில் அசோக ரரண்மனையை அடைந்தது. அசோகர் அதற்குப் பெரு விருந்து செய்து வரவேற்றுப சரித்து, தமக்கு இலங்கையரசன் அனுப்பியிருந்த நன் கொடைப் பரிசுகளை விரும்பியேற்றுத் தமது முழுமதி யோடு கொண்டாடி மகிழ்ந்து, தாமும் அவைகளுக் கீடாக அநேக நன்கொடைக ளளித்தார். வந்த கூட்டத்தார் ஐந்து மாதகாலம் அரண்மனையிற் றங்கியிருந்து, விடைபெற்று, ஆறுமாதம் தாம் வந்தவழியே திரும்பச் சென்று ஜென்ம தேசம் சேர்ந்து, தங்களரசற்கு அசோகர் அனுப்பின சமா சாரக் கடிதத்தைக் கொடுத்தார்கள். அதை அவன் பின் வருகிறபடி வாசித்து மகிழ்ந்தான்.

நான், புத்தர்க்கும், * தர்மத்திற்கும், † சங்கத்திற்கும் அடைக்கலமா யிருக்கிறேன். சாக்கியகுல தீபமாகிய பகவான் அருளிய நெறியில் ஒழுகும் உத்தம சீடனாக உறுதிசெய்திருக்கிறேன். உம்முடைய சித்தத்தையும் ‡ இம் முத்திரமணியின் வழியே திருப்பி நிரப்புக. இதுவே என் னுடைய உன்னத மதமாகும். பகவானைச் சரணடைக.

மூன்றுவது மதக்கூட்ட முடிவடைய ஒன்பது மாதங்க ளாயின. அசோகர் தம்பியும், மொக்காளி மைந்தரும்,

---

* பக்திதர்ம நீதிநெறி

† அந்நெறியிற்படருவோர்

* புத்தர் (1)
மதம் (2)
கோட்டி (3)

‡ புத்த தரும சங்கங்களைத் திரிமணி என்பது பௌத்தர் கொள்கை; புத்ததன்ம சங்கமென்னும், முத்திறமணியை மும்மை யின் வணங்கி ' என்றார் சீத்தலைச் சாத்தனாரும் (மணிமேகலை 10—3—4)

அசோக பௌத்த மதாதிபதியுமாகிய திஷ்யர், பௌத்த மதத்தைப் பர தேசங்களிலும் பரப்பவேண்டுமென்று தீர்மானித்துக் காந்தாரத்துக்கும் காஸ்மீரத்துக்குந் தொண்டர் கூட்டத்தைச் செலுத்தினர். இன்னுமவர், மகிஷ மண்டலத்துக்கும், (Mysore) வனவாசிக்கும் (N. Canara) அப்பராந்தகத்துக்கும் (N. Bombay) மகாராட்டிரத்துக்கும், யவனதேசத்திற்கும் (N. W. India) இமாசலப் பிரதேசத்துக்கும் சுவண பூமிக்கும் (Pegu) இலங்கைக்கும் அவ்வாறே வெவ்வேறுகூட்டத்தை விடுத்தார்.

இலங்கைக்குச் சென்ற தொண்டர்கூட்டத்தில் மகேந்திரனும் அவனோடு சுமனனுட்பட்ட வேறு ரைவரும் தலைமை வகித்தார்கள்.

போகும்போது மகேந்திரன் இடைவழியிற் றன் தாயையும் அவள் சுற்றத்தையுங் கண்டு செல்லத் தன் தந்தையாராகிய அசோகரது அனுமதி பெற்றிருந்தானகையால், அதற்காக ஆறுமாதங் கழித்தான்.

தன் தாயை அவன் விதிசகிரிவீட்டிற் கண்டான். கண்டவுடன் அவனை அவள் உள்ளன்போடு மகிழ்ந்து வரவேற்று, தான் கட்டியிருந்த விகாரமடத்தில் அவற்கு இடங்கொடுத்து உபசரித்தாள். மகேந்திரனது உபதேச மகிமையால்; அவன் தாயின் அத்தைபேரனாகிய பந்து என்பான் பௌத்த சங்கத்திற் கலந்தான். பிறகு அங்கு அவன் ஒரு மாதகாலந் தாமதித்துப் பந்து உட்பட்ட தனது கோட்டியோடு ஆகாயத்திற் கிளம்பி அந்தர மார்க்கத்தில் அன்னப்பறவைபோற் * பறந்து சென்று சிங்களம் (Ceylon) சேர்ந்து (மிஸ்ஸா மலைமேல்) இறங்கினன்.

---

* இதுவே யிதற்கு முந்தி யிவனைப்பற்றி யெழுதினபோது அசம்பாவிதமென்றது.

சிங்களத் தொண்டர் கூட்டத்தலைவனாகிய மகேந்திரனுடைய முதற் பிரசங்கவொளியால், அத்தீவரசனுடைய மனவிருளிரிந்து, சங்கத்திற்சார்ந்து உண்மைப் பௌத்தனானான். அவனோடு நாற்பதினாயிரம்பேர் தொடர்ந்துவந்து தொண்டரானார்கள். அனுலையென்னும் அவ்வரசன் மகளும் தனது ஐந்நூறு பரிவாரங்களோடு அக்கோட்டியிற் கலங்க விரும்பினாள். ஆயினும் பெண்களைச் சங்கத்திற் சேர்க்க ஆண் தொண்டர்களுக்கதிகார மில்லை; ஆகையால் தான் சங்கமித்திரையாற் கோட்டியிற் கலக்கலாம் என்றுதெரிந்துகொண்டு சங்கமித்திரையை அங்கு வரவழைக்கத்தக்க ஏற்பாடு செய்தாள்.

இதுபற்றி இலங்கை அரசன் ஆழ யோசித்துத் துணிந்து மறுபடியுமொருமுறை தன்னுடைய தமையன் மகன், மகா அரித்தன் என்பவனை அசோகரிடத்திற் கனுப்பிச் சங்கமித்திரையையும் மஹாபோதியின் கிளை யொன்றையும் கொண்டுவரக் கட்டளையிட்டான். அசோகர்க்குத் தம தருமைமகள் சங்கமித்திரையைப் பிரிய மனமில்லை யாயினும் அவர் பெரிய ஆற்றுமையோடு அவளை அனுப்ப உடன்பட்டுத் தமது அரண்மனையி லிருந்து கோலங்கொண்டு சென்று, மஹாபோதியை அடைந்து, அதன் கிளைகளி லொன்றை விசேடச் சடங்குகளுடன் தறிக்கத் தொடங்கினார்.

பற்பல அற்புதக்குறிகள் நிகழ, மகாபோதியின் கிளைத் தறிப்பு முடிந்தது. அங்கு நின்றும், ஒரு பெருங்கோலம் கௌரவமாய், அரசரது நேரதிகாரத்தின்கீழ் சேனைகள் சூழச் சங்கமித்திரையோடு போதிக்கிளையையும் தாங்கிச் சென்று ஆடம்பரத்துடன் தாமலிப்தித் (Tamluk) துறையை அடைந்தது.

போதிக்கிளையைத் தாங்கின கப்பல் அநாயாசமாய்த் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு தாமதமில்லாமலோடிற்று அதைச்சூழ,*யோசனைவட்டத்தில்தண்ணீர் அலையில்லாமல் ஓய்ந்திருந்தது. அதன் மேற்புறத்தில் அங்கங்குப் பற்பல வண்ணமலர்கள் அந்தமாய் மலர்ந்து அருமணம் வீசின. அந்தரத்திற் கீதநாதம் கிளர்ந்தெழுந்தது. இப்படி அதியற்புதமாய் அந்தக் கிளை சிங்களத்துறையைச் சேர்ந்தவுடன் அதை அவ்வரசனுட்பட்ட எல்லாரும் சர்வ மங்களாகாரமாய் எதிர்கொண்டு வந்தெடுத்துக் கோலத்தோடு நகர்வலம் சென்று மகாமேகத் தோட்டத்தில் நாட்டினார்கள். இந்தத் தோட்டந்தான் அரசன் தனது நவீன மதக் கோட்டிக்காக ஏற்படுத்திவிட்டிருந்தது. கூடிய சீக்கிரத்தில் அக்கிளை வேரூன்றித் தளதளவென்று தழைத்து, எட்டுத் திக்கிலும் எட்டுச் சிறுகிளை விட்டு வளர்ந்தது. அப்படியே அச் சிறுகிளைகளை அருமைபாராட்டித் தறித்து வேறெட்டுத் திக்குகளில் நட்டார்கள்.

அப்போதுதான் இலங்கை யரசன் மகேந்திர † மகாவீரன் என்பவனை மகிமையுறுவிக்கும் பொருட்டுத் தனது சிங்கள நாட்டில் முதல் மடங்கட்டினான். பிறகு சேதியகிரி விகாரமும் சீக்கிரத்திற் கட்டிமுடிந்தது.

அனுலையும் தனது ஐந்நூறு பரிவாரப்பெண்களுடன் சங்கமித்திரையின் உதவியால் அக் கோஷ்டியிற் கலந்து கொண்டாள். சங்கமித்திரையின் தலைமையின் கீழ், சங்கத்துப்பெண்கள் தங்குவதற்கென்று வேறொரு தனி

---

* மூன்று மயில்

† மகேந்திரனுடைய கௌரவப்பட்டம்.

விகாரமும் அரசன் கட்டுவித்தான். அவ்விகாரத்திலேயே சங்கமித்திரை சாமளாவும் இருந்து வந்தாள். அவள் மரித்தது, தான் சங்கத்திற் புகுந்த ஐம்பத்தொன்பதாமாண்டென்று சொல்லுகிறார்கள். அவள் இறந்த ஆண்டுக்கு முன்னாண்டிலேயே மகேந்திரன் மரித்தான்.

அசோகர் மாபோதிக்கிளையை அதி வைபவத்தோடு நறித்துக் கொண்டிருக்கையிலேயே மறுபடியும் ஒரு மத கோஷ்டி, சுமாணன் தலைமையின் கீழ், சிங்களத்திலிருந்து புறப்பட்டு வந்து, அசோகரைக் கண்டு புத்தர் அஸ்தியை வைத்துத் தூபிகள் கட்ட இலங்கையரசன் விரும்புவதால் எங்களை இங்கு அனுப்பினான் என்றது. அப்படியே அதற்கும் அசோகர் அதிக ஆனந்தத்தோடுடன்பட்டு ஒருதாம்பாளம் நிறைய அப்பரிசுத்த அஸ்திகளை வைத்துக்கொடுத்தார். அதில் புத்தருடைய வலப்புற மார்பெலும்பொன்று மகிமையோடு விளங்கியிருந்தது. சிங்களத்தார் எல்லாரும் அரசன் தலைமையின்கீழ் எதிர்கொண்டுவந்து அவ்வஸ்தித் தட்டத்தை வரவேற்றுபசரித்துவாங்கிக்கொண்டுபோய்த் தூபாராமஸ்தூபியிற் புதைத்துக் கட்டினார்கள். உடனே பூமி அதிர்ந்தது. இவ்வற்புதங்கண்ட சிங்களத்தவரெல்லாரும் மங்களத்தவராய் மகிழ்ந்து, கூட்டங் கூட்டமாய் ஒரே நாட்டமாய் வந்து பௌத்த மதகோட்டியிற் கலந்து கொண்டார்கள். அரசன் தம்பியும் கோட்டியிற் கலந்தானாகையால் அவனை முன்னிட்டு முப்பதினாயிரம்பேர் பௌத்த பிக்ஷுக்களாய்ச் சேர்ந்தனர்.

அசோகர் தமது கல்வெட்டுச் சாஸனமெதிலும் தம் மக்களாகிய மகேந்திரன் சங்கமித்திரை என்னு மிவர்கள் வரலாற்றைப்பற்றி ஒன்றுமே குறிக்கவில்லை. அவர் தமது பதின்

மூன்றாங் கற்பதிவில் பௌத்தமதத் தொண்டரை எங்கெங்குப் புறத்தேயங்களுக்குச் செலுத்தினரோ அவைகளின் பெயர்களைக் கிரமமாய்க் குறிக்கிறார். அதில் பாண்டிமண்டலம், சோழமண்டலம், ஈழமண்டல மாகிய மூன்றும் குறிக்கப்பட்டுள்ளன. அவருடைய இரண்டாங்கற்பதிவில் அவர் சிங்களத்தைப் (Ceylon) பற்றித் தெரிவிக்கிறார். இந்த இரண்டிடங்கள் தவிர, அவர் இலங்கையைப் (Ceylon) பற்றி வேறெங்குங் குறிக்கவில்லை. அவருடைய மைந்தனும் மகளும் சிங்களஞ்சென்று, மதவிஷயத்தில் அத்தனை பாடுபட்டுழைத்த விஷயத்தை அவர் ஏன் கல்வெட்டுகளிற் காட்டாது விட்டார்? மகாவித்துவ சிரோமணியாகிய ஓல்டென்பெர்க் என்பாரும் இந்த மகேந்திரன் சங்கமித்திரை என்பவர்களின் விஷயம் சிங்களப்பௌத்தத் துறவிகள் இடையிற் செருகியதென்று எண்ணுகிறார்.

ஹியூன்த்ஸியாங் என்னும் சீனயாத்திரிகர் சோழமண்டலத்தில் ஓர் தூபியும் அதற்குத் தெற்கில் பாண்டிமண்டலத்தில் ஒன்றுங் கண்டதாகத் தெரிவிக்கிறார். இதனால், அசோகர் காலத்தில் அவ்விருமண்டலங்களும் வேற்றரசர்க்கடங்கியிராமல் சுவய அதிகாரமுள்ள தன்னரசு நாடுகளா யிருந்தமை விளங்குவதுமன்றி, அவைகளிடத்து அசோகர் கொண்டிருந்த நட்பின்கிழமையும் மதிப்பும் வெளியாகின்றன.

இந்த ஹியூன்த்ஸியாங் என்பாரே, இன்னும், காவேரிக்குத் தெற்கிலொரு தன்னரசு நாடிருந்ததாகவும் அதன் பெயர் மால்கூடம் என்றும் தெரிவிக்கிறார். அங்கும் அநேக தூபிகளும் விகாரங்களும் இடிந்தும், உடைந்தும் பாழா

யிருந்தனவாம். ஆகையால் அசோகர் கல்வெட்டுக் கைங்கரியத்திற்கு அதுவும் இடமாயிருந்திருக்கவேண்டும்.

பாஹியான் என்னும் மற்றொரு சீனயாத்திரிகர், மகேந்திரன் அசோகருடைய தம்பியென்றும் அவனை குடும்பத்தை வெறுத்துத் தனித்திருக்குஞ் சுகத்தை நாடியிருந்தானென்றும் கூறுகிறார். ஹியூன்த்ஸியாங் என்பவரும் இப்படியே, மகேந்திரன், அசோகருக்குத் தம்பி யென்றும் அவனே சிங்களஞ் சென்று பௌத்தமதத்தைப் பரப்பினனென்றும் பின் வருகிறபடி பேசுகிறார்:—

சிங்களம், பூர்வத்தில் அநீதியாகிய மதாசாரங் கொண்டிருந்தது. புத்தர் மரித்த நூறுண்டுகளுக்குப் பிறகு, அசோகருடைய அநுஜனாகிய மகேந்திரனென்பான், முற்றத் துறந்த முனிவனாய் அரகதபலமாகிய நிர்வாணத்தை அடைய விரும்பினான். அவன் துவாதச நிதானியாய்ச் சதுஷ்டயமுற்று, அஷ்ட நிவாரண சித்தனா யிருந்தான்; ஆகாயத்திற் பறந்தான்; ஆகையால் எளிதில் இலங்கையை அடைந்து, தர்ம நெறியைப் பரப்பினான். அவன் அங்குச் சென்றது முதல், அத் தீவார் இதயம் இன்பமயமாயிருந்து வருகிறது. அவர்கள் உண்மையை நம்பக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்; நூறு மடங்கள் கட்டியிருக்கிறார்கள். அவைகளில் 20,000 (இருபதினாயிரம்) பிக்ஷுக்கள் இருந்து வருகிறார்கள். அவர்கள் புத்த போதத்தைப் பின்பற்றுகின்றார்கள். அது, மகாயாணப்பிரிவில் தாவீர வகுப்பைச் சேர்ந்த தர்மமாகும்.

எப்படி இருந்தபோதிலும் இலங்கையைப் பௌத்த மதக்கோட்டியிற் கூட்டித் திருப்பினவன் மகேந்திரப் பெயருடையான் ஒருவன் என்பதிற் சந்தேகமில்லை.

அசோகருக்கு முந்தி இரண்டும், அவர் காலத்திலொன்றுமாகக்கூடின, மூன்று பௌத்தமத சங்கங்களும் மகேந்திர சங்கமித்திரையர் கதையைப்போலவே சந்தேகத்துக்கிடமாயிருக்கின்றன. மூன்றிலும் ஒரேவிதமான மதப்பரிசீலனையென்னும் விஷயமே நடந்திருப்பதாலும், இவைகளைப்போல வேறு சங்கங்கள் வெவ்வேறிடங்களில் உண்மையாகவே கூடியிருப்பதாலும் இவைகளின் தேதிகள் இன்னவெனச் சரியாக விளங்காமையாலும் இவைகளின் உண்மை தெளியக் கூடவில்லை.

இந்த அதிகாரத்தில் நாம், அசோகர் தமது மதத்தைப் பரப்பும் பொருட்டுத் தம் மதத்தொண்டர்க் கூட்டங்களைப் பற்பல பிரதேசங்களுக்கும் போக்கினர் என்று வாசித்தோமல்லவா? இந்த விஷயமட்டும் இலங்கை மகாவமிச காவியத்தில் பன்னிரண்டாம் அதிகாரத்தில் இன்னின்னாரை இன்னின்ன இடங்களுக்கு அசோகர் அனுப்பினர் என்று உண்மைக்கு உற்றதாகக் கூறியிருக்கின்றது.

காஸ்மீர காந்தாரத்துக்கு மஜ்ஜந்திகனும், மகிஷமண்டலத்துக்கு மஹாதேவனும், வனவாசிக்கு இரக்கிதனும், அபராந்தத்துக்கு யோனதம்மரக்கிதனும், இமாசலத்துக்கு கஸ்ஸபன், மாலிகதேவன், துண்டாபிநோசன், சஹசதேவன் இவர்களோடு மஜ்ஜிமனும், சுவணபூமிக்குச் சோணனும், உத்தரனும், மஹாராட்டிரத்துக்கு மஹாதம்மரக்கிதனும், யவனத்துக்கு மஹாரக்கிதனும், இலங்கைக்கு இட்டியன், உட்டியன், சாம்பலன், பத்தசாலன் இவர்களோடு மஹாமஹிந்தனும் தலைவர்களாய்க் கோட்டியோடு சென்றார்கள்.

மஜ்ஜிம கஸ்ஸபர்களுடைய உடல்கள் ஒன்றாய் இரண்டாமெண்ணுள்ள பெட்டியில், ஸாஞ்சித்தூபியில் அகப்பட்டன. சொனாரி இரண்டாந்தூபியில் கஸ்ஸபனைப் பற்றி இன்னொரு பெட்டியின் மேல்மூடியில் அவன் ஹிமவந்தனுடைய தொண்டனென்று சுருக்கமாய் எழுதியிருந்தது. ஸாஞ்சி இரண்டாந்தூபியில் மொக்காலிமகன் திஷ்யனுடைய உடலிருந்தது. ஆகையால் மகாவமிசத்திற் கண்டபடி தொண்டர் தொகை சரியானதாய்க் காணப்படுகின்றது. ஆனால் மஹிந்தனை (மகேந்திரனை) அதிற்கண்டபடி அசோகர் புத்திரனென்று கொள்ளாமல், தம்பியென்று கொள்ளவேண்டும்.

இலங்கைப் புராணங்களிலும் மகாவமிசம் முதலியவைகளிலும் கண்டபடி அசோகர் முடிசூட்டு, ஆகாதி முதலியசம்பவகாலங்கள் முன்னுக்குப்பின் முரண்பட்டிருக்கின்றன. ஆகையால் அவைகளை நம்புவதற்கிடமில்லை. மேற்கண்ட புத்தகங்கள் தம் இஷ்டம்போல் அசோகனென்றும் காலாசோகனென்றும் தர்மாசோகனென்றும் என்னென்னவோ கற்பித்துக் கதைக்குக் காலில்லை யென்றபடி உண்மைக்குத் தாரகமில்லாமல் தீட்டியிருக்கின்றன.

நமது நூலிற் கண்டபடி உண்மை அசோகருடைய காலவரை முதலியன அவருடைய கற்பதிவுகள் முதலியவைகளாலும், ஜஸ்டின் என்பவர் எழுத்தாலும், நமக்கு நம்புவதற்கிடமாய் நன்கு விளங்குகின்றன. இவைகளை மறுக்க யாராலும் ஆகாது.

அசோகரே தமது குலமுறை முதலியவைகளைக் கூறாது விட்டிருக்கின்றாராயினும், உருத்திரதாமன் சாஸனத்

தால் அவருடைய முறை, மௌரியவமிசத்தில் அவர் மூன்றுமரசர் என்று நன்கு விளங்குகின்றது. அசோகர், சந்திரகுப்தனுடைய மகன் மகனுகிய பௌத்திரர் என்பதற்கு ஆக்ஷேபம் இல்லை. சந்திரகுப்தர் காலமும் செலுக்கஸ் நிக்கேட்டார் என்பவருடைய காலமும் ஏககாலமென்பது திண்ணம்.

ஜஸ்டின் எழுதியுள்ளபடி சந்திரகுப்தன் பட்டத்துக்கு வந்த காலம் கி-மு-321 என்பது சரியானதென்று ஏற்படுகின்றது. அலெக்ஸாண்டர் மரித்தது கி-மு-323 ல் என்பது சரியாய் ஏற்பட்டிருக்கின்றமையால், அதற்குப் பிறகு இரண்டாண்டில் சந்திரகுப்தன் பட்டம் பெற்றது சரியானதென்றே கொள்ளவேண்டும்.

அசோகர் கற்பதிவுகளிற் பதின்மூன்றவதில் சிரியா நாட்டு இரண்டாம் அண்டியோக்கஸும், எகிப்து நாட்டு இரண்டாம் டாலமியும், மாஸிடோனியா நாட்டுக் கொனட்டனும் அசோகர் காலத்தி லிருந்தவர்களென்பதனல் அவர் காலமும் ஆட்சியின் மாட்சியும் ஐயமின்றி விசதமாகின்றன.

அசோகராண்ட மகதராஜ்யம் மித்னபூர் ஜில்லாவில் தாமிரலிப்தித் துறைவரையிற் பரவி யிருந்ததனல், அது கிழ்க்கடலிலிருந்து மேற்கடல்வரையிலும், கங்கையிலிருந்து மகாநதி வரையிலும், ஒரு மகாராஜ்யமாய் விளங்கி யிருந்தது என்பதற்குச் சந்தேகமில்லை. பிறகு அசோகர் தமது ஒன்பதாமாண் டாட்சியில் கலிங்க முதலிய நாடுகளைச் சேர்த்துத் தெற்கிற் பழவேற்காடு வரையில் அதைப் பரப்பினரென்று விளங்குகிறது.

அசோகருடைய மகத ராஜ்யத்துக்குத் தெற்கெல்லை, மைசூர்ச் சித்தபுரச் சிலாசாஸனங்களாலும் அசோகருடைய கல்வெட்டுகளாலும் நன்கு விளங்குகின்றது. அதில் தக்ஷணத்தரசர்களில் தம்மரசு நாடாப் ஆண்டவர்கள் இன்னின்னாரென்றும் குறிக்கப்பட்டுள்ளது.

அவர்காலத்தில், சோழமன்னர் உறையூரிலும் பாண்டியர்கள் மதுரையிலும், கோளர்கள் மலைநாட்டிலும் அரசாண்டார்கள். இவர்களெல்லாம் இலங்கை யரசனைப் போலவே வேற்றரசனுக்குக் கீழ்ப்படிந்திராமல் சுவாதீனம் பெற்று ஆண்டுகொண் டிருந்தார்கள். ஆனால் அவர்கள் அசோகரிடத்தில் நட்புக்கிழமை பூண்டு விளங்கி யிருந்தார்கள்.

மகதராஜ்யத்தின் தெற்கெல்லையை மற்றொரு விதமாய்க் குறிக்கலாகும். கிழக்கில் புதுச்சேரியி லிருந்து மேற்கில் கன்னனூர்வரையில், வடவுத்தோசக் கோட்டின் பன்னிரண்டு மாத்திரையில் பொருந்திக் குறிக்கலாம். இதற்கு வடபுறத்தில் இமாலயம் இந்துகுஷ்வரையில் அசோகாதிகாரத்திற் கடங்கியிருந்த மௌரிய ஏகாதிபத்தியம் அமைந்திருந்தது.

இந்த அளவு சுதேச ராஜ்யந்தவிர இப்போது ஆங்கிலேயர் ஆட்சியி லடங்கிய பரதகண்டத்தி னளவுக்கும் அதிகமாயிருந்தது.

ஹியூன்த்ஸியாங் சொல்லுகிறபடி அசோகத்தூபிகள் ஒரு நூற்று முப்பதாகின்றன. அவைகளிற் சில சோணாடு முதலிய தம்மரசநாடுகளிலும் இருந்தன. மூன்று தூபிகள் ஆப்கனிஸ்தானம் என்னும் காந்தார தேசத்தில் இருந்தன.

கபிஸாவில் பிதுசாரத்தூபி நூறடியுயரத்திலும், நாகரா காரத்தில், மிகவும் அழகாய் அலங்கரித்துச் செதுக்கிய அதிசயத்தூபி மற்றொன்று நூறடி உயரத்திலும், மற்றொன்று இதற்குத் தெற்கிலும் மாண்புற விளங்கின. தக்ஷசிலேயில் மூன்றும் காஸ்மீரத்தில் நான்கும் இருந்தன. கிழக்குச் சமுத்திரக்கரையில் தாம்ரலிபிதியிலும், ஓரிஸாவிலும், கலிங்கத்திலும் கணக்கற்ற தூபிகள் காண்கின்றன. மேற்கில் கூர்ச்சரத்திலுள்ள வலபியிலும், சிந்துமாகாணத்திலும் சாஸனங்கள் மிகுந்திருந்தன.

தெற்கில் காஞ்சிபுரத்தில் ஒரு தூபியும், சென்னைக்குத் தென்மேற்கில் வெங்கியென்னு மிடத்தில் ஒரு தூபியும் அசோகர் அமைத்தார்.

சந்திரகுப்த ராட்சியைப்பற்றி மகாஸ்தனிஸ் குறித்தபடி அசோகராட்சியும் அமைந்திருந்தது. அரசனதிகாரம் சுயேச்சையாயிருந்தது. அதை அவர், தமக்கடுத்த படியிலிருந்த அரசமக்கள் மூலமாய்ச் செலுத்தி வந்தார். அரசமக்களில் ஒருவன் தக்ஷசிலேயிலும், மற்றொருவன் உச்சனியிலும், இன்னொருவன் சுவனகிரியிலும், வேறொருவன் தொசாலியிலும் இருந்து ஆண்டுவந்தனர். பாடலி புத்திரத்திற்கடுத்த ராஜ்யங்களை வேறதிகாரிகள் ஆண்டார்கள். மாமாத்திரர் என்னும் நீதிபதிகள் குற்ற விசாரணை செய்து வந்தார்கள். பௌத்த தர்ம நீதியைப் பாதுகாத்த அதிகாரிகளுக்குத் தர்ம மாமாத்திரர் என்று பெயர். நகர பரிபாலனத்திற்கும் காவலுக்கும் பற்பல வதிகாரிகள் ஏற்பட்டிருந்தனர். பாசன விஷயத்தில் பாரசீகமுறையை அநுசரித்துக் கால்வாய்களும் மதகுகளும் கட்டப்பெற்றுப் பயிர்த்

தொழில் ஓங்கியிருந்தது. வரிவாங்க வரித்தலைவர்களும் பிறரும் ஏற்பட்டிருந்தனர். பயிரிடு நிலமுழுவதும் அரசனுக்குச் சொந்தமென்ற முறையால் குடிகள் நான்கிலொன்று வரி செலுத்தி வாழ்ந்தார்கள். பிறகு வெட்டிகள், தச்சர்கள், கருமார்கள், சுரங்க வேலையாட்கள் முதலியோர், வரித்தலைவர்க்கு அடங்கி வேலைசெய்தார்கள். சாலைகளும், சோலைகளும் பொது ஜனானுகூலமாய் இராஜாங்கப் பார்வையிலேயே இருந்தன. பெரிய சாலை வழிகளின் தூரத்தைக் குறிக்க மைல்கற்கள் நாட்டியிருந்தன.

பாடலிபுத்திரத் திருநகர், சோணை நதியுங் கங்கையுங் கூடுமிடத்திற் பொருந்தி, அகலத்தில் நீளம் அறுமடங்கு கொண்டதாய் ஒன்பது மைல் நீளமும், ஒன்றரைமைல் அகலமுமாயிருந்தது. இப்போது அது அழிந்து பாழாய் அதற்கருகில் (Patna) பாட்ணா வென்னும் பட்டணம் ஏற்பட்டிருக்கின்றது. இதுவும் அப்படியே சதுரமாயில்லாமல் அகலத்தின் ஆறுமடங்கு நீளமாயிருக்கின்றது. மெகாஸ்தனிஸ் விவரிக்கிறபடி பாடலிபுத்திரத்தைச் சூழ மரச் சுவர்கள் இருந்தனவாம்; பேரகழியும் உண்டாம். நான்கு பக்கத்திலும், பக்கத்துக்குப் பதினறாக அறுபத்திநான்கு வாசல்களும் இருந்தனவாம். ஐந்நூற்றெழுபது கோபுரங்களும் இருந்தனவாம். அசோகர் காலத்தில் மரமதில்களுக்குப் புறமதில்களாகக் கன்மதில்கள் கட்டி நகரத்தைப் பத்திரப் படுத்தினராம். பிறகு அம் மதில்களைக் கண்டார், இவைகள் மனிதர் கட்டினவல்ல, வேதாளங்கள் கட்டினவென்று சொன்னார்கள். பழம்பட்டணம் ஆகிய பாடலிபுரம், ஆற்றில் அழுந்திப் பாட்ணா பாங்கிபூர் கரைகளில்

மணல் மேடிட்டிருக்கின்றது. இந்த மேட்டைத் தோண்டிப் பார்த்தால், பத்தடியிலிருந்து இருபதடி ஆழத்தில் பழம்பட்டணத்தின் பாழான காட்சி தெரிகின்றது. மகாஸ்தனிஸ் எழுதி வைத்தபடியே மேற்குறித்த மரமதில்களின் அடையாளங்களும் கன்மதில்களின் குறிகளும் கலந்து தோன்றுகின்றன. தகுதியான பெருங் கற்களும் மரங்களும் மிகுதியாய் அகப்பட்டிருக்கின்றன.

இத்தகைய பெரு நகரபரிபாலனம் மிகவும் நன்றாய் நடந்து வந்தது. பற்பல அதிகாரக் கூட்டங்கள் ஏற்பட்டிருந்தன. கைத்தொழில் சிற்பம் முதலியவைகளைப் போற்றுவதற்கோர் அதிகாரக் கூட்டம் உண்டு; இதில் ஐந்தங்கத்தினர் சேர்ந்திருந்தனர். இரண்டா மதிகாரக் கூட்டத்தார், பரதேசிகளைப் பரிபாலித்து மேற்பார்க்கும் தொழிலியற்றினர். இதிலும் ஐந்தங்கத்தினர் இருந்தனர். இந்தக் கூட்டத்தார், பரதேசிகளுக்கு நோய் நீங்க வயித்தியத்தையும், அவர்கள் மரித்தால் அடக்கஞ் செய்தலையும், அவர்கள் இறந்தால் சொத்துக்களைத் தக்கபடி விநியோகஞ் செய்தலையும், அவர்கள் நந்நாடு செல்ல வேண்டுமானால் உதவிசெய்து அனுப்புதலையும் மேற்கொண்டிருந்தார்கள். மூன்றாங் கூட்டத்தார் பிறப்புக் கணக்குப் பதிவையும் வரியேற்றக் குறைவு வழிபையுங் கவனித்து வந்தார்கள்.

நான்காங் கூட்டத்தார், வர்த்தகச் சங்கத்தார். இவர்கள் வாணிப மேற்பார்வையையும், படி குண்டு முத்திரைப் பதிவையும், சரக்குகளின் உயர்வு தாழ்வு விலைவாசிகளையும் கவனித்து வந்தார்கள். சரக்குகளைக் காலங் கிரமப்படி

விளம்பரம்படுத்தி அதிகாரிகள் சரியான விலைக்கு விற்கச் செய்யவேண்டும். விலைப்பட்டி விற்கு முந்தியே ஏற்பட வேண்டும். அது அதிகாரிகள் அறிந்ததா யிருக்க வேண்டும். ஒருவித சரக்குக் கதிகமாக வைத்து வர்த்தகம் பண்ணுபவன் இரட்டை வரி செலுத்தக் கடமைப்பட்டிருந்தான்.

ஐந்தாங் கூட்டம் கைத்தொழிற் சம்பந்தமானது. இதனால் வெளிவரும் பண்டங்களையும் இறங்குமதிச் சரக்குகளைப் போலவே வரி முதலிய விதங்களைச் செலுத்தி விற்க வேண்டும்.

ஆறாங்கூட்டம், சரக்குகளை விற்ற தொகையின் மேல்வரி விதிப்பதிற் சம்பந்தப் பட்டது. இவைகளைச் சந்திரகுப்தன் காலத்திருந்தபடி இங்குக் குறிக்கின்றோம். இந்த ஆறாங்கூட்டத்தார் விதித்த வரியைச் செலுத்தத் தவறினால் சரக்குகளுக் குரியவர்கள் கொடுந்தண்டனை யடையத் தவறார்கள். இதையே அசோகர் சிறிது ஏற்றியும் மாற்றியும் அனுசரித்து வந்தார்.

சந்திரகுப்தன் காலத்தில், தண்டனைகள், மிக்க கொடுமையாகவுங் கடுமையாகவு மிருந்ததுபோலவே, அசோகர் காலத்திலும் இருந்தன. ஆனாலும் இவர் அருளுடைய அரசராகையால் சிற்சில தண்டனைகளுக்குக் கொஞ்சம் பரிகாரந் தேடியிருக்கலாம்.

சந்திரகுப்தர் காலத்திலிருந்து மகதராஜ்யம் வளர்ந்ததன்றித் தளர்ந்த தில்லையென்று நாம் இந்நூலில் கண்டதினால், மௌரியகுல மன்னராட்சி சேனைபலத்திற் சிறந்திருந்து, பரதேசமன்னர் தாக்காமற் றடுத்து வேற்றரசனை

அடக்கியதோடு நகர பரிபாலனத்திலும் மாட்சிபெற்றிருந்ததென்பது நன்றாய் விளங்குகிறது. பாடலிபுத்திரம் பேரதிகார ஏகாதிபத்திய ஸ்தானமாய் இப்போதுள்ள ஆங்கில இந்தியாவைப் போன்ற ஒரு மகா ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்ததென்பதை நாம் வியப்புடன் நோக்க வேண்டும். ஏனெனில், அக்காலத்தில் இக்காலத்திற் போலத் தூராதிகாரச் செலவுக்கும் நட்புக்கும் அனுகூலங்களில்லை. ஆயினும் அசோகர் தமது பாடலிபுத்திரத் தாட்சியையும் நட்பையும் ஆயிரத்திருநூறு மைலுக் கப்புறத்திலுள்ள அப்கனித்தானத்திலும், ஆயிரமைலுக் கப்புறத்திலுள்ள கிரிநாரத்திலும், ஈராயிரமைலுக் கப்புறத்திலுள்ள இலங்கையிலும் செலுத்தினது இறும்பூதுக்கிடமாகுமென்க.

இன்னும் அவர் தமதாட்சியில் அதிதூரத்திலிருந்த எல்லைப் புறவாசிகளையும் வனசரரையும் அன்பாய் ஆதரித்துத் தமது மதக்கொள்கையிற் பிரதானமான சீவகாருண்ய விசேஷத்தாற் காத்ததும், பலமான கட்டடங்கள் கட்டினதும், தர்ம மார்க்கத்தை நிலைநிறுத்திப் பரிபாலித்ததும் கொண்டாடத் தக்கவைகளாம்.

6-ம் அதிகாரம்

மதச் சின்னங்கள்

எண்பத்திநாலாயிர தூபிகளை மூன்று வருடங்களுக்குள் அசோகர் கட்டி முடித்தார் என்கிற புராணகதை, அவருடைய கட்டடநிருமாணப் பெருமையை ஜனங்கள்

எத்தனை உயர்வாக மதித்திருந்தார்கள் என்பதை விளக்குகின்றது. அவருடைய நிருமாண வேலைகளின் அருமை கண்டாரனைவரும், அவைகள் வேதாளங்களால் கட்டி முடிந்தன என்று எண்ணும்படி இருந்தது.

அரண்மனைக் கட்டடமும் அதற்குட் பெருங்கூடங்களும், அன்றுகட்டினபடி இன்றும் அழியாமலிருக்கின்றன. அவைகளிற் பெருங்கற்களை வைத்து, ஒன்றின்மேலொன்ருய் அடுக்கிச் சுவர்களையும் வாசல்களையும் ஒழுங்காயமைத்து, கல்வேலையையும் கற்சித்திரவேலையையும் இவ்வுலகமாந்தர் இதுவரையில் யாருமே செய்ததில்லையென்றெண்ணும்படி செய்து முடித்தது எல்லாம் வேதாளங்களேயாம்.

கிறிஸ்து பிறந்த ஐந்தாநூற்றுண்டாரம்பத்தில் இப்படி எழுதினர் அந்தக் கள்ளங்கவடற்ற சீனயாத்திரியாகிய பாஹியான் என்பார். இதற்கிருநூற்றுண்டுகளுக்குப் பிறகு மற்றொரு சீனயாத்திரியாகிய ஹியூன் த்ஸியாங் வந்தபோது, இந்தப் புராதன நகரம் யாருமற்றதாய் அழிவிலிருந்தது.

ஆகாய மளாவிய கோபுரங்களும்
அலங்காரமான அரண்மனைகளும்
பரிசுத்தமான கோயில்களும்

எல்லாம் மண்மேடிட்டு நிலத்தில் அழுந்தி நீரிற் கரைந்து கங்கைச் சோணைக்கு விருந்தாய், கீழை இந்திய புகைவண்டிப்பாதைக்கும், பாட்ணு நகரத்துக்கும், பாங்கிப்பூருக்கும் அடிப்படையாயின.

அசோகருடைய இலௌகிகக் கட்டடங்களில் எதுவும் நிலத்தில்லாததினல், அவைகளின் அமைப்பைப் பற்றி

யாதொன்றும் தெரிந்துகொள்ளக் கூடாமற்போயிற்று. மௌரிய அரண்மனைக் கட்டடச் சாமான்கள், பாங்கிப் பூர்க்கும், பாட்னாவுக்கும் இடையிலுள்ள புகைவண்டிப் பாதைக் கம்பிக்குத் தெற்கிலுள்ள குமாராகார கிராமத்து வீடுகளுக்கும் வயல்களுக்கும் அடியில் மறைந்து கிடக்கின்றன. இவைகளை வெளிப்படுத்தச் செய்திருக்கிற முயற்சி போதாமையால் நாளையவரையில் எதுவும் கண்ணுக் ககப்படாம லிருக்கின்றது.

கணக்கற்ற இராஜாங்க சம்பந்தமான மடங்கள் அசோகர் கட்டினவைகள் அப்படியே பற்பலவிடங்களில் அரண்மனையைப் போலவே அழுந்திக் கிடக்கின்றன. ஒன்றாவதும் நாம்தெரிந்து கொள்ளக்கூடிய விதத்திலில்லை.

எத்தனையோ பொருட்செலவால் அசோகர் கட்டின தூபிகள் அல்லது சிகரங்கள்மட்டும் அதிர்ஷ்டவசத்தால் அழியாமலிருந்து வருகின்றன. இந்த வகுப்பிற் சேர்ந்த ஒரு பெருந்தொகையான ஞாபகச் சின்னங்கள் மத்திய இந்தியாவிலுள்ள ஸாஞ்சியென்னு மிடத்தில் சற்றேனும் வின்னமின்றி அப்படியே அழியாமல் இருக்கின்றன.

தூபியென்பது, ஒரு புத்தர் அல்லது தொண்டருடைய சவவுடற் சேஷங்களைச் சேமித்துக் காக்குமிடமாயிருந்தது, அல்லது, பௌத்த மதக்கோயிற் சரிதையில் முக்கியமான விஷயத்தைக் குறிக்குங் காட்சியாய் விளங்கிற்று. சில சமயங்களில் அது ஒரு புத்தகுருவின் ஞாபகச் சின்னமாயும் இருந்தது. தூபியென்பது சுவர்ப்புறத்து நீண்ட உத்திரம் அது உள்ளீடுள்ள அரையுருண்டை வடிவமான செங்கட்டடம். ஒரு தூணின் அடிமட்டத்தி

லிருந்து கிளம்புங்குடையான கற்கம்பிகள் அதைத் தாங்கிக் கொண்டிருக்கும். அதன் உச்சியிற் சதுரமான வேதிகை ஒன்றிருக்கும். தூபிகள் பெரும்பாலும் சுண்ணம்புக்கட்டடங்கள். அவற்றைச்சுற்றிச் சித்திரங்கள் செதுக்கிய கற்றூண்கள் நாட்டியிருக்கும்.

ஸாஞ்சியிலுள்ள பெருந்தூபி உள்ளீடுள்ள விரித்த குடைபோற் கும்மட்டவடிவமாய், செங்கல், சுண்ணாம்பு, கருங்கற்களால் நூற்றடிக் குறுக்களவிற் கட்டி முடிந்திருந்தது. அதன் தூணின் அடிமட்ட உயரம் பதினான்கடி; கும்மட்டத்தின் அடி மட்டத்திலிருந்து பிதுக்கம் ஐந்தரையடி, கும்மட்டத்தின் உச்சி தட்டையாய் முப்பத்தினான்கடி குறுக்களவுள்ளதாய், கற்கிராதிகள் சூழ்ந்திருந்தது. அதற்குள் ஒரு சதுரவடிவமான பலிபீடம் மற்றொரு கற்கிராதி சூழ்ந்திருந்தது. கட்டடத்தின் முழுவுயரம் நூறடி.

அசோகர் கட்டின தூபிகள் பெரும்பாலும் அதியுன்னதமானவைகள். ஹியூன்த்ஸியாங் என்பார் தாம் ஆப்கனித்தானத்தில் கண்ட ஒன்றின் உயரம் முந்நூறடியென்றும், இலங்கையில் பேர்போன தூபி ஒன்று நானூறடிக்குமேலுள்ளதென்றும் தெரிவிக்கின்றார்.

ஸாஞ்சியிலும், அதற்கருகிலுமுள்ள தூபிகளைத் திறந்து பார்த்தபோது அவைகளுக்குள் பரணிகள்போன்ற பெட்டிகள் இருந்தனவாம். சவவுடற் சேஷ சேமவறையொன்று, தென்பட்டதாம். அதன் நடுவிலொரு மணற்கற்பெட்டி பதினோரங்குல நீளமும் ஒன்பதரையங்குல அகலமுமுள்ளது அகப்பட்டதாம். அதைத் திறந்தபோ

ததற்குள் ஒருவித பாத்திரங்கள் இருந்தனவாம். அவைக ளுக்குள் எலும்புத் துண்டுகள் பிரதிஷ்டை பண்ணியிருந் தனவாம். இவைகள் சாதாரணமானவர்கள் எலும்புகள் அல்ல; பௌத்தமதப் பெருந் தொண்டர்களுடைய பரிசுத்தமான எலும்புகளென்று பற்பல அத்தாக்ஷிகளாற் கண்டுபிடித்தார்கள். மகாவமிசம் என்னும் இலங்கைப் புராணத்திற்கண்ட மொக்காளிமகன் திஷ்யன்உடலெலும்பு களும் இதில் இருந்தனவென்று இயம்பினார்கள். இந்தத் திஷ்யனே, முன் நாம் வாசித்தபடி பௌத்த மதப் பெருங் கூட்ட மூன்றாவதில் முதன்மை இடம்பெற்றிருந்தவன்.

முன் நாம் வாசித்த மகேந்திரசங்கமித்திரையர் மாதா வாகிய தேவி யென்பாள் வசித்த விதிசாநகரமும் சில சித்திரக்கல்வேலை தீர்ந்த மாதிரிகளுங் கிடமா யிருந்ததாம்.

முற்காலத்தில் பௌத்தர்களுக்குள்ளும் ஜைனர்களுக் குள்ளும் மதசம்பந்தமான கட்டடச்செலவைப் பலர்கூடி யேற்றுக்கொள்வ தென்னும் வழக்கம் இருந்தது. அது போலவே ஒருவன் ஒரு தூணையும், மற்றொருவன் ஒரு மதிற்கல்லையும், இன்னொருவன் இன்னொரு முக்கியமான கட்டடப்பொருளையும் உதவினான் அததன்மேல் அவனவ னுடையபேர் செதுக்கியிருந்தது. இதனால் அவனவ னுடைய குடும்பம் நீடூழியழியாமல் விளங்குமென்பது அவர்களுடைய நம்பிக்கை.

தூண்களின் முகப்பில் சிங்கமுதலிய மிருகவுரு வமைத்துப் பதித்திருந்ததுமன்றி மௌரியகாலத்து மனித வுருவமும் செதுக்கிப் பதித்திருந்ததாம்.

இவைகளில் ஏழடிவுயரமுள்ள பெரிய மனிதவுருவொன்று அக்ராவுக்கும் மதுரைக்கும் இடையிலுள்ள பார்க்கம் என்னும் கிராமத்தில் அகப்பட்டிருக்கின்றதாம். இதுவும் மணற்கல்லை மழுங்கி முடித்திருக்கிறது. கைகள் உடைந்திருக்கின்றன. முகம் அங்கவீனமாய் அழிந்திருக்கின்றது.

மிகப்பெரிய பெண்ணுருவொன்று, அதே காலத்தில் பெஸ்நகரத்தில் ஆறடி ஏழங்குலவுயரத்தில் அகப்பட்டிருக்கின்றது. இந்த ஒரு பெண்ணுருவே அருமையாய் உள்ளது.

அசோகர்க்கு ஒற்றைக்கற்றூண்பதிவுகளில் மிக்க ஆசையிருந்தது. அவைகளை அவர் கணக்கின்றி, எழுத்துகள் செதுக்கியும் செதுக்காமலும் நாட்டினார். ஸாஞ்சிப் பெருந்தூபியின் தென்வாசலில் ஒன்றும், வடவாசலில் ஒன்றுமாகப் பதிந்துள்ள கற்றூண்கள் இரண்டும் அதற்கு எத்தனையோ அழகு செய்தன. தொண்டர்வுருவைத் தாங்கிக்கொண்டிருந்த வடவண்டைத்தூண் நாற்பத்தைந்தடி உயரமும் தென்னண்டைத்தூண், அதற்கைந்தடி குறைந்தும் இருந்தன. இரண்டு தூண்களும் மற்றை ஞாபகச் சின்னங்களைப்போலவே, மழுக்கின நாணயமான மணற்கல்லாற் கட்டியிருந்தன.

டில்லியில் இப்போதுள்ள இரண்டு கற்றூண்கள் 1356-ம் ஆண்டில் பிரோஜிஷா டோக்ளாக் என்னும் துருக்க அரசன் கொண்டுவந்து நாட்டினவைகள். அம்பாலாவிலுள்ள தோபராவி லிருந்த தொன்றையும், வடமேற்கு மாகாணங்களிலுள்ள மீரத்தி லிருந்து மற்றொன்றையும் அவன் கொண்டு வந்தான். தோப்ராதூணைக் கொண்டுவந்த விதத்தைப் பின் வருகிறபடி அக்காலத்திருந்தார் ஒருவர் எழுதுகின்றார்.

கிஸ்ராபாத் என்பது டில்லிக்குத் தொண்ணூறு கோசத்தூரத்தி லுள்ளது. சுல்தான் (பிரோஜ்ஷா) அந்த ஜில்லாவை மேற்பார்க்கச் சென்றபோது, தோப்ரா கிராமத்தில் மேற்படி தூணைக் கண்டான். அதைக்கண்ட வுடனே, அவன் டில்லியிற் கொண்டுபோய் பதிக்க விரும்பினான். அதை அங்கிருந்து கிளப்பும் வழியைப் பலவாறு சிந்தித்து, ஜனங்களுக்கு அறிக்கையிட்டான். எல்லாரும் வந்தார்கள். அவனுடைய போர்வீரர்களுங் கூடினார்கள். வந்தவர்கள் அதற்குவேண்டிய பலவிதமான கருவிகளோ டிருந்தார்கள். இலவம்பஞ்சுப் பொதிகள் ஏராளமாய்க் குவிந்தன. தூணைச்சூழ எவ்வளவோ பஞ்சுபரப்பி அடியில் மண்ணைத்தோண்டி மெதுவாய்ச் சாய்த்தார்கள். பஞ்சைக் கொஞ்சம் கொஞ்சமாய் அப்புறப்படுத்திச் சிலநாளான பின்பு, கடைக்காலிடத்தைப் பரிசோதித்துப் பார்த்ததில் ஒரு பெருங்கல் அடிமட்டத்தில் அகப்பட்டது. அதையும் தோண்டி யெடுத்தார்கள்.

பிறகு அத் தூணைச்சுற்றி நாணல்வைத்து முடிக் கட்டித் தோற்கவசமிட்டு அபாயம் வராமற் செய்தார்கள். அதற்காக நாற்பத்திரண்டு சக்கரம் பூட்டிய வண்டி யொன்று செய்து, ஒவ்வொரு சக்கரத்திலும் கயிறு கட்டினார்கள். ஆயிரம் ஆயிரமான ஜனங்கள் ஒவ்வொரு கயிற்றையும் பற்றி வலித்து மெத்தக் கஷ்டத்தோடு தூணை வண்டியிலேற்றிப் பிறகு கயிறொன்றுக்கு இருநூறு பேராகப் பற்றி, எல்லாரும் ஏககாலத்தில் இழுத்ததனால் வண்டி நகர்ந்தது. எல்லாரும் அதை அபாயமில்லாமல் யமுனைக் கரைக்குக் கொண்டு வந்தார்கள். இங்கதைச் சுல்தான் வந்து பார்த்து, யமுனையைத் தாண்டிக் கொண்டு

போக யோசனை செய்தார். அநேகம் படகுகள் ஆயத்தமாயின. ஒவ்வொன்றும் ஐயாயிரம் முதல் ஏழாயிரமணங்கு தானியங்களைக் கொள்ளக் கூடியன. இப்படிப்பட்ட படகுகளின் வரிசையின்மேல், தூணை வெகு பக்குவமாய் அசையாமல் ஏற்றி, அங்கிருந்து பிரோஸிஷாபாத்து (பழையடெல்லி)க்குக் கொண்டுபோய் இறக்கினார்கள்.

அதற்காகப் புதுக்கட்டடம் ஒன்று கட்டி, அதை நாட்டினதனால் இன்றளவும் அது அப்படியே எல்லாருங் காண விளங்குகிறது.

இப்படி கொண்டுபோன இந்தத் தூண் அசோகர் பதித்த தூண்கள் பலவற்றினும் சிறந்தது. இதில் எல்லாரும் உயர்வாக மதிக்கக்கூடிய ஏழாந்தூண் விளம்பரம் பதிந்திருக்கிறது. நான்காம் நூற்றாண்டின் முடிவில் பதினைந்து வருடகாலம் பயணம் பண்ணின பாஹியானும் அசோகர் தூண்களில் மூன்றே முக்கியமானவை என்கிறார். பாடலிபுத்திரத்தில் இரண்டும், சங்காசயத்தி லொன்றுமாம்.

அதற்கப்பால் ஏழாநூற்றாண்டில் வந்த ஹியூன்த்ஸியாங் பதினாறு தூண்களைப் பார்த்ததாகச் சொல்லுகிறார்.

அசோகர் தூண்களில் எழுத்துச் செதுக்கினவைகளின் அட்டவணை.

1. டில்லிதோப்ராத் தூண் :—டில்லிமாநகருக் கருகிலிருந்த பழைய டில்லி யென்னும் பிரோஸ்ஷாபாத் நகரில் கி-பி-1356-ல் பிரோஸ்ஷா தோக்ளாக் கொண்டுவந்து நாட்டியது.

2. டில்லி மீரத் தூண் :—மீரத் நகரத்தினின்றும் கி-பி-1356-ல், பிரோஸ்ஷா தோக்ளாக் கொண்டுவந்து, பழைய டில்லியில், தனது வேட்டைவனத்தில் நட்டது. கி-பி-1867-ல் மறுபடியும் இதைப் புது டில்லியில் ஆங்கில அரசாட்சியார் நட்டார்கள்.

3. அலகாபாத் (அல்லது) பிரயாகைத் தூண் :—கௌஸாம்பியென்னும் இடத்திலிருந்து, அலகாபாத்துக்குக் கொண்டு வந்து நாட்டியது.

4. இலௌரியா அராராஜ் தூண் :—வடமேற்குப் பீகார் மாகாணத்தைச் சேர்ந்த சம்பரான் ஜில்லாவிலுள்ள இலௌரியா என்னும் கிராமத்தில், மகாதேவ அராராஜர் கோவிலுக்கு ஒரு மைல் தூரத்திலுள்ளது.

5. இலௌரியா நந்தங்கார்த்தூண் :—சாம்பரான் ஜில்லாவில், மாத்தையா என்னுங் கிராமத்துக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள பெருங் கிராமமாகிய இலௌரியாவுக்குச் சமீபத்தில் உள்ளது.

6. இராமபர்வத்தூண் :—சாம்பரான் ஜில்லாவில், பப்பேரியாவென்னும் பெருங்கிராமத்துக் கடுத்த இராமபர்வம் என்னும் குக்கிராமத்தில் உள்ளது.

7. ஸாஞ்சித் தூண் :—மத்திய இந்தியாவிலுள்ள போப்பால் (Bhopal) சமஸ்தானத்தில், ஸாஞ்சிப் பெருந் தூபிக்குத் தெற்குவாசலில் உள்ளது.

8. நிக்ளீவத் தூண் :—பஸ்தி ஜில்லாவுக்கு வடக்கில், நேப்பாளத் தராயிலுள்ள நிக்ளீவக் கிராமத்துக் கருகில் நிக்ளீவ ஏரியின் மேற்குக் கரையில் உள்ளது.

9. ரும்மினித் தேய்த்தூண்:—நேப்பாளத் தெல்லைக்குள்ளேயுள்ள பஸ்திஜில்லாவில், குல்ஹாவுக்கு ஆறுமைல் வடக்கில், நேப்பாளத்தராயிலுள்ள ரும்மினித்தேய் என்னும் கிராமத்தில் உள்ளது.

அசோகருடைய கற்சாஸனங்கள் அவருடைய ஆட்சியை விளக்கிக்காட்டும் அருஞ்சின்னங்களா யிருக்கின்றன. நீண்ட சாஸனங்களி லெல்லாம், அவருடைய பதின்மூன்று பதினான்கா மாண்டாட்சியில் வெளியிட்ட பதினான்கு கற்கட்டளைப் பதிவுகளின் பரிசோதனைத் தொகுதிகளடங்கி யிருக்கின்றன. அவைகளை அசோகர் இப் பரதகண்டத்திற் பற்பல தூரப்பிரதேசங்களில் என்றும் அழியாமற் பதித்தார்.

பிஷாவருக்கு நாற்பதுமைல் வடகிழக்கிலும், பாடலீபுத்திரத்துக்கு ஆயிரமயில் நேர்தூரத்திலுமுள்ள ஷாபாஸ்காரியென்னுங் கிராமத்திற்குத் தென்கிழக்குக் குன்றின் சரிவிலுள்ள ஒரு பெரும்பாறையின் கிழக்கு மேற்கு முகங்களில் முக்கிய சாஸனம் குறிப்பிட்டிருக்கிறது. இந்தப் பாறையின் நீளம் இருபத்துநான்கடி, உயரம் பத்தடி. தாராள மத சம்மதப் பன்னிரண்டாங் கற்கட்டளைப்பதிவை (The Toleration Edict) கண்டு பிடித்தவர், கர்னல் என்பார். இதை அவர் சில்லாண்டுகளுக்கு முந்திச் சிறக்கக் கண்டு பிடித்தார். இது மேலே முக்கியபதிவுக்கு ஐம்பதடி தூரத்தில் வேறோடு தனிக்கல்லிற் பதிந்திருந்தது. பதினான்கு கற்கட்டளைப் பதிவுகளிலும் அடங்கியுள்ள வாசகம் ஏறக்குறைய சரியா யிருக்கிறது.

இந்தப் பதினான்கு கட்டளைப் பதிவுகளின் விஷயமடங்கிய வேறிரண்டு பாறைகள் பஞ்சாப் மாகாணத்தில்

ஹஜாரா ஜில்லாவில் மன்ஸிரே என்னுமிடத்தில் அகப்பட்டிருக்கின்றன. ஷாபாஸ்காரியி லிருப்பதைவிட வாசகம் குறைந்து முடிந்திருக்கிறது இவ்விரு பரிசோதனைகளும் வலத்திலிருந்து இடத்திலெழுதி இப்போது கரோஷ்தி என்று சொல்லும் அரமேயலிபிப் போக்கில் செதுக்கியிருக்கின்றன: அவைகள், மன்சிரேக்கல்லின் ஒரு புறத்தினும், ஷாபாஸ்காரி முழுக்கல்லினும் செதுக்கித் தர்மளமத சம்மதக் கற்பதிவுக்கு விசேஷமகிமை வழங்குவதில் ஒத்தும் இருக்கின்றன.

இன்னும் இவைகளைப்போலக் கால்ஸி, ஸொப்பாராகிர், னர், டாலி ஜாகாடா என்னு மிடங்களிலும் இப்பதினான்கு கற்கட்டளைப் பதிவுகளின் விஷய மடங்கிய பாறைகள் அகப்பட் டிருக்கின்றன. இந்த ஏழிடங்களிலும் ஏறக்குறைய வாசகம் ஒருவிதமாய் முடிந் திருக்கிறது. இன்னும் இவ்வாசகத்தின் பாடபேதம் வேறிடங்களிலும் அகப்படலாம். *சின்ன கட்டளைக் கற்பதிவுகள் ஒரேவிதமான சுருக்கக் கட்டளையைப் பலவிதங்களிற் காட்டுகின்றன. மைசூர் சித்தாபுரசின்னகற் கட்டளைப்பதிவுகளில் மாத்திரம் இன்னும் அதிக சின்ன கற்கட்டளைப் பதிவுகள் கலந்திருக்கின்றன. இவைகளில் பௌத்தமத நீதிபோதனைச் சுருக்கமும் சேர்ந்திருக்கின்றது. இந்தச் சின்ன கற்கட்டளைப் பதிவுகள், பதினான்கு பெரிய கற்கட்டளைப் பதிவுகளைப்போலவே, அங்கும் இங்கும் எங்குமாய்ப் பதிந்து பரவியிருக்கின்றன. இவைகளை, இராஜபுதனப் பேராட்டிலும் மத்திய மாகாண ரூப்நாதத்திலும், வங்காளத்து ஸஹஸ்ராமத்தி

* Minor Rock Edicts.

னும், மைசூர் சித்தாபுரத்திலும் காணலாம். சித்தாபுரத்தில் மாத்திரம் மூன்றுவிதமான வாசகப்பதிவுகள் காண்கின்றன.

பாப்ராக் கட்டளைப் பதிவு தன்னளவில் ஒரு வகுப்பாய்ப் பிரிந்திருக்கின்றது. அது செம்பழுப்பு நிறமாய்ச் சாதாரண அளவுள்ள தனிப்பெரும்பாறையிற் செதுக்கியிருக்கிறது. அதைக் கி. பி. 1837 ல் இராஜபுதனத்துப் பைராத்புராதன நகரத்துக்கருகில் உள்ள குன்றுச்சியில் கண்டுபிடித்தார்கள். அங்கு, முதற் சின்னகட்டளைப் பதிவைப்போன்ற மற்றொன்றும் இருக்கிறது. அந்தப்பாறையைக் கல்கத்தாவிலுள்ள பங்காளத்து ஆசியச்சங்கக் கட்டடத்தில் இப்போதும் வைத்திருக்கிறார்கள். அது பௌத்தமத குருக்கண்மார்களுக்கு அறிக்கை யிட்டிருப்பதால் புதுமாதிரியாகவுங் காண்கிறது.

அநுபந்தக்கற்றூண் கட்டளைப் பதிவுகள் அநேகமாய்ச் சுருக்கமான சில்லறை விஷயங்கள் செதுக்கப்பட்டுப் பிரயாகையிலும் காஞ்சியிலுமுள்ள தூண்களிற் காண்கின்றன.

நெப்பாளத்தரா்யிலுள்ள செதுக்குத் தூண்கள் இரண்டும், பௌத்தமதப் பரிசுத்த தலங்களை அசோகர் தரிசித்த விஷயத்தையும், கயைக்கு அருகிலுள்ள, பாராபார்க்குகா சாஸனங்களிற் கண்டபடி அஜீவகப் பிராமண சந்நியாசிகளுக்குப் பாறை வெட்டுக்குகாவாசத்தலங்களை அசோகர் வழங்கிய விஷயத்தின் சுருக்கத்தையும் குறிக்கின்றன. இவ் வாசத்தலங்களை முழுக் கருங்கல்லிற் குடைந்து அதன் சுவர்களை மிகவருந்தி மழுக்கி வைத்திருக்கிறார்கள்.

இதுவரையில் நமக்குத் தெரிந்துள்ள அசோகசாஸனங்களை ஏறக்குறைய காலக்கிரமப்படி எட்டுவகுப்புகளாக ஒழுங்குபடுத்திச் சுருவாய் எழுதிவைக்கலாம்:—

1. மேலே கணக்கிட்டபடி ஏழுபரிசோதனைகளிற் கண்ட பதினுன்கு கற்கட்டளை விளம்பரப் பதிவுகள்.
2. டாலி, ஜாகாடாக்களிலுள்ள இரு கலிங்கக்கட்டளை விளம்பரப் பதிவகள்.
3. மேலே கணக்கிட்டுக் காட்டியபடி முதற்கட்டளை விளம்பாப்பதிவின் நான்கு பரிசோதனைகளை விளக்குவதும், இரண்டாங்கட்டளை விளம்பரப்பதிவின் மூன்று வாசக மாதிரிகள் அடங்கியதுமாகிய சின்னகற்கட்டளை விளம்பரப் பதிவுகள்.
4. பாப்ராக்கட்டளை விளம்பரப் பதிவு.
5. மூன்று குகாசாஸனங்கள்.
6. நிக்ளிவாவிலும், ருப்மின்டேயிலுமுள்ள இருதராய்த் தூண்கட்டளை விளம்பரப் பதிவுகள்.
7. மேலே கணக்கிட்டுங் காட்டியபடி ஆறு பரிசோதனைகளிற்கண்ட ஏழு தூண்கட்டளை விளம்பரப் பதிவுகள்.
8. இராணிகட்டளை விளம்பரப்பதிவும் பிரயாகைத் தூணிலுள்ள கவுசாம்பிக் கட்டளை விளம்பரப்பதிவும், ஸாஞ்சித்தூணிலுள்ள வேறுவிதமான கவுசாம்பிக் கட்டளை விளம்பரப் பதிவும் அடங்கிய அநுபந்தத் தூண்கட்டளை விளம்பரப் பதிவுகள்.

விளக்கமான சாஸனங்களின் தொகை முப்பத்தினென்கென்று கணக்கிடலாம்:— (1, 14; 2, 2; 3, 2; 4, 1; 5, 3; 6, 2; 7, 7; 8, 3)

1. கற்கட்டளை விளம்பரப் பதிவுகள்	...	14
2. கலிங்கக்கட்டளை விளம்பரப் பதிவுகள்	...	2
3. சின்னகற்கட்டளை விளம்பரப் பதிவுகள்	...	2
4. பாப்ராக்கட்டளை விளம்பரப் பதிவு	...	1
5. குகாசாஸனங்கள்	...	3
6. தராய்த்தூண் கட்டளை விளம்பரப் பதிவுகள்	...	2
7. தூண்கட்டளை விளம்பரப் பதிவுகள்	...	7
8. இராணிகட்டளை விளம்பரப் பதிவுகள் முதலிய சிறிய தூண்கட்டளை விளம்பரப் பதிவுகள்.	...	3
ஆகமொத்தம்		34

சாஸனங்களனைத்தும் சமஸ்கிருத விலக்கியத்திற் சேர்ந்த பிராக்கிருத வரிசைகளில் எழுதியிருக்கின்றன. ஆனால் சாஸன பாஷைகள்,பாலிபாஷையோடாவது, பிராக்கிருத இலக்கியங்களோடாவது நெடுந்தூரம் ஒவ்வாமல் நூதனமாய்த் தோன்றுகின்றன. சாஸனங்களிற் பெரும்பாலும்;அப்போது பாடலிபுத்திரத்தில் வழங்கிவந்த மாகதியென்னும் ஒருவித பாஷையில் எழுதியிருக்கின்றன. சாஸனவாசகங்களை அங்கேயே அமைத்தார்கள் என்பது நன்கு விளங்குகின்றது.

கிர்நார் முதலிய தூரப்பிரதேச விளம்பர வாசகங்களை ஆங்காங்கிருந்த இராஜப் பிரதிக்காரியாலயங்களில் அமைத்ததனால், அவைகள் அத்தேச விசேஷங்களைக் காட்டுகின்றன. மத்திய மாகாண மைசூர் விளம்பர வாசகங்கள் கிர்

நார் வாசகங்களுக்கும் கீழை வாசகங்களுக்கும் நடுத்தரங்களா யிருக்கின்றன.

பெருமைபொருந்திய எம். ஈமிலிஸெநார்ட் துரையும், காலஞ்சென்ற டாக்டர், பூலர் துரையும்போன்ற கல்விமான்கள் அசோகசாஸனங்களைக்கூர்ந்து கவனித்ததனுல், இந்து நாகரிகசரித்திர விஷய விளக்கத்திற்குப் பெரும்பாலும் உதவிபுரிந்திருக்கின்றார்கள். ஆனல், அவர்கள் அனுபவவிளக்கங்களைச் சோதித்துப் பார்த்ததில், அவைகள் பரிபாஷை நிரம்பியிருந்தன. ஆகையால், இங்கெழுதுவதற்கநுகூலமா யில்லை

அசோகர் காலத்துக் கைத்தொழில் வித்தைகள் சிறந்து, உன்னதநிலைமை உற்றிருந்தன என்பதிற் சந்தேகமில்லை

இராஜாங்கச் சிற்பிகள், செங்கல், மரம், கருங்கல் முதலியவைகளால், அதியுன்னத விசாலமான கட்டடநிருமாணங்கள், அமைப்புகள் முதலியவற்றிலும், மிகப்பெரிய ஒற்றைக் கல் வேலைப்பாடுகளிலும்;பெரிய பெரிய ஏரிக்கரைகளை மதகுகளமைத்துக் கட்டிமுடிப்பதிலும், முரட்டுக்கல்லைத் துளைத்து விசாலமான கூடங்களமைப்பதிலும் வல்லவர்களா யிருந்தார்கள். கட்டடவேலைக்குக் கற்கொத்துவேலை, வலக்கைபோன்றது. பிரசித்தமான கட்டடங்களெல்லாம், தாராளமான உயர்தரவேலைபால் ஒழுங்காயும் அலங்காரமாயும் தீர்ந்து, மனித, ஜீவபிராணிகளின் உருவுகளமைந்த பதுமைவேலைகளிற் பாங்குபெற்று விளங்கின. சித்திரவன்னவேலை (Painting) யும் சீராய் அமைந்திருந்தது. ஆனல், இப்போது நமக்குத்தெரிகிறபடி, அது, பிற்காலத்

தில் மாசித்திபெற்றிருந்தது; விதமா யிருந்த மௌரிய வமிச ஆட்சிக்காலத்தில் அதன் தன்மை இன்னதென்று நாம் தெரிந்துகொள்ள இயலாமல், காலக்கூத்தன் கருந்திரையிட்டு மறைத்திருக்கிறான்.

கற்றச்சவேலைத்திறம் அக்காலத்தில் நிறைவடைந்திருந்ததென்று நிகழ்த்தலாம். பெருமணற்கருங்கற்கள், முப்பது நாற்பதடி நீளமுள்ளவைகள், நகைகள்போல நாணயமாய் மழுக்கியிருந்தன. செங்கற்கருங்கற்கட்டடப் பொருத்துகள் வாய்தெரியாமல் அவ்வளவு நேர்மையா யமைந்திருந்தன. மரவேலைப்பாடுகள் * வெள்ளெறும்பின் கொடுமையால் விளக்கமற்று அழிந்துபோயின. ஆகையால் அவைகளை நாம் மதிப்பிடக் கூடாமலிருக்கிறது. அவைகளிற் சிற்சில கம்பங்களும் உத்திரங்களும் பாட்னு நதிக்கரைகளில் புதைந்து கிடக்கின்றன. மௌரிய கால மணிகளும், நகைகளும், முத்திரைகளும் அடிக்கடி அகப்படுவதனால், அவைகளைக்கொண்டு, அக்காலத்திய கம்மாளரும் கற்றச்சரும், பிறரும் இக்காலத்திய கம்மாளர் முதலியோர்க்கு எள்ளளவும் பிந்தினவர்கள் அல்லரென்று திடமாய்ப் பேசலாம். இரதங்கள், குதிரைச்சேணங்கள், போராயுதங்கள், உடைகள், சல்லாக்கள், இன்னும் அத்தியாவசியமான பற்பல சாமான்கள் எல்லாம் நாணயமாகவே அக்காலத்தில் அமைந்திருந்ததனால், பரதகண்டப் புராதன நாகரிகப்பான்மை நன்குவிளங்குகின்றது. பிறகு வந்த மொகலாயர்காலத்தில் மேற்குறித்தவேலைகள் திறமடைந்திருந்தமை விசேடமன்று. கிரேக்க சரித்திரக்காரர்கள்

* கறையான் - செல்.

மகத விதர்ப்ப ராஜ்ய காலநாகரிகங்களை நன்கு கொண்டாடி வர்ணித்தெழுதுகிறார்கள்.

அக்காலத்தில் எழுத்துவேலை சாதாரணமாயிருந்தது. தற்காலத்திய தேவநாகரி எழுத்துக்களின் தாயாகிய பிராமி எழுத்துக்களும் பிறவெழுத்துக்களும் சிலாசாஸனங்களில் அழகாய்ச் செதுக்கியமைந்திருப்பதனால், அக்காலத்திலேயே அவைகள் அதியற்புதமாய்ப் பொருந்தியிருக்க வேண்டுமென்று நன்கு புலப்படுகின்றது. ஸாஞ்சிச்சவுடற் சேஷச்சிறுபரணிகள், அக்காலத்தில் எழுதுமையும் இனிது பொருந்தியிருந்ததென்பதைத் தெரிவிக்கின்றன. பாறைகள்மீதும் தூண்கள்மீதும் அதி அற்புதமாய் எழுத்துக்களைச் செதுக்கி, அரசன் கட்டளையை அறிவித்திருப்பதனால், அக்காலத்திற் குடிகளிற் பெரும்பாலார் எழுதப் படிக்க அறிந்திருந்தார்கள் என்பது ஐயமின்றித் தெரிகிறது.

அசோகருடைய எழுவாசகங்கள், பௌத்தமத வேதப் புத்தகங்களிலிருந்தெடுத்தவைகள், எத்தனையோ மத வேதப் புத்தகங்கள் எழுதியிருந்த இருப்பைக் காட்டுகின்றன. அப்படி அவைகள் புத்தகமாய் இல்லாதிருப்பின், பௌத்த மத வேதப் புத்தகத்துண்மைகள் அத்தனையும் இத்தனை காலம் கர்ணபரம்பரையாய் வழங்கிவந்திருக்கமுடியா.

இப்படிப்பட்ட நாகரிக நிலைமையின் வரலாறு, நன்றாய்க் குறித்துவையாததனால் அரைகுறையாய் நமக்குத் தெரிகிறது. சிற்சில புராதன நாணயவட்டங்களும் நல்லெழுத்துக்களும், பிப்ராவத்தூபியின் சாஸனங்களும், அசோக சாஸனங்கள் தாம், பாதகண்டத்தில் மிகப்பழமையா

னவையெனக் காட்டுகின்றன. இந்தச் சாஸனலிபிகளின் பூர்வோத்திரம் நன்கு விளங்காமைபால், அவைகளின் பழைமை புலப்படுகிறது ஆனாலும், பூலர் என்பார், அசோககாலத்துப்பிராமி எழுத்துக்கள், வெமிசாபடோமி யாவிலிருந்து வந்தனவென்றும், இதன்காலம் கி-மு-எண்ணூறென்று ஒருவாறு சொல்லலாம், என்றுங் கூறுகிறார். பரதகண்டத்திற் சிலநாகரிகங்கள் பாரசிகப்பான்மை யுற்றிருந்தனவென்பது தெரிகிறது. அவர்கள் எழுத்துப் போக்கு முதலியவைகள் சாஸனங்களிற் காண்கின்றன. பிரியதரிசனர் இப்படிச் சொல்கிறார் என்று தொடங்கி எழுதும் விதம் அக்காமீனிய மன்னர் இராஜாங்கபாஷையை நினைப்பூட்டுகிறது.

அசோகருடைய கற்றூண்கள்; ஒற்றைக்கற்பதிவுகள், சிற்பவேலைகள் முதலிய எல்லாம் பாரசீகப்பான்மை யுற்றிருக்கின்றனவென்பதிற் சந்தேகமில்லை. சிங்கங்களுக்குச் சிறகுகள் செதுக்கியிருப்பதும், கற்றூண்களுக்குமேல் குதிரைகளும் பிறமிருகங்களும் உருவமைத்திருப்பதும், பிறவும் அஸிரியவாதிக்யமாகும். இன்னும் கிரேக்கவாதிக்யமும் அவற்றுள் வந்து விளங்குகின்றன.

பௌத்தமத புராதனக்கதைகளிலெல்லாம் சிற்பவேலைகள் மரங்களிற் செய்திருந்தனவென்று சொல்லியிருக்கின்றது. அசோகர்காலத்தில் அவைகள் செங்கல், கருங்கல், மரப்முதலியவைகளில் அமைந்திருக்கின்றன. இது போலவே அசோகர், தமது நகரத்தைச் சுற்றி இருந்த பழைய மரச்சுவரைச் சூழக் கற்சுவர் கட்டினார் என்று ஹியூன்த்ஸியாங் என்பவர் குறிக்கிறார்.

அசோகர்காலத்தில் புத்தவிக்கிரகங்கள் செய்துவைத்ததில்லை. அவருடைய ஆசனங்கள் திருவடிச்சுவடுகள் முதலிய சின்னங்கள் ஏற்பட்டிருந்தன.

சிலாசாஸனங்கள்.

1. பதினான்கு கருங்கற்கட்டளைப் பதிவுகள்.
(பதின்மூன்று பதினான்கா மாண்டாட்சி)

கட்டளைப்பதிவு—1.

உயிர்களின் உயர்வு.

புண்ணியக் கண்ணியராகிய பிரியதரிசனமகாராஜர் கட்டளையால், இந்தப்பக்தி தர்மக்கட்டளை விளம்பரம் எழுதியிருக்கிறது :—

இங்கு (பாடலிபுத்திரத்தில்) யாகாதிகளுக்காக எந்த உயிரையுங் கொல்லப்படாது. விடுமுறைவிருந்தென்பதே கூடாது. ஏனென்றால் அதில்தான் பிரியதரிசனமகாராஜா,பலவிதமான தீமைகளைக்காண்கிருர். ஆனபோதிலும், சிலவிடுமுறை விருந்துகள், பிரியதரிசியார் பார்வைக்குப் புண்ணியமும் கண்ணியமுமுள்ளனவா யிருக்கின்றன.

பரிசுத்தம்.

இதற்குமுந்தி, பிரியதரிசனமகாராஜர் மடைப்பள்ளியில் ஒவ்வொரு நாளுந்தவருமல் அநேகமாயிர ஜீவப்பிராணிகள் கறிக்காக வதையுண்டன.

இந்தப்பக்தி தர்மக்கட்டளை விளம்பரம் எழுதும்படி பிராணிகள் தினந்தோறுங் கொலையுண்கின்றன. மயில்கள் இரண்டு ; மான் ஒன்று (மான்தினமும் என்கிற நியமம் இல்லை).

இனி இந்த மூன்று பிராணிகள்கூட வதையுண்ணு. (கொலைசெய்துண்பதையே இனி நிறுத்துவோம்).

கட்டளைப்பதிவு—2.

மாந்தர்க்கும் மற்றையுயிர்க்கும் ஆதாரவைப்புகள்.

பெருமைபொருந்திய பிரியதரிசனமகாராஜர் நாட்டிலும், அடுத்த தேசங்களாகிய சோழமண்டலம், பாண்டிமண்டலம், சத்தியபுத்திர மண்டலம், கேரள புத்திரமண்டலம், சிங்களத்தீபம் முதலிய இடங்களிலும், அண்டியாக்கஸ் ஆட்சியிலுள்ள கிரேக்க நாட்டிலும், அவர்க்கடங்கியுள்ள மற்றநாடுகளிலும் எந்நாட்டிலும் பெருமையுற்ற பிரியதரிசியார் பொருட்டு, இருவித சிரமபரிகாரங்கள் (மருத்துவச்சாலைகள்) பரவியிருக்கின்றன. அவை மாந்தர் சிரமபரிகாரங்கள், மற்றமிருக சிரமபரிகாரங்கள் என்பனவைகளாம். சிகிச்சாமூலிகைகள், மனித ஓடதிகள், மிருக ஓடதிகள் எங்கெங்கில்லையோ அங்கங்கும் வைத்துப் பயிராயிருக்கின்றன.

இப்படியே கிழங்குகளும் பழங்களும் எங்கெங்கில்லையோ அங்கங்கும் வைத்துப் பயிராயிருக்கின்றன.

மனித மிருகோபயோகத்திற்காகச் சாலைகளில் மரங்களை வைத்துப் பயிராக்கிக் கிணறுகளை வெட்டியிருக்கின்றோம்.

கட்டளைப்பதிவு—3.

ஐந்துவருஷக் கூட்டம்.

பெருமைபொருந்திய பிரியதரிசனப்பார்த்திபர் இப்படிச் சொல்லுகிறார். என்னுடைய பதின்மூன்று மாண்டாட்சியில் இக்கட்டளையைச் செலுத்தினேன்:—

என்னுடைய தேசத்திற் பிரபுக்களும், அதிகாரிகளும், சிற்றூர்த்தலைவர்களும், ஐந்தாண்டுக்கொருமுறை பொதுக் கூட்டத்துக்குப் போகவேண்டும். அவர்களுக்குள்ள மற்ற வேலைகளுக்கிடையில், பக்திதர்ம நீதிநெறியை வெளியிட வேண்டும்! அதனால் தந்தைதாய்க்கடங்கியிருப்பது, நன்மையென்றும், நேசர்க்கும், அறிமுகமானவர்க்கும், சுற்றத்தார்க்கும், அந்தணர்க்கும், துறவியர்க்கும் தாராளமாய்த் தருவது நன்மையென்றும், உயிர்களின் உயர்வை மதித்தல் உத்தமம் என்றும், வீண்செலவுடன் கடுஞ் சொல்விலக்கம் நல்லதென்றும் அவர்கள் அறிவிக்கவேண்டும். இதைக் குருமார், பிரபுக்களுக்கு எழுத்தளவாயும் உரையளவாயும் விவரமாய்ப் பிரசங்கப்பண்ணி உபதேசிக்கவேண்டும்.

கட்டளைப்பதிவு 4.

பக்திதர்மப் பயிற்சி

(அல்லது)

அருட்பயிற்சி.

நெடுநாளாய், (அநேக நூறாண்டுகளாய்) பிராணிகள் வதையும், ஜீவபிராணக் கொடுமையும், சுற்றந்தழாமையும், * அந்தணர் அவமதிப்பும் அதிகரித்திருக்கின்றன.

ஆனால், இப்போது பெருமை பொருந்திய பிரியதரிசன மகாராஜருடைய அருட்பயிற்சியால் போர் முரசப் பேரோசைக்கு மாறாக அருள்முரசப் பேரோசை முழங்குகிறது. அதனுடன், ஊர்வலம் வரும் (பக்திதர்மநீதி நெறியைக் காட்டும்) தேர்களையும், யானைகளையும், தீபவொளிகளையும், பிறவற்றையும் ஜனங்கள் காண்கிறார்கள்.

---

* பிராமணர் - முனிவர்.

அநேக நூற்றாண்டுகளாய் நடந்து வருவதுபோல, இப்போது பெருமை பொருந்திய பிரியதரிசனருடைய பக்தி, தர்மநீதிநெறி விளக்கத்தால் நடந்துவருவதில்லை. ஜீவபிராணவதை நின்றது. ஜீவ பிராணக்கொடுமை தடைபட்டது சுற்றத்தார்க்கும் அந்தணர்க்கும் பெருமை சிறந்தது. தந்தைதாயர்க்கும் மற்றைப் பெரியோர்க்கும் அடங்கி நடத்தல் வளர்ந்தது.

இப்படி இன்னும் பல வழிகளில் * அருட்பயிற்சி வளர்ந்து வருகிறது. பெருமையிற் சிறந்த பிரியதரிசனர் இப்பயிற்சியை இன்னும் அதிகரிக்கச் செய்வார்.

பெருமைபொருந்திய பிரியதரிசனருடைய மைந்தரும், அவர் மைந்தரும், அவர்க்கு மைந்தரும், † காலச்சக்கரவோட்டம் நிற்குமட்டும் இப்பயிற்சியின் வளர்ச்சியை ஓங்குவிப்பார்கள்; தாமே அருளினும் நீதியினும் ஈடுபட்டு, பக்திதர்ம நீதிமார்க்கத்தைப் பலர்க்கும் அறிக்கையிடுவார்கள். ஏனென்றால், அரசர்க்கெவ்வித காரியங்களினும், பக்திதர்ம நீதிநெறிவிளக்கமே சிறந்தது. அருட்பயிற்சி, துன்மார்க்கர்க்குகந்ததன்று.

இவ்விஷயத்தில் வளர்ச்சி நலந்தருவதன்றித் தளர்ச்சி நன்றன்று.

இதற்காகவே இவ்வெழுத்துப் பொறித்திருக்கின்றது. இது தெரிந்த மாந்தரனைவரும் இவ்விஷயம் வளரமுயல்வதன்றித் தளரவிடக்கூடாது.

---

* பக்திதர்மநீதிப்பயிற்சி.

† ஊழூழி காலம்.

பெருமைபொருந்திய பிரியதரிசன மகாராஜர் தமது பதின்மூன்றாமாண்டாட்சியில் இட்டகட்டளையால் இது எழுதி முடிந்திருக்கிறது.

கட்டளைப்பதிவு 5.

பக்திதர்ம நீதித்தலைவர்கள்.

பெருமைபொருந்திய பிரிய தரிசனமன்னர் பின்வருகிறபடி கூறுகிறார்:—

நல்வினை அருமையான காரியம். நல்வினை செய்வோன் அருங்காரியஞ் செய்கிறான். இப்போது அநேக அருங் காரியங்களை நான் செய்து வருகிறேன். எனது குமாரர்கள், அவர்கள் குமாரர்கள், அவர்களுக்குப் பின் சந்ததியார் யாவரும் காலச்சக்கரச் சுழற்சி முடியுமட்டும் இவ்வழியைப் பின்பற்றுவாராயின், நன்றாய் வாழ்வார்கள்; ஆனால், இந்த விஷயத்தில் ஏற்பட்ட கட்டளையை எவனாவது தப்பி நடப்பானாயின், அவன் சேமமாய் வாழான். ஏனென்றால் பாவஞ்செய்வது சுலபம்.

இதுவரையில்சென்ற காலங்களிலெல்லாம், பக்தி தர்ம நீதித்தலைவர்கள் என்ற உத்தியோகஸ்தர்கள் ஏற்பட்டிருந்ததே கிடையாது. ஆனால், பதினான்காமாண்டாட்சியில், பக்தி தர்ம நீதித்தலைவர்கள் ஏற்பட்டார்கள்.

அவர்கள் மாந்தரிற் பல வகுப்பாரிடத்திலும் காரியதுரந்தர்களாய், பக்தி தர்ம தாபனாபிவிர்த்தியிலும், பக்தி தர்ம வளர்ச்சியிலும், பிரபுக்கள், யோனர்கள், காம்போசர்கள், காந்தாரர்கள், இராட்டிரர்கள், பித்தெனிகர்கள், எல்லைப் புறத்துப் பிறவகுப்பினர்கள் ஆகிய இவர்களுடைய சுகச்சேமங்களிலும் கவனஞ் செலுத்துகிறார்கள்

இன்னும் அவர்கள் என்னுடைய கலிப்படை வீரர்கள், பிராமணர்கள், ஏழைகள், பணக்காரர்கள், கிழவர்கள் முதலியோருடைய சுகக்ஷேமாபிவிர்த்தியிலும், உண்மை விசுவாசமுள்ள பிரபுக்கள் தந்நெறி தவறுவதற்கேதுவான தடைகளைக் களைவதிலும் கவனஞ் செலுத்துகிறார்கள்.

இன்னும் அவர்கள், தப்புச் சிறைவாச விமோசனத்திலும், தடை நீக்கத்திலும், விடுதலையிலும் ஒருவன் பெருங் குடும்பியா, விசனத்தி லாழ்ந்தவனா, வயதின் முதிர்ந்தவனா வென்பதைத் தேர்வதிலும் கவனஞ் செலுத்துகிறார்கள்.

இங்கு, பாடலி புத்திரத்திலும், மற்றை மாகாணப் பட்டணங்களிலுமுள்ள எனது சகோதரர் குடும்பப் பெண்கள், சகோதரிகள் முதலிய பெண் சுற்றக் கூட்டங்களை அவர்கள் மேற்பார்த்துக் கவனிக்கிறார்கள்.

எனது தேசங்களில் எங்கெங்கும் இந்தப் பக்தி தர்ம நீதித்தலைவர்கள், எனது பிரபுக்களில் யார் யார் பக்தி தர்ம நெறியை நம்பி யிருக்கிறார்களோ, பக்தி தர்மநெறியில் நிலைத்திருக்கிறார்களோ அல்லது பிச்சையிடுவதைப் பின் பற்றுகிறார்களோ அவர்களைக் கவனிக்கிறார்கள்.

இந்த விஷயத்திற்காகவே இந்தப் பக்தி தர்மக் கட்டளையை எழுதியிருக்கிறேன். இது நெடுநாள் நிலைத்திருக்கக் கடவது. எனது குடிகளும், அதன்படி நடக்கக் கடவர்கள்.

கட்டளைப்பதிவு 6.

கருத்தாய்க் காரியஞ்செய்தல்.

பெருமை பொருந்திய பிரியதரிசனர் பின் வருகிறபடி சொல்லுகிறார்:—

நெடுங்காலமாய்க் காரியம் சரியாய் நிறைவேறுகிற தில்லை. எப்போதும் நாட்டுச்செய்தி நன்றாய்த் தெரிகிற தில்லை.

அதற்காக, எல்லாவிடங்களிலும் எல்லா * மணிகளிலும், நான் உண்டுகொண் டிருந்தாலும், அந்தப்புரத்தி லிருந்தாலும், படுக்கையறையி லிருந்தாலும், † நெருக்க அறையிலிருந்தாலும், வண்டியிலிருந்தாலும், அரண்மனைத் தோட்டத்தி லிருந்தாலும் — உத்தியோகச்சேதி யறிவிப்போர், குடிகள் காரியத்தைப் பற்றி அடிக்கடி எனக்கறிவித்தபடி யிருக்கவேண்டும். அப்படிப்பட்ட குடிகள் காரியத்தை எந்த இடத்திலேனும் நான் நிறைவேற்றச் சித்தமாயிருக்கிறேன்.

ஒருவேளை நான் நேரில் வாய்மொழியாகவே ஒரு கொடையளிக்க வேண்டுமென்றாவது, ஒரு கட்டளை நிறைவேற்ற வேண்டுமென்றாவது, வேறு ஏதாவதவசிய கருமமுடிக்கவேண்டுமென்றாவது, உத்தியோகத்தர் பொறுப்பில் விட்டபோது, குருமார்களே அதில் ஏதாவது சச்சரவு நேரிட்டாலும், மோசம் உண்டானாலும், உடனே எனக்குச் சேதி தெரிவிக்கவேண்டும். எந்த இடமானாலுஞ்சரி, எந்த மணியானாலுஞ்சரி என்று நான் கட்டளையிட் டிருக்கிறேன். ஏனென்றால் என்னுடைய உழைப்பிலும் எனக்கு எப்போதும் முழு மனநிறைவு கிடையாது.

பொது ஜனோபகார காரியார்த்தமாகவே எப்போதும் நான் வேலை செய்யவேண்டும். விஷயமூலம், வேலையை விரைவில் நிறைவேற்றுவதில் இருக்கிறது. இதைப்பற்றிப் பொதுஜன நன்மைக் கனுகூலமானது வேறொன்றும் இல்லை.

---

*நாழிகைகள். † அவசியம் கழிக்குமிடம்.

எதற்காக நான் உழைக்கிறேன்? இதை யல்லாமல் வேறெதற்கும் அல்ல. எவ் வுயிர்களும் எனது கடமையை நான் சரியாய்ச் செய்யவேண்டும். ஏனென்றால், சில உயிர்களை நான் இகத்திற் சந்தோஷிக்கச்செய்தால், பரத்தில் அவைகள் துறக்கம் புகலாம்.

இதற்காக இந்தப் பக்திதர்ம நீதிக்கட்டளையை எழுதி வைத்தேன். இது நெடுநாள் அழியாதிருக்கவேண்டு மென்பதும், என்னுடைய மைந்தரும், அவர் மைந்தரும், அவர் மைந்தரும், அவர் மைந்தரும் வெகு ஜன நன்மைக்காக உழைக்கவேண்டு மென்பதும் என் கோரிக்கை. அதிக வருந்தி உழைத்தாலன்றி, இந்த விஷயங் கைகூடுவது கஷ்டந்தான் என்றாலும், (இதை அவர்கள் செய்து தீரவேண்டு மென்பது என் தீர்மானம்).

கட்டளைப்பதிவு 7

அரை குறையாகச் சட்டத்தை நிறைவேற்றுதல்.

பெருமைபொருந்திய பிரியதரிசன மகாராஜர், எல்லா வகுப்பாரும், ஐம்புல அடக்கத்திலும், மனத்தூய்மையிலும் இச்சை வைத்திருப்பதால், எல்லா இடங்களிலும் வாழலாம் என்று விரும்புகிறார்.

எப்படி யிருந்தபோதிலும், மனிதன் தன் கோரிக்கையில் நிலையற்றவன், இச்சையில் மாறுபவன்.

சில வகுப்பார், கட்டளை முழுவதையும் நிறைவேற்றுவார்கள். சிலர் அதில் ஒரு பாகத்தையே செய்வார்கள்.

தாராளப் பெருங்கொடையளிக்க முடியாதவனுக்கும் ஐம்புலவடக்கமும், பக்தியும் எப்போதும் மேன்மையானவைகளாம்.

கட்டளைப்பதிவு 8.

பக்திதர்மச் சுற்றுப்பிரயாணங்கள்

சென்றகாலங்களிற் பெருமையிற் சிறந்தோர் (கீர்ணர் மன்னர்கள்) போலியின்பச் சுற்றுப்பிரயாணங்கள் செய்வது வழக்கம், அப்போது அவர்கள் வேட்டையாடுதல் போன்ற விநோதவேடிக்கைகளிற் பழகுவது வாடிக்கை.

ஆனபோதிலும், பெருமையிற் சிறந்த பிரியதரிசனர் தமது பதினோராமாண்டாட்சியில், உண்மை ஞானமார்க்கத்திற் புறப்பட்டுப்போனார். அங்கிருந்து இந்தப் பக்திதர்மப் பிரயத்தனம் ஆரம்பித்தது. அப்போது, துறவியர்க்கும் அந்தணர்க்கும் தாராளமாய்ப் பொருள் தரவேண்டுமென்னும் எண்ணமும், பெரும்பொற்கொடையாம் தேசஜன நேசநோக்கு, பக்திதர்ம நீதிநெறிவிளக்கமும், பக்திதர்ம நீதிநெறி விசாரணையும் பழக்கமாயின.

ஆகையால், அதுமுதல் பெருமையிற்சிறந்த பிரியதரிசனர்க்கு, இவைகள்தாம் பழைய போலியின்பங்களுக்கு மாறான இன்பங்கள்.

கட்டளைப்பதிவு 9.

உண்மைச்சடங்கு.

பெருமைபொருந்திய பிரியதரிசன மன்னர் பின்வருகிறபடி பேசுகிறார்:—நோயாயிருக்கையிலும், மைந்தர் மணங்

களிலும், பெண்கள் மணங்களிலும், மக்கட்பேற்றிலும், பிரயாணம்புறப்படுகையிலும் ஜனங்கள் பலவிதச்சடங்குகள் செய்கிறார்கள். இவைகளிலும் இன்னும் இவைகள் போன்ற பிறசமயங்களிலும் ஜனங்கள் பற்பல சடங்குகளியற்றுகிறார்கள்.

அப்படிப்பட்ட காலங்களில் பெண்பாலார், பற்பலவிதமாய்க் கேடுகெட்டுதவியற்ற சடங்குகளைச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட சடங்குகள் பயனற்றவைகளேனும் உண்மையிற் செய்யவேண்டியவைகள்தாம். ஆனபோதிலும், இப்படிப்பட்ட பக்திதர்ம நீதிச்சடங்கு பெரும்பலன்தருகிறது. இது, அடிமைகட்கும் வேலையாட்களுக்கும் அன்புசெலுத்துவதையும், குருமார்க்குப் பெருமை செலுத்துவதையும், உயிர்க்கு மதிப்பு செலுத்துவதையும், அந்தணர்க்குத் தாராளமாய்ப் பொருள் செலுத்துவதையும் ஒன்றுசேர்த்துக்கொண்டிருக்கிறது. இந்த விஷயங்களும் இவைகளைப்போன்ற பிறவும் பக்திதர்ம நீதிச்சடங்குகள் எனப்படும்.

ஆகையால், ஒவ்வொரு தந்தையும், மைந்தனும், சகோதரனும், எசமானனும், நேசனும், தோழனும், அயலவனுங்கூட, 'இது மேன்மையானது, இதுதான் என் எண்ணம் ஈடேறும்வரையில் செய்யவேண்டிய சடங்கு' என்று சொல்லவேண்டியது. உலகச்சடங்கு சந்தேகபலமுடையது. ஆகையால் அப்படிப்பட்ட சடங்குகளால் எண்ணம் ஈடேறும் ஒருவேளை. அது எண்ணத்தைமாத்திரம் ஈடேற்றும். இகபலனைமட்டும் உண்டாக்கும். பக்திதர்ம நீதிச்சடங்கு இதற்குநேர் விரோதமானது; இது இகசுகந்தருவதன்று,

இது இகசுகந் தரத்தவறினுல், முடிவில்லாப் பரசுகத்தை நிச்சயமாய்த் தருகிறது. இது எண்ணத்தை ஈடேற்றினுல், இரட்டைப் பலனடைவது நிச்சயம். ஒன்று இவ்வுலக வெண்ணம் ஈடேறுவது, மற்ருென்று மேற்சொன்ன பக்தி தர்ம நீதிச் சடங்கால் அவ்வுலகத்தில் முடிவில்லாப் பலனெய்துவது

கட்டளைப்பதிவு 10

உண்மைப் புகழ்.

பெருமைபொருந்திய பிரியதரிசனர், தற்காலத்திய மாந்தரும், பிற்காலத்திய பிரஜைகளும் பக்திதர்ம நீதியை வணக்கமாய்க்கேட்டு, அதன் விதிகளுக்கு இணக்கமாய் நடந்துகொண்டாலன்றி, புகழும், பேரும் பலன் தருமென்று நம்பவில்லை.

அதற்காகவே, பெருமைபொருந்திய பிரியதரிசன மன்னர், உண்மைப் புகழையும் பேரையும் விரும்புகிருர்.

பெருமையிற் சிறந்த பிரியதரிசனமன்னர் உழைத்திருக்கிற உழைப்புகளெல்லாம், இனிவரும் பிறவிக்காதாரமானதேயாம். அதனுல், ஒவ்வொருவனும் அபாயத்தினின்றும் விடுபடலாம். அவ் வபாயந்தான் பாவம் என்பது அவர் எண்ணம்.

மாந்தரில் உயர்ந்தோரேனும் தாழ்ந்தோரேனும், விடா முயற்சியினுலும் ஆசையை முழுவதும் அறுப்பதினுலும் அல்லாமல், அப்படிப்பட்ட விடுதலையடைதல் அருமையென்பது நிச்சயம். ஆனுல் மாந்தரில் உயர்ந்தோர்க்கு அது அருமையிலும் அருமையாய் இருக்கிறது.

கட்டளைப்பதிவு 11.

உண்மை உபகாரம்

பக்திதர்ம நீதியுபகாரகொடையைப்போல வேறொருபகாரம் கிடையாது; பக்திதர்ம நேசத்தைப்போல வேறொரு நேசம் கிடையாது; பக்திதர்ம விநியோகத்தைப் போல வேறொரு விநியோகமில்லை; பக்திதர்ம உறவைப் போல வேறொரு றுறவுமில்லை.

பக்திதர்மநீதி இவ்விஷயங்களில் அடங்கியிருக்கிறது. அடிமைகளையும் வேலையாட்களையும் அன்பாய் நடத்த வேண்டுமென் றறிவது; அந்தணர்க் குபகரிக்கவேண்டுமென் றறிவது'; உயிர்களின் பரிசுத்தத்தை மதிக்கவேண்டுமென் றறிவது.

ஆகையால் ஒவ்வொரு தந்தை, மைந்தன், சகோதரன், எசமான், நேசன், தோழன், அயலவனுங்கூட, 'இது மேன்மையானது, இதைச்செய்யவேண்டும்' என்று சொல்ல வேண்டும்.

யார் ஒருவன் இதை பக்திதர்ம நீதிமார்க்கோபகாரத்தால் இப்படி நடக்கிறானோ, அவன் இகசுகத்தையும் அடைகிறான்; முடிவில்லாப் பரசுகத்தையும் பெறுகிறான்.

கட்டளைப்பதிவு 12.

இனமோத்தல்.

இல்லறத்தாரேனும் துறவறத்தாரேனும் அவர்களுக்கு நன்கொடையாலேனும் மற்றும் பலவித கௌரவத்தாலேனும் பெருமைபொருந்திய பிரியதரிசன மகாராஜர் மேன்மைசெய்கிறார்.

ஆனாலும், பெருமையிற் சிறந்த அன்னார், எல்லா இனத்திர்க்கும் ஒருவித விஷயசார வளர்ச்சி உண்டாக வேண்டுமென்பதைத் தவிர, நன்கொடைகளையாவது மேல் மரியாதையையாவது அவ்வளவு பொருட்படுத்துகிறார் இல்லை. விஷயசாரவளர்ச்சி பலவேறுருவங்கள் அடைகிறது. ஆனால் அதன் அடிப்படை நாவடக்கம், ஒருவன் வீண் காரணங்களால்பிறன் இனத்தை இகழ்ந்து, தன்னினத்திற்கு மேன்மை செய்துகொள்ளப்படாது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். சரியான காரணத்தோடேயே, அவ மதிப்புண்டாகவேண்டும், ஏனென்றால், பிற இனத்தார் ஏதாவதொரு காரணத்தால் பெருமைக்குப் பாத்திரவான் களாயிருக்கிறார்கள்.

இப்படி நடப்பதனால் ஒருவன் தன் இனத்தை உயர்த்துகிறதுமன்றி, பிற ரினங்களுக்கும் பேருதவி செய்கிறான். இதற்குமாறாக நடப்பதனால், ஒருவன் தன் னினத்தையுங் கெடுக்கிறான், பிறரினங்களுக்கும் கெடுதி செய்கிறான். ஏனென்றால், தன்னினத்திற்குப் பெருமை செய்கிறவன், அதன்மேல் வைத்த பற்றுக்காரணமாக மற்ற வினங்களை அவமதிக்கையில், தன்னினத்தைக் கௌரவப் படுத்துகிறதாக எண்ணிக்கொள்ளுகிறானன்றி, உண்மையில் அவன் அத்தகைய நடக்கையால் தன்னினத்தார்க்குக் கடுங் கெடுதி விளைக்கிறான்.

ஆகையால், பிறர் தர்மத்தைக் கேட்டறிவது,மனமுவந்து கேட்பதுமாகிய தன்னடக்கம் புகழ்ச்சிக்கிடமானது.

ஏனென்றால், எல்லா இனத்தைச் சேர்ந்தவர்களும் இதைக்கற்பித்து ஞானத்தில் முதிர்விக்கவேண்டுமென்பது பெருமையிற் சிறந்த மன்னருடைய கோரிக்கை.

எல்லா இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பெருமை பொருந்திய மன்னர், எல்லா இனத்தார்க்குள்ளும் விஷய சாரவளர்ச்சி, பெருவளர்ச்சி, உண்டாகவேண்டுமென்பது போல, நன்கொடைகளைபாவது மேல் மரியாதையையாவது மதிக்கிறார் இல்லையென்று தெரிவிக்கவேண்டியது.

இந்த ஒரு விஷயத்திற்காகவே, பக்திதர்மநீதியதிகாரிகள் ஏற்பட்டிருக்கிறார்கள். பெண்களின் பக்திதர்மநீதியதிகாரிகள், மேல்பார்ப்போர், மற்ற உத்தியோகக் கூட்டத்தார் இவர்களும் உளர். அதனால் நேரிடும் பலன் இது. ஒருவனுடைய இனவளர்ச்சி, பக்திதர்ம நீதிநெறிக்கீர்த்தி.

கட்டளைப்பதிவு 13.

உண்மைவெற்றி.

பாட்சிமைதங்கிய பிரியதரிசனமகாராஜர் ஒன்பதாமாண்டாட்சியிற் கலிங்கத்தை வென்றார்.

அதில் ஒரு நூற்றைம்பதிணுயிரம்பேர் கைதிகளாயினர்; ஒரு நூறுபிரம் பேர் ஆயுதங்களால் மாண்டார்கள். எத்தனையோ நூறுபிரவர், நோயாலும் உணவாதிகளில்லாமையாலும் மடிந்துபோனார்கள்.

கலிங்கதேசத்தைவென்று, மகததேசத்தோடு சேர்த்துக்கொண்டதுமுதல், பெருமையிற் சிறந்த பிரியதரிசனர், பக்திதர்மநெறியை வைராக்கியத்தோடு பரிபாலித்து வருவதன்றித் தாமும் அதைப்பின்பற்றி வருகிறார்; அதிற்குறித்த திட்டங்களை வெகுஜனங்களுக்கும் விளம்பரப்படுத்தி இருக்கிறார்.

கலிங்கரை வென்றதற்காகப் பிரியதரிசனமன்னர் பெரிதும் மனம் வருந்தி இரங்குகிறார். ஏனெனில், தன் இச்சை

யிற்றிகழ்ந்திருந்த நாட்டைக் கைப்பற்றுவதென்றால், எளிதில் இசைவதன்று. அதனால், கொலையுங் கோரமும், மரணமும் இரணமும், சரணமும் பிறகொடுமைகளும் நேரிடுகின்றன. அவைகளைப்பற்றியும் பெருமைபொருந்திய பிரியதரிசியார் பெரிதும் வருந்துகிறார்.

பெருமைபொருந்திய பிரியதரிசியார் பின்னும் அதிகமாக வருந்துவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அப்படிப்பட்ட நாட்டில் வேதியரும் துறவிகளும், இல்லறத்தாரிற் பல வருணத்தாரும், பிறரும், பெற்றோர்க்கடங்கியும், உற்றோர்க்குதவியும், கற்றோர்க் கடங்கியும், மற்றோர்க் குதவியும் வாழ்கிறார்கள். நட்பினர், தோழர், சுற்றத்தார், அடிமைகள், வேலையாட்கள் முதலியோரை விசுவாசமாய் ஆதரிக்கிறார்கள். அந்நாட்டில்வாழும் அப்படிப்பட்ட மாந்தர்க்குக் கொடுமையும், கோரமும், கொலையும், அன்புடையாரைப் பிரிதலும் நேரிடுகின்றன.

தங்களைத் தாங்கள் காத்துக்கொள்ளக்கூடியவர்களும் தங்களன்பைத் தமர்மேற் குறையாமற் செலுத்துகிறார்கள்.

அவர்களுடைய நட்பினர்க்கும், நொதுமலர்க்கும், தோழர்க்கும், சுற்றத்தார்க்கும் அழிவு நேரிடுகின்றது. இப்படித் தம்மைத் தாம் காத்துத் துன்புறாதவர்களுடைய உள்ளமும் வருந்திவாடும் கொடுமைக்கிடமுண்டாகிறது. இப்படிப் பலவிதமாய்ச் செலுத்துந் துன்பம், பெருமையிற் சிறந்த பிரியதரிசியார்க்குப் பெரிய விசனமூட்டுகிறது. ஏனென்றால், வேதியரில்லா நாடேது? துறவியரில்லாத் தேயமேது? ஓரினத்திலேயே அன்பு செலுத்திவாழும் மன்பதையில்லாத மாகாணமேது?

கலிங்கவெற்றியிற் கொலையுண்ட, கைதிகளாகப்பிடிபட்ட, அல்லது மாண்ட மன்பதைகளில் நூற்றிலொரு பாகம் அல்லது ஆயிரத்திலொருபாகமேனும், இப்போது பிரியதரிசியார்க்குப் பெரிதும் விசனமூட்டும் விஷயமாகும்.

எவனுகிலும் இப்போது, பிரியதரிசியார்க்குத் துன்பம் விளைக்கநேரிட்டால், அதை அவர் பொறுத்துக்கொள்ளுமாற்றல் ஆத்திரமின்றிப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்

தமது ஆட்சியிலடங்கியுள்ள காட்டு மனிதர்களிடத்திலும் பிரியதரிசியார் அருளுடையவராயிருக்கின்றார். அவர்களை அழிக்கவும் தமக்கதிகாரமிருந்தும், பெருமைபொருந்திய பிரியதரிசியார் பின்வருகிறபடி அவர்களுக் கெச்சரிக்கை செய்திருக்கிறார்.

தீவினையை விலக்குங்கள், நீங்கள் அழியாதிருப்பீர்கள்; பிரியதரிசியார் எல்லாச் சீவராசிகளும் சேமமாயிருக்க வேண்டுமென்றும், ஆசையை அடக்கவேண்டுமென்றும், மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் இருக்கவேண்டு மென்றும் விரும்புகிறார்.

இந்த வெற்றிதான் வெற்றிகளுக்கெல்லாம் பிரதானமான வெற்றி. இதுதான் பக்திதர்ம நீதிமார்க்க வெற்றியென்று பெருமை பொருந்திய பிரியதரிசியார் பெரிதும் அபிப்பிராயப்படுகிறார். இதுவே பெருமையிற்சிறந்த பிரியதரிசியாரது நாட்டிலும், அறுநூறு யோஜனை தூரமுள்ள பிறநாடுகளிலும் அனுசரணையிலிருக்கிறதென் றெண்ணுவதாகும். அன்டியாக்கஸ் வாழும் கிரேக்கதேசமும், அதற்கப்பால் டாலமி அன்டிகோனஸ், மாகஸ், அலக்ஸாண்டர்

முதலியோராலும் பிறதேசங்களும் இதை அனுசரிக்கின்றன. இன்னும், தெற்கில் சோழமன்னரும், பாண்டியரும், சிங்களவரசரும் அனுசரிக்கின்றார்கள். அப்படியே இங்கும், பிரியதரிசியா ராட்சியிலுள்ள யோனரும், காம்போஜரும், நபிகிதரும், போஜரும், பிட்டிணிகரும், ஆந்திரரும், புளிந்தரும் பிறரும் பிரியதரிசியாருடைய பக்திதர்ம நெறியிற் படர்கிறார்கள்.

பெருமை பொருந்திய பிரியதரிசியாருடைய தூதர் பிரவேசியாத நாட்டாரும் பக்தி தர்மநெறி விளம்பரத்தைக் கேட்டவுடன், அதிற் பழகுகிறார்கள்.

ஆகையால், வெற்றி எங்கெங்கும் பரவியிருக்கிறது. அதனால் ஆனந்த உணர்ச்சி தோன்றியிருக்கிறது.

பக்திதர்மநெறி பரமானந்தங் காட்டுகிறது. இது சிறு காரியந்தான். ஆனாலும், இந்தப் பரலோக விஷயந்தவிர மற்றெதையும் பிரதானமாகப் பிரியதரிசியார் எண்ணவில்லை.

இதற்காக, இந்தப் பக்திதர்மக் கட்டளை எழுதியிருக்கிறது. என் மைந்தரும், அவர் மைந்தரும் பிறநாட்டை எதிர்த்துப் புதுவெற்றி பெறுவதைத் தங்கடமையாக எண்ணிக்கொள்ளக்கூடாது. அவர்கள் யுத்தவெற்றி முயற்சியிலிருக்கும்போதும், பொறுமையிலும், சாந்தத்திலும், சுகம் பெறலாம் பக்திதர்ம நெறியால் அடையும் வெற்றியாவ யென்றெண்ணவேண்டும். இதனால் இகபர சுகாதிக்யம் உண்டாகும். அவர்கள் சுகமெல்லாம் இகபரசுக முயற்சியிலிருக்கட்டும்.

கட்டளைப்பதிவு 14.

முடிவுரை.

பக்திதர்ம நீதிநெறிக்கட்டளைப் பதிவுகளில் இந்த இனம், பெருமை பொருந்திய பிரியதரிசனமகாராஜர் கட்டளையால் எழுதியிருக்கிறது. சில சமயங்களில் இதன் உருவம் (மாதிரி) சுருக்கியும், நடுத்தரமாயும், சில சமயங்களில் விரிந்தும் இருக்கிறது. ஏனென்றால், ஒவ்வொன்றும் ஒவ்வோரிடத்திற்கும் பொருத்தமானதன்று. என்னுடைய தேசமும் விசாலமானது.

இப்போதே மெத்த எழுதி ஆயிருக்கிறது. இன்னும் அதிகமாக நான் எழுதச்செய்வேன்.

கட்டளைப்பதிவுகளில் சிற்சில தொடர்கள் மீண்டும் மீண்டும் குறித்திருக்கின்றன. ஏனென்றால், அந்தந்த விஷயமுந் தேனென இனிப்பதனால், ஜனங்கள் அவைகளை விடாது பின்பற்றுவார்கள் என்பது கோரிக்கை.

சிலவிஷயம் அரைகுறையாக எழுதியிருக்கலாம். அப்படியானால், அது இடம் பற்றாமை அல்லது வேறேதாவது விசேஷகாரணம், அல்லது செதுக்கினவன் கைப்பிழையைப் பொருத்ததாயிருக்கலாம்.

(2) கலிங்கத்து (தனி அல்லது பிரிந்த)

கற்கட்டளை

பதினான்காமாண்டினும் பிறகும்

(எல்லைப்புறத்துக் கட்டளைப்பதிவு)

போலிநெ (2.)

எல்லைப் புறவாசிகளின் கூட்டத்தார்க்கு அதிகாரிகளின் கடமைகள்.

பெருமை பொருந்திய அரசர் இப்படிப் பேசுகிறார்.

சமாபாவில், அரசர் கட்டளையால், உத்தியோகத்தர்களுக்குப் பின்வருகிறபடி கற்பிக்கவேண்டும்.

என்னுடைய நீங்களே அனுசரித்துக் காட்டித் தக்கவழிகளிற் பலந் தருபவைகளாக்க வேண்டுமென்பது என் கோரிக்கை. ஆகையால் இந்த எண்ணத்தை ஈடேற்றுவதற்குப் பிரதானமான வழிகள் உங்களுக்கு நான் கற்பித்துள்ள விஷயங்களே என்பது என் அபிப்பிராயம்.

எல்லா மாந்தரும் என் மக்களேயாவார். இவ்வுலகிலும் அடுத்தவுலகிலும் என் மக்கள் எப்படி சுகானுபவம் அடையவேண்டுமென்று நான் கோருகிறேனோ, அப்படியே எல்லா மனிதர்க்கும் நான் சுகானுபவத்தையும் சேமத்தையும் கோருகிறேன்.

எல்லைப்புறவாசக் கூட்டத்தாரைப்பற்றி அரசர் சித்தம் எப்படியென்று நீங்கள் கேட்பீர்களாயின், அதற்கு விடை: எல்லைப்புறவாசிகளைப்பற்றி என் சித்தம் இதுவென்கிறேன். அரசர், அவர்கள் மனச்சலன மற்றிருக்க விரும்புகிறாரென்று அவர்களுக்கு நம்பிக்கை யூட்டவேண்டும், என்னையவர்கள் நம்பவேண்டுமென்றும், என்னிடத்தவர்கள் சுகமே பெறுவார்கள் துக்கமல்லவென்று அவர்களுக்கு நிச்சயமாய்ச் சொல்லவேண்டுமென்றும், நான் அவர்கள் மேல் நல்லெண்ணங் கொண்டிருப்பதை அவர்களுக்கு நம்பிக்கையூட்டவேண்டு மென்றும் நான் விரும்புகிறேன்.

மேலும், (என்னல்லெண்ணத்தைப் பெறவேண்டினாலும் என்னை மகிழ்விக்கவேண்டினாலும்) அவர்கள் பக்திதர்ம நீதியிற் பழகி, அதனால் இகத்தையும் பரத்தையும் அடைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இதற்காக இந்தக் கற்பனைகளை உங்களுக்கு வழங்குகிறேன். எப்போது இப்படி முடிவாக உங்களுக்கென் கற்பனைகளை வழங்கியென் கட்டளையைத் தெரிவித்திருக்கிறேனோ, அப்போதே என் தீர்மானங்களும் வாக்குத்தத்தங்களும் மாறாதவைகளாம்.

இதைத் தெரிந்துகொண்டு, உங்கள் கடமையைச் செய்யுங்கள். இந்த மாந்தர்க்கு நம்பிக்கை உண்டாக்குங்கள். அரசர், அவர்களுக்குத் தந்தைபோ லிருக்கிறாரென்றும், அவர் தம்மை யெப்படிக் காத்துக்கொள்ளுகிறாரோ, அப்படியே அவர்களைக் காக்கிறாரென்றும், அரசர்க்கு அவர்கள் மக்கள்போல்வாரென்றும், அவர்கள் நம்பட்டும். என் கற்பனைகளை உங்களுக்கறிவித்துக் கட்டளைகளை விளம்பரப்படுத்தின பிறகு-என் தீர்மானங்களும் வாக்குத்தத்தங்களும் மாறாது. ஆகையால், இந்த வேலையில் நீவிர் என்னை நன்குமதிக்கவேண்டும். ஏனெனில், இவ்வுலகிலும் மறுவுலகிலும் தங்கள் சுகானுபவத்தையும் க்ஷேமத்தையும் பெறும் நம்பிக்கையை, இந்த மாந்தர்க்கு உண்டாக்கும் வல்லமையுள்ள நிலைமையில் நீவிர் இருக்கின்றீர்கள். இப்படிச்செய்வதனால் நீவிர் முத்திபெறுவதன்றி எனக்குச் செலுத்தவேண்டிய உமது கடமையையும் செய்தவராவீர்.

இதற்காகவே இந்தக் கற்கட்டளைப் பதிவு இங்கு எழுதியிருக்கிறது. உத்தியோகத்தர், இந்த எல்லைப்புறத்

தார்க்கு நம்பிக்கை உண்டாக்கும்படி விடாமல் உழைத்து, அவர்களைப் பக்திதர்ம மார்க்கத்தில் நடத்தவேண்டுமென்பதே இதன் நோக்கம்.

இந்தக் கட்டளைப்பதிவை நான்குமாதங்களுக்கொருகால் திஷ்யநக்ஷத்திரோற்சவகாலத்தில் ஒப்புவிக்கவேண்டும். (விளம்பர பாராயணம் பண்ணவேண்டும்) இன்னும் சமயோசிதமாய் இடைநடுவிலும் ஒவ்வொருவர்க்கும் ஒப்புவிக்க வேண்டும். இப்படி நீவிர் செய்கையில், மாந்தரைச் சரிவழியிற் செலுத்துகிறீர்களா என்று விழிப்பாய்க் கவனியுங்கள்.

தூர மாகாணங்களின் கற்கட்டளைப் பதிவு.

போலி இலக்கம் தனி அல்லது பிரிந்த கட்டளைப்பதிவு (பாலிபாடபேதம்).

நாட்டுப்புறத்து அல்லது தூர மாகாணவாசிகளுக்கு உத்தியோகத்தர்களுடைய கடமைகள்.

பெருமையிற்சிறந்த அரசர்கட்டளையால், தோசாலியில் நகரவிசாரணைத்தலைவர்களுக்குப் பின்வருகிறபடி கற்பிக்கவேண்டும்:—

என்னுடைய நோக்கங்களை அநுசரணையிற்கொண்டு வரவேண்டுமென்றும், சரியான வழிகளிற் பலன்பெறச் செய்யவேண்டுமென்றும் நான் விரும்புகிறேன். உங்களுக்கு நான் தந்துள்ள கற்பனைகளே இந்த எண்ணத்தை ஈடேற்றுவிக்குஞ் சரியான வழிகளென்பது என்கோட்பாடு. ஏனென்றால், நீங்கள் ஆயிரமாயிரம் ஜீவபிராணிகளுக்கு அதிகாரிகளாய், நல்லார் நேசத்தை அடையவேண்டியவர்களா யிருக்கிறீர்கள்.

மாந்தரனைவரும் என் மக்கள். எப்படி என்னுடைய மக்கள் எல்லா இகபரசுகானுபவத்தையும், சேமத்தையும் அடையவேண்டுமென்று நான் விரும்புகிறேனோ, அப்படியே எல்லா மாந்தர்க்கும் அதே சுகானுபவத்தையும், சேமத்தையும் விரும்புகிறேன்.

ஆனபோதிலும் நீங்கள் சில சமயங்களில் கூடுமான வரையில் நல்ல முடிவடைகிறதில்லை. என்னுடைய உபதேசத்தில் முழுவதுமின்றி ஒரு பாகத்தை மட்டும் கவனிக்கு மாந்தர் இருக்கின்றனர். அப்பேர்ப்பட்டவர்கள் நீதிநெறிச் சட்டத்தைக் கவனிக்கும்படி நீங்கள் பார்க்கவேண்டும்.

இன்னும், சிறையிலடைபட்டிருக்கிற, வதையுண்கிற மாந்தர் இருக்கிறார்கள். அப்போது நீங்கள் சட்டவிரோதமான தண்டனையையும், வதையையும் தடுக்க மெத்தச் சமீபத்திலிருக்கவேண்டும். இன்னும் எத்தனையோபேர் கொடுவினைகளுக்குட்பட்டுத் தவிக்கிறார்கள். அப்படிப்பட்ட மாந்தரைச் சரிப்படுத்துவதும் உங்கள் விருப்பமாயிருக்கவேண்டும்.

எப்படி யிருந்தபோதிலும் உங்கள் வெற்றியைப் பிரதிபலமாக்கப் பின்வரும் சில சுபாவங்கள் இருக்கின்றன. அவைகள், பொறாமை, ஊக்கமின்மை (சோம்பல்), கடுமை, ஆத்திரம் (ஆவல்), கவனமின்மை, சுறுசுறுப்பின்மை முதலியவைகளாம்.

ஆகையால் நீவிர், அப்படிப்பட்ட சுபாவங்களினீங்கியிருக்க விரும்பவேண்டும். ஏனென்றால், இந்த உபதேசத்தின் மூலமெல்லாம், நீதிநெறிநாட்டும் ஊக்கத்திலும், பொறுமையிலேயுமே இருக்கிறது. சோம்பேறி, தன்

கடமையைச்செய்ய உற்சாகமாயிருக்கமாட்டான். ஆனு லும் உத்தியோகத்த னொருவன், தன்னைத்தான் உற்சாகப் படுத்திக்கொண்டு முன்னுக்குப் போகவேண்டும். உம்மு டைய மேற்பார்வை வேலைக்கும் இதுவே பொருத்தமா னது. இந்தக் காரணத்தால் 'பெருமையிற்சிறந்த மன்னர் கற்பனைகள் இன்னின்னவைகளென ஆலோசித்தறி' என் பதை உங்களுக்கு நான் ஒப்புவித்துக் காட்டவேண்டும். இக்கட்டளைகளைச் சரிவர முடிப்பதனுல் பெரும்பலன் பிராப்தியாகும். அப்படி முடியாமை, பெரும்பிழைதரும். அப்படிப்பட்ட நல்வழிகாட்ட நாடும் உத்தியோகத்தர்கள் முத்தியருட்பிரசாதத்தையேனும் மன்னனருட்பிரசாதத் தையேனும் கோருதற்கருகரல்லர். இந்தக் கடமையைக் குறித்த என்னுடைய விசேஷ வற்புறுத்துதல் இரு விதத்திலும் பலன்கள் உண்டு. இந்நெறியிற்படர்வதால் நீவிர் முக்திபெறுவதோடு எனக்குச்செய்யவேண்டிய கடமைகளையும் செலுத்துகிறீர்கள்.

இந்தக் கட்டளைப்பதிவைத் திஷ்ய நக்ஷத்திரோற்சவ காலந்தோறும் ஒப்புவிக்கவேண்டும். அவைகளுக்கிடை யிலும் சமயம் நேரிட்டால் சனங்களுக்கு அதைப்படித்துக் காட்டவேண்டும். இப்படி நீவிர் செய்கையில், மாந்தரைச் சரிவழியிற் செலுத்த விழிப்பாயிருங்கள்.

இந்த விஷயத்திற்காக இந்தக்கட்டளைப்பதிவு இங் குச் செதுக்கியிருக்கிறது. இதனுல், நகராதிகாரத்தலைவர் கள் உற்சாக ஊக்கத்தோடு குடிகளுக்கு நேரும் சட்ட விரோதமான சிறையையும், வதையையும் தடுக்கவேண்டும்.

இந்த விஷயத்திற்காக, பக்தி தர்ம நீதியின்படி ஐந் தாண்டுக்கொருமுறை கூடும் கூட்டத்திற்குச் சாந்தர்களை

யும், பொறுமையிற் சிறந்தோரையும், மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதிப்போரையும் வரவழைப்பேன். அப்போதவர்கள், என் கற்பனைகளை ஒப்புவிக்கக் கேட்பதனும், அவைகளின்படி நடக்கலாம்.

உச்சயினி இளவரசர், இதே விஷயத்திற்காக இதே மாதிரியான கூட்டமொன்று கூட்டவேண்டும். ஆனல் அவர் மூன்றாண்டுக்கொருமுறை தவறாமல் அங்ஙனஞ் செய்யவேண்டும். தக்ஷசிலைக்கும் இக்கட்டளையே பொருந்தும். கூட்டத்துக்கு வருகிற உத்தியோகத்தர்கள் தங்கள் விசேஷவேலையைக் கவனித்தபடியே இந்த உபதேசத்தையும் கற்றுக்கொண்டு, அரசன் கற்பனைகளின்படி நாம் நடக்கிறோமா என்று கவனித்துப் பார்க்கவேண்டும்.

(3) சின்ன கற்கட்டளைப்பதிவு.

(பதினெட்டாமாண்டு).

சின்னகற்கட்டளைப்பதிவு, இலக்கம் 1.

(பிரமகிரிவாசகம்)

உழைப்பின் பலன்.

சுவர்ணகிரி இளவரசர், நீதிபதியிவர்களுடைய கட்டளையால் இஸிலா நீதிபதிகளுக்கு வழக்கமான வந்தனஞ் செலுத்தினபிறகு பின்வருகிறபடி பிரசங்கஞ்செய்ய வேண்டும் :—

பெருமை பொருந்திய மன்னர் கட்டளையிடுகிறார் :—

இரண்டரைவருடகாலத்துக்கு (பௌத்தனாய்) மேலாகியும் நான் வருந்தியுழைக்காமல் இலௌகிகச்சீடனாகவே இருந்தேன். (நான் பௌத்தனாப் இப்போது) ஆறு வருடகாலம் அல்லது ஆறுவருடகாலத்திற்கு மேற்பட்ட

காலம் கடந்திருக்கிறது. நன்றாய் உழைத்திருக்கிறேன். இந்தக்காலத்தில் இப்பரத கண்டத்தில் உண்மையாளரென்று நான் எண்ணினவர்கள் தங்கள் கடவுளரோடு பொய்யர்களாய்ப் போய்விட்டார்கள்.

ஏனெனில், இதுதான் உயர்ந்தோன்மாத்திரம், தன்னால் அடையமுடியாத முயற்சியின்பலன். ஏனென்றால், தாழ்ந்தோனும், தான் நினைத்தால், முயற்சியால், தனக்கு வேண்டிய முத்தியின்பத்தை அடைகிறான்.

இதற்காக, இந்த உபதேசம் எழுதியிருக்கிறது. அது என்னவெனில், உயர்ந்தோரும், தாழ்ந்தோரும் இந்த முடிவடையத் தாமே முயல்க என்பதாம்.

என் அயலாரும் இந்த உபதேசத்தைக் கற்கக்கடவர். அப்படிப்பட்ட முயற்சி நீடூழிவாழ்க.

இந்த விஷயம் வளரும்-ஆம், இதுபெருத்து வளரும்-குறைந்த அளவு இதின்வளர்ச்சி, ஒன்றுக்கு ஒன்றரை பங்கு அதிகமாகும்.

இந்தக் கட்டளை பரலோகஞ்சென்றவர்கள் வெளியாக்கினது. அது இப்போதைக்கு இருநூற்றைம்பதாண்டுளாகிறது.

அதே கட்டளைப்பதிவு

(ரூப்னாத் வாசகம்)

பெருமைபொருந்திய அரசர் இப்படிப் பேசுகிறார்:—

சுமார் இரண்டரையாண்டுகளாக நான் அதிக வருந்தியுழைக்காமல், பக்திதர்ம நெறியைக்கேட்டுக் காலந்தள்ளினேன். ஆனாலும் மதத்திற் சேர்ந்து ஆறுவருஷமாண இப்போது அதிக வருந்தி உழைத்துவருகிறேன்.

அந்தக்காலத்தில் பரதகண்டமடங்கலும் உண்மைக் கடவுளரென எண்ணியிருந்தவர்களெல்லாரும் (இந்தக் காலத்தில்) பொய்க்கடவுளரா யிருக்கிறார்கள்.

இதுதான் உழைப்பின்பலன். இதுதான் பெரியோன் பெறவேண்டியது. ஏனென்றால் சிறியோனும் தன் உழைப்பின் பலத்தால், முத்திநலத்தைப்பெரிதும் பெறக்கூடியவனாயிருக்கிறான். இதற்காகவே இக்கற்பனை கொடுத்திருக்கிறது, பெரியோரும் சிறியோரும் தாமே உழைக்கக்கடவர்.

என் அயலாரும் இவ்வுபதேசத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்; இப்படிப்பட்ட முயற்சி பல்லாண்டு வாழ்க.

இந்த என்னுடைய விஷயம் தன்னளவில் வளரும். ஆமாம், அதுபெரிதாய் வளரும். குறைந்த அளவு அதன் வளர்ச்சி ஒன்றுக்கு ஒன்றரைபங்கு அதிகமாகும்.

இந்த விஷயம் இங்கும் பிறவிடங்களிலும் கற்களின் மேல் எழுதியிருக்கின்றது. எங்கெங்கே கற்றூண் இருக்கிறதோ அங்கங்கும் அதன்மேல் இதை எழுதவேண்டும்.

எத்தனைமுறை ஒருவன் தன் ஆகாரத்தை இந்தச் சம்பாரங்களாற் சமைத்துப் பரிசுத்தப்படுத்துகிறானோ அத்தனைக்கத்தனை அவன் முழுமனநிறைவடைவான். இந்த எழுத்து விஷயத்தை எண்ணியெண்ணியுண்ணுந்தோறும் ஒருவன் தன் புலன்களையடக்கும் வல்லமை பெற்றுமகிழ்வான்.

இது, மாண்ட பெரியோர்கள் கொடுத்திருக்கிற கற்பனைகுரு பிரிந்து இப்போது இருநூற்றைம்பத்தாறுண்டாகிறது.

இரண்டாஞ் சின்னகற்கட்டளைப்பதிவு.
(பிரமகிரிவாசகம்).

பக்திதர்ம நீதியின் சுருக்கம். பெருமையிற் சிறந்த அரசர் இப்படிப் பேசுகிருர் :

தந்தைக்கும் தாய்க்கும் அடங்கி நடக்கவேண்டும். இதுபோலவே உயிருள்ள பிராணிகளின் மதிப்பை வற்புறுத்தவேண்டும். உண்மை பேசவேண்டும். இவைகள் தாம் பக்திதர்மநெறியின் புண்ணியங்கள். இவைகளிற் பழகவேண்டும். இதுபோலவே குருவுக்குச் சீடன் மேன்மை செய்யவேண்டும்; சுற்றத்தார்க்குச் சரியான உபசாரம் செய்யவேண்டும்.

இதுதான் பழம்பக்திதர்மம். இது நித்தியத்திற் செலுத்துகின்றது. இதன்படி மாந்தர் நடக்கவேண்டும். (இதி பாதன் என்பவன் எழுதியது).

4 பப்ராக் கற்கட்டளைப்பதிவு.

(பதினெட்டாமாண்டாட்சியிலிருக்கலாம்).

பப்ராக் கற்கட்டளைப்பதிவு.

மகத தேசத்து குருமார்க்குச் சொன்னது, பிரியதரிசி மன்னர் மகதமத குருமார்க்கு வந்தனஞ் செலுத்தி, சேமமும் சுகமும் உண்டாகக் கோருகிருர்.

மதிப்பிற்சிறந்த ஐயன்மீர், மகாபுத்தப் பெரியார்க்கும், பக்திதர்ம மார்க்கத்திற்கும், மற்றுமுள்ள மதத்தலைவர்க்கும் நான் செலுத்தியுள்ள மதிப்பும் விசுவாசமும் எத்தனை பெரிதென்று நீங்கள் அறிவீர்கள்.

மதிப்பிற்சிறந்த ஐயன்மீர், தொழுந்தகையரான புத்தப் பெருந்தகையார், சொல்லியுள்ளவனைத்தும், நன்ருய்ச் சொல்லியிருக்கின்றன. ஆனுலும் மதிப்பின்மாண்ட ஐயன்மீர், என்னைப்பொருத்த அளவில் நான் கற்பனைகளைக்

கட்டுரைக்கையில் உங்களுக்குத் தெரியும்படி புத்தவாசகத்தை எடுத்துக்காட்டுகிறேன். இப்படி உத்தமதர்மம் நீடூழி வாழும் மதிப்பின்மாண்ட ஐயன்மீர், இப்பக்திதர்ம வாசகங்கள், வருமாறு :—

(1) சிக்ஷாபிவிர்த்தி
(2) ஆரிய அற்புத சக்திகள்
(3) எதுவருமோ என்னும் அச்சங்கள்.
(4) சந்நியாசிப்பாட்டு
(5) சந்நியாசிவாழ்க்கைச் சம்வாதம்
(6) உபதிஷ்யவினு
(7) பொய்விஷயத்தொடக்கமுதலான இருகுலப் பிரசங்கம்.

பக்திதர்ம நீதிவாசகங்கள் மகாபுத்தர் திருவாக்கிற் பிறந்தன; பற்பல துறவியர் இருபாலரும் இவ்வாசகங்களைக் கவனமாய்க் கேட்கவேண்டும், சிந்திக்கவேண்டும்.

குடித்தனக்காரர்களில் ஆடவருமகளிரும் அதுபோலவே செய்யவேண்டும்.

இதற்காகவே, மதிப்பில் மாண்ட ஐயன்மீர், இதை நான் எழுதுவித்தேன். ஜனங்கள் என் எண்ணங்களை உணர்ந்துகொள்ளட்டும்.

குகாஸ்தம்ப சாசனங்கள்.

(பதின்மூன்றுமாண்டு முதல் இருபத்தெட்டாமாண்டாட்சிவரையில்)

1. குகாசாசனம்.

(பதின்மூன்றும் இருபதாமாண்டாட்சிகள்).

பாராபார்க்குன்றுக் குகாசாசனங்கள் அஜீவகப் பிராமணர்களுக்குக் குகாவாசதானம் வழங்கல்.

சாசனம் ஏ, (அல்லது) எண் 1:

பதின்மூன்றுமாண்டாட்சியிற் பியாதசி மன்னர், அஜீவகப் பிராமணர்களுக்கு ஆலமரக் குகைகளைத்தானம்

சாசனம். பி (அல்லது) எண் 2:-

பதின்மூன்றுமாண் டாட்சியிற் பிராமணர்களுக்கு இந்தக் காலாதிகக்குன்றுக்குகையைத் தானம் வழங்கினர்.

சாசனம் ஸி, (அல்லது) எண் 3. இருபதாமாண்டாட்சியில் பியாதசி மன்னர், இந்தக் குகையைக்கொடுத்தார்.

காலக்கிரம நிர்ண்ணயத்தைக் கடந்திருந்தாலும், இது சம்பந்தமான அசோகபௌத்திரர், தசரதர், சாசனங்களை இங்கு விளக்கமாகக் கவனிக்கலாம். அவைகள் கணக்கில் மூன்று (டி, இ, எப்) மூன்று குகைகளை வழங்கினதாக அவைகளுடைய பெயர்களோடு செதுக்கியிருக்கிறது. அவைகளின் பெயர்கள், வாகியாக்கம், கோபிகம், வாதாதிக்கம் என்பனவாம். அவைகள் நாகார்ச்சுனக்குன்றில் தசரதர் அரியாசனமேறினபோது பிராமண அஜீவர்களுக்கு வழங்கினவைகளாம். ஒன்றின்மொழிபெயர்ப்பு போதும்.

வாகியாக்கருகா சாசனம் (டி)

தசரதருடையது.

இந்த வாகியாக்கக் குகையைப் பெருமை பொருந்திய தசரதர் தமது முடிசூட்டான வுடனே பிராமண அஜீவகர்களுக்குச் சூரிய சந்திரருள்ளளவும் வாசஸ்தானமாகும்படி வழங்கினர்.

2. தராய்த்தூண் சாசனங்கள்.

(இருபத்தோராமாண்டாட்சி)

ருமினித்தேய்த்தூண்

சாக்கியபுத்தர் பிறப்பிடத்தைத் தரிசித்த ஞாபகச் சின்னமாயுள்ளது.

பெருமையிற்சிறந்த பியாதசிமன்னர் தமது இருபத்தோராமாண்டாட்சியில் தாமே நேரில் வந்து பக்திசெலுத்தினர். ஏனென்றால், இங்குத்தான் சாக்கிய சந்நியாசியாராகிய மகாபுத்தர் திருவவதாரஞ்செய்தார். பியாதசியார் அதற்காக ஒருகருங்கற்குதிரையை உச்சியிற் செதுக்கின தூணத்தை நாட்டுவித்தார். ஏனென்றால், இங்குத்தான் பெருமையிற் சிறந்த குருமூர்த்தி அவதரித்தார். உலுமினி ஊரார் இனி வரி செலுத்தவேண்டியதில்லை. அவர்களுக்கு அரசர் தானம் வழங்கினர்.

நிக்ளிவத்தூண் சாசனம் கனகமுனிபுத்தர் தூபியைத் தரிசித்த ஞாபகச்சின்னமாயுள்ளது. பெருமையிற்சிறந்த பியாதசியார், தமது பதினைந்தாமாண்டாட்சியில் கனகமுனிப்புத்தர் தூபியைப் பெருக்கிப்புதுக்கினர். இருபத்தோராமாண்டாட்சியில் நேரில் வந்து பக்திசெலுத்திக் கற்றூண் நாட்டுவித்தார்.

3. ஏழுகற்றூண் கட்டளைப்பதிவுகள் இருபத்தேழு இருபத் தெட்டாமாண்டாட்சிகள்.

கட்டளைப்பதிவு 1.

இராஜாங்க விதிகள்

பெருமையிற்சிறந்த பியாதசிமன்னர் இப்படிப் பேசுகிறார்:—

என்னுடைய இருபத்தேழாமாண்டாட்சியில் இப் பக்திதர்மக் கட்டளைப்பதிவை எழுதுவித்தேன்.

பக்தி தர்மநீதி நெறியில் மிகுந்த விசுவாசம் வைத்து, மெத்த விழிப்பாயிருந்து, நிரம்ப வணக்கமாய் நடந்து, அதிகமாய் அஞ்சிநடுங்கி, மிகுந்த ஆற்றலுடன் விளங்கினலன்றி இகபரமிரண்டையும் அடைவது அருமையாகும்.

ஆனாலும், எனது கற்பனைகளால் இந்தப் பக்திதர்ம நெறியில் ஆசையும் விசுவாசமும் நாளாவட்டத்தில் வளர்ந்திருக்கின்றன. அவைகள் வளர்ந்துகொண்டேயிருக்கும்.

தாழ்ந்தோரேனும் உயர்ந்தோரேனும் நடுத்தரமானவரேனும் என்னுடைய அதிகாரிகள், என் உபதேசத்துக்கு ஒத்து மன்பதைகளைச் சரிவழியிற் செலுத்துகிறார்கள். விவகாரத்தலைவராகையால் அவர்கள், வைராக்கிய சித்தமில்லாதவர்களைக் கடமையிற் செலுத்தும் இடத்திலிருக்கிறார்கள்.

ஏனெனில் இதுதான் விதி. பக்திதர்மநீதிநெறிப்படி பாவமீட்பு, அந்நெறியின்சட்டம், அந்நெறியின் இன்பம் அந்நெறியின் அ[illegible]

கட்டளைப்பதிவு 2

இராஜதரிசனம்.

பெருமையிற் சிறந்த பியாதசியார் இங்ஙனம் பேசுகிறார் :—

பக்திதர்மநீதி சிறந்தது.

ஆனால் பக்தி தர்ம நீதியாது ?

அது (அஹிம்சை) கொல்லாமையிலிருக்கிறது, இரக்கத்திலிருக்கிறது, உண்மையிலிருக்கிறது, தூய்மையிலிருக்கிறது.

பரமார்க்கத்தேர்ச்சி தருமத்தை நான் பலவழிகளிற் காட்டியிருக்கிறேன். இருகால் நாற்காற் பிராணிகளுக்கும், நீர்வாழ் பிராணிகட்கும் பல்லுபகாரங்கள் பாலித்திருக்கின்றேன். வாணாள் வரத்திற்கும், இன்னும் எத்தனையோ நற்கருமங்கள் நான் செய்திருக்கிறேன். இதற்காக இந்தப்பக்திதர்மக்கட்டளையை எழுதுவித்தேன். இந்த உபதேசப்படி சனங்கள் நடக்கவேண்டும். இதுவும் நெடுநாள் அழியாமல் இருக்கவேண்டும். இந்த உபதேசத்தைப் பின்பற்றுகிறவன் சுகப்படுவான்.

கட்டளைப்பதிவு 3.

தன்னாராய்ச்சி.

பெருமையிற்சிறந்த பியாதசி மன்னர் பின்வருகிறபடி பேசுகிறார்:

மனிதன் தன்னுடைய ஒவ்வொரு நற்காரியத்தையுங் கண்டு, இந்த நற்கருமத்தை நான் செய்திருக்கிறேன் என்கிறான்.

எந்த விஷயத்திலும் அவன் தன் துற்கருமத்தைக் கண்டு, இந்தத் துற்கருமத்தை, பாவகாரியத்தை நான் செய்திருக்கிறேன் என்பதில்லை.

ஆகையால், அவசியமான தன்னாராய்ச்சி,உண்மையில் அருமையானது.

ஆனபோதிலும்,ஒருவன் இதைக் கவனிக்கவேண்டும். கடுஞ்சினம், கொடுமை, கோபம், அகந்தை, பொறாமை முதலியவைகள் பாவகாரிகள். ஆகையால், அவன் 'இவை

கள் காரணமாக நான் என் அழிவைத் தேடிக்கொள்ளாம லிருக்கக் கடவேன் என்று சொல்லவேண்டும்.

இதை முக்கியமாய் கவனிக்கவேண்டும். ஒருவழி என்னை இகசுகத்திற்காளாக்குகின்றது. மறுவழி எப்படி யானும் என்னைப் பரசுகத்திற்குப் பாத்திரனுக்குகிறது.

கட்டளைப்பதிவு 4.

காரியதுரந்தரர்களுடைய அதிகாரங்களுங் கடமை களும்.

பெருமையிற்சிறந்த பியாதசி மன்னர் பின்வருகிறபடி பேசுகிறார் :—

என்னுடைய இருபத்தேழாமாண்டாட்சியில் இந்தப் பக்திதர்மக்கட்டளையை எழுதுவித்தேன்.

அநேக நூறாயிர மாந்தர்களை ஆளும்படி காரியதுரந் தரர்களை நியமித்திருக்கிறேன். அவர்களுக்குச் சுயாதிகாரம் வழங்கியிருக்கிறேன். அப்படியிருந்தால்தான் அவர்கள் மானத்தால் சன்மானங்களையும், அவமானத்தால் தண்டனை களையும் வழங்கிச் சேமமாயிருந்து, அச்சமின்றிக் கடமை களைச் செய்து, சனங்களுக்குச் சேமத்தையும் சுகத்தையுந் தந்து பலனடைவார்கள்.

காரியதுரந்தரர்கள், சுகதுக்ககாரணங்களை அறிந்து, பக்திதர்மநீதி நெறிப்படி சனங்களைத் தூண்டுவார்கள். அதனால் அவர்கள் இம்மைமறுமைப்பலனை எய்துவார்கள்.

என் காரியதுரந்தரர்கள் ஊழியஞ்செய்ய ஆவலாய் இருக்கிறார்கள். என் காரியத்தர்கள் என் உள்ளமுணர்ந் தவர்களாகையால், என் ஊழியத்திற்கு ஆயத்தமாயிருக்கி றார்கள். தேவைபானபோது அவர்கள், மாந்தரைத்

தூண்டுவார்கள். இதனால் காரியதுரந்தரர்களும் வைராக்கியத்தோடுழைத்து என் தயையைப் பெறுவார்கள்.

ஒரு மனிதன் தன்குழந்தையைச் சரியான செவிலித்தாயினிடத்தில் ஒப்புவித்து, சரியான செவிலித்தாய் என்குழந்தைக்கு வாய்த்திருக்கிறாள் என்று எப்படிச் சொல்லுவானோ, அப்படிக் காரியதுரந்தரர்களைத் தேசத்தினுடைய சேமத்திற்கும் சுகத்திற்கும் நான் ஏற்படுத்தியிருக்கிறேன். அவர்கள் அச்சமின்றிச் சேமமாய், மனசாக்ஷிக்கு விரோதமின்றிக் காரியதுரந்தரராய்ச் சன்மான தண்டங்களைச் சமர்ப்பிப்பதற்குச் சுயாதிகாரம் வழங்கியிருக்கிறேன்.

ஆட்சி ஒழுக்கிலும் தண்டவழக்கிலும் எங்கும் ஒருபடித்தாய் இருக்கவேண்டுமென்பதை எல்லாரும் விரும்புகிறார்கள். ஆகையால், என் கட்டளை அத்தனைதூரம் செல்கிறது, அது வருமாறு:

மரணதண்டனைக் குற்றவாளிகளுக்கு மூன்று நாள் இடையொழிவு அளித்திருக்கிறேன். அதற்குள் அவர்கள் சுற்றத்தார், அவர்களை ஆழ்ந்த யோசனைக்குட்படுத்தி, அவர்களுயிரைக் காக்க எண்ணுவார்கள். அப்படியில்லாவிட்டாலும் அவர்கள் பிரார்த்தனை செய்துகொண்டு விரதமிருந்து, குற்றவாளிகளாய்ச் சாவாருடைய பக்தி தர்மநெறியை வளர்ப்பார்கள்.

என்னுடைய விருப்பம் இது: குற்றவாளிகளாய்த் தீர்ந்தவர்கள், தாம் சிறையிலிருக்கும்போதும் பரசுகத்தையெய்தலாம். சனங்களுக்குள் பக்தி தர்மப்பயிற்சி; பலவிதங்களில் வளரவேண்டும். எங்குந் தன்னடக்கமும் ஈகையுஞ் சிறக்கவேண்டும்.

கட்டளைப்பதிவு 5.

கொலையையும், அங்கச்சேத வதையையும் பிராணிகளடையாமற்றடுக்கும் விதிகள்.

பெருமையிற் சிறந்த பியாதசி மன்னர் பின்வருகிறபடி பேசுகிறார்:—

எனது இருபத்தேழாமாண்டாட்சியில், கீழ்குறித்த பிராணிகளின் கொலையைத் தவிர்த்தேன். கிளிகள், நாகணவாய்கள், பெருங் கொக்குகள் (நாரைகள்) பருந்துகள், அன்னங்கள், பறக்கும் குள்ளநரிகள், பேரெறும்புகள், சிற்றாமைகள், இறால்கள், ஆமைகள், முள்ளம்பன்றிகள், அணில்கள், மான்கள், பெருமான்மாடுகள், பல்லிகள், காண்டாமிருகங்கள் (கல்லானைகள்), புறாக்கள் (வெண்) மாடப்புறாக்கள், ஊன் உண்ணஉதவாத அல்லது உபயோகமில்லாத எல்லா நாற்காற் பிராணிகள்.

பெண்ணாடுகள் (வெள்ளாடு-செம்மறி), பெண்பன்றிகள், (குட்டியோடு அல்லது பாலோடு) அவைகளின் குட்டிகள் (ஆறுமாதம் வரையில்) எதையுங் கொல்லக்கூடாது.

கோழிக்கு விரையடித்தல் கூடாது.

பூச்சி பிடித்திருக்கிற உமியைக் கொளுத்தக் கூடாது.

காடுகளைத் தீக்கிரையாக்கக் கூடாது. (குறும்புக்கானாலுஞ்சரி, ஜீவபிராணிகளை வதைக்கவானாலுஞ் சரி)

ஊனுக்கு ஊனிட்டு வளர்க்கக்கூடாது. மூன்று பருவகாலங்களில் வருடம் ஒவ்வொரு பௌர்ணமியிலும், திஷ்ய மாதப் பௌர்ணமியிலும் (டிசம்பர்-ஜனவரி) மீன் தின்னக் கூடாது. விரதகாலங்களிலெல்லாம் மீனைக் கொல்லவும் விற்கவும் கூடாது.

ஒவ்வொரு பக்ஷத்திலும் அட்டமி, சதுர்த்தசி, பஞ்சமி முதலிய திதிகளிலும் திஷ்ய புனர்வசுநாட்களிலும், பௌர்ணமி தினங்களிலும், விசேஷத் திருவிழா நாட்களிலும், சேங்கன்றுகளையும், ஆட்டுக் கடாக்களையும், (வெள்ளாடு-செம்மறி) ஆண்பன்றிகளையும் காலிபிடிக்கக் கூடாது. மற்றக் காலிபிடிக்கக்கூடிய பிராணிகளையும் அக் காலங்களில் அங்கனஞ் செய்யக்கூடாது.

திஷ்ய புனர்வசு நாட்களிலும் பௌர்ணமிகளிலும் குதிரைகளையும் மாடுகளையும் சூடக்கூடாது.

எனது இருபத்தாறுமாண்டாட்சியில் இதுவரையி லும் நான் இருபத்தைந்துமுறை, குற்றவாளிகளை விடுதலை செய்திருக்கிறேன்.

கட்டளைப்பதிவு 6.

எல்லா இனத்தாரிலும் ஒவ்வொருவனும் மதவிசுவாசம் வகித்தல் முக்கியம் என்பது.

பெருமையிற்சிறந்த பியாதசி மன்னர் பின் வருகிறபடி பேசுகிறார்:—

எனது பதின்மூன்றுமாண் டாட்சியில் மன்பதைகளுடைய சேமத்தையுஞ் சுகத்தையும் வளர்க்க, நான் பக்தி தர்மக்கட்டளைகளை எழுதுவித்தேன். அவைகளால் அவர்கள் தமது பழம்பாவங்களை அறுத்துப் பக்தி தர்மநெறியிற் படர வேண்டுமென்பது என் கருத்து.

இப்படி மன்பதைகளுடைய சேமத்தையுஞ் சுகத்தையும் குறிப்பதனால், அவர்களிற் சிலரைச் சுகானுபவத்திற் செலுத்தலாமாவென்று என் சொந்த சுற்றங்

களைக் கவனிப்பதுபோலவே, தூரத்திலும் சமீபத்திலு முள்ள மற்றவர்களையும் நான் கவனிக்கிறேன்.

இப்படியே எல்லாரிடத்திலும் என் கவனத்தைச் செலுத்துகிறேன். எல்லா இனத்தாரும் பலவிதமாக என் மதிப்பை அடைந்திருக்கிறார்கள். ஆனபோதிலும், ஒருவன் தன்னுடைய பிரதான மதத்தை விடாதிருத்தல் முக்கிய மானதென்று எனக்குத் தோன்றுகிறது.

எனது இருபத்தேழாமாண் டாட்சியில் என் உத்தர வால் இந்தப் பக்தி தர்மக் கட்டளையை எழுதுவித்தேன்.

கட்டளைப்பதிவு 7.

பக்தி தர்ம வளர்ச்சிக்கு அரசர் ஏற்படுத்தின சாத கங்கள் (உபாயங்கள்). பெருமையிற்சிறந்த பியாதசிமன்னர் பின்வருகிறபடி பேசுகிறார்:—

பூர்வகாலத்து மன்னர், பக்திதர்மநெறியை எப்படி யாவது மனிதன் வளர்க்கவேண்டுமென்று விரும்பினார்கள். ஆனாலும் அவர்கள் எதிர்பார்த்தபடி பக்திதர்ம நெறியை மாந்தர் வளர்க்கவில்லை. ஆகையால் பெருமையிற் சிறந்த பியாதசி மன்னர் பின்வருகிறபடி பேசுகிறார்:—இவ்வெண் ணம் எனக்குதயமாயிற்று.

பூர்வகாலத்து மன்னர்கள் பக்தி தர்மநெறியை எப்படி யாவது மனிதன் வளர்க்கவேண்டுமென்று விரும்பினார்கள். ஆனாலும் அவர்கள் எதிர்பார்த்தபடி பக்தி தர்மநெறியை மாந்தர் வளர்க்கவில்லை. ஆகையால், எந்த விதங்களில் மாந்தரை அதற்கு அடங்கி நடக்கத் தூண்டலாம், எந்த விதங்களில் அவர்கள் எதிர்பார்த்தபடி பக்தி தர்மநெறியின்

வளர்ச்சிக்கு மாந்தர் அனுகூலஞ் செய்வார்கள். எந்த விதங்களில் அவர்களிற் சிலரையேனும் பக்திதர்ம நெறியின் வளர்ச்சிக்கு அனுகூலஞ்செய்ய உற்சாகப் படுத்துவேன். ஆகையால், பெருமையிற் சிறந்த பியாதசியார் இப்படிப் பேசுகிறார்.

இந்த எண்ணம் எனக்குண்டாயிற்று:—பக்தி தர்ம நீதிநெறிப் பிரசங்கங்கள் ஏற்படுத்துவேன். அந்நெறியின் கற்பனைகளைப் போதிப்பேன். மாந்தர் அவைகளைக் கேட்பதனால் கீழ்ப்படிந்து, தாங்களே உற்சாகமாய்ப் பக்தி தர்ம வளர்ச்சிக்குப் பெரிதும் அனுகூலஞ் செய்வார்கள்.

இதே விஷயத்திற்காக, பக்தி தர்மநெறியைக் குறித்த பிரசங்கங்களைச் செய்வித்திருக்கிறேன். அந் நெறியைக் குறித்த பற்பல கற்பனைகளைப் பரப்பியிருக்கிறேன். அன்றியும் என் உபதேசத்தை விளக்கவும் வளர்க்கவும் ஜனங்களுக்கிடையிற் காரியத்தரை நியமித்திருக்கிறேன்.

பல்லாயிரம் பிராணிகளுக்குத் தலைமைவகிக்க, காரியதுரந்தரர்களை நிருமித்திருக்கிறேன். அவர்களில் ஒவ்வொருவனும் என் உபதேசத்தைப் பிரபுக்களுக்கு இன்னின்ன விதமாய் விளக்குவதெனத் தெரிந்துகொண் டிருக்கிறான்.

பெருமையிற்சிறந்த பியாதசியார் பின்வருமாறு பேசுகிறார்:—இந்த விஷயத்தை உத்தேசித்து, பக்தி தர்மத் தூணங்களை நிறுத்தியிருக்கிறேன்; பக்தி தர்மப் பரிசீலனங்களை நியமித்திருக்கிறேன்; பக்தி தர்ம பிரசங்கங்களைச் செய்திருக்கிறேன்.

பெருமையிற்சிறந்த பியாதசியரசர் பின்வருமாறு பேசுகிறார்:—சாலைகளில் மனிதனுக்கும், மிருகத்திற்கும் நிழல்தரும் ஆலமரங்களை நடுவித்தேன். மாந்தோப்புகளை

வைத்து நான் வளர்ப்பித்தேன். ஒவ்வோ ரரைக்கோச தூரத்திலும் கிணறுகள் வெட்டுவித்தேன்.

அநேகம் நீர்நிலைகளை அங்கங்கும் மனித மிருகாதிகளுக் குதவியாக ஏற்படுத்தியிருக்கிறேன்.

ஆயினும், இந்தப் போலியுலகானுபவம் அற்பவிஷயம்.

நான் செய்திருக்கிறபடியே இப் பற்பல இகசுகானுபவங்களை எனக்கு முந்தியிருந்த மன்னர் இவ் வுலகத்தார்க்கு உண்டாக்கி யிருக்கிறார்கள். ஆனால், என் விஷயத்தில் இச் சுகானுபவம் வேறு பலவிதமா யிருக்கிறது. பக்தி தர்மநெறியில் மாந்தர் அடங்கி நடக்கவேண்டுமென்பதே அந்த முக்கியமான நோக்கம்.

பெருமையிற் சிறந்த பியாதசியார் இப்படிப் பேசுகிறார்:—

என் பக்தி தர்மப் பரிசீலனர்கள், தர்மத்தாபனங்களிலும், சந்நியாசிகளிடத்திலும், குடித்தனக்காரர்களிடத்திலும், மற்ற இனத்தாரிடத்திலும் தொழில் முயற்சி செய்கிறார்கள். பௌத்த குருமாரிடத்திலும் பிராமணர்களிடத்திலும் சைனர்களிடத்திலும், அசீவகர்களிடத்திலும், உண்மையிற் கூடுமானால், எல்லா இனத்தாரிடத்திலும், அவர்கள் தொழில்முயற்சி செய்யும்படி நான் ஏற்படுத்தியிருக்கிறேன்.

சாதாரண பற்பல நீதிபதிகளும் தங்களுடைய முக்கிய கட்டளைகளை மாத்திரம் மேல் விசாரணை செய்ய வேண்டும். ஆனால், தர்மநீதிப் பரிசீலனர்கள் எல்லா இனத்தாரையும், அப்படிப்பட்ட விசேஷமான கட்டளைகளையும் மேல் விசாரணை செய்யவேண்டும்.

பெருமையிற்சிறந்த பியாதசி மன்னர் பின்வருகிறபடி பேசுகிறார்:—

இவர்களையும் இவர்களைப்போன்ற பிறவுயர்தர உத்தியோகத்தர்களையும், நானும் என் மனைவிகளும் ஏற்படுத்தியுள்ள இராஜாங்கப் பிச்சையிடும் வேலையிலமர்த்துகிறேன். பிரதான நகரிலும் பிறவிடங்களிலுமுள்ள இராஜ குடும்பங்கள் பிச்சையிடும் பலவித வசதிகளையும் பலவழிகளில் இந்த உத்தியோகத்தர்கள் காட்டுகிறார்கள்.

இதே உத்தியோகத்தர்கள் என் மனைவி மைந்தரும் ஏற்படுத்தியுள்ள பிச்சையிடும் வேலையிலமர்ந்தார்கள். இதனால் அவர்கள், பக்திதர்ம காரியங்களையும் பக்தி தர்மப் பயிற்சியையும் வளர்க்கிறார்கள். ஏனென்றால், பக்திதர்ம காரியங்களும், பக்திதர்மப் பயிற்சியும், இரக்கம், ஈகை, உண்மை, தூய்மை, சாந்தம், தயை முதலிய நற்குண வளர்ச்சி மாந்தர்க்குள் ஓங்குவதைப் பொருத்திருக்கின்றன.

பெருமையிற்சிறந்த பியாதசியரசர் பின்வருகிறபடி பேசுகிறார்:—

எந்தெந்தப் புண்ணியச் செய்கைகளை நான் செய்திருக்கிறேனோ, அவைகளைச் சனங்களும் செய்திருக்கிறார்கள்; இனி அப்படியே செய்வார்கள். அவைகள், வளர்ந்து பலன்கள் தருகின்றன. இன்னும் அவைகள், தந்தைதாயர்க் கடக்கம், குருவுக் கடங்கி நடத்தல், வயதானவர்க்கு மரியாதை, அந்தணர்க்குஅன்பு, ஏழைகளுக்கு இரக்கம், ஆம், அடிமைகளுக்கும் ஆட்களுக்கும் அன்பு முதலிய புண்ணியங்களிற் பெருகும்.

பெருமையிற் சிறந்த பியாதசியரசர் பின்வருகிறபடி பேசுகிறார்:—

இந்தப் பக்தி தர்மவளர்ச்சி மாந்தர்க்குள் இருவிதமாகச் சித்திபெற்றிருக்கிறது. ஒன்று: பக்தி தர்மசட்டங்கள், மற்றொன்று: சிந்தனை. இவ்விரு சாதனங்களில் பக்தி தர்மச்சட்டங்கள் சிறுமதிப்பிற் சேர்ந்தவை. ஆனால், சிந்தனை பெருமதிப்புள்ளது.

ஆனாலும் நான் பக்தி தர்மசட்டங்களை ஏற்படுத்தி இன்னின்ன பிராணிகளின் வதை கூடாதென்று விலக்கியிருக்கிறேன். இன்னும் இதுபோன்ற பிறசட்டங்களையும் விதித்திருக்கிறேன். ஆனால், சிந்தனையின்பலன், மாந்தர்க்குள் பக்தி தர்மப் பெருவளர்ச்சியிலும், பிராணக்கொடுமை, பிராணவதைப் பூரண விலக்குகளிலும் காண்கிறது.

இந்தப் பெரு விளம்பரம், சூரியர் சந்திரர் உள்ளளவும் நீடிக்க வேண்டுமென்று வெளியாயிருக்கிறது. இதனால், என் உபதேசத்திற் சனங்கள் பயிலவேண்டும். அப்படிப் பயில்வதனால் இகபர சுகானுபவங்கள் இரண்டும் பிராப்தியாகும்.

எனது இருபத்தெட்டாமாண் டாட்சியில் இந்தக் கட்டளையை எழுத நான் உத்தரவு கொடுத்தேன்.

இதுபற்றிப் பிரியதரிசியார் பின்வருமாறு பேசுகிறார்:—

எங்கெங்கு கற்றூண்கள், கற்பாறைகள் இருக்கின்றனவோ அங்கங்கு இக் கட்டளையை நீடித்திருக்கும்படி எழுதவேண்டும்.

(4) அநுபந்தக் கற்றூண் கட்டளைப்பதிவுகள்.

(இருபத்தெட்டா மாண்டாட்சி அல்லது அதன் பிறகு)

இராணிக்கட்டளைப் பதிவு.

இரண்டாமிராணியின் நன்கொடை பெருமையிற் சிறந்த மன்னர் கட்டளையால், எங்கெங்குமுள்ள உத்தியோகஸ்தர்களுக்குப் பின்வருமாறு கற்பிக்கவேண்டும்.

இரண்டாம் இராணி, ஒரு மாந்தோப்போ, விநோதத் தோட்டமோ, தர்ம சத்திரமோ, இன்னும் எதுவோ தாபித்து, எந்த நன்கொடை வழங்கியிருந்தாலும் அதை, இராணியின் புண்ணியச் செய்கையென்று கொள்ளவேண்டியது. இவைகளெல்லாம் இரண்டாம் இராணியும், திவாரன் தாயுமான காருவகிக்குப் புகழை வளர்க்க ஏற்பட்டிருக்கின்றன.

கவுசாம்பிக் கட்டளைப்பதிவு பௌத்த மடத்துக்கு நன்கொடை.

இந்தச் சாசனமும் இராணிச் சாசனம் போலவே பிரயாகைத் தூணத்திற் காண்கிறது. ஆனால் மெத்த அரை குறையா யிருப்பதனால், மொழிபெயர்ப்புக் கனுகூலமாயில்லை. ஸாஞ்சித் தூணத்தில் இதன் ஒருபகுதி பட்டதும் படாததுமாகக் காண்கிறது. ஏதோ ஒரு சாலைவழியை அல்லது பௌத்தமதக் கோலவழியை நன்கொடையளித்த குறிப்பு வெளிப்படுகிறது.

ஸ்ரீ த்யாகராஜ ஹ்ருதயம்